# 1

# பொருளாதார, விலை மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாடு, தோற்றப்பாடு மற்றும் கொள்கைகள்

## 1.1 பொது நோக்கு

*இலங்கைப் பொருளாதாரமானது பொதுமக்களின் பதற்றம் மற்றும் அரசியல் கிளர்ச்சி இரண்டிற்கும் வழிவகுத்த கடுமையான பொருளாதார இன்னல்களைக் கொண்ட அதன் சுதந்திரத்திற்குப் பின்னரான வரலாற்றில் மிகக் கடினமான ஆண்டிற்கு 2022இல் முகங்கொடுத்தது. பொருளாதாரத்தின் வலுவற்ற நிலைப்பாடுகள், நிலைமை மேலும் தீவிரமடையாமலிருப்பதனை முன்கூட்டியே தடுப்பதற்கு அரசாங்கத்தினாலும் மத்திய வங்கியினாலும் உடனடியானதும் ஒருங்கிணைக்கப்பட்டதுமான கொள்கை முன்னெடுப்புக்களைத் தேவைப்படுத்தின. பரிகார வழிமுறைகள் பரந்தளவிலான குடிமக்களைக் குறுங்காலத்தில் பாதிப்படையச் செய்திருந்த போதிலும் மிகைப் பணவீக்கம் போன்ற கட்டுப்பாடற்ற பொருளாதார உறுதிநிலையற்றதன்மை, மிகவும் ஆழமான மட்டமொன்றிற்குப் பொருளாதார செயற்பாடு சரிவடைதல், பொதுமக்களுக்கும் வியாபாரங்களுக்குமான மோசமான பின்விளைவுகளுடன் நாடு உலகின் ஏனைய பகுதியிலிருந்து முற்றுமுழுதாகத் துண்டிக்கப்படுதல் போன்ற சாத்தியமான அழிவுமிக்க பின்விளைவுகளிலிருந்து பொருளாதாரத்தையும் பொருளாதார முகவர்களையும் பாதுகாத்துக் கொள்வதற்கு இவை தேவையாகவிருந்தன. இந்த முயற்சிகளின் விளைவுகள் 2022இன் இறுதியிலிருந்து கைகூடத்தொடங்கின. சமூகப்பொருளாதார உறுதிப்பாட்டினை மீட்டெடுப்பதனை நோக்காகக் கொண்டு நடைமுறைக்கு சாத்தியமானதொரு சமநிலைக்கு நாடு குறுங்காலத்தில் நிலைமாறிக்கொள்ள முடிந்துள்ள வேளையில் பன்னாட்டு நிதியியல் நிறுவனங்களிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட உதவிகள் பொருண்மியப்படத் தொடங்கியுள்ளன.*

*வரவு செலவுத்திட்ட மீதி மற்றும் வெளிநாட்டு நடைமுறைக் கணக்கு என்பவற்றில் நீடித்து நிலவிய பற்றாக்குறைகளுடன் கூடிய நிலைபேறற்ற பேரண்டப்பொருளாதார மாதிரியினை நடைமுறைப்படுத்தி உலகளாவிய மற்றும் உள்நாட்டு மூலங்கள் இரண்டிலிருந்தும் தோற்றம்பெற்ற எண்ணற்ற பாதிப்படையக்கூடிய தன்மைகளினால் தடுமாறியதன் காரணமாக 2022இன் ஆரம்பமளவில் பொருளாதாரம் அதன் தாங்கியிருப்புக்களை முழுமையாகப் பயன்படுத்தி முடிந்திருந்தது. பொருளாதாரத்தின் உள்ளார்ந்த பலவீனங்கள் கொள்கை பிறழ்வுகளினால் மேலும் தூண்டப்பட்டு நாட்டினைப் பன்முகங்கொண்ட பேரழிவினை நோக்கிச் செலுத்தின. பொருத்தமற்ற நேரத்திலான வரிக்குறைப்புக்கள், சேதன வேளாண்மையைத் துரிதமாக பின்பற்றுவதற்கான முன்னேற்பாடுகளற்ற முயற்சி, கறைபடியாத படுகடன் பணிக்கொடுப்பனவுகளின் பதிவினைப் பேணிக் கொள்வதற்கான வீணான முயற்சிகளிற்கு மத்தியில் நாட்டின் அலுவல்சார் ஒதுக்குகள் துரிதமாக வற்றிப்போனமை, செலாவணி வீத சீராக்கத்தில் தாமதம் மற்றும் பல்வேறு முன்கூட்டிய எச்சரிக்கைச் சமிக்ஞைகளில் கவனஞ்செலுத்தத் தவறியமை போன்றவை பொருளாதாரம் முழுவதிலும் பாரிய அதிர்ச்சியலைகளுக்குக் காரணமாயின. இதன் விளைவாக, ஏனையவற்றிற்கு மத்தியில் வெளிநாட்டுச் செலாவணித் திரவத்தன்மைக்கான தீவிரமான பற்றாக்குறை மற்றும் அழுத்தம் மிகுந்த வெளிநாட்டுப் செலாவணி வீதம் போன்றவற்றுடன் சென்மதி நிலுவையின் மிதமிஞ்சிய அழுத்தங்கள், இலக்கிலிருந்து தொடர்ந்து விலகிச் செல்கின்ற பணவீக்கம், வாழ்வாதாரங்கள் அதிகமாக இழக்கப்பட்டமைக்கு மத்தியில் தளர்வடைந்த பொருளாதாரச் செயற்பாடு, பாரியளவிலான இறைச் சமமின்மைகள், அசாதாரணமான உயர் இடர்நேர்வு மிகையுடன் நிலைபேறற்ற மட்டங்களை அடைந்த பொதுப்படுகடன், வெளிநாட்டு நிதியிடல்களிற்கான அணுகலைத் தடைப்படுத்திய நாட்டிற்கான தரமிடலின் பாரிய தரம் குறைத்தல்கள், முன்னெப்பொழுதுமில்லாதவாறு உயர்வடைந்த சமூகப் பொருளாதார மற்றும் சமூக அரசியல் பதற்றங்கள் மற்றும் சடுதியாக சீர்குலைந்த வியாபார நம்பிக்கை போன்றவற்றினால் நாடு பாதிப்பிற்குள்ளாகியது. அத்தியாவசிய பண்டங்களின் பற்றாக்குறைகள் மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட பங்கீடு, விரிவடைந்த வாழ்க்கைச் செலவினம் மற்றும் உற்பத்திச் செலவினம், நலனோம்புகை மற்றும் வாழ்வாதாரங்களின் இழப்பு போன்றவற்றிற்கு மத்தியில் வியாபாரங்களும் பொதுமக்களும் ஒரே மாதிரியாக கடுமையான இன்னல்களுக்குட்பட்டனர். இதன்*

*விளைவாக, சமூகக் கிளர்ச்சி சடுதியாக வெளிப்பட்டு அரசியல் உறுதிப்பாடின்மையினைத் தோற்றுவித்து, பொருளாதாரத்தினை முன்னெப்பொழுதுமில்லாத நெருக்கடியிலிருந்து விலக்கி வழிநடத்துவதற்கான கொள்கை முன்னுரிமைகளை மீளவரையறை செய்ய வேண்டிய அவசர தேவையொன்றினை ஏற்படுத்தியது.*


*கட்டியெழுப்பப்பட்ட சென்மதி நிலுவை அழுத்தங்களுக்கு மத்தியில் 2022 மாச்சு ஆரம்பத்தில் வெளிநாட்டுச் செலாவணி வீதத்திற்கு ஓர் அளவிடப்பட்ட திருத்தம் அனுமதிக்கப்பட்டது. எனினும், அதன் பின்னரான செலாவணி வீதத்தின் மிதக்கவிடலானது ஊக நடத்தையின் காரணமாக பாரியளவிலான தேய்மானத்திற்கு வழிவகுத்தது. கேள்வி அழுத்தங்களைக் கட்டுப்படுத்துவதற்காகவும் பணவீக்க எதிர்பார்க்கைகளை நிலைநிறுத்துவதற்காகவும் வலுவான தொடர்பூட்டல் உபாயத்துடன் இணைந்து 2022 ஏப்பிறலில் மத்திய வங்கி தீவிரமான நாணயக்கொள்கை இறுக்கமாக்கலினைப் பின்பற்றிய வேளையில், 2022 ஏப்பிறலளவில் பயன்படுத்தத்தக்க ஒதுக்குகள் வற்றிப்போனமைக்கு மத்தியில் செலாவணி வீதத்தினை உறுதிநிலைப்படுத்துவதற்கான வழிமுறையினையும் மேற்கொண்டது. இதேவேளையில், வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்களின் போதுமற்றதன்மை மற்றும் அலுவல்சார் ஒதுக்குகளின் கணிசமானளவில் தாழ்ந்த மட்டங்களுக்கு மத்தியில் அத்தியாவசிய இறக்குமதிகளுக்கான தேவையினைப் பூர்த்தி செய்வதற்காக மத்திய வங்கியானது முடியுமான வரை உயர்ந்தளவில் வெளிநாட்டு செலாவணியினைச் சந்தைக்கு வழங்கியது. மேலும், பொருத்தமான கட்டுப்பாட்டு வழிமுறைகளினூடாக அத்தியாவசிய இறக்குமதிகளினை முன்னுரிமைப்படுத்தல் மற்றும் மூலதன வெளிப்பாய்ச்சல்களை மட்டுப்படுத்தல் போன்ற வழிமுறைகளை மத்திய வங்கி முன்னெடுத்த வேளையில் திருப்பியனுப்பப்பட்ட வெளிநாட்டுச் செலாவணியின் மாற்றல்கள் மீது உரிமம்பெற்ற வங்கிகளினால் மத்திய வங்கிக்கு வெளிநாட்டுச் செலாவணி கட்டாயமாக விற்கப்பட வேண்டிய தேவைப்பாட்டினைத் தொடர்ந்ததுடன் ஒரே நாளுக்குள்ளேயான தளம்பல்களைக் கட்டுப்படுத்துவதற்காக வெளிநாட்டுச் செலாவணி வீதத்தின் மீதான நாளாந்த வழிகாட்டலினை வழங்குவதனைத் தொடங்கியது. மேலும், மத்திய வங்கியின் தொடர்ச்சியான நிதியியல் துறை மேற்பார்வை மற்றும் பொருத்தமான ஒழுங்குமுறைப்படுத்தல் வழிமுறைகளின் பின்பற்றல் காத்திரமான தொடர்பூட்டலுடன் இணைந்து கடுமையான சமூகப் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினை நிச்சயப்படுத்தின.*

*பல மாத கால தயக்கத்தின் பின்னர் அரசாங்கமானது பன்னாட்டு நாணய நிதியத்தின் ஆதரவினை நாடுவதற்கு 2022 ஆரம்பத்தில் வழிமுறைகளை முன்னெடுத்தது. பன்னாட்டு நாணய நிதியமானது இலங்கையின் பொதுப்படுகடன் நிலைபேறற்ற மட்டங்களிலிருப்பதாக ஏற்கனவே மதிப்பிட்டிருந்தமையினால் பன்னாட்டு நாணய நிதியத்திடமிருந்தான ஏதேனும் நிதியிடல் ஆதரவானது பொதுப்படுகடனை மீள்கட்டமைப்பதற்கான முயற்சிகளினால் முன்னிகழ்வுற வேண்டியிருந்தது. அதன் பின்னர், படுகடன் பணிக்கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கான இயளலவில்லாத சிக்கலான நிலையினை அரசாங்கம் எட்டிய போது 2022 ஏப்பிறல் நடுப்பகுதியில் படுகடன் ஸ்தம்பித நிலையொன்றினை அறிவித்ததுடன் அதன்மூலம் இடைக்கால வழிமுறையொன்றாக வெளிநாட்டுப் படுகடன் முக்கியமாக, இருபுடை மற்றும் வர்த்தகப் படுகடன், மீளச்செலுத்தலினை இடைநிறுத்திய வேளையில், வெளிநின்ற படுகடனை மீளக்கட்டமைப்பதற்காக அலுவல்சார் மற்றும் தனியார் கடன்கொடுநர்களின் ஆதரவினை வேண்டிநின்றது. உடனிகழ்வாக, அரசிறையினை மேம்படுத்தல், செலவினத்தைக் கட்டுப்படுத்தல், அரசிற்குச் சொந்தமான முக்கிய வியாபாரத் தொழில்முயற்சிகளுக்கான சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்தல், இறக்குமதிக் கட்டுப்பாடுகளை நடைமுறைப்படுத்தல், வலு நிரம்பலினைப் பங்கீடு செய்தல் போன்ற பல்வேறு முயற்சிகள் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட வேளையில் அத்தியாவசிய செலவினங்களுக்காகவும் மிகவும் பாதிப்படையக்கூடிய பிரிவினருக்கு ஆதரவளிப்பதற்கும் இருபுடை மற்றும் பல்புடை பங்காளர்களிடமிருந்து குறைநிரப்பு நிதியினை நாடியது. 2022 செத்தெம்பரில் பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதிக்கான அலுவலர் மட்ட உடன்படிக்கை எட்டப்பட்டதனைத் தொடர்ந்து பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதியினால் ஆதரவளிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் எதிர்பார்க்கப்பட்ட படுகடனின் நிலைபெறத்தக்க இலக்குகளுக்கு ஒத்திசைவாக படுகடனை மீளக்கட்டமைப்பதனை நோக்கி அலுவல்சார் கடன்கொடுநர்களிடமிருந்து நிதியிடல் உத்தரவாதத்தினைப் பெற்றுக்கொள்வதற்கான முயற்சிகள் தொடரப்பட்டன. இலங்கையினை மீட்சிப் பாதையிலிடுவதனை இலக்காகக் கொண்ட அதேவேளையில் பல தசாப்தங்களாக நாட்டின் வளர்ச்சி உத்வேகத்தினை மட்டுப்படுத்திய அமைப்பியல்சார் தடைகளைத் தீர்ப்பதனையும் இலக்காகக்கொண்ட பொருளாதார சீர்திருத்த நிகழ்ச்சித்திட்டத்துடன் கூடிய ஏறத்தாழ ஐ.அ.டொலர் 3 பில்லியன் தொகை கொண்ட 48 மாத கால விரிவாக்கப்பட்ட நிதிய வசதியினால் ஆதரவளிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்திற்கு பன்னாட்டு நாணய நிதியத்தின் நிறைவேற்றுச் சபை 2023 மாச்சில் அனுமதியளித்தது. பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் கீழ் பல்வேறு இலக்குகள் அடையப்படவிருப்பதுடன் பொருளாதாரத்தில் நீடித்து நிலைத்திருக்கும் வளர்ச்சியை அடைந்து கொள்வதனை நோக்கிய பாதையில் படுகடன் மீள்கட்டமைப்பினூடாக பொதுப் படுகடன் நிலைபேறான நிலையை மீளமைத்தல் முக்கியமானதொரு நிகழ்வாகவிருக்கும். எனினும், படுகடன் மீள்கட்டமைப்பானது நிதியியல் துறைக்கு குறுங்கால சவால்களைத் தோற்றுவிக்கக்கூடுமென்பதுடன் அவை அரசாங்கத்தினாலும் மத்திய வங்கியினாலும் முன்கூட்டிய அடிப்படையில் தீர்க்கப்பட வேண்டிய தேவையிருப்பதுடன் அதன்மூலம் எதிர்வரும் காலத்தில் நிதியியல் முறைமையின் உறுதிப்பாடு வலுப்படுத்தப்படும்.*

*அரசாங்கத்தினாலும் மத்திய வங்கியினாலும் நடைமுறைப்படுத்தப்பட்ட கொள்கை வழிமுறைகளும் சீர்திருத்தங்களும் இதுவரையிலும் குறிப்பிடத்தக்க வெற்றியினைப் பெற்றுக்கொடுத்துள்ளன. பணவீக்கம் 2022 செத்தெம்பரில் வரலாற்று ரீதியான உச்சத்தினை அடைந்ததனைத் தொடர்ந்து வரவேற்கத்தக்க பணவீக்க வீழ்ச்சிப் பாதைக்குத் திரும்பியுள்ளதுடன் வெளிநாட்டுச் செலாவணி வீதமானது*

வரைபடம் 1.1

2022இல் சமூகப் பொருளாதார நெருக்கடி, உறுதிப்பாட்டை மீளக்கட்டியெழுப்புவதை நோக்கிய கொள்கை நடவடிக்கைகள் மற்றும் பெறுபேறுகள்



*2022இன் முதலரையாண்டு காலப்பகுதியில் கடுமையாகத் தேய்வடைந்த பின்னர் தொடர்ச்சியாக உறுதியானதாகக் காணப்பட்டதுடன் 2023 ஆரம்பப்பகுதியில் ஒரு பெறுமான உயர்வினைப் பதிவுசெய்துள்ளது. மேலும், அலுவல்சார் ஒதுக்குகளின் படிப்படியான திரட்சியுடன் இணைந்து வெளிநாட்டு நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை மிதமாகக் காணப்பட்டு அதன்மூலம் 2023 மாச்சு ஆரம்பத்தில் வெளிநாட்டுச் செலாவணி வீதத்தின் நெகிழ்ச்சித்தன்மையினை மீள்நிலைப்படுத்துவதனை இயலச்செய்தது. எதிர்பார்க்கப்படும் வெளிநாட்டு நாணயப் பாய்ச்சல்களின் வழமைக்குத்திரும்புதல் மற்றும் 2023 காலப்பகுதியில் படுகடன் மீள்கட்டமைப்பு பூர்த்தியடைதல் மற்றும் அரச துறையில் பரந்துபட்ட சீர்திருத்தங்கள் போன்றன மேம்பட்டதும் நீடித்துநிலைத்திருக்கக்கூடியதுமான பொருளாதார வாய்ப்புக்களை நோக்கிய நாட்டின் முன்னேற்றத்திற்கு வழியமைக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.*

*சுதந்திரத்திற்குப் பின்னரான வரலாறு முழுவதிலும் மீண்டெழுந்த அத்தகைய பேரண்டப்பொருளாதார தோல்விகளுக்கு மத்தியில் நாடு புரிந்துகொள்ளத் தவறிய பல பாடங்களை 2022ஆம் ஆண்டின் சமூகப் பொருளாதார நெருக்கடி எடுத்துக்காட்டியது. தரவினை அடிப்படையாகக் கொண்ட கொள்கை உருவாக்கத்தின் இன்றியமையாததன்மை, தற்காலிக கொள்கைப் பரிசோதனைகளின் மோசமான தாக்கங்கள், குறுகிய நோக்கங்கொண்ட ஜனரஞ்சக கொள்கைகளின் கடுமையான நலனோம்புகை மீதான தாக்கங்கள் மற்றும் சான்றுகளை அடிப்படையாகக் கொண்ட கொள்கைப் பகுப்பாய்வுகள், நன்கு தாபிக்கப்பட்ட பொருளாதார அடிப்படைகள் மற்றும் வல்லுனர்களின் அபிப்பிராயங்களையும் புறந்தள்ளிய கொள்கைத் தாமதங்களின் செலவினம் போன்றவற்றினை இந்தப்பொருளாதார நிகழ்வானது மீள்வலியுறுத்தியுள்ளது. காலந்தாழ்த்திய அமைப்பியல் சீர்திருத்தங்களின் ஒரே நேரத்திலான திருத்தத்தின் செலவினத்தினைப் பொதுமக்களும் வியாபாரங்களும் பெருமளவில் தாங்கவேண்டியிருந்தது. இப்பின்னணியில், கடந்த ஏழரை தசாப்தங்களாக பொருளாதாரத்தில் வேரூன்றியிருந்த இடையறாத அமைப்பியல் தடங்கல்களைத் தீர்ப்பதற்கு இந்தச் சூழ்நிலையில் அரசாங்கம், மத்திய வங்கி மற்றும் ஏனைய அனைத்து ஆர்வலர்களும் இன்றியமையாத சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதற்கான தமது ஆதரவினை வழங்குவது அவசியமாகும். அத்தகைய சீர்திருத்தங்களை நிறைவேற்றத் தவறுவது இடையறாத மீட்டெடுப்புக்கள், வெளிநாட்டுக் கடன்பாடுகளின் முடிவில்லாத சுழற்சி, மீண்டெழுகின்ற படுகடன் மீள்கட்டமைப்புடன் இணைந்து நிலைபேறற்றதும் உயர்ந்தளவிலான தளம்பலடைகின்றதுமான வியாபாரச் சுழற்சிகள் போன்றவற்றிற்கு வழிவகுத்து, குடிமக்கள் மீதான தேவையற்ற அழுத்தங்களை ஏற்படுத்தி, நாடு நீண்ட கால பொருளாதார முன்னேற்றம் மற்றும் செழிப்பினை அடைந்து கொள்வதனைத் தடைசெய்யும். எனவே, எதிர்வரும் காலப்பகுதியில் நெருக்கடியொன்றினைத் தவிர்ப்பதற்கு தற்போதைய நெருக்கடியிலிருந்து மீண்டெழுவதற்கான நாட்டின் முயற்சிகளில் பன்னாட்டு நாணய நிதியத்தின் ஆதரவு நிகழ்ச்சித்திட்டத்தில் முன்மொழியப்பட்டவை உள்ளடங்கலாக நிலையானதும் நன்கு ஒருங்கிணைக்கப்பட்டதுமான கொள்கைகள் நேரகாலத்துடன் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.*

அட்டவணை 1.1

**பேரண்டப்பொருளாதார செயலாற்றம் (2018-2022)**

| குறிகாட்டி | அலகு | 2018 | 2019 | 2020 | 2021 (அ) | 2022 (ஆ) |
|---|---|---|---|---|---|---|
| **உண்மைத்துறை (இ)** | | | | | | |
| உண்மை மொ.உ.உ. வளர்ச்சி | % | 2.3 | -0.2 | -4.6 | 3.5 (ஆ) | -7.8 |
| நடைமுறைச் சந்தை விலையில் மொ.உ.உற்பத்தி | ரூ.பில் | 15,352 | 15,911 | 15,672 | 17,600 (ஆ) | 24,148 |
| தலைக்குரிய மொ.உ.உ. (ஈ) | ஐ.அ.டொ. | 4,372 | 4,082 | 3,858 | 3,997 (ஆ) | 3,474 |
| **வெளிநாட்டுத்துறை** | | | | | | |
| வர்த்தக நிலுவை (இ) (ஈ) | மொ.உ.உ. இன் % | -10.9 | -9.0 | -7.1 | -9.2 | -6.7 |
| நடைமுறை கணக்கு நிலுவை (இ) (ஈ) | மொ.உ.உ. இன் % | -3.0 | -2.1 | -1.4 | -3.7 | -1.9 |
| திரண்ட நிலுவை | ஐ.அ.டொ.மில் | -1,102.9 | 376.6 | -2,327.7 | -3,966.6 | -2,806.1 |
| வெளிநாட்டு அலுவல்சார் ஒதுக்குகள் | ஐ.அ.டொ.மில் | 6,919.2 | 7,642.4 | 5,664.3 | 3,139.2 | 1,897.6 |
| **இறைத்துறை (இ)** | | | | | | |
| நடைமுறை கணக்கு நிலுவை | மொ.உ.உ. இன் % | -1.1 | -3.4 (உ) | -7.5 | -7.3 | -6.4 |
| ஆரம்ப நிலுவை | மொ.உ.உ. இன் % | 0.6 | -3.4 (உ) | -4.4 | -5.7 | -3.7 |
| திரண்ட இறை நிலுவை | மொ.உ.உ. இன் % | -5.0 | -9.0 (உ) | -10.6 | -11.7 | -10.2 |
| மத்திய அரச படுகடன் (ஊ) | மொ.உ.உ. இன் % | 78.4 | 81.9 | 96.5 | 100.1 | 113.8 (எ) |
| **நாணயத்துறை மற்றும் பணவீக்கம்** | | | | | | |
| விரிந்த பண வளர்ச்சி ($M_{2b}$) (ஏ) | % | 13.0 | 7.0 | 23.4 | 13.2 | 15.4 |
| தனியார் துறைக்கான கொடுகடனின் வளர்ச்சி ($M_{2b}$ இல்) (ஏ) | % | 15.9 | 4.2 | 6.5 | 13.1 | 6.2 |
| ஆண்டுச் சாராசரிப் பணவீக்கம் (ஐ) | % | 4.3 | 4.3 | 4.6 | 6.0 | 46.4 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தால் மாச்சு 2023இல் வெளியிடப்பட்ட (தள ஆண்டு 2015) மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பீடுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன
(ஈ) 2015 இலிருந்து காலாண்டு சராசரி செலவாணி வீதத்தைப் பயன்படுத்தி கணிக்கப்படும் ஐக்கிய அமெரிக்க டொலரின் நியதிகளில் காணப்படும் காலாண்டு மொத்த உள்நாட்டு உற்பத்தியை அடிப்படையாகக் கொண்டது
(உ) நிதியமைச்சின்படி, 2020 இற்கான வரவுசெலவுத் திட்ட உரையில் அறிவிக்கப்பட்டதிற்கிணங்க 2019 இறைத்துறையின் புள்ளிவிபரங்கள் மீள்குறிப்பிடப்பட்டிருந்தன
(ஊ) 2012 சனவரியில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கிய ரூ. 78,441 மில்லியன் கொண்ட திறைசேரிமுறிகள் உள்ளடங்கலாக. இதில், 2017 சனவரி 01 இல் ரூ. 21,778 மில்லியனும் 2022 சனவரி 01இல் ரூ. 25,217 மில்லியனும் முதிர்ச்சியடைந்ததுடன் தற்போதைய வெளிநின்ற தொகை ரூ. 31,446 மில்லியனாகும்.
(எ) நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சினால் அறிவிக்கப்பட்ட இலங்கையின் வெளிநின்ற பொதுப்படுகடனை தீர்ப்பனவு செய்வதுடன் தொடர்புடைய இடைக்காலக் கொள்கை திகதியான, 2022 ஏப்பிறல் 12 இற்கு பின்னர் நிலுவையிலுள்ள பல்வேறு படுகடன் தீர்ப்பனவு கொடுப்பனவுகளை வெளிநின்ற மத்திய அரச படுகடன் உள்ளடக்கவில்லை. இடைக்கால கொள்கைக்கு அமைவாக மூலதனவாக்கபட வேண்டுமென கருதப்படுகின்ற பாதிக்கப்பட்ட படுகடனின் நிலுவையிலுள்ள வட்டிக் கொடுப்பனவுகளையும் அத்துடன் இலங்கை அபிவிருத்தி முறிகளுடன் தொடர்புடைய பல்வேறு நிலுவையிலுள்ள வட்டிக் கொடுப்பனவுகளையும் இப்படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் உள்ளடக்குகின்றன
(ஏ) ஆண்டிறுதி பெறுமதிகளின் அடிப்படையிலான ஆண்டுக்காண்டு வளர்ச்சி
(ஐ) கொ.நு.வி.சுட்டெண்ணை (2013=100) அடிப்படையாகக் கொண்டது

*மூலங்கள்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு
இலங்கை மத்திய வங்கி


## 1.2 2022இல் பேரண்டப் பொருளாதார அபிவிருத்திகள்

### உண்மைத் துறை அபிவிருத்திகள் மற்றும் பணவீக்கம்

**உலகளாவிய நோய்த்தொற்றிற்குப் பின்னரான மீட்சியை மறுதலையாக்கிய உள்நாட்டு மற்றும் உலகளாவிய சிக்கல்களுக்கு மத்தியில் இலங்கைப் பொருளாதாரமானது முன்னெப்பொழுதுமில்லாத பொருளாதார நெருக்கடியின் அடுத்தடுத்த தாக்கங்களால் பிரதானமாக உந்தப்பட்டு சுதந்திரத்திலிருந்து அதன் ஆழமான பொருளாதாரச் சுருக்கமொன்றை 2022இல் பதிவுசெய்தது.** தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் தற்காலிக மதிப்பீடுகளிற்கமைவாக, உண்மை மொத்த உள்நாட்டு உற்பத்தி 2021இன் 3.5 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2022இல் 7.8 சதவீதத்தால் சுருக்கமடைந்தது. தொடர்ச்சியாக நிலவிய வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறை மற்றும் வெளிநாட்டு நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறைகளின் காரணமாக ஆழமாக வேரூன்றிக் காணப்பட்ட இரட்டைப் பற்றாக்குறைகள் மூலம் வெளிப்படுத்தப்பட்ட நீண்டகால பேரண்டப்பொருளாதார பலவீனங்களானது 2022ஆம் ஆண்டு காலப்பகுதியில் மேலும் மோசமடைந்து காணப்பட்டதோடு காலத்திற்கு பொருத்தமற்றதும் தேவையற்றதுமான வரி மற்றும் வேளாண்மைக் கொள்கைகளின் சீர்திருத்தங்களுக்கு மத்தியில், ஆண்டுகளாக, குறிப்பாக அண்மைய ஆண்டுகளில், இத்தகைய சமநிலையற்ற தன்மைகளை நிவர்த்தி செய்வதில் காணப்பட்ட கொள்கைத் தாமதங்களின் தாக்கத்தை பிரதிபலித்தன. வெளிநாட்டுச் செலாவணி பற்றாக்குறையின் காரணமாக ஏற்பட்ட கடுமையான எரிபொருள் பற்றாக்குறைகளானது தடைகளுக்குள்ளான நிரம்பல் சங்கிலி, நீண்டகால மின் துண்டிப்பு, இறக்குமதிகளின் மட்டுப்பாடுகளிற்கு மத்தியில் காணப்பட்ட மூலப்பொருட்களின் பற்றாக்குறை மற்றும் உற்பத்திச் செலவின் அதிகரிப்பு போன்றவற்றிற்கு வழிவகுத்து பொருளாதார நடவடிக்கைகள் மீது கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தின. மேலும், உயர்வடைந்த உலகளாவிய வலு விலைகள் மற்றும் செலாவணி வீத தேய்மானம் என்பவற்றிற்கு மத்தியில் முக்கிய பயன்பாடுகளின் விலைகளில் ஏற்பட்ட குறிப்பித்தக்க மேல்நோக்கிய திருத்தங்களானது நிரம்பல்பக்க அழுத்தங்களை அதிகரித்த அதேவேளையில் உயர்வடைந்த பணவீக்கம் மற்றும் வரி அதிகரிப்புக்கள் என்பன மக்களின் செலவழிக்கத்தக்க வருமானத்தைப் பாதித்தன. இப்பின்னணியில், உயர்பணவீக்கத்திற்கும் பொருளாதாரத்தின் மந்தநிலைக்கும் வழிவகுத்திருக்கக்கூடிய முக்கிய பொருளாதார அழிவொன்றை முன்கூட்டியே தடுக்கும் நோக்குடன் அரசாங்கமும் மத்திய வங்கியும் பல்வேறு கட்டுப்படுத்தல் மற்றும் நிவாரண கொள்கை வழிமுறைகளை முன்னெடுத்தன. அண்மைக் காலத்தில் சில கணிசமான திருத்தச் செலவுகள் காணப்பட்ட போதும், சென்மதி நிலுவையின் அழுத்தங்களை கட்டுப்படுத்துவதற்கான ஏனைய வழிமுறைகளுடன் இணைந்து காணப்பட்ட குறிப்பிடத்தக்க நாணயக்கொள்கை இறுக்க வழிமுறைகளும் எரிபொருள் ஒதுக்கீட்டு முறைமைகளுடன் கூடிய வரி மற்றும் பயன்பாட்டு விலைகளில் ஏற்பட்ட முன்னெப்பொழுதுமில்லாத இறைச் சீர்திருத்தங்களும், கேள்விப் பக்கங்களுடன் தொடர்புடைய மிகையான விலை அழுத்தங்களை கட்டுப்படுத்தவும் வெளிநாட்டுச் செலாவணி நிலைமைகளை மேம்படுத்தவும் வெளிநாட்டு மற்றும் இறைத் துறை அழுத்தங்களை குறைக்கவும் பொருளாதார நடவடிக்கைக்கு ஆதரவளிக்கவும் உறுதிப்பாட்டை நோக்கி பொருளாதாரத்தை வழிநடாத்தவும் உதவிபுரிந்தன. அதேவேளை, அரசாங்கமானது நிதி ஏற்பாட்டிற்காக பன்னாட்டு நாணய நிதியத்திடமிருந்து ஆதரவை நாடியுள்ளதுடன் இடைக்கால வழிமுறையொன்றாக படுகடன் ஸ்தம்பிதநிலையை அறிவித்து படுகடன் சீரமைப்பு தொடர்பில் இருபுடை மற்றும் வர்த்தக கடன்கொடுநர்களுடன் பேச்சுவார்த்தையொன்றில் உள்ளது. அரசாங்கத்தினதும் மத்திய வங்கியினதும் இத்தகைய விரைவானதும் தீர்வுமிக்கதுமான வழிமுறைகளானது பொருளாதார நடவடிக்கையின் வீழ்ச்சியைக் கட்டுப்படுத்தவும் பொருளாதாரத்தில் நிலையான நம்பிக்கையை ஏற்படுத்தவும் உதவி புரிந்தன.

**2021இன் உலகளாவிய நோய்த்தொற்றிற்குப் பின்னரான மீட்சியை மறுதலையாக்கி 2022இல் உண்மைப் பொருளாதாரம் பரந்தளவிலான சுருக்கமொன்றை எடுத்துக்காட்டியது.** 2019இலிருந்து மந்தமான செயலாற்றங்களைக் காண்பித்திருந்த வேளாண்மைத் துறையானது 2022இல் 4.6 சதவீதத்தால் சுருக்கமடைந்தது. இது, பிரதானமாக இரசாயன வளமாக்கிகள் மற்றும் ஏனைய வேளாண் இரசாயனங்களின் கடுமையான பற்றாக்குறைகள், அதிகரித்த மூலப்பொருள் செலவுகள்

வரைபடம் 1.2
மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சிக்கு நடவடிக்கை வாரியான பங்களிப்பு




*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத்திணைக்களம்

1

அட்டவணை 1.2

**நிலையான விலைகளில் (2015) கைத்தொழில் மூலத்தின்படி மொத்தத் தேசிய வருமானம் (அ)(ஆ)**

| பொருளாதார நடவடிக்கை | ரூ.பில்லியன் | | மொ.உ.உ இன் பங்கு (%) | | வளர்ச்சி (%) | | வளர்ச்சிக்கான பங்களிப்பு (%) | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2021(இ) | 2022 | 2021(இ) | 2022 | 2021(இ) | 2022 | 2021(இ) | 2022 |
| **வேளாண்மை, காடாக்கல் மற்றும் மீன்பிடி** | **949.9** | **906.5** | **7.3** | **7.5** | **0.9** | **-4.6** | **0.1** | **-0.3** |
| வேளாண்மை மற்றும் காடாக்கல் | 812.4 | 783.4 | 6.2 | 6.5 | 0.8 | -3.6 | 0.1 | -0.2 |
| மீன்பிடி | 137.6 | 123.1 | 1.1 | 1.0 | 1.5 | -10.5 | 0.0 | -0.1 |
| **கைத்தொழில்** | **3,937.9** | **3,309.8** | **30.2** | **27.5** | **5.7** | **-16.0** | **1.7** | **-4.8** |
| சுரங்கமகழ்தலும் கல்லுடைத்தலும் | 288.0 | 198.7 | 2.2 | 1.7 | 1.4 | -31.0 | 0.0 | -0.7 |
| தயாரிப்பு | 2,247.2 | 1,963.3 | 17.2 | 16.3 | 7.4 | -12.6 | 1.2 | -2.2 |
| மின்வலு, எரிவாயு, நீர் மற்றும் கழிவு கையாளல் | 230.0 | 220.0 | 1.8 | 1.8 | 2.2 | -4.3 | 0.0 | -0.1 |
| கட்டடவாக்கம் | 1,172.8 | 927.7 | 9.0 | 7.7 | 4.4 | -20.9 | 0.4 | -1.9 |
| **பணிகள்** | **7,414.3** | **7,265.1** | **56.9** | **60.5** | **3.5** | **-2.0** | **2.0** | **-1.1** |
| மொத்த மற்றும் சில்லறை வியாபாரம், போக்குவரத்து மற்றும் களஞ்சியப்படுத்தல், தங்குமிடம் மற்றும் உணவுப் பணிகள் நடவடிக்கைகள் | 3,149.8 | 3,230.3 | 24.2 | 26.9 | 1.3 | 2.6 | 0.3 | 0.6 |
| தகவல் மற்றும் தொடர்பூட்டல் | 421.8 | 415.9 | 3.2 | 3.5 | 18.0 | -1.4 | 0.5 | 0.0 |
| நிதியியல், காப்புறுதி மற்றும் வதிவிட உரிமை உள்ளடங்கலான உண்மைச் சொத்து நடவடிக்கைகள் | 1,375.3 | 1,163.3 | 10.5 | 9.7 | 7.5 | -15.4 | 0.8 | -1.6 |
| தொழிற்தகைமை பணிகள் மற்றும் ஏனைய தனியார் பணிகள் நடவடிக்கைகள் | 1,294.6 | 1,286.3 | 9.9 | 10.7 | 1.8 | -0.6 | 0.2 | -0.1 |
| பொது நிர்வாகம், பாதுகாப்பு, கல்வி, மனித நலம் மற்றும் சமூக வேலை நடவடிக்கைகள் | 1,172.8 | 1,169.4 | 9.0 | 9.7 | 2.2 | -0.3 | 0.2 | 0.0 |
| **அடிப்படை விலையில் மொத்த பெறுமதி கூட்டல்** | **12,302.1** | **11,481.4** | **94.4** | **95.5** | **4.0** | **-6.7** | **3.7** | **-6.3** |
| மானியங்கள் நீங்கலாக உற்பத்தி மீதான வரி | 735.9 | 536.5 | 5.6 | 4.5 | -3.6 | -27.1 | -0.2 | -1.5 |
| **சந்தை விலையில் மொத்த உள்நாட்டு உற்பத்தி** | **13,037.9** | **12,017.8** | **100.0** | **100.0** | **3.5** | **-7.8** | **3.5** | **-7.8** |
| வெளிநாட்டிலிருந்தான தேறிய முதலாந்தர வருமானம் | -294.1 | -304.2 | | | 12.6 | -3.5 | | |
| **சந்தை விலையில் மொத்த தேசிய வருமானம்** | **12,743.8** | **11,713.6** | | | **4.0** | **-8.1** | | |

(அ) மொ.உ.உ மதிப்பீடுகள் அடிப்படையாகக் கொண்டது (2015 தள ஆண்டு)
(ஆ) தற்காலிகமானது
(இ) திருத்தப்பட்டது

*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளவிபரத் திணைக்களம்

அதேபோன்று நிரம்பல் வலையமைப்புக்கள் மீதான இடையூறுகள் என்பவற்றை பிரதிபலித்தது. ஆண்டுக் காலப்பகுதியில், வேளாண்மைத் துறையில் ஏற்பட்ட இவ் ஒட்டுமொத்தச் சுருக்கத்திற்கு அரிசி, தேயிலை, காய்கறிகள், விலங்கு உற்பத்தி மற்றும் கடல் மீன்பிடி மற்றும் கடல் நீரியியல் துணைத் துறைகள் பாரியளவில் பங்களிப்புச் செய்த அதேவேளை, எண்ணெய்ப்பசையுள்ள பழங்கள் அத்துடன் காடாக்கல் மற்றும் மரக்குற்றியாக்கல் என்பன வளர்ச்சிகளைப் பதிவுசெய்தன. 2022இல், மூலப்பொருட்களில் ஏற்பட்ட கடுமையான பற்றாக்குறைகளுக்கும் அதிகரித்த உள்ளீட்டுச் செலவுகளுக்கும் மத்தியில், பிரதானமாக கட்டடவாக்கம் மற்றும் தயாரிப்பு ஆகிய துணைத் துறைகளின் நலிவடைந்த செயலாற்றத்தின் காரணமாக கைத்தொழில் துறையானது ஆண்டிற்காண்டு அடிப்படையில் 16.0 சதவீதத்தால் குறிப்பிடத்தக்களவில் சுருக்கமடைந்தது. வலு நெருக்கடி மற்றும் இறுக்கமான நாணய நிலைமைகள் என்பவையும் கைத்தொழில் துணைத் துறைகளின் செயலாற்றத்தை சிக்கலுக்குள்ளாக்கின. கைத்தொழில் துறையின் 28.0 சதவீதத்திற்கு வகைகூறும் கட்டடவாக்கத் துறையானது 2022இல் ஆண்டிற்காண்டு அடிப்படையில் 20.9 சதவீத சுருக்கமொன்றைப் பதிவுசெய்த அதேவேளை, மொத்த கைத்தொழில் துறையின் ஏறத்தாழ 59 சதவீதத்திற்கு வகைகூறும் ஒட்டுமொத்த தயாரிப்பு நடவடிக்கைகள் ஆண்டிற்காண்டு அடிப்படையில் 12.6 சதவீதத்தால் சுருக்கமடைந்தன. 2022இல், தயாரிப்புத் துறையினுள், நிலக்கரி மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகள் என்பவற்றின் தயாரிப்பு, மற்றும் உணவு, குடிவகைகள் மற்றும் புகையிலை உற்பத்திகள் என்பவற்றின் தயாரிப்பு முறையே 58.2 சதவீதம் மற்றும் 14.2 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க சுருக்கங்களைப் பதிவுசெய்த அதேவேளை, புடவைகள், அணியும் ஆடைகள், தோல் மற்றும் ஏனைய தோல் சார்ந்த உற்பத்திகள் என்பவற்றின் தயாரிப்புத் துணைத் துறைகள் 8.1 சதவீதம் கொண்ட ஆண்டிற்காண்டு வளர்ச்சியைப் பதிவுசெய்தன. அதேவேளை, 2022இல் சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல் நடவடிக்கைகளும் 31.0 சதவீதம் கொண்ட ஆண்டிற்காண்டுச் குறிப்பிடத்தக்க சுருக்கமொன்றை அறிக்கையிட்டன. கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றைத் தொடர்ந்து பணிகள் துறை நடவடிக்கையில் ஏற்பட்ட படிப்படியான இயல்புநிலை மூலம் ஆதரவளிக்கப்பட்டு 2022இன் முதலாம் காலாண்டுப் பகுதியில் பணிகள் துறைகளில் மீண்டெழும் தன்மையான செயலாற்றம் காணப்பட்ட போதிலும், அதன்பின்னர் தீவிரமடைந்த பொருளாதார சிக்கல்களானது பணிகள் துறையின் மேலதிக விரிவாக்கத்தை தடைப்படுத்தி 2022இல் ஆண்டிற்காண்டு அடிப்படையில் 2.0 சதவீதம் கொண்ட ஒட்டுமொத்த சுருக்கத்தை தோற்றுவித்தது. ஆண்டு காலப்பகுதியில், தங்குமிட வசதி, உணவு மற்றும் குடிவகைகள், அதேபோன்று பொருட்கள் மற்றும் பயணிகள் போக்குவரத்து துணைத் துறைகள் முறையே 27.0 சதவீதம் மற்றும் 3.5 சதவீதம் கொண்ட ஆண்டிற்காண்டு வளர்ச்சிகளுடன் கூடிய வலுவான மீளெழுச்சியொன்றை எடுத்துக்காட்டிய போதும், பணிகள் துறைச் செயலாற்றமானது மொத்தவிற்பனை மற்றும் சில்லறை வியாபாரம், நிதியியல் பணிகள், மற்றும் உண்மைத் துறை நடவடிக்கைகள் போன்ற துணைத் துறைகளின் குறிப்பிடத்தக்க சுருக்கங்களால் மட்டுப்படுத்தப்பட்டது.

அட்டவணை 1.3

நடைமுறைச் சந்தை விலைகளில் கூட்டுக் கேள்வியும் சேமிப்பு-முதலீட்டு இடைவெளியும் (அ)(ஆ)

| விடயம் | ரூ.பில்லியன் | | வளர்ச்சி (%) | | மொ.உ.உ இன் சதவீதமாக (%) | |
|---|---|---|---|---|---|---|
| | 2021(இ) | 2022 | 2021 (இ) | 2022 | 2021 (இ) | 2022 |
| **1. உள்நாட்டு கேள்வி** | **18,901.2** | **25,005.2** | **13.6** | **32.3** | **107.4** | **103.6** |
| 1.1 நுகர்வு | 12,434.3 | 16,700.6 | 8.4 | 34.3 | 70.6 | 69.2 |
| தனியார் | 10,769.7 | 14,973.3 | 9.4 | 39.0 | 61.2 | 62.0 |
| பொது | 1,664.6 | 1,727.3 | 2.3 | 3.8 | 9.5 | 7.2 |
| 1.2 முதலீடு (மொத்த மூலதன உருவாக்கம்) | 6,467.0 | 8,304.6 | 25.1 | 28.4 | 36.7 | 34.4 |
| **2. தேறிய வெளிநாட்டு கேள்வி** | **-1,301.0** | **-857.5** | **-34.7** | **34.1** | **-7.4** | **-3.6** |
| பொருட்களினதும் பணிகளினதும் ஏற்றுமதி | 2,980.3 | 5,187.9 | 23.2 | 74.1 | 16.9 | 21.5 |
| பொருட்களினதும் பணிகளினதும இறக்குமதி | 4,281.3 | 6,045.4 | 26.5 | 41.2 | 24.3 | 25.0 |
| **3. மொத்தக் கேள்வி (மொ.உ.உ.) (1+2)** | **17,600.2** | **24,147.7** | **12.3** | **37.2** | **100.0** | **100.0** |
| **4. உள்நாட்டு சேமிப்புகள் (3-1.1)** | **5,165.9** | **7,447.2** | **22.9** | **44.2** | **29.4** | **30.8** |
| தனியார் | 6,456.3 | 8,987.6 | 19.9 | 39.2 | 36.7 | 37.2 |
| பொது | -1,290.4 | -1,540.4 | -9.3 | -19.4 | -7.3 | -6.4 |
| **5. வெளிநாட்டிலிருந்தான தேறிய முதன்மை வருமானம் (ஈ)** | **-395.5** | **-621.4** | **6.5** | **-57.1** | **-2.2** | **-2.6** |
| **6. வெளிநாட்டிலிருந்தான தேறிய நடைமுறை மாற்றல்கள் (ஈ)** | **1,034.7** | **1,159.5** | **-10.1** | **12.1** | **5.9** | **4.8** |
| **7. தேசிய சேமிப்புக்கள் (4+5+6)** | **5,805.1** | **7,985.3** | **17.7** | **37.6** | **33.0** | **33.1** |
| **8. சேமிப்பு - முதலீட்டு இடைவெளி** | | | | | | |
| உள்நாட்டு சேமிப்பு - முதலீடு (4-1.2) | -1,301.0 | -857.5 | | | | |
| தேசிய சேமிப்பு - முதலீடு (7-1.2) | -661.9 | -319.3 | | | | |
| **9. வெளிநாட்டு நடைமுறை கணக்கு நிலுவை (2+5+6) (ஈ) (உ)** | **-661.9** | **-319.3** | | | | |

(அ) மொ.உ.உ மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டது (2015 தள ஆண்டு)
(ஆ) தற்காலிகமானது
(இ) திருத்தப்பட்டது
(ஈ) சென்மதி நிலுவை மதிப்பீடுகளுடனான ஏதேனும் வேறுபாடுகளிற்கு தொகுப்பில் ஏற்படுகின்ற காலதாமதமே காரணமாகும்
(உ) ஐக்கிய அமெரிக்க டொலர் நியதிகளில் கணிப்பிடப்படுகின்ற மொ.உ. உற்பத்தியின் சதவீதமாக வெளிநாட்டு நடைமுறைக் கணக்கு மீதியின் வருடாந்த மதிப்பீடுகளுக்காக, இவ்வறிக்கையின் 5ஆம் அத்தியாயத்தின் 5.1ஆம் அட்டவணையை தயவுசெய்து பார்க்கவும். இம்மதிப்பீடானது, செலாவணி வீதத்தில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்களவிலான தளம்பலின் காரணமாக, 2022இல் உள்நாட்டு நாணய நியதிகளில் கணிப்பிடப்படுகின்ற அதையொத்தவற்றுடன் வேறுபட்டு காணப்படுகின்றது


*மூலங்கள்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

**பெயரளவு நியதிகளில், ஆண்டு காலப்பகுதியில் பாரியளவான சுருக்கியை பிரதிபலிக்கும் வகையில், இலங்கைப் பொருளாதாரம் முன்னைய ஆண்டின் 12.3 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2022இல் ஆண்டிற்காண்டு அடிப்படையில் 37.2 சதவீதமான கணிசமான விரிவாக்கமொன்றை பதிவுசெய்தது.** எனினும், வெளிநாட்டுச் செலாவணியின் பாரியளவான தேய்மானத்தின் காரணமாக ஐ.அ.டொலர் நியதிகளில் பொருளாதாரத்தின் ஒட்டுமொத்த அளவானது 2021இன் ஐ.அ.டொலர் 88.5 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2022இல் ஐ.அ.டொலர் 77.1 பில்லியனாகச் சுருக்கமடைந்தது. 2022இல் தலைக்குரிய மொத்த உள்நாட்டு உற்பத்தியும் 2021இன் ஐ.அ.டொலர் 3,997 இலிருந்து 2022இல் ஐ.அ.டொலர் 3,474க்கு வீழ்ச்சியடைந்தது. செலவின அணுகுமுறைக்கமைவாக. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 69.2 சதவீதத்திற்கு வகைகூறும் நுகர்வுச் செலவினமானது 2021இன் 8.4 சதவீதம் கொண்ட விரிவாக்கத்துடன் ஒப்பிடுகையில் 2022இல் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 34.3 சதவீதத்தால் விரிவடைந்து, பொருளாதாரத்தின் ஒட்டுமொத்த பெயரளவு வளர்ச்சிக்குப் பாரியளவில் பங்களிப்புச் செய்தது. இதற்கமைய, ஆண்டு காலப்பகுதியில் காணப்பட்ட கடுமையான பணவீக்க அதிகரிப்பை பிரதிபலித்து, 2022இல் வீட்டுத்துறைச் செலவினமானது முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட 9.4 சதவீத விரிவாக்கத்துடன் ஒப்பிடுகையில் 2022இல் 39.0 சதவீதம் கொண்ட உயர்வான வீதத்தில் வளர்ச்சியடைந்தது. அரசாங்கச் செலவினமும் 2021இல் பதிவுசெய்யப்பட்ட 2.3 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2022இல் 3.8 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. அதேவேளை, ஆண்டுக் காலப்பகுதியில் முதலீட்டுச் செலவீனம் 2021இல் பதிவுசெய்யப்பட்ட 25.1 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில், ஆண்டிற்காண்டு அடிப்படையில் 28.4 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. இதற்கமைய, பெயரளவு மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக முதலீடானது முன்னைய ஆண்டின் 36.7 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2022இல் 34.4 சதவீதத்தில் காணப்பட்டது. உள்நாட்டு நாணயத்தில் ஏற்பட்ட பெறுமானத் தேய்வினால் வலுவாக்கப்பட்ட ஏற்றுமதியின் குறிப்பிடத்தக்கவொரு விரிவாக்கத்தின் தாக்கத்தையும் இறக்குமதிக் கட்டுப்பாடுகளிற்கும் மந்தமடைந்த கூட்டுக் கேள்விகளிற்கும் மத்தியில் மட்டுப்படுத்தப்பட்ட இறக்குமதிகளினதும் தாக்கத்தையும் பிரதிபலித்து, 2022ஆம் ஆண்டு காலப்பகுதியில் நடைமுறை விலைகளில் காணப்படும் பொருட்கள் மற்றும் பணிகளுக்கான தேறிய வெளிநாட்டுக் கேள்வி ஆண்டிற்காண்டு அடிப்படையில் 34.1 சதவீதத்தால் குறிப்பிடத்தக்களவில் மேம்பட்டு காணப்பட்டது. இதற்கமைய, மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக காணப்பட்ட பொருட்கள் மற்றும் பணிகள் என்பவற்றின் தேறிய பெயரளவு வெளிநாட்டு மீதி 2021இன் -7.4 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2022இல் -3.6 சதவீதமாகக் காணப்பட்டது.

1


**வலுவிழந்த பேரண்டப் பொருளாதார நிலைப்பாடுகளினால் தொழிலாளர் உற்பத்தித்திறனுக்கு சவால்கள் ஏற்பட்ட போதும் 2022இல் பொருளாதாரத்தில் காணப்படும் தொழிலின்மை மட்டங்கள் சிறிதளவில் வீழ்ச்சியடைந்து காணப்பட்டன.** தொழில்புரியக்கூடிய வயதினர் குடித்தொகைக்கு தொழிற்படையின் விகிதமாக காணப்படும் தொழிற்படைப் பங்கேற்பு வீதமானது ஆண்டு காலப்பகுதியில் பொருளாதார ரீதியாக தொழிற்படாத குடித்தொகையின் அதிகரிப்பொன்றுடன் 2021இன் 49.9 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2022இல் 49.8 சதவீதத்திற்கு சிறிதளவில் வீழ்ச்சியடைந்தது. ஆண் தொழிற்படை பங்கேற்பு வீதம் முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட 71.0 சதவீதத்திலிருந்து 2022இல் 70.5 சதவீதத்திற்கு வீழ்ச்சியொன்றைப் பதிவுசெய்தது. சாதகமான விதத்தில், பெண் தொழிற்படை பங்கேற்பு வீதம் 2021இன் 31.8 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2022 ஆம் ஆண்டில் 32.1 சதவீதத்திற்கு அதிகரித்தது. எது எவ்வாறிருப்பினும், 2022இன் இரண்டாம் மற்றும் மூன்றாம் காலாண்டுக் காலப்பகுதியில் தொழிலின்மை வீதத்தில் அதிகரித்த போக்கொன்று அவதானிக்கப்பட்ட போதும் வருடாந்த தொழிலின்மை வீதமானது 2021இன் 5.1 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2022இல் 4.7 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. அதேவேளை, கடுமையான எரிபொருள் பற்றாக்குறைகள், இடைக்கிடையோன மின்துண்டிப்புக்கள் மற்றும் இறக்குமதி கட்டுப்பாடுகளால் ஏற்பட்ட உள்ளீடுகளின் பற்றாக்குறைகள் என்பவற்றால் ஏற்பட்ட நிரம்பல் வழிகளுக்கான தொடர்ச்சியான இடையூறுகள் என்பன ஆய்வுக்குரிய காலப்பகுதியில் தொழிலாளர்களின் உச்சகட்ட பயன்பாட்டிற்கு தடையை ஏற்படுத்தி பொருளாதாரத்திற்கான பெறுமதி கூட்டலில் ஏற்படுகின்ற மெதுவடைவிற்கு பகுதியளவில் பங்களித்தன. இதற்கமைய, தொழில்புரிந்த மணித்தியாலம் ஒன்றிற்கு மொத்த பெறுமதி கூட்டப்பட்டவையின் (2015 விலைகளில்) நியதிகளில் அளவிடப்பட்ட தொழிலாளர் உற்பத்தித்திறனானது 2021இன் தொழில்புரிந்த மணித்தியாலம் ஒன்றிற்கு ரூ.768.08 இலிருந்து 2022இல் தொழில்புரிந்த மணித்தியாலம் ஒன்றிற்கு ரூ.686.57 ஆக 10.6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.

வரைபடம் 1.3
முதலீடு மற்றும் சேமிப்பு
(மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக)




மூலங்கள்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 1.4
தொழிலின்மை வீதம்




*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

**நுகர்வோர் விலை பணவீக்கம் 2022 செத்தெம்பரில் வரலாறு காணாத உயர்வொன்றை அடைந்து, பின்னர் இறுக்கமான நாணய நிலைமைகளின் தாக்கத்தையும் நிரம்பல்பக்க இடையூறுகளின் படிப்படியான தளர்த்தலையும் உணர்ந்து குறைவடைகின்ற பாதையொன்றைத் தொடங்கியது.** 2022 செத்தெம்பரில் முடிவடைகின்ற ஒன்பது மாதக் காலப்பகுதியில் முதன்மைப் பணவீக்கமானது துரிதமான அதிகரிப்பு பாதையொன்றில் காணப்பட்டதுடன் நிரம்பல்பக்க இடையூறுகள், நிருவகிக்கப்பட்ட விலைகளுக்கான துரிதமான சீராக்கங்கள், இலங்கை ரூபாவின் கடுமையான தேய்மானம் என்பவற்றால் ஏற்பட்ட உணவு, வலு மற்றும் போக்குவரத்துத் துறைகள் என்பவற்றில் ஏற்பட்ட விலை உயர்வுகள் மற்றும் அத்தகையவற்றின் கசிவுத் தாக்கங்கள் போன்ற பல்வேறு துறைகளிலிருந்தான விலை அழுத்தங்களையும் கடந்த சில ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்ட நாணயக் கடன் வசதியின் பின்தங்கிய விளைவின் காரணமாக ஏற்பட்ட திரண்ட கேள்வி அழுத்தங்களையும் பிரதிபலித்தது. எனினும், இறுக்கமான நாணய கொள்கையினதும், உணவு மற்றும் வலு என்பவற்றின் விலைகளை தணிப்பதுடன் இணைந்து அத்தியாவசிய இறக்குமதிகளை முன்னுரிமைப்படுத்தல் போன்ற ஏனைய கேள்வி முகாமைத்துவ வழிமுறைகளினதும் கணிசமான தாக்கமானது 2022இன் பின்னைய காலப்பகுதியிலிருந்து முதன்மை பணவீக்கத்தின் வேகத்தை மிதமடையச் செய்ய உதவியது. இதற்கமைய, கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணால் (கொ.நு.வி.சு, 2013=100) அளவிடப்பட்டவாறான ஆண்டிற்காண்டு முதன்மைப் பணவீக்கம் 2021இன் இறுதியில் பதிவுசெய்யப்பட்ட 12.1 சதவீதத்திலிருந்து 2022 செத்தெம்பரில் 69.8 சதவீதத்திற்கு துரிதமடைந்து பின்னர் 2022 திசெம்பரில் 57.2 சதவீதமாக மிதமடைந்தது. ஒத்த போக்கைத் தொடர்ந்து, தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணை (தே.நு.வி.சு, 2013=100) அடிப்படையாகக் கொண்ட ஆண்டிற்காண்டு பணவீக்கம் 2021இன் இறுதியல்

## சிறப்புக் குறிப்பு 01
## இலங்கையின் பணவீக்க வீழ்ச்சிச் செயல்முறை


2022ஆம் ஆண்டுக் காலப்பகுதியிலான உயர்ந்த பணவீக்கமானது ஒரு உலகளாவிய நிகழ்வாகும். தீவிரமான நாணயக் கொள்கைத் தளர்த்தல் மற்றும் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றினைத் தொடர்ந்து இறை ஆதரவுகளின் காலம் தாழ்த்திய தாக்கங்கள், உக்ரேனின் மீதான ருசியாவின் ஊடுருவலினால் தீவிரமடைந்த எண்ணெய் மற்றும் எண்ணெயல்லாப் பண்டங்களின் பற்றாக்குறைகள் மற்றும் வழங்கல் சங்கிலியிலான சிக்கல்களுடன் கூடிய இயலளவு வரையறைகள் போன்றவற்றினைப் பிரதிபலித்து உலகளாவிய பணவீக்கம் 2022இல் 8.8 சதவீதத்திற்கு விரைவடைந்தது (ப.நா.நிதியம், 2023). உலகளாவிய மற்றும் உள்நாட்டுக் காரணிகளால் பாதிப்புக்குள்ளாகி இலங்கையும் 2022ஆம் ஆண்டில் முன்னெப்பொழுதுமில்லாத மட்டங்களில் பணவீக்கத்தினை எதிர்கொண்டு சுதந்திரத்திற்குப் பின்னரான அதன் விலைகளில் பாரியளவிலான அதிகரிப்பினைப் பதிவுசெய்தது. எனினும், 2022இன் இறுதிப்பகுதியில் பணவீக்கமானது அதன் உச்சமட்டங்களிலிருந்து மிதமடைவதற்குத் தொடங்கி, பணவீக்க வீழ்ச்சிச் செயல்முறைகளின் ஆரம்ப அறிகுறிகளைக் காட்டியது. இச்செயல்முறையானது பல்வேறு காரணிகளால் ஆதரவளிக்கப்பட்டு, இறுதியாக எதிர்வரும் காலத்தில் இலக்கிடப்பட்ட மட்டங்களிற்கு பணவீக்கத்தினை கீழ்நோக்கிக் கொண்டுவருமென எதிர்பார்க்கப்படுகின்றது. இப்பின்னணியில். பல்வேறு தவறான கருத்துக்களும் தவறான விளக்கங்களும் வெளிக்கொணரப்பட்டு குழப்பத்திற்கு வழிவகுத்து பொதுமக்களின் பணவீக்க எதிர்பார்ப்புக்களைப் பாதிப்பதனால் பணவீக்கம், பணவீக்க வீழ்ச்சி, கடந்தகால உலகளாவிய பணவீக்க வீழ்ச்சிச் சந்தர்ப்பங்களின் பண்புகள் மற்றும் மிக முக்கியமாக இலங்கையில் எதிர்பார்க்கப்படும் பணவீக்க வீழ்ச்சிச் செயல்முறை போன்ற எண்ணக்கருக்களை விளங்கிக்கொள்வது அவசியமாகும்.

### பணவீக்கம் பற்றிய எண்ணக்கரு

பணவீக்கத்திலான மாற்றமானது சிலவேளைகளில் விலைமட்டத்திலான மாற்றமாக தவறாக விளங்கிக்கொள்ளப்படுகின்றது. பொதுவிலைமட்டமென்பது ஒரு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினால் அளவிடப்பட்டவாறு பொருளாதாரத்திலுள்ள அனைத்து விலைகளினதும் சராசரியொன்றினால் பிரதிபலிக்கப்படுகின்றது. இலங்கையில் விலைகளின் மட்டத்தின் அளவீடாக பொதுவாக பயன்படுத்தப்படுவது கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் மற்றும் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்களாகும். மாறாக, பணவீக்கமென்பது பொது விலைமட்டமானது ஒரு காலப்பகுதியில் அதிகரிக்கின்ற வீதமாகும். இது, பொதுவாக நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் சதவீத மாற்றத்தினைக் குறிக்கின்றது. ஆகவே, கடந்த காலப்பகுதியுடன் ஒப்பிடுமிடத்து பணவீக்கத்திலானதொரு குறைவு பொது விலை மட்டத்திலான குறைவினை கட்டாயமாக குறிக்குமென்பதில்லை. மாறாக, இது பொது விலை மட்டத்தின் அதிகரிப்பிலான வேகத்திலானதொரு குறைவாகும்.

பொதுவாக பணவீக்கத்திற்காகப் பயன்படுத்தப்படுகின்ற அளவீடுகள் ஆண்டுக்காண்டு மற்றும் மாதத்திற்கு மாத அடிப்படையிலான மாற்றங்களாகும். பணவீக்கத்தின் மாதத்திற்கு மாத அளவீடானது முன்னைய மாதத்துடன் ஒப்பிடுமிடத்து, கரிசனையிற் கொள்ளப்படுகின்ற மிக அண்மைய மாதத்தின் விலை அசைவுகள் தொடர்பான ஒரு மதிப்பீட்டினை வழங்குகின்றது. எனவே, இந்த அளவீடானது, 'விலையின் உத்வேகம்', அல்லது 'பணவீக்கத்தின் உத்வேகம்' எனவும் குறிப்பிடுகின்றது.

வரைபடம் சி.கு. 1.1
கொ.நு.வி.சுட்டெண்ணினதும் பணவீக்கத்தினதும் அசைவுகள்




*மூலங்கள்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

எனினும், நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் ஆண்டுக்காண்டு மாற்றத்தினால் அளவிடப்பட்டவாறான மாற்றமானது தற்போதைய மாதத்தின் விலை மாற்றங்கள் மற்றும் ஒரு வருடத்திற்கு முன்னர் பதிவிடப்பட்ட விலை மாற்றங்கள் போன்ற இரு காரணிகளில் தங்கியுள்ளது. பின்னைய கூறானது 'தளத் தாக்கம்' எனக் குறிப்பிடப்படுகின்றது. இது, ஆண்டுக்காண்டுப் பணவீக்கத்தின் மாற்றத்திற்கு தள ஆண்டில் (அதாவது ஒரு வருடத்திற்கு முன்னர்) மாதத்திற்கு மாத அடிப்படையிலான பணவீக்கத்திலிருந்து எழுகின்ற பங்களிப்பாகும். கொ.நு.வி. சுட்டெண்ணின் (அடிப்படை: 2013=100)[1] அண்மைய அசைவுகள் மற்றும் ஆண்டுக்காண்டு பணவீக்கம் போன்றவை வரைபடம் சி.கு 1.1இல் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. தரப்பட்ட மாதமொன்றில், ஆண்டுக்காண்டுப் பணவீக்கமானது தொடர்புபட்ட மாதத்தின் நுகர்வோர் விலைச் சுட்டெண் (அதாவது திசெம். 2022) மற்றும் 12 மாதங்களிற்கு முன்னர் அதன் பெறுமதி (அதாவது திசெம்.2021) போன்றவற்றில் தங்கியுள்ளது.

மேலும், ஆண்டுக்காண்டு பணவீக்கத்திலான மாற்றமானது தற்போதைய மாதத்தின் மாதத்திற்கு மாத அடிப்படையிலான பணவீக்கத்திலிருந்து (உத்வேக விளைவு) பன்னிரண்டு மாத காலத்திற்கு முன்னரான காலப்பகுதியின் மாதத்திற்கு மாத அடிப்படையிலான பணவீக்கத்தினை (தளத் தாக்கம்)[2] கழிப்பதன் மூலம் அண்ணளவாக கணிக்கப்பட முடியும்.

1 கொ.நு.வி.சுட்டெண்ணின் (2013=100) தொகுத்தலானது தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் 2023 பெப்பிரவரி மாதத்திலிருந்து நிறுத்தப்பட்டு கொ.நு.வி.சுட்டெண் (2021=100) இனால் பதிலீடு செய்யப்பட்டுள்ளது. கொ.நு.வி.சுட்டெண் (2021=100)இனை அடிப்படையாகக் கொண்ட பணவீக்கம் 2023 சனவரியில் கிடைக்கக்கூடியதாகவுள்ளது

2 கீழே கணித ரீதியாக பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டதனைப் போன்று ஆண்டுக்காண்டு பணவீக்கம் ($\pi_t$) தரப்பட்ட மாதத்தில் நுகர்வோர் விலைச் சுட்டெண் (p_t) மற்றும் 12 மாதங்களின் முன்னர் அதன் பெறுமதி ($p_{t-12}$) போன்றவற்றில் தங்கியிருக்கும்.

$$\pi_t = \left[\frac{P_t - P_{t-12}}{P_{t-12}}\right] \times 100 \approx [\ln P_t - \ln P_{t-12}] \times 100$$

ஆண்டுக்காண்டு பணவீக்கத்தின் கணித ரீதியான பிரதிநிதித்தவமானது மடக்கைப்படுத்தும் போது (ln), இரண்டு அடுத்தடுத்த மாதங்களில் ஆண்டுக்காண்டு பணவீக்கத்திற்கிடையிலான வேறுபாடு பின்வருமாறு எழுதப்படலாம்


$$\pi_t - \pi_{t-1} \approx \{[\ln P_t - \ln P_{t-12}] - [\ln P_{t-1} - \ln P_{t-13}]\} \times 100$$

$$\pi_t - \pi_{t-1} \approx \{[\ln P_t - \ln P_{t-1}] - [\ln P_{t-12} - \ln P_{t-13}]\} \times 100$$

கருத்திற்கொள்ளப்படும் மாறி (அதாவது பணவீக்கம்) சதவீதத்தில் சிறிய எண்ணாகவிருக்கும் போது மாத்திரமே மடக்கைப்படுத்தப்பட்டு அண்ணளவாக்கப்படுவது பொருத்தமானதாகவிருக்குமென்பது குறிப்பிடத்தக்கதாகும்.

1

வரைபடம் சி.கு. 1.2
உத்வேகம் மற்றும் தளத்தாக்கங்களின் நியதிகளில் பணவீக்கத்தின் இயக்கவாற்றல்
(கொ.நு.வி.சுட்டெண்ணை அடிப்படையாகக் கொண்டது, 2013=100)




*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

எனவே, பணவீக்கத்தின் பரிமாணத்தினை, விசேடமாக எதிர்பார்க்கப்படுகின்ற பணவீக்க வீழ்ச்சிச் செயல்முறையினை, மதிப்பிடுவதற்கு கடந்த ஒரு வருடகாலப்பகுதியின் விலை மட்டங்களிலான அசைவுகள், அதாவது தளத்தாக்கம் மற்றும் விலை மட்டங்களின் எதிர்பார்க்கப்படும் எதிர்காலப் பாதை, அதாவது எதிர்பார்க்கப்படும் விலை உத்வேகம், தொடர்பானதொரு விளக்கத்தினை ஒருவர் கொண்டிருக்க வேண்டும். வரைபடம் சி.கு. 7.2 அண்மைக் காலங்களில் உத்வேகம் மற்றும் தளத்தாக்கம் போன்ற நியதிகளில் பணவீக்கத்தின் பரிமாணங்களைக் குறித்துக்காட்டுகின்றது. ஆண்டுக்காண்டு பணவீக்கத்தின் மாதந்த மாற்றமானது, குறிப்பாக ஆண்டுக்காண்டுப் பணவீக்கம் சிறியளவில் காணப்படும் காலப்பகுதியில், உத்வேகத்தின் தாக்கம் மற்றும் தளத்தாக்கத்தின் கூட்டுத்தொகைக்கு அண்ணளவாக்கப்படமுடியுமென்பதனை வரைபடம் விளக்குகின்றது.

**இலங்கையின் பணவீக்கத்தின் மூலங்கள்**

திறந்த பொருளாதாரமாக இலங்கையின் ஒட்டுமொத்த பணவீக்கமானது உள்நாட்டு மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட பணவீக்கத்தின் தொகுப்பாக விளங்குகின்றது. உள்நாட்டுப் பணவீக்கமானது கேள்விப்பக்கக் காரணிகள், நிரம்பல்பக்க காரணிகள் மற்றும் எதிர்வரும் காலத்தில் பணவீக்கம் தொடர்பான பொருளாதார முகவர்களின் எதிர்பார்க்கைகள் போன்றவற்றினால் பாதிக்கப்படுகின்றது. கேள்விப்பக்கக் காரணிகள் பொதுவாக வளர்ச்சியடைகின்ற பொருளாதாரம், எதிர்கால விலை அசைவுகள் தொடர்பான பொதுமக்களின் எதிர்பார்க்கைகள் மற்றும் பொருளாதாரத்தின் கூட்டுக் கேள்வி நிலைப்பாடுகளில் செல்வாக்குச் செலுத்துவதனை இலக்காகக்கொண்ட பேரண்டப் பொருளாதாரக் கொள்கைகள் (அதாவது நாணயக் கொள்கை மற்றும் இறைக் கொள்கை) போன்றவற்றின் விளைவுகளாகவுள்ள வேளையில், நிரம்பல்பக்க காரணிகள் அரசாங்கத்தின் நிரம்பல் பக்கக் கொள்கைகள் அல்லது இயற்கை அனர்த்தங்கள், உலகளாவிய நிகழ்வுகள் மற்றும் ஏனையவை போன்ற சில வெளியகச் சூழ்நிலைகளின் விளைவுகளாகவிருக்க முடியும். இலங்கை மக்கள் ஒரு கணிசமானளவு இறக்குமதி செய்யப்பட்ட பண்டங்களை நுகர்வு செய்வதனால் நாட்டின் பணவீக்கமானது உலகப் பண்ட விலைகளின் அசைவுகளினாலும் பாதிப்படைகின்றது. மேலும், வெளிநாட்டுச் செலாவணி வீத அசைவுகள் பணவீக்கத்தினைப் பாதிக்கின்றன. உதாரணமாக, ஐ.அ.டொலருக்கெதிராக இலங்கை ரூபா தேய்மானமடைவது (அநேகமான இறக்குமதிகள் ஐ.அ.டொலர் நியதிகளில் பெறுமதியிடப்படுவதனால்) உள்நாட்டு நாணய நியதிகளில் இறக்குமதிகளின் விலையை அதிகரிக்கும்.

**பணவீக்க வீழ்ச்சி என்றால் என்ன?**

பணவீக்க வீழ்ச்சி என்பது ஒரு பொருளாதாரத்தில் பொது விலை மட்டத்தின் அதிகரிப்பு வீதத்திலானதொரு மெதுவடைதலாகும். இன்னொரு வகையில், இது ஆண்டுக்காண்டு பணவீக்கத்திலான உறுதியான குறைவாக வரைவிலக்கணப்படுத்தப்பட முடியும். பணவீக்க வீழ்ச்சியென்பது பொதுவாக பணவீக்கம் விரும்பப்பட்ட மட்டத்தினை அடைந்து விலை உறுதிப்பாடு மீட்டெடுக்கப்படும் வரையில் குறுங்காலத்திலிருந்து நடுத்தர காலம் வரையில் இடம்பெறுமொரு செயல்முறையாகும். ஒரு உயர்ந்த பணவீக்க நிகழ்வினைத் தொடர்ந்து வருகின்ற பணவீக்க வீழ்ச்சியானது பொது விலை மட்டத்தின் உறுதியான குறைவினைக் குறிக்கின்ற பணச்சுருக்கத்திலிருந்து வேறுபட்டதென்பதனை கருத்திற்கொள்வது அவசியமாகும். பணவீக்க வீழ்ச்சியானது விலைகள் மெதுவான வீதத்தில் இன்னமும் அதிகரிப்பதனை குறிப்பதுடன் தாழ்ந்த மட்டத்திலான பணவீக்கத்திற்கு வழிவகுக்கும்.

பொதுவாக, படிப்படியான பணவீக்க வீழ்ச்சியானது இறுக்கமான நாணயக் கொள்கையினாலும் அதேபோன்று வழங்கல் நிலைப்பாடுகள் சாதகமாக மாறுவதனாலும் ஏற்படுகின்றது. இறுக்கமான நாணயக் கொள்கையின் குறிக்கோள் பணவீக்கத்தினை இலக்கிடப்பட்ட மட்டத்திற்கு மீளக் கொணர்வதும் அதன்பின்னர் அதனை நிலைநிறுத்துவதுமாகும். பணவீக்க வீழ்ச்சிக் கொள்கைகள் மெதுவடையும் பொருளாதாரச் செயற்பாடு மற்றும் உயர்வடையும் தொழிலின்மை போன்ற நியதிகளில் குறுங்காலத் தாக்கங்களுடன் தொடர்புபட்டிருக்க முடியும். எனினும், உயர்ந்த பணவீக்கத்தினால் ஏற்படும் திரிபுபடுத்தல்கள் குறைக்கப்படும் நியதிகளில் பொருளாதாரத்திற்கான நீண்டகால நன்மைகள் குறுங்காலத் தாக்கங்களினை எதிரீடு செய்கின்றன. அதேவேளை, நவீன பொருளாதாரத்திற்கு நீடித்த பணச்சுருக்கமானது உயர்ந்தளவில் கேடுவிளைவிக்கக் கூடுமென்பதனால், பணவீக்க வீழ்ச்சி நிகழ்வுகளின் காலப்பகுதியில் எதிர்கால பணச்சுருக்கம் பற்றிய அச்சுறுத்தல்களைப் பற்றி கொள்கை வகுப்பாளர்கள் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும் (Bernanke, 2012).

உலகளவில் கவனிக்கத்தக்கதான பணவீக்க வீழ்ச்சி நிகழ்வுகள் பல காணப்பட்டன. 1980களின் ஆரம்பத்தில், போல் வொல்கர் (Paul Volcker) ஐக்கிய அமெரிக்க பெடரல் ரிசேர்வ் வங்கியின் தலைவராகவிருந்த போது ஐக்கிய அமெரிக்காவின் பணவீக்கத்திற்கான குறைப்பானது பரவலாக கலந்துரையாடப்பட்ட பேரண்டப் பொருளாதார விளைவாகும் (வொல்கர் பணவீக்க வீழ்ச்சியென பொதுவாகக் குறிப்பிடப்படும்). 1970களிலும் 1980களின் ஆரம்பித்திலும் ஐக்கிய அமெரிக்காவின் பொது விலைமட்டங்கள் கணிசமானளவு உயர்வடைந்தன. எனினும், ஐக்கிய அமெரிக்க பெடரல் ரிசேர்வ் வங்கியினால் நடைமுறைப்படுத்தப்பட்ட தீவிரமான நாணயக் கொள்கை வழிமுறைகளினைத் தொடர்ந்து வருடாந்தப் பணவீக்கம் 1980இல் உச்சமட்டமான 13.5 சதவீதத்திலிருந்து 1983 அளவில் 3.2 சதவீதத்திற்கு கீழ் நோக்கிக் கொண்டுவரப்பட்டது. இக்காலப்பகுதியில், ஐக்கிய அமெரிக்காவானது இரு பொருளதார மந்தங்களை எதிர்கொண்டதுடன் இவை பணவீக்க


வீழ்ச்சிக் கொள்கைகளினால் பங்களிப்புச் செய்யப்பட்டதாக கருதப்படுகின்றன. எனினும், "வொல்கர் பணவீக்க வீழ்ச்சியானது" அமெரிக்காவில் 1980களிலும் 1990களிலும் நீண்ட பொருளாதார விரிவாக்கங்களுக்கு அத்திவாரமிட்டது. இதேவேளையில், ஜப்பானும் ஜேர்மனியும் 1970களின் பிற்பகுதியில் ஆரம்பத்தில் உயர்ந்த பணவீக்க மட்டங்களை அனுபவித்தன. எனினும், இரு நாடுகளும் ஏனைய முன்னேற்றங்கண்ட பொருளாதாரத்துடன் ஒப்பிடுமிடத்து தாழ்ந்த பணவீக்கத்தினைப் பதிவுசெய்தன. நீண்ட காலத்தில் பணவீக்கமொன்று நாணயம் சார்ந்த நிகழ்வொன்றாக இருக்குமெனும் புரிதலினை அடிப்படையாகக் கொண்டு, தொடர்புபட்ட அரசாங்கங்களினதும் நாணய அதிகார சபைகளினதும் வலுவான ஒழுக்காற்றானது பணவீக்க வீழ்ச்சிச் செயல்முறைக்குப் பங்களிப்புச் செய்கின்றது (Nelson, 2007). மேலதிகமாக, உற்பத்தித்திறன் மேம்பாடும் பணவீக்க வீழ்ச்சி செயன்முறைக்கு பங்களிப்புச் செய்யமுடியும். காத்திரமான நிரம்பல் பக்கக் கொள்கைகளினூடாக நீண்டகாலத்தில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் உள்ளார்ந்த ஆற்றலின் விரிவாக்கத்தின் காரணமாக கூட்டுக்கேள்வியின் அழுத்தங்கள் குறைக்கப்படலாம். மேலும், 1970களிலும் 1980களின் தொடக்கத்திலும் உயர்ந்த மட்டங்களிலிருந்து உலகளாவிய பணவீக்கத்தின் கணிசமான வீழ்ச்சிக்கான சாத்தியமான காரணங்களாக உயர்ந்த உற்பத்தித்திறன், ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டுப்பாடுகளைத் தளர்த்தல், மற்றும் அதிகரித்த உலகமயமாக்கல் போன்றவை குறிப்பிடப்படுகின்றன (Rogoff,2004)

**இலங்கையில் எதிர்பார்க்கப்படும் பணவீக்க வீழ்ச்சி செயல்முறை**

இலங்கையின் பணவீக்கம் 2022 செத்தெம்பரில் 70 சதவீதமானளவிலான (ஆண்டுக்காண்டு) அதன் உச்ச மட்டங்களிலிருந்து மெதுவடையத் தொடங்கி எதிர்பார்க்கப்பட்டதனைப் போன்று பணவீக்க வீழ்ச்சி செயல்முறை தொடங்கியிருப்பதனை உறுதிப்படுத்தியது. பொருளாதாரக் காரணிகளின் நியதிகளில், இந்தச் செயல்முறையானது இறுக்கமான நாணய மற்றும் இறைக் கொள்கைகளின் காரணமாக மெதுவடைந்த கூட்டுக் கேள்வி நிலைப்பாடுகள், உள்நாட்டு நிரம்பல் நிலைப்பாடுகளில் எதிர்பார்க்கப்பட்ட மேம்பாடுகள், மேம்பட்ட வெளிநாட்டுத் துறைச் செயலாற்றம், உலகளாவிய பண்ட விலைகள் வழமைக்குத் திரும்புதல், மற்றும் உள்நாட்டு விலைகளில் அத்தகைய குறைப்புக்களின் காலந்தவறாத ஊடுகடத்தல் போன்றவற்றினால் ஆதரவளிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. புள்ளிவிபர ரீதியில் இந்த பணவீக்க வீழ்ச்சி செயல்முறையானது உத்வேகத்தின் தாக்கம் மற்றும் தளத்தாக்கம் போன்ற இரண்டினாலும் செல்வாக்கு செலுத்தப்படுமெனவும், தளத் தாக்கத்தின் பங்களிப்பு உயர்வானதாகவிருக்குமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

மேலும், பணவீக்கத்தின் மூலங்கள் மற்றும் எதிர்பார்க்கப்படும் பொருளாதார அபிவிருத்திகள் போன்றவற்றின் நியதிகளில் புள்ளிவிபரக் காரணிகளின் தாக்கங்களில் மதிப்பிடப்படமுடியும். மற்றும் 2024இல் உலகளாவிய பணவீக்கம் வீழ்ச்சியடையுமென பன்னாட்டு நாணய நிதியம் (2023) எதிர்பார்க்கின்றது. உலகளாவிய பண்டவிலைகளில் எதிர்பார்க்கப்படும் மெதுவடைதலானது உள்நாட்டு விலைகளுக்கு காலந்தவறாமலும், வெளிப்படையாகவும் ஊடுகடத்தப்படுமாகவிருந்தால் 2023இல் இறக்குமதிப் பணவீக்கத்தில் விலை உத்வேகத்தினை கணிசமானளவு தாழ்ந்த மட்டத்தில் வைத்திருக்க முடியும். மேலதிகமாக, மேம்பட்ட சென்மதி நிலுவைகளுக்கு மத்தியில் வெளிநாட்டுச் செலாவணி வீதத்தின் உறுதிப்பாடு இந்த விடயத்தில் துணைபுரியும். ஐ.அ.டொலருக்கெதிராக இலங்கை ரூபாவின் பெறுமான உயர்வு தொடருமாகவிருந்தால் இறக்குமதிப் பணவீக்கத்தினை குறைப்பதற்கும் இத்தகைய இறக்குமதியுடன் தொடர்புபட்ட இரண்டாங்கட்ட தாக்கங்களினைக் குறைப்பதற்கும் துணைபுரிந்து அதன்மூலம் பணவீக்க வீழ்ச்சி செயல்முறைக்கு ஆதரவளிக்கும். இதேவேளையில், 2022இல் இலங்கை ரூபாவின் கணிசமான பெறுமானத்தேய்வினையும் உலகளாவிய பண்டவிலைகளின் அதிகரிப்பினையும் பிரதிபலித்து இலங்கையின் இறக்குமதி விலைகள் விகிதாசாரமற்ற அளவில் அதிகரித்தன. இது, இறக்குமதிப் பண்டங்களின் விலைகளில் குறிப்பாக 2022 நடுப்பகுதியில் உயர்ந்த மாதத்திற்கு மாத அதிகரிப்புக்களுக்கு வழிவகுத்தது. 2023ஆம் ஆண்டில், இது கணிசமான நேர்மறையான தளத்தாக்கத்தினூடாக இறக்குமதிப் பணவீக்கத்தில் சாதகமான தாக்கம் செலுத்தி பணவீக்க வீழ்ச்சி பாதைக்கு ஆதரவளிக்கும் (வரைபடம் சி.கு 1.2 இனைப் பார்க்கவும்). மறுபுறத்தில், உள்நாட்டுப் பணவீக்கத்தினைப் பொறுத்தவரையில் முன்னெப்பொழுதுமில்லாத நாணயக் கொள்கை இறுக்கமாக்கல் வழிமுறைகள் மற்றும் தீவிரமான இறுக்கமான இறைக் கொள்கை நிலைப்பாடு போன்றவற்றின் காரணமாக விலை உத்வேகம் கணிசமானளவு தாழ்ந்ததாக காணப்படுமென மதிப்பிடப்பட்டுள்ளது. மேலும், கடந்த சில மாதங்களாக உள்நாட்டு நிரம்பல் நிலைப்பாடுகளில் சில மேம்பாடுகள் அவதானிக்கப்பட்டன. விளைவாக, உணவுப் பணவீக்கத்தின் விலை உத்வேகம் சில மாதங்களில் எதிர்க்கணியப் பெறுமதிகளைப் பதிவுசெய்தது. மேம்பட்ட நிரம்பல்பக்க நிலைப்பாடுகள் 2023 முழுவதிலும் தொடருமென எதிர்பார்க்கப்படுவதுடன் இது, பணவீக்கத்தினை தாழ்ந்த மட்டங்களுக்கு கொண்டுவரும் முயற்சிகளுக்கு ஆதரவளிக்கும். இதேவேளையில் பல்வேறு வழிகளில் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் அதேபோன்று 2022இலும் 2023இன் ஆரம்பத்திலும் பயன்பாடுகளின் கட்டணங்களில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் அவற்றின் இரண்டாங்கட்ட தாக்கங்களுடன் இணைந்து பொது விலைமட்டத்தில் ஒரே நேரத்திலான மேல்நோக்கிய திருத்தங்களுக்கு வழிவகுத்தன. மேலும், உள்நாட்டு நிரம்பல் நிலைப்பாடுகளில் அவதானிக்கப்பட்ட சென்மதி நிலுவை நெருக்கடியுடன் தொடர்புபட்ட பல பற்றாக்குறைகள் மற்றும் தடைகளினால் 2022இல் நிரம்பல்பக்க காரணிகள் கணிசமானதாக தொடர்ந்துமிருந்தன. நிரம்பல் தடைகள் மற்றும் வரி மற்றும் கட்டணங்களின் திருத்தங்களின் காரணமாக உள்நாட்டு விலைகளின் மாதத்திற்கு மாத அதிகரிப்புக்கள் ஒரு கணிசமான தளத்தாக்கத்தின் வாயிலாக 2023இல் பணவீக்கத்தினை சாதகமாகப் பாதிக்கும் (வரைபடம் சி.கு 1.2 இனைப் பார்க்கவும்). எனவே, எதிர்வரும் காலத்தில் உள்நாட்டு பணவீக்கத்தின் மிதமடைதலானது மந்தமான விலை உத்வேகம் மற்றும் கணிசமான தளத் தாக்கத்தின் சேர்க்கையினால் ஆதரவளிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இறக்குமதி மற்றும் உள்நாட்டுப் பணவீக்கம் இரண்டினதும் எதிர்பார்க்கப்படும் பரிமாணங்களின், அத்துடன் ஏனையவற்றிற்கு மத்தியில் மேம்பாட்டையும் நிரம்பல் நிலைப்பாடுகளின் விளைவான நாட்டின் ஒட்டுமொத்தப் பணவீக்கமானது 2023 இல் நிலைபேறான அடிப்படையில் குறைந்து எதிர்பார்க்கப்படும் பணவீக்க வீழ்ச்சிப் பாதை அடையப்படுவதனை இயலச்செய்யுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

வரைபடம் சி.கு. 1.3
முதன்மைப் பணவீக்க எறிவுகள்
கொ.நு.வி.சுட்டெண்* (காலாண்டு சராசரி, ஆண்டிற்காண்டு,%)





*குறிப்பு: 2022 ஆம் ஆண்டின் 4ஆம் காலாண்டு வரையான தேறல்செய்யப்பட்ட தரவுகளானது கொ.நு.வி.சு (2021=100) அடிப்படையாகக் கொண்ட அதேவேளை 2023ஆம் ஆண்டின் முதலாம்காலண்டிற்கான தரவின் கீழ் கொ.நு.வி.சு (2021=100) அடிப்படையாகக் கொண்டவையாகும். எறிவுகளானது அனைத்து கிடைப்பனவாகவுள்ள தரவுகளை அடிப்படையாகக் கொண்டவையாகும்.

*மூலம்:* மத்திய வங்கி அலுவலர் எறிவுகள்

இலங்கை மத்திய வங்கியின் பணவீக்க வீச்சு வரைபடமானது நம்பிக்கை இடைவெளிகளின் வடிவில் காலாண்டு அடிப்படையில் எதிர்காலப் பணவீக்கம் தொடர்பான எறிவுகளை வெளிப்படுத்துகின்றது. நம்பிக்கை இடைவெளிகள் எதிர்வுகூறல் காலப்பகுதி அதிகரிக்கும் போது நிச்சயமற்றதன்மையின் பரிமாணம் விரிவடைவதுடன் பணவீக்க எதிர்வுகூறலினைச் சூழ்ந்துள்ள நிச்சயமற்றதன்மையினை விளக்குகின்றன. இலங்கை மத்திய வங்கியின் கொ.நு.வி.சு சுட்டெண்ணை (2021=100) அடிப்படையாகக்கொண்ட ஆண்டுக்காண்டு முதன்மைப் பணவீக்கத்தின் அண்மைய எறிவுகளை வரைபடம் சி.கு 1.3 பணவீக்க வீச்சு வரைபடத்தின் வடிவில் எடுத்துக்காட்டுகின்றது.

2022இல் உச்சமடைந்து விட்டதாக மதிப்பிடப்பட்டுள்ள உலகளாவிய பணவீக்கமானது கணிசமான நாணய இறுக்கமாக்கல் மற்றும் அதன் விளைவான செயற்பாடுகளின் மெதுவடைதல், நிரம்பல் சங்கிலிகள் வழமைக்குத் திரும்புதல் மற்றும் வலுவினதும் ஏனைய பண்டங்களினதும் விலைகள் மிதமடைதல் போன்றவற்றின் விளைவாக 2023இல் வீழ்ச்சியடையுமெனவும் 2024இல் மந்தமான மட்டங்களில் தொடர்ந்துமிருக்குமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. தெரிவுசெய்யப்பட்ட நாடுகளின் பணவீக்க எறிவுகள் அவற்றின் மிக அண்மைய நாணயக் கொள்கை அறிக்கைகளின் பிரகாரம் வரைபடம் சி.கு 1.4

வரைபடம் சி.கு. 1.4
உலகளாவிய பணவீக்க வீழ்ச்சி எறிவுகள்




*மூலம்:* அவுஸ்திரேலியா - நாணயக் கொள்கை அறிக்கை மாச்சு. 2023
ஐக்கிய இராச்சியம் - நாணயக் கொள்கை அறிக்கை பெப். 2023
ஐரோப்பிய பிரதேசம் - ஐரோப்பிய முறைமை அலுவலர் பேரண்டப்பொருளாதாரம் எறிவுகள் தி.செ. 2022
இந்தியா - நாணயக் கொள்கை அறிக்கை செத். 2022
தாய்லாந்து - நாணயக் கொள்கை அறிக்கை கா4 2022

எடுத்துக்காட்டுகின்றது. வரைபடமானது 2022இல் பல நாடுகளில் மத்திய வங்கிகளின் பணவீக்க இலக்குகளிற்கு மேலாக பணவீக்கம் கணிசமானளவு அதிகரிப்பதனைக் காட்டுகின்றது. எனினும், இலங்கையினைப் போன்று இந்த நாடுகளிலும் 2023இல் ஒரு ஒத்திசைவான வகையில் விரைவானதொரு பணவீக்க வீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

**பணவீக்க எதிர்பார்க்கைகள் மற்றும் பணவீக்க எதிர்வுகூறல்களின் வகிபாகம்**

நாட்டின் பணவீக்க வீழ்ச்சிச் செயல்முறையானது நன்கு நிலைநிறுத்தப்பட்ட பணவீக்க எதிர்பார்க்கைகளினால் வலுவூட்டப்படும். ஒரு பொருளாதாரத்திலுள்ள ஆர்வலர்களினால் எதிர்பார்க்கப்படும் விலைகளில் ஏற்படும் மாற்றத்தின் வீதத்தினை பணவீக்க எதிர்பார்க்கைகள் பிரதிபலிக்கின்றன. எதிர்பார்க்கைகள் செலவிடல், கடன்பாடுகள் மற்றும் முதலீட்டு தீர்மானங்களினை இன்று பாதிக்குமென்பதால் பொதுமக்கள் பணவீக்கம் எந்தளவில் இருக்குமென்று எதிர்பார்ப்பதில் உண்மையான பணவீக்கம் பகுதியளவில் தங்கியிருப்பதனால் பணவீக்க எதிர்பார்க்கைகள் முக்கியமானவை. எனவே, பணவீக்க எதிர்பார்க்கைகள் நடுத்தர கால பணவீக்க இலக்கினை விட உயர்வாகக் காணப்படுமானால் பொருளாதார ஆர்வலரின் தற்பொழுது காணப்படும் எதிர்பார்க்கைகளை மாற்றியமைப்பதற்காக மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்படும் திட்டமிடப்பட்ட நடவடிக்கைகளுடன் பணவீக்க வீழ்ச்சிச் செயல்முறை தொடர்புபடுகின்றது. 2022இல் உயர்ந்த பணவீக்க நிகழ்வுடன் இலங்கையில் பணவீக்க எதிர்பார்க்கைகள் குறிப்பிட்டளவில் நிலைகுலைந்தன. எனினும், பரிகார நாணயக் கொள்கை வழிமுறைகளின் முன்கூட்டிய நடைமுறைப்படுத்தலுடன் நடுத்தரகால பணவீக்க எறிவுகளின் பிரசுரிக்கப்பட்டமை உள்ளடங்கலாக காத்திரமானதும் வெளிப்படையானதுமான நாணயக் கொள்கைத் தொடர்பூட்டல் உபாயத்துடன் இணைந்து பொதுமக்களிடையே பணவீக்கத்தின் எதிர்பார்க்கப்பட்ட மட்டத்தில் தொடர்ச்சியானதொரு குறைப்பு அவதானிக்கப்பட்டது. இது, மறுபுறுத்தில் மத்திய வங்கியின் நம்பகத்தன்மையை மேம்படுத்துவதில் துணைபுரிந்து, பணவீக்க வீழ்ச்சி செயல்முறை முன்னேற்றமடைகின்ற வேளையில், மேலும், மேம்பாடுகள் எதிர்பார்க்கப்படமுடியுமென்பதுடன் மத்திய வங்கியின் பணவீக்க இலக்கிற்கு இசைவாக நடுத்தரகால பணவீக்க எதிர்பார்க்கைகளை நிலைநிறுத்துவதனை நிச்சயப்படுத்தும்.

குறுங்காலத்திலிருந்து நடுத்தரகாலம் வரையான பணவீக்க பாதையின் மதிப்பீட்டினை அடுத்தடுத்து தொடர்பூட்டுவது பணவீக்க வீழ்ச்சி செயல்முறையின் முக்கியமானதொரு கூறாகும். இந்த வகையில், மத்திய வங்கி கிரமமான நாணயக் கொள்கை மீளாய்வுகளினைத் தொடர்ந்தும் ஏனைய பொருத்தமான அதிகாரபூர்வ அறிவிப்புக்களிலும் பணவீக்க வீச்சு வரைபடத்தினை தொடர்ந்தும் வெளியிடும். நடுத்தரகால பணவீக்க எதிர்வுகூறலுக்கும் பணவீக்க இலக்கிற்குமிடையிலான ஏதாவதொரு வேறுபாடு அந்த இடைவெளியினை நிரப்பச் செய்வதற்கான கொள்கை வழிமுறைகளைத் தேவைப்படுத்தும். பணவீக்கப் பாதையின் அடுத்தடுத்த மற்றும் வெளிப்படையான தொடர்பூட்டல் விலை உறுதிப்பாட்டினை மீட்டெடுப்பதிலும் பேணிக்கொள்வதிலும் மத்தியவங்கியின் கடப்பாட்டினை உறுதிப்படுத்துவதற்கான பொறிமுறையொன்றாகவும் தொழிற்படுகின்றது.

மேலும், 2023இன் இரண்டாமரைப்பகுதியிலிருந்து முன்னோக்கிய அரையாண்டு அடிப்படையிலான நாணயக் கொள்கை அறிக்கையினை மத்திய வங்கி பிரசுரிக்கத் தொடங்கும். பணவீக்கத்தின் நடுத்தர கால எறிவுகள் மற்றும் எறிவுகளிற்கு

அடிப்படையாக அமைந்த காரணிகள் மற்றும் வெளியிடப்பட்ட எதிர்வுகூறலுக்கும் உண்மைப் பணவீக்கத்திற்குமிடையே ஏதாவது வேறுபாடு காணப்படின் அது தொடர்பான விளக்கம் போன்றவற்றை இந்த அறிக்கையானது முக்கியமாக காட்சிப்படுத்தும்.


மேற்கூறப்பட்டதனைப் போன்று பணவீக்க வீழ்ச்சி செயல்முறைக்கான முக்கிய காரணியாகவமைவது மத்திய வங்கியின் நம்பகத்தன்மையாகும். இது, பணவீக்க எதிர்பார்க்கைகளை நிலைநிறுத்தவதில் துணைபுரியும். மத்திய வங்கியின் நம்பகத்தன்மையானது மத்திய வங்கியின் சுயாதீனத் தன்மையுடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது. இந்த வகையில், புதிய மத்திய வங்கிச் சட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட சட்டவாக்கமானது, மத்திய வங்கியின் சுயாதீனத்தினையும் நம்பகத்தன்மையினையும் மேம்படுத்துவதில் அளப்பரிய பங்களிப்புச் செய்து அதன்மூலம் தற்போதைய பணவீக்க வீழ்ச்சி நிகழ்விற்கு ஆதரவளிப்பதுடன் பணவீக்க எதிர்பார்க்கைகளை நிலைநிறுத்துவதனை மேலும் வலுப்படுத்தும்.

**References**

1. Bernanke, B. S. (2002). Deflation: Making Sure" It" Doesn't Happen Here, Remarks by Governor Ben S. Bernanke Before the National Economists Club, Washington, DC November, 21.
2. International Monetary Fund (IMF), (2023). World Economic Outlook Update Jan 2023: Inflation Peaking amid Low Growth, Washington, DC: International Monetary Fund.
3. Nelson, E. (2007). The Great Inflation and Early Disinflation in Japan and Germany. International Journal of Central Banking, 3(4), 23-76.
4. Rogoff, K. (2004). Globalization and Global Disinflation, Federal Reserve Bank of Kansas City conference on Monetary Policy and Uncertainty: Adapting to a Changing Economy.

பதிவுசெய்யப்பட்ட 14.0 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2022 செத்தெம்பர் இறுதியளவில் 73.7 சதவீதத்தையும் 2022இன் இறுதியளவில் 59.2 சதவீதத்தையும் பதிவுசெய்தது. மாற்றமடைந்துவரும் செலவீன போக்குகளிற்கு வசதியளிக்கும் பொருட்டும் சந்தையில் கிடைப்பனவாகவுள்ள பொருட்களினதும் பணிகளினதும் மாற்றங்களை ஒருங்கிணைக்கும் பொருட்டும் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களமானது கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் மற்றும் தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண் இரண்டினதும் அடிப்படை ஆண்டை 2013இலிருந்து 2021ஆக திருத்தியமைத்தது. 2022இன் பின்னைய பகுதியில் அவதானிக்கப்பட்ட முதன்மைப் பணவீக்கத்தின் கீழ்நோக்கிய போக்கானது 2023 காலப்பகுதியிலும் தொடர்ச்சியடைந்தது. இதற்கமைய, கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணை (2021=100) அடிப்படையாகக் கொண்ட ஆண்டிற்காண்டு முதன்மைப் பணவீக்கம் 2023 மார்ச்சில் மேலும் 50.3 சதவீதத்திற்கு குறைவடைந்த போதும் 2023இன் மார்ச்சு மாதக் காலப்பகுதியில் கணிப்பிற்குட்பட்டு வருகின்ற மின்வலு

வரைபடம் 1.5
முதன்மைப் பணவீக்கம் (ஆண்டுக்காண்டு) (அ)




(அ) தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களமானது முறையே 2023 சனவரியிலும் 2023 பெப்புருவரியிலும் வெளியிப்பட்ட தரவுகளிலிருந்து தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணையும் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணையும் புதிய தள ஆண்டைக் 2021=100 கொண்டு வெளியீடு செய்ய ஆரம்பித்ததுடன் பழைய தள ஆண்டைக் 2013=100 கொண்ட தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினதும் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினதும் வெளியீட்டை இடைநிறுத்தியது. இதற்கமைய, வரைபடத்தில் 2023 சனவரியில் ஆரம்பமாகின்ற தரவுகளானது புதிய தள ஆண்டை, 2021=100 கொண்ட தொடர்களின் அடிப்படையில் அமைந்தவையாகும்.

*மூலங்கள்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

விலைத் திருத்தத்தின் முழுமையான தாக்கத்தின் காரணமாக அண்மைய மாதங்களை விட மெதுவான வேகத்திலேயே குறைவடைந்தது. அதேவேளை, தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணை (2021=100) அடிப்படையாகக் கொண்ட ஆண்டிற்காண்டு முதன்மைப் பணவீக்கம் 2023 பெப்புருவரியில் 53.6 சதவீதத்தில் காணப்பட்டது. இலங்கை ரூபாவின் உயர்வுடன் அண்மையில் சில இறக்குமதிப் பொருட்களின் விலைகளை மேலதிகமாகத் தளர்த்துவதற்கான சமிஞ்ஞைகள் அவதானிக்கப்பட்டமை மற்றும் 2023 மாச்சின் பின்னைய பகுதியில் நடைமுறைப்படுத்தப்பட்ட பெற்றோலிய விலைகளின் திருத்தங்கள் வருகின்ற மாதங்களில் பணவீக்க வீழ்ச்சியை விரைவுபடுத்துவதற்கு உதவக்கூடும். தளம்பலடையும் உணவு மற்றும் வலு விலைகள் என்பவற்றை நீக்கி அடிப்படையான கேள்வி அழுத்தங்களை அளவிடுகின்ற மையப் பணவீக்கமும் கீழ் நோக்கிய போக்கை எடுத்துக்காட்டி 2022இன் செத்தெம்பரின் இறுதிவரையான ஒன்பது மாத காலப்பகுதியில் அதிகரித்தது. மையப்பணவீக்கம் அதிகரித்தமைக்கு அண்மைய காலத்தில் நாணயத் தளர்த்துகையின் காலங்கடந்த விளைவிலிருந்து தோன்றுகின்ற உயர்வடைந்த கேள்வி, இறக்குமதி விலைகளில் ஏற்பட்ட உயர்வு, அதேபோன்று உணவகங்கள் மற்றும் விடுதிகள், நலம் மற்றும் கல்வி போன்ற உணவல்லா வகைப்படுத்தல்களின் செலவில் ஏற்பட்ட அதிகரிப்புக்கள் என்பவை காரணமாக அமைந்தன. இதற்கமைய, கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணை (2013=100) அடிப்படையாகக் கொண்ட ஆண்டிற்கு ஆண்டு மையப் பணவீக்கமானது 2021இன் இறுதியில் பதிவுசெய்யப்பட்ட 8.3 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2022 திசெம்பரில் 47.7 சதவீதமாக பதிவுசெய்யப்பட்டது. தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணை (2013=100) அடிப்படையாகக் கொண்ட மையப்பணவீக்கமும் 2021இன் திசெம்பரில் பதிவுசெய்யப்பட்ட 10.8 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2022 திசெம்பரில் ஆண்டிற்காண்டு அடிப்படையில் 57.5 சதவீதத்திற்கு விரைவடைந்தது. முதன்மைப் பணவீக்கத்தைப் போன்று, 2023இன் முன்னைய காலப்பகுதியில் மையப்பணவீக்கமும்

1


கீழ்நோக்கிய போக்கைத் தொடர்ந்தது. இதற்கமைய, ஆண்டிற்காண்டு மையப் பணவீக்கத்தை அடிப்படையாகக் கொண்ட கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணானது (2021=100) 2023 மார்ச்சு அளவில் 39.1 சதவீதத்திற்கு குறைவடைந்த அதேவேளை, ஆண்டிற்காண்டு மையப் பணவீக்கத்தை அடிப்படையாகக் கொண்ட தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணானது (2021=100) 2023 பெப்புருவரியில் 50.1 சதவீதத்திற்கு குறைவடைந்தது. கேள்வியால் உந்தப்பட்ட பணவீக்க அழுத்தங்களையும் பாதகமான பணவீக்க எதிர்பார்க்கைகளையும் தீர்ப்பதற்கு மத்திய வங்கியால் மேற்கொள்ளப்பட்ட வலுவான கொள்கை வழிமுறைகளே இத்தகைய தொடர்ச்சியான மையப் பணவீக்க குறைப்பிற்கு காரணமாக அமைந்தன. அதேவேளை, 2022 செத்தெம்பர் வரை பணவீக்கம் விரைவடைந்த காலப்பகுதியில் அதிகரித்த மட்டங்களில் காணப்பட்ட பணவீக்க எதிர்பார்க்கைகளானது பணவீக்க வீழ்ச்சிக் காலப்பகுதியில் கீழ்நோக்கிய போக்கை பெருமளவில் தொடர்ந்தது.

## வெளிநாட்டுத் துறை அபிவிருத்திகள்

**மட்டுப்படுத்தப்பட்ட வெளிநாட்டு நிதியியல் உட்பாய்ச்சல்கள், குறைவடைந்த மொத்த அலுவல்சார் ஒதுக்குகள், மற்றும் செலாவணி வீதத்தின் மிகைப்படுத்தல் என்பவற்றிற்கு மத்தியில், இலங்கையின் வெளிநாட்டுத் துறையானது 2022இல் கடுமையான சென்மதி நிலுவை அழுத்தங்களுக்கு முகங்கொடுத்து, மேலும் மோசமடையும் நிலைமையை தடுப்பதற்கும் வெளிநாட்டு நிலுவையை மீளமைப்பதற்கும் அநேகமான கொள்கை வழிமுறைகளை அவசியப்படுத்தியது.** 2022இன் ஆரம்ப காலப்பகுதியில், இருபுடை மற்றும் வர்த்தக கடன்கொடுநர்களுடன் படுகடன் மறுசீரமைப்பு தொடர்பிலான பேச்சுவார்த்தைகள் முடிவுறாதிருந்தநிலையில், அரசாங்கமானது நிதியை ஏற்பாடுசெய்வதற்காக பன்னாட்டு நாணய நிதியத்திடமிருந்து உதவியை நாடியதுடன் இடைக்கால வழிமுறையொன்றாக படுகடன் ஸ்தம்பித நிலைமையை அறிவித்தது. அரசாங்கமும் மத்திய வங்கியும் உட்பாய்ச்சல்களை ஊக்குவிப்பதற்கு முயற்சிகளை எடுத்த அதேவேளை, வெளிநாட்டுச் செலாவணி வெளிப்பாய்ச்சல்களை மட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகளை முன்னெடுத்தன. கணிசமாக இறுக்கமடைந்த நாணயக் கொள்கையினதும் மெதுவடைந்த கேள்வி நிலைமைகளினதும் தாக்கத்தை பிரதிபலித்து இறக்குமதிக் கேள்வியானது குறிப்பிடத்தக்களவில் குறைவடைந்தது. தற்போதுள்ள கட்டுப்பாட்டு வழிமுறைகள் தொடரப்பட்ட அதேவேளை, இறக்குமதி முன்னுரிமைப்படுத்தல்களின் தொடரொன்று முன்னெடுக்கப்பட்டது. இக்கட்டுப்பாடுகளானது, தற்காலிகமாக இரத்துச் செய்தல் மற்றும் தெரிவுசெய்யப்பட்ட இறக்குமதிகள் மீது உரிம மற்றும் எல்லை வைப்புத் தேவைப்பாடுகளை விதித்தல் என்பவற்றை உள்ளடக்கின. அத்துடன், போலிச் சந்தை நடவடிக்கைகளை ஊக்கமிழக்கச் செய்யும் நோக்குடன் தெரிவுசெய்யப்பட்ட இறக்குமதி கொடுப்பனவு முறைமைகள் மீது கட்டுப்பாடுகளும் விதிக்கப்பட்டன. மூலதனத் தன்மையைக் கொண்ட சில வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்கள் தொடர்ந்தும் மட்டுப்படுத்தப்பட்டன. மேலும், புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்காக பணத்தை அடிப்படையாகக்கொண்ட மற்றும் பணமல்லாதவற்றை அடிப்படையாகக் கொண்ட இலக்கிடப்பட்ட ஊக்குவிப்புக்களூடாக முறைசார்ந்த வழிகளூடான தொழிலாளர் பணவனுப்பல்கள் ஊக்குவிக்கப்பட்டன. பாரியளவான செலாவணி வீத தேய்மானம் திறந்த கணக்கு நியதிகள் போன்ற குறிப்பிட்ட கொடுப்பனவு நியதிகளின் கீழ் இறக்குமதிகள் மீதான கட்டுப்பாடுகள், மற்றும் இறக்குமதிகளுக்கான மிதமடைந்த கேள்வி என்பன அலுவல்சார்ந்த செலாவணி வீதங்களுக்கும் பணமாற்றுநர்களாலும் உத்தியோகபூர்வமற்ற சந்தையினாலும் வழங்கப்படும் வீதங்களுக்குமிடையிலான பாரிய இடைவீச்சின் திருத்தமொன்றிற்கு வழிவகுத்தது. இது, முறைசார்ந்த வழிகளினூடான பணவனுப்பல்களை மேலும் ஊக்குவித்தது. இறக்குமதிச் செலவினம் வீழ்ச்சியடைந்தமையினாலும் ஏற்றுமதி வருவாய்கள் தாக்குபிடிக்குந்தன்மையாக காணப்பட்டமையினாலும் 2022இன் இரண்டாம் அரையாண்டுப் பகுதியில் வர்த்தகப் பற்றாக்குறையில் கணிசமான குறைவொன்று அவதானிக்கப்பட்டது. சுற்றுலாத் துறையிலிருந்தான வருவாய்களில் ஏற்பட்ட அதிகரிப்பின் காரணமாக பணிகள் கணக்கில் காணப்படும் மிகை ஓரளவிற்கு அதிகரித்தது. எனினும், வான்வழி மற்றும் கடல்வழி சரக்கு, போக்குவரத்து, மற்றும் தகவல் தொழில்நுட்பம் மற்றும் வெளியிலிருந்து பணிகளைப் பெற்றுக்கொள்ளல் துறைக்கான பணிகள் உட்பாய்ச்சல்கள் என்பவை உள்ளடங்கலாக பணிகள் கணக்கிலுள்ள அனைத்து வேறு துறைகளானது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் கணிசமாக மிதமடைந்து காணப்பட்டன. 2022இன் இரண்டாம் அரையாண்டுப் பகுதியில் தொழிலாளர் பணவனுப்பல்களில் ஏற்பட்ட கணிசமான மேம்பாட்டிற்கு மத்தியில், 2022இல் இரண்டாந்தர வருமானக் கணக்கு மிகையானது குறைவடைந்த அதேவேளை, அட்டுறு அடிப்படையில் தொகுக்கப்பட்ட முதலாந்தர வருமானக் கணக்கு பற்றாக்குறையானது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ஆண்டுக் காலப்பகுதியில் சிறிதளவில் மிதமடைந்தது. இத்தகைய அபிவிருத்திகளுடன். நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையானது 2021இன் 3.7 சதவீதம் கொண்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியிலிருந்து 2022இல் 1.9 சதவீதம் கொண்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியாக சுருக்கமடைந்தது. கொழும்பு பங்குப் பரிவர்த்தனை (முதலாந்தரச் சந்தைக் கொள்வனவுகள் உள்ளடங்கலாக) மற்றும் அரச பிணையங்கள் சந்தை என்பவற்றிற்கான தேறிய வெளிநாட்டு முதலீட்டு

உட்பாய்ச்சல்களுக்கு மத்தியில், நிதியியல் கணக்கிற்கான உட்பாய்ச்சல்களானது அரசாங்கத்திற்கான வெளிநாட்டு உட்பாய்ச்சல்களில் ஏற்பட்ட வீழ்ச்சியின் காரணமாக மிதமடைந்து காணப்பட்டன. அதேவேளை, 2022இன் இறுதியில் மொத்த அலுவல்சார் ஒதுக்குகளானது முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 3.1 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 1.9 பில்லியனாக வீழ்ச்சியடைந்தது. எனினும், இது, பயன்படுதன்மை தொடர்பிலான நிபந்தனைகளுக்குட்பட்ட ஏறத்தாழ ஐ.அ.டொலர் 1.4 பில்லியனுக்குச் சமமான சீன மக்கள் வங்கியிடமிருந்து பெறப்பட்ட பரஸ்பரப் பரிமாற்றல் வசதியினை உள்ளடக்குகின்றது. 2022ஆம் காலப்பகுதியில், மத்திய வங்கியானது உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையிலிருந்து ஐ.அ.டொலர் 2.1 பில்லியனைப் பிரதானமாக உரிமம்பெற்ற வங்கிகள் மூலமான கட்டாய விற்பனைகளிடமிருந்து ஈர்த்துக்கொண்ட அதேவேளை, ஐ.அ.டொலர் 2.7 பில்லியனை எரிபொருள், நிலக்கரி, எரிவாயு போன்ற அத்தியாவசிய பண்டங்களை இறக்குமதிச் செய்வதற்கான வெளிநாட்டுச் செலாவணியை நிறைவேற்றுவதற்காக வழங்கியது. 2022ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் மத்திய வங்கியானது கடுமையான சவால்மிக்க சூழ்நிலைகளின் கீழும் அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் பணிகள் என்பவற்றின் வழங்கலை உறுதிப்படுத்துவதற்காக வெளிநாட்டுச் செலாவணியை முகாமை செய்வதில் பிரதானமாக பங்களிப்பை ஆற்றியது. அதேவேளை, வெளிநாட்டு நிதியிடல் மூலங்களுக்கான அணுகல் வசதியின்மை மற்றும் வர்த்தக படுகடனின் பாரியளவான பெறுமதி மாற்றங்கள் என்பவற்றின் தாக்கத்தை பிரதிபலித்து, 2022இன் இறுதியில் நாட்டின் மொத்த வெளிநாட்டுப் படுகடனானது 2021இன் இறுதியில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 51.8 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 49.7 பில்லியனாகக் காணப்பட்டது. அரசாங்கத்தின் வெளிநின்ற வெளிநாட்டுக் கடன்களில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு காணப்பட்டபோதிலும், அரசாங்க மொத்த வெளிநாட்டுப் படுகடனானது, சந்தை விலைகளில் மதிப்பிடப்பட்ட அரசாங்கத்தால் வழங்கப்படும் நாட்டிற்கான பன்னாட்டு முறிகளில் ஏற்பட்ட குறைப்பின் காரணமாக அதையொத்த மட்டங்களில் காணப்பட்டது. 2022ஆம் ஆண்டு காலப்பகுதியில், அரசாங்கமானது எரிபொருள், மருந்துப்பொருட்கள் மற்றும் வளமாக்கிகள் உள்ளடங்கலாக அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்வதற்காக பல்வேறு பிரதேச நாடுகளிலிருந்து பல எண்ணிக்கையிலான அவசர கொடுகடன் வசதிகளைப் பெற்று கணிசமான வெளிநாட்டுக் கடன் பகிர்ந்தளிப்புக்களை தோற்றுவித்தது. இருபுடை மற்றும் வர்த்தக கடன்கொடுநர்களுக்கான படுகடன் பணிக்கொடுப்பனவின் தற்காலிகமான இடைநிறுத்துதலானது குறைந்தளவிலான வெளிநாட்டுக் கடனின் மீள்கொடுப்பனவுகளின் பேரில் சில அவகாசத்தை

வரைபடம் 1.6
சென்மதி நிலுவை





*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

வழங்கியது. உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் திரவத்தன்மையில் ஏற்பட்ட கணிசமான பற்றாக்குறையானது செலாவணி வீதம் மீது அழுத்தங்களை தோற்றுவித்து, 2022 மாச்சின் ஆரம்பத்தில் செலாவணி வீதத்தில் அளவிடப்பட்ட சீராக்கத்தை நாணயச் சபை மூலம் மேற்கொள்வதற்கு தேவைப்படுத்தியது. எனினும், அதனைத் தொடர்ந்து, சந்தை ஊகமானது செலாவணி வீதத்தில் மிதமிஞ்சும் தன்மையை தோற்றுவித்தது. இதற்கமைய, 2022 ஏப்பிறல் இறுதியளவில் இலங்கை ரூபா ஐ.அ.டொலருக்கெதிராக 41.4 சதவீதத்தால் கணிசமாக தேய்வடைந்தது. 2022 மே மாத நடுப்பகுதியிலிருந்து, மிகையான ஊகத்தின் காரணமாக ஏதேனும் கணிசமான ஒரு நாளுக்குள்ளான தளம்பலைக் கட்டுப்படுத்தும் நோக்குடன், மத்திய வங்கியானது வங்கிகளுக்கிடையிலான நிறையேற்றப்பட்ட சராசரி உடனடி செலாவணி வீதத்திற்கு ஏற்புடைய நடுத்தர வீதம் மற்றும் வேறுபாட்டு எல்லை என்பவற்றை வெளியிடுவதன் மூலம் சந்தை வழிகாட்டலை வழங்கத் தொடங்கியது. இவ்வழிமுறையானது அன்றைய நாளிலிருந்து செலாவணி வீதத்தை உறுதிப்படுத்துவதில் காத்திரமிக்கதாக காணப்பட்டதுடன் மிகையான தேய்மானம் மற்றும் நாணயத்தின் தளம்பல் என்பவற்றின் பாதகமான பேரண்டபொருளாதார தாக்கங்களைத் தணிப்பதற்கு உதவியது. இத்தகைய அபிவிருத்திகளைப் பிரதிபலித்து, நாணயக் கூடைகளுக்கெதிராக இலங்கை ரூபாவின் அசைவையும் அதன்மூலம் வெளிநாட்டுப் போட்டித்தன்மையையும் அளவிடுகின்ற பெயரளவு தாக்கமுள்ள செலாவணி வீதச் சுட்டெண்களும் உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதச் சுட்டெண்களும் குறிப்பிடத்தக்களவில் தேய்வடைந்தன. ஒட்டுமொத்தமாக, உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதச் சுட்டெண்களானது 100 சுட்டெண் புள்ளிகளுக்கு கீழான எல்லைகளுக்கு கீழே கணிசமானளவில் வீழ்ச்சியடைந்து செலாவணி வீதம் பன்னாட்டு வர்த்தகத்திற்கு போதுமானளவில் போட்டித்தன்மைவாய்ந்து காணப்படுகின்றது என்பதற்கான சமிஞ்ஞையைக் காட்டியது.

1

வரைபடம் 1.7
செலாவணி வீதமும் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் மத்திய வங்கியின் தலையீடும்




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

**2023 மாச்சில், இலங்கையானது 2,286 மில்லியன் தொகை கொண்ட (ஏறத்தாழ ஐ.அ.டொலர் 3,000 மில்லியன்) சிறப்பு எடுப்பனவு உரிமையின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதிக்கான பன்னாட்டு நாணய நிதியத்தின் நிறைவேற்று ஒப்புதலை உறுதிப்படுத்தியதுடன் 2023இன் மாச்சின் பிற்பகுதியில் 254 மில்லியன் (ஏறத்தாழ ஐ.அ.டொலர் 333 மில்லியன்) தொகை கொண்ட சிறப்பு எடுப்பனவு உரிமையின் முதலாவது தொகுதி இத்திட்டத்தின் கீழ் பகிர்ந்தளிக்கப்பட்டது.** 2022 செத்தெம்பரில் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி நிகழ்ச்சித் திட்டத்திற்கான பன்னாட்டு நாணய நிதியத்துடன் அடைந்த அலுவலர் மட்ட ஏற்பாட்டைத் தொடர்ந்து, இலங்கையானது நிதியிடல் உத்தரவாதங்களை உறுதிப்படுத்துவதற்கு இருபுடை கடன்கொடுநர்களுடன் கலந்துரையாடலொன்றை ஆரம்பித்த அதேவேளை, வர்த்தக கடன்கொடுநர்களுடன் சிறந்த முறையிலான நம்பத்தக்க பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டது. மேலும், இலங்கையானது, பன்னாட்டு நாணய நிதிய நிறைவேற்றுச் சபையின் ஒப்புதலை கையகப்படுத்துவதற்கு தேவையான அனைத்து முந்தைய நடவடிக்கைகளையும் நிறைவேற்றுவதற்கான வழிமுறைகளை முன்னெடுத்தது. பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாட்டை நிறைவேற்றுவதை நோக்கி, பல்வேறு சாதகமான அபிவிருத்திகள் 2023இன் முன்னைய காலப்பகுதியிலிருந்து முன்னெடுக்கப்பட்டன. உள்நாட்டு வெளிநாட்டுச் சந்தையின் நடவடிக்கையை ஊக்குவிக்கும் நோக்குடனும் மத்திய வங்கியின் நெகிழ்வான பணவீக்க இலக்கிடல் கட்டமைப்புடன் இசைந்து செல்லும் விதத்தில் சந்தையினால் உந்தப்பட்ட செலாவணி வீதமொன்றை மீளமைக்கும் நோக்குடனும் மத்திய வங்கியானது நாளாந்த மாறுபாட்டு எல்லையை படிப்படியாக தளர்த்த ஆரம்பித்த அதேவேளை, 2023 மாச்சு முன்னைய காலப்பகுதியிலிருந்து உரிமம்பெற்ற வங்கிகள் மூலமான கட்டாய விற்பனைத் தேவைப்பாட்டை முற்றாக அகற்றுவதற்கு முன்னர், அத்தகைய தேவைப்பாட்டைத் தளர்த்தியது. பணிகள் துறைக்கான வெளிநாட்டு நாணய உட்பாய்ச்சல்கள், தொழிலாளர் பணவனுப்பல்கள் மற்றும் சொத்துப் பட்டியலுக்கான நிதியியல் உட்பாய்ச்சல்கள், மற்றும் பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாடு இறுதியடைந்ததைத் தொடர்ந்து சந்தை நம்பிக்கையை திரும்பப்பெற்றமை என்பவற்றால் ஆதரவளிக்கப்பட்டு, வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை திரவத்தன்மை 2023இன் ஆரம்பகாலத்திலிருந்து மேம்படுவதற்கு ஆரம்பித்தது. மேம்பட்டுவருகின்ற வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை நிலைமைகளின் தாக்கத்தை பிரதிபலித்து, செலாவணி வீதமானது 2023 மாச்சின் முன்னைய காலப்பகுதியில் பாரிய உயர்வை காட்டி, 2022இன் முன்னைய காலப்பகுதியில் எடுத்துக்காட்டப்பட்ட செலாவணி வீதத்தின் மிகைப்படுத்தலை சரிசெய்ததுடன் மத்திய வங்கியின் தலையீட்டினூடாக கணிசமான கொள்வனவுகளுடன் அலுவல்சார் ஒதுக்குகளை கட்டியெழுப்ப உதவியது. பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி மற்றும் சந்தையிலிருந்தான வெளிநாட்டுச் செலாவணிக் கொள்வனவுகள் என்பவற்றிலிருந்து பெறப்பட்ட நிதி உதவியுடன் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 2023 மாச்சு இறுதியளவில் ஏறத்தாழ ஐ.அ.டொலர் 2.7 பில்லியனிற்கு வலுவடைந்ததுடன் 2023 மாச்சு இறுதியிலுள்ளவாறு இலங்கை ரூபா ஐ.அ.டொலருக்கெதிராக 10.9 சதவீதத்தால் உயர்வடைந்து மேம்பட்ட சந்தை எண்ணப்பாங்குகளைத் தோற்றுவித்தன. செலாவணி வீதத்தை தீர்மானிக்கையில் அனுமதிக்கப்பட்ட பாரியளவான நெகிழ்ச்சித்தன்மையைப் பிரதிபலித்து, இலங்கை ரூபா 2023 மாச்சின் பின்னைய காலப்பகுதியிலிருந்து சில தளம்பல்களைக் காட்டியது.

**அரசாங்கத்தின் உள்நாட்டு நிதியிடல் தேவைகளுக்கு உதவும் நோக்குடன் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாட்டின் கீழ் பகிர்ந்தளிக்கப்பட்ட நிதியை வரவுசெலவுத் திட்ட ஆதரவை அமைப்பதற்கு முன்மொழியப்படுகின்றது.** எனினும், படுகடன் சீரமைப்பிற்கு உட்படாததும் மத்திய வங்கியின் ஒதுக்குகளிலிருந்து மேற்கொள்ளப்படும் அரசாங்கத்தின் வெளிநாட்டு நாணயக் கடப்பாடுகளை மீளச்செலுத்துவதற்கான சென்மதி நிலுவை கிடைக்கப்பெற்றதன் காரணமாகவும் அத்தியாவசிய இறக்குமதிகளை நிதியளிப்பதற்கு வசதியளிக்கக்கூடிய அலுவல்சார் ஒதுக்குகள் சாத்தியமாக வலுப்படுத்தப்பட்டதன் காரணமாகவும் இதுவரை கிடைக்கப்பட்ட பெறுகைகளானது சென்மதி நிலுவைக் கட்டுப்பாடுகளை பாதுகாப்பதற்கு உதவிபுரியும்.

## இறைத் துறை அபிவிருத்திகள்

**அரசாங்கமானது இறைத் துறை பாதிக்கப்படக்கூடிய தன்மைகளை தீர்ப்பதற்கான பிரதான இறை சீர்திருத்தங்களை முன்னெடுத்த அதேவேளை, நடுத்தர காலத்தில் படுகடன் உறுதிப்பாட்டை உறுதிப்படுத்தும் நோக்கில் பொதுப் படுகடனை**

## சிறப்புக் குறிப்பு 02
## பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதியினால் ஆதரவளிக்கப்பட்ட இலங்கையின் பொருளாதார சீராக்க நிகழ்ச்சித்திட்டம்

### அறிமுகம்

இலங்கையின் பொருளாதாரமானது உலகளாவிய மற்றும் உள்நாட்டு அதிர்வுகளுடன் இணைந்து அமைப்பியல் பேரண்டப் பொருளாதாரப் பிரச்சனைகளினால் ஏற்படுத்தப்பட்ட பாதிக்கப்படும் தன்மைகள் மற்றும் உறுதியற்ற நிலைமைகளில் அடிக்கடி ஏற்படும் சம்பவங்களுக்குட்பட்டு வருகிறது. உலகளாவிய நோய்த்தொற்றின் ஆரம்பத்துடன் 2020 இலிருந்து கடுமையாக பலயீனமடைந்த நிலைமைகள் அரசியல் முன்னுரிமைகளில் ஏற்பட்ட மாற்றங்களுடன் சேர்ந்து பொருளாதாரத்திற்கு மேலதிக அழுத்தங்களைக் கொண்டு வந்தது. இதன் விளைவாக, நாடு கடுமையான சென்மதி நிலுவை இடர்ப்பாடுகளை அனுபவித்ததுடன் அதனைத் தொடர்ந்து 2022இல் பல்வேறு நெருக்கடிகளையும் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. சிறந்த உறுதித்தன்மையினை நோக்கி பொருளாதாரத்தினை வழிப்படுத்துவதற்காக, 2022இன் ஆரம்பத்திலிருந்து பல கொள்கைத் தலையீடுகள் ஆரம்பிக்கப்பட்டன. பேரண்டப் பொருளாதாரத்தினை உறுதிப்படுத்துகின்றமைக்கு உட்பட்டு, நிதியியல் உதவிகளைக் கோருதல் மற்றும் பொதுப்படுகடனின் நீடித்துநிலைத்திருக்கும் தன்மையினை மீண்டும் அடைந்து கொள்ளும் விதத்தில் படுகடன் மறுசீரமைப்பு முயற்சிகளுடன் தொடர்பான விடயங்களை ஆரம்பித்தல் என்பன இப்பயணத்தினை நோக்கி எடுக்கப்பட்ட முக்கிய நடவடிக்கைகளாக இருந்தன. இலங்கை, சென்மதி நிலுவைக்கு ஆதரவளித்தல் மற்றும் அரசாங்கத்தின் சீர்திருத்த நிகழ்ச்சிநிரல் என்பன உட்பட, பல்வேறு நோக்கங்களுக்காக காலத்திற்குக் காலம் அநேக ப.நா. நிதிய நிகழ்ச்சித்திட்டங்களுக்குள் நுழைந்திருக்கிறது. எனினும், முன்னைய சந்தர்ப்பங்களைப் போலன்றி, இலங்கை ஒருபோதும் உணர்ந்திராத மோசமான பொருளாதார நிலைமைகளின் கீழ், 2022இன் ஆரம்பத்தில் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாடுகளுக்காக ப.நா.நிதியத்துடன் கலந்துரையாடல்களை ஆரம்பித்தது. கொள்கைத் தலையீடுகளின் வெற்றியானது மிக உயர்ந்த படுகடன் சுமை அதேபோன்று விடாப்பிடியான பாரிய இறை மற்றும் சென்மதி நிலுவை நிதியிடல் தேவைப்பாடுகள் என்பனவற்றினால் தடைப்பட்டது. நாட்டிற்கான தரமிடல் தொடர்ச்சியாக குறைவடைந்தமை, வெளிநாட்டு நிதியிடலுக்கான அணுகுவழிகள் இலங்கைக்கு அடைக்கப்பட்டுவிட்டமை என்பனவற்றின் காரணமாக புதிய நிதி திரட்டல்களை மேற்கொள்வதும் ஏற்கனவேயுள்ள கடன்களைத் தீர்ப்பனவு செய்வதும் பெரும் சவாலாயின. அலுவல்சார் ஒதுக்குகள் கிட்டத்தட்ட பூஜ்ய மட்டத்திற்கு குறைவடைந்து போயின. செலாவணி வீதங்கள் முன்னொருபோதுமில்லாத அளவிற்கு தேய்வடைந்தன. பொதுமக்கள் எரிபொருள், மின்வலு மற்றும் இன்றியமையாத இறக்குமதிப்பொருட்களைப் பெற்றுக்கொள்வது மட்டுப்படுத்தப்பட்டது. கேள்வி அழுத்தங்கள் மற்றும் நிரம்பல் பற்றாக்குறைகளின் காரணமாக பொது விலை மட்டங்கள் புதியதொரு மட்டத்திற்கு உயர்ந்து போயின. நிதியியல் முறைமை உறுதிப்பாடு அச்சுறுத்தல்களுக்குள்ளாகியதுடன், 2022 தொடக்கத்தில் சமூகப் பொருளாதார மோதல்கள் மீண்டும் மீண்டும் உருவாக்கின. இப்பின்னணியில், வெளிநாட்டு உதவியுடன் பொருளாதாரத்தினை உறுதிப்படுத்துவதற்கான அவசியம் தேவைப்பட்டதுடன் இலங்கை அதிகாரிகள் ப.நா. நிதியத்துடன் கலந்துரையாடல்களை ஆரம்பித்தனர். உத்தேச பொருளாதார மற்றும் நிதியியல் கொள்கைகளை இறுதிப்படுத்துவது தொடர்பில் ஓராண்டிற்கும் மேலாக ப.நா. நிதிய அலுவலர் குழுவுடன் மேற்கொண்ட தொடர்ச்சியான பேச்சுவார்த்தைகள், நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் விபரிக்கப்பட்ட முன்கூட்டிய நடவடிக்கைகள் வெற்றிகரமாக பூர்த்திசெய்யப்பட்டமை மற்றும் அலுவல்சார் கடன் வழங்குவோரிடமிருந்து நிதியியல் உத்தரவாதங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டமை என்பனவற்றின் காரணமாக 2023 மாச்சு இறுதியில் விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் ஒப்புதலைப் பெறுவது இயலுவதாயிற்று. இப்பொருளாதாரச் சீராக்க நிகழ்ச்சித்திட்டத்தின் அடிப்படைப் பண்புகள், விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாடுகளின் கீழ் எதிர்பார்க்கப்படும் அபிவிருத்திகள், எதிர்வரும் காலப்பகுதியிலான சீர்திருத்தங்கள் தொடர்பிலான நாட்டின் கடப்பாடுகள், இந்நிகழ்ச்சித்திட்டத்தினை நான்காண்டு காலப்பகுதிக்கு தொடர வேண்டியதன் அவசியம் என்பன பின்வரும் பிரிவுகளில் ஆராயப்படுகின்றன.

### நிகழ்ச்சித்திட்டத்தின், குறிக்கோள்கள் மற்றும் ப.நா.நிதிய விரிவாக்கப்பட்ட வசதியின் நடைமுறை

தற்போதைய ப.நா.நிதிய - விரிவாக்கப்பட்ட ஏற்பாடுகள், அரசாங்கத்திற்கான வரவு செலவுத்திட்டத்திற்கு உதவும் விதத்தில் பயன்படுத்தப்படுவதற்காக சிஎஉ 2.286 பில்லியன் (ஏறத்தாழ ஐ.அ.டொலர் 3 பில்லியன்) கொண்ட மொத்தத் தொகையினைப் பகிர்ந்தளிப்பதுடன் இது 48 மாதங்களுக்கு வியாபித்துச் செல்லும். எவ்வாறாயினும், விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் கீழான பெறுகைகள் மொத்த அலுவல்சார் ஒதுக்குகளை குறைநிரப்புவதன் மூலம் சென்மதி நிலுவையை பாதுகாக்கவும் உதவக்கூடும். பகிர்ந்தளிப்புக்கள் அரையாண்டு மீளாய்வுகள் மற்றும் அதனைத் தொடர்ந்து நிறைவேற்றுச் சபையின் ஒப்புதலுக்குட்பட்டு ஒன்பது தொகுதிகளாக சமமாகப் பிரிக்கப்படும். சபையின் ஒப்புதலைத் தொடர்ந்து முதல் தொகுதி உடனடியாக 2023 மாச்சில் பெறப்பட்டது. நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கம் பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டினைப் பெருமளவிற்கு மீண்டும் பெற்றுக்கொள்வதேயாகும். இவ்வொட்டுமொத்தப் பொருளாதார உறுதிப்பாட்டினை, படுகடன் உறுதிப்பாட்டினை மீண்டும் அடைந்துக் கொள்ளுதல் அதிகரித்த அரசிறையை அடிப்படையாகக் கொண்ட இறைத்திரசிப்படுத்தல், விலை உறுதிப்பாட்டினை மீண்டும் அடைந்து கொள்ளுதலும், வெளிநாட்டு தாங்கிருப்புக்களைக் கட்டியெழுப்புதலும் நிதியியல் உறுதித் தன்மை, ஊழலினால் பாதிக்கப்படும் தன்மைகளைக் குறைத்தல் மற்றும் உள்ளார்ந்த வளர்ச்சியை அதிகரித்தல் ஆகிய இன்றியமையாத துறைகளின் மீது வலுவான தூண்களைக் கட்டியெழுப்புவதினூடாகப் பெற்றுக்கொள்ளும் விதத்தில் வடிவமைக்கப்பட்டிருக்கிறது.

### முன்கூட்டிய நடவடிக்கைகள் மற்றும் அமைப்பியல் அடிப்படை அளவுக்குறியீடுகள்

2022இன் தொடக்கத்தில் ப.நா.நிதிய விரிவாக்கப்பட்ட வசதிக்கான பேச்சுவார்த்தை தொடங்கப்பட்டதிலிருந்து 2023 மாச்சு வரை ஒன்பது முன்கூட்டிய நடவடிக்கைகளை இலங்கை பூர்த்திசெய்துள்ளதுடன் அமைப்பியல் அடிப்படை அளவுக்குறியீடுகளைப் பூர்த்திசெய்வதற்கான பொறிமுறைகளையும் உருவாக்கியிருக்கிறது. இம்முன்கூட்டிய நடவடிக்கைகளைப் பூர்த்திசெய்வது, விரிவாக்கப்பட்ட

1

வரைபடம் சி.கு 2.1
ப.நா.நிதிய விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் கீழ் அமைப்பியல் அடிப்படை அளவுக் குறியீடுகள்

## இறை, அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகள், சமூகப் பாதுகாப்பு வலையமைப்புச் சீர்திருத்தங்கள்

- **தொடர்ச்சியானது:** மாதாந்த சூத்திரத்தினை அடிப்படையாகக் கொண்ட சீராக்கங்களுடன் அவற்றின் செலவினை மீட்பு மட்டங்களுக்கு சில்லறை எரிபொருள் விலைகளை நிர்ணயித்தல்
- **தொடர்ச்சியானது:** இறுதி பயன்படுத்துநர் மின்வலு தீர்வை அட்டவணையினை அடையாண்டுச் சூத்திரத்தினை அடிப்படையாகக் கொண்ட சீராக்கத்துடன் அதன் செலவு மீட்பு மட்டத்திற்குச் சீராக்குதல்
- **2023 மே முடிவில்:** நலன்புரி நன்மைகள் திட்டத்திற்கு பாராளுமன்றத்தின் ஒப்புதல் மற்றும் நன்மைபெறுநரை அடையாளம் காண்பதற்கான புதிய தகைமைப் பிரமாணம்
- **2023 யூன் முடிவில்:** இலங்கை மின்சாரசபை, இ.பெ.கூட்டுத்தாபனம், சிறிலங்கன் எயார்லைன் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை என்பனவற்றின் ஐந்தொகையினை மறுசீரமைப்பதற்கு அனைத்தையுமுள்ளடக்கிய முறையொன்றிற்கு அமைச்சரவையின் ஒப்புதல்
- **2023 யூலை முடிவில்:** நிகழ்ச்சித்திட்ட வழி அலகுகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் 2024 காலப்பகுதியில் இறைத்திரட்சிக்கு ஆதரவளிப்பதற்கு அரசிறை வழிமுறைகளுக்கு அமைச்சரவை ஒப்புதல்
- **2023 செத்தெம்பர் முடிவில்:** ஒருங்கிணைக்கப்பட்ட திறைசேரி முகாமைத்துவ தகவல் முறைமையின் ஆரம்ப வேலைகளை முடிவுறுத்துதல். இதன் உள்ளடக்கப் பரப்பினை அனைத்து 220 தலைவர்களுக்கும் (தேசிய வரவு செலவுத்திட்ட நிறைவேற்று முகவர்கள்) விரிவாக்குதல்
- **2023 ஒத்தோபர் முடிவில்:** நிகழ்ச்சித்திட்ட வழி அலகுகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் 2024 ஒதுக்கீட்டினை முதல் வாசிப்பிற்கான பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்தல்
- **2023 திசெம்பர் முடிவில்:** நிகழ்ச்சித்திட்ட வழி அலகுகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் 2024 ஒதுக்கீட்டுச் சட்டம் மற்றும் செலவிடல் ஒதுக்கிற்கு பாராளுமன்ற ஒப்புதல்
- **2023 திசெம்பர் முடிவில்:** ப.நா.நிதிய அலுவலர்களின் ஆலோசனையுடன் புதிய அரச நிதி முகாமைத்துவச் சட்டத்தினை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்தல்
- **2023 திசெம்பர் முடிவில்:** மின்வலு உதவுதொகையினைத் துல்லியமாக அளவிடுவதற்காக தொகை வடிவிலான நிரம்பல் கொடுக்கல்வாங்கல் கணக்கு மேம்பாட்டு மற்றும் செலவு மீட்பினை அடிப்படையாகக் கொண்ட மின்வலுத் தீர்வையினை நிர்ணயிப்பதற்கும் இதனைப் பயன்படுத்தத் தொடங்குதல் மற்றும் அரசாங்கத்தின் மாற்றல் தேவைப்பாடுகளுக்கும் இதனை பயன்படுத்தத் தொடங்குதல்

## நிதியியல் துறை

- **2023 ஏப்பிறல் முடிவில்:** இரண்டு பாரிய அரச வங்கிகள் மற்றும் மூன்று பாரிய தனியார் துறை வங்கிகளுக்கான வங்கிகளை அடையாளம் காணும் செய்முறையின் சொத்துத் தர மீளாய்வுக் கூறின் நிறைவு
- **2023 யூன் முடிவில்:** ப.நா.நிதிய அலுவலர்களின் ஆலோசனையுடன் வங்கித் தொழில் துறையின் முழுத் திருத்தத்திற்கான அமைச்சரவை ஒப்புதல்
- **2023 யூலை முடிவில்:** வங்கித்தொழில் முறைமையின் மூலதன மற்றும் வெளிநாட்டுச் செலாவணி திரவத்தன்மைப் பற்றாக்குறையினைத் தீர்த்தல் மற்றும் ஆற்றல் வாய்ந்தவை அல்லாதனவாக மதிப்பிடப்பட்ட வங்கிகளில் தலையீடு செய்தல் என்பனவற்றிற்கான மத்திய வங்கியின் வழிகாட்டலினை உருவாக்குதல்
- **2023 ஒத்தோபர் முடிவில்:** தனியார் துறை மூலங்களிலிருந்து மூலதனப் பற்றாக்குறையினைப் பூர்த்திசெய்ய இயலாமல் இருக்கும் ஆற்றல் வாய்ந்த வங்கிகளின் அரச மீள்மூலதனமயப்படுத்தல் வாய்ப்புக்களுக்காக நிதி அமைச்சினால் நிர்ணயிக்கப்படும் அளவு, காலம், சாதனங்கள் மற்றும் நியதிகள் மற்றும் நிபந்தனைகள்
- **2023 திசெம்பர் முடிவில்:** ப.நா.நிதிய அலுவலர்களின் ஆலோசனையுடன் வங்கித்தொழில் சட்டத்தின் முழுத் திருத்தங்களுக்குமான பாராளுமன்ற ஒப்புதல்

## நாணய மற்றும் செலாவணி வீதக் கொள்கைகள்

- **2023 ஏப்பிறல் முடிவில்:** ப.நா.நிதிய அலுவலர்களின் ஆலோசனையுடன் தயாரிக்கப்பட்ட புதிய மத்திய வங்கிச் சட்டத்திற்கு பாராளுமன்றத்தின் ஒப்புதல்

## ஆளுகை

- **2023 யூன் முடிவில்:** ப.நா.நிதிய அலுவலர்களின் ஆலோசனையுடன் ஊழலுக்கெதிரான ஐக்கிய நாடுகள் தீர்மானத்துடன் இணங்குகின்ற விதத்தில் புதிய ஊழலுக்கெதிரான சட்டவாக்கத்தினை இயற்றுதல், நிலுவையிலுள்ள அனைத்தையுமுள்ளடக்கிய சொத்து மீட்பு ஏற்பாடுகள்
- **2023 செத்தெம்பர் முடிவில்:** இலங்கையின் ஊழலுக்கெதிரான கட்டமைப்பினை மதிப்பிடுவதற்காக ப.நா.நிதியத்தினால் தலைமை தாங்கப்பட்ட ஆளுகை அடையாளம் காணும் தொழில்நுட்ப உதவிக் தூதுக்குழுவின் அறிக்கையினை வெளியிடல்

*மூலம்:* ப.நா.நிதியம் (2023) இலங்கை: விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் (EFF) கீழ் விரிவாக்கப்பட்ட ஏற்பாடொன்றின் கோரிக்கை - பத்திரிகை வெளியீடு, அலுவலர் அறிக்கை மற்றும் இலங்கைக்காக நிறைவேற்றுப் பணிப்பாளர் வழங்கிய

நிதிய வசதியின் கீழ் அடுத்துவரும் நான்கு ஆண்டுகளில் நடைமுறைப்படுத்தவுள்ள பரந்த சீர்திருத்தங்களுக்கான பாதையை இடுவதற்கான கருவியாக இருக்கும். இலங்கையினால் ஏற்கனவே நிறைவு செய்யப்பட்டிருக்கின்ற முன்கூட்டிய நடவடிக்கைகள் நிகழ்ச்சித்திட்ட வழி அலகுகளுடன் இசைந்துசெல்லும் விதத்தில் 2023 காலப்பகுதியில் இறைத்திரட்சிக்கு ஆதரவளிப்பதற்கான அரசிறை வழிமுறைகளுக்கு அமைச்சரவையின் ஒப்புதலைப் பெற்றுக்கொள்ளுதல், 2022இற்கான வரவு செலவுத்திட்டத்தினைத் திருத்துவதற்காக பாராளுமன்றத்தின் ஒப்புதலைப் பெற்றுக்கொள்ளுதல், 2023 ஒதுக்கீட்டு மசோதாவைப் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல், தன்னியக்கமான மாதாந்த சில்லறை எரிபொருள் விலைச் சீராக்கத்திற்காக அமைச்சரவை ஒப்புதலைப் பெறுதல், அரையாண்டு செலவு மீட்பினை அடிப்படையாகக் கொண்ட மின்வலு விலைச் சீராக்கத்தினை தன்னியக்கப்படுத்தல், புதிய மத்திய வங்கிச் சட்டத்திற்கு அமைச்சரவை ஒப்புதலளித்தல், மத்திய வங்கியின் நெருக்கடி முகாமைத்துவ அதிகாரங்களின் முக்கிய கூறுகளை வலுப்படுத்துவதற்காக வங்கித்தொழில் சட்டத்திற்கான திருத்தத்திற்கு அமைச்சரவை ஒப்புதலளித்தல், வங்கித்தொழில் துறையின் பாதிக்கப்படக்கூடிய தன்மையை கண்டறிவதற்கு சுயாதீனமான நிறுவனமொன்றினை வாடகைக்கு பெறல், உண்மை கொள்கை வீதங்களை உறுதியான முன்னோக்கிய பாதையில் கொண்டு செல்வதனை உறுதிப்படுத்துவதற்காக 100 அடிப்படைப் புள்ளிகளினால் கொள்கை வட்டி வீதங்களை அதிகரித்தல் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தது.

மேற்குறிப்பிட்டவற்றிற்குப் புறம்பாக, மூன்று முக்கிய உடனடியான வழிமுறைகளும் நடைமுறைக்கிடப்பட்டதுடன் இது, நிகழ்ச்சித்திட்ட வழியலகுகளுடன் இசைந்து செல்லப்பட்ட 2023 ஆம் ஆண்டின். வரவு செலவுத்திட்டத்தின் பாராளுமன்ற ஒப்புதல், 2023 அரசிறை வழிமுறைகளை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான சட்டவாக்கத் திருத்தங்களுக்கு பாராளுமன்றம் ஒப்புதலளித்தல் மற்றும் வங்கிகளுக்கான அவசரகால திரவத்தன்மை உதவிக் கட்டமைப்பினை இற்றைப்படுத்தல் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தது. மேலும், இலங்கை


வரைபடம் சி.கு 2.2

இலங்கை: உத்தேச கணியம்சார் செயலாற்றப் பிரமாணம், தொடர்ச்சியான செயலாற்றப் பிரமாணம் மற்றும் குறிகாட்டி இலக்குகள
(வேறுவிதமாகக் குறிப்பிடப்பட்டாலன்றி ஆண்டின் ஆரம்பத்திலிருந்தான ஒன்றுசேர்ந்த தொகை)

| | | 2022 | 2023 | | | |
|---|---|---|---|---|---|---|
| | | திசெ. இறுதியில் உண்மையானவை | மாச்சு இறுதியில் குறிகாட்டி இலக்குகள் | யூன் இறுதியில் செயலாற்றப் பிரமாணம்/ குறிகாட்டி இலக்குகள் | செத். இறுதியில் குறிகாட்டி இலக்குகள் | திசெ. இறுதியில் செயலாற்றப் பிரமாணம்/ குறிகாட்டி இலக்குகள் |
| **உத்தேச கணியம்சார் செயலாற்றப் பிரமாணம்** | | | | | | |
| மத்திய அரசாங்க ஆரம்ப நிலுவை (தளம்) | ரூ.பில் | **-895** | -56 | -113 | -160 | -209 |
| நிகழ்ச்சித்திட்டம் தேறிய அலுவல்சார் பன்னாட்டு ஒதுக்கு நிகழ்ச்சித்திட்டம் (தேறிய பன்னாட்டு ஒதுக்கு, தளம், கால முடிவில் இருப்பு) | ஐ.அ.டொ மில் | **-3,540** | -3,188 | -2,830 | -2,068 | -1,592 |
| மத்திய வங்கியின் அரசிற்கான தேறிய கொடுகடன் (உச்ச எல்லை, காலமுடிவில் இருப்பு) | ரூ.பில் | **2,834** | 2,890 | 2,890 | 2,840 | 2,740 |
| மத்திய அரசாங்கத்தின் செலவின நிலுவை இருப்பு (எல்லை) | ரூ.பில் | **60** | 30 | 0 | 0 | 0 |
| **உத்தேச தொடர்ச்சியான செயலாற்றப் பிரமாணம் (நிகழ்ச்சித்திட்ட தொடக்கத்திலிருந்து ஒன்றுசேர்ந்தவை** | | | | | | |
| நிதியல்லா அரச துறைகள் மற்றும் இலங்கை மத்திய வங்கியினால் செய்யப்பட்ட புதிய வெளிநாட்டுக் கொடுப்பனவு நிலுவைகள் (உச்சம்) | ஐ.அ.டொ மில் | **0** | 0 | 0 | 0 | 0 |
| **உத்தேச குறிகாட்டி இலக்குகள்** | | | | | | |
| மத்திய அரசாங்கத்தின் வரி அரசிறை (தளம்) | ரூ.பில் | **1,751** | 650 | 1,300 | 2,100 | 2,940 |
| மத்திய அரசாங்கத்தின் சமூக செலவிடல் (தளம்) | ரூ.பில் | **142** | 35 | 70 | 120 | 187 |
| எரிபொருட்கள் மற்றும் மின்வலுவிற்கான வர்த்தகமல்லா கடப்பாட்டுச் செலவு (அரசாங்க மாற்றல் நீங்கலாக) (உச்சம்) | ரூ.பில் | **-** | 0 | 0 | 0 | 0 |
| திறைசேரி உத்தரவாதங்கள் (உச்சம்) | ரூ.பில் | **1,159** | 1,700 | 1,700 | 1,700 | 1,700 |

மூலம்: ப.நா.நிதியம் (2023) இலங்கை: விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் (EFF) கீழ் விரிவாக்கப்பட்ட ஏற்பாடொன்றின் கோரிக்கை - பத்திரிகை வெளியீடு, அலுவலர் அறிக்கை மற்றும் இலங்கைக்காக நிறைவேற்றுப் பணிப்பாளர் வழங்கிய அறிக்கை

வரைபடம் சி.கு 2.3
உத்தேச நாணயக் கொள்கை, ஆலோசனை விதி
கொ. நு. வி. சுட்டெண்ணை அடிப்படையாகக் கொண்ட ஆண்டிற்கு ஆண்டுப் பணவீக்கம்




*மூலம்:* ப.நா.நிதியம் (2023) இலங்கை: விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் கீழ் விரிவாக்கப்பட்ட ஏற்பாடொன்றின் கோரிக்கை - பத்திரிகை வெளியீடு, அலுவலர் அறிக்கை மற்றும் இலங்கைக்காக நிறைவேற்றுப் பணிப்பாளர் வழங்கிய அறிக்கை

இறை, அரசுக்கு சொந்தமான தொழில்முயற்சிகள் மற்றும் சமூகப் பாதுகாப்பு வலையமைப்புச் சீர்திருத்தங்கள், நாணய மற்றும் செலாவணி வீதக் கொள்கைகள், இறைத்துறை மற்றும் ஆளுகையுடன் தொடர்பான சீர்திருத்தங்கள் என்பன தொடர்பாக பல அமைப்பியல் அடிப்படை அளவுக்குறியீடுகளை நடைமுறைக்கிடுமாறு இலங்கை கேட்டுக்கொள்ளப்பட்டது. இவை வரைபடம் சி.கு 2.1இல் விபரமாகத் தரப்பட்டுள்ளன.

### நிகழ்ச்சித்திட்ட முன்னேற்றங்களைக் கண்காணித்தல்

விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாடுகளின் செயலாற்றமானது கணியம்சார் செயலாற்றப் பிரமாணம், வெளிநாட்டு நிலுவைகள் மற்றும் உறுப்புரை கடப்பாடுகளுடன் தொடர்பான தொடர்ச்சியான செயலாற்றப் பிரமாணம், குறியீட்டு இலக்குகள் மற்றும் நாணயக் கொள்கை ஆலோசனை விதிகள் என்பனவற்றை உள்ளடக்கிய அனைத்தையுமுள்ளடக்கிய பொறிமுறையின் நியதிகளில் கண்காணிக்கப்படும். இலங்கை அடைவதற்கு எதிர்பார்க்கப்படும் கணியம்சார் செயலாற்றப் பிரமாணம் அரசாங்கத்தின் வரவு செலவுத்திட்டத்தில் ஆரம்ப மிகை, தேறிய பன்னாட்டு ஒதுக்குகளைக் கட்டியெழுப்புவதனூடாக மொத்த அலுவல்சார் ஒதுக்குகளின் மட்டத்தினை மேம்படுத்தல், அத்துடன் மத்திய வங்கியினால் அரசிற்கு வழங்கப்படும் தேறிய கொடுகடனைப் படிப்படியாக கட்டம் கட்டமாக அகற்றுதல் என்பன தேவைப்பாடுகளாகவுள்ளன. தொடர்ச்சியான செயலாற்றப் பிரமாணமானது வெளிநாட்டுப் படுகடன் மீதான புதிய வெளிநாட்டுக் கொடுப்பனவு நிலுவைகளின் ஒன்றுதிரளாதவைகளின் மீது பிரயோகிக்கப்படுகிறது. இது அதிகாரிகளினால் தொடர்ச்சியாக கண்காணிக்கப்படவுள்ளதுடன் கண்காணிக்கப்படாத ஏதேனும் விடயங்கள் இருப்பின் அவை உடனடியாக ப.நா. நிதியத்திற்கு அறிவிக்கப்படுதல் வேண்டும். மேலும், மற்றைய கணியம்சார் செயலாற்றப் பிரமாணம் நடைமுறை பன்னாட்டுக் கொடுக்கல்வாங்கல்களுக்கான கொடுப்பனவுகள் மற்றும் மாற்றல்களைச் செய்வது மீதான கட்டுப்பாடுகளை விதித்தல் அல்லது தீவிரப்படுத்தல்களைத் தடைசெய்வது பன்முக நாணய நடைமுறைகளை அறிமுகப்படுத்தல் அல்லது திருத்தியமைத்தல் ப.நா.நிதிய உடன்படிக்கையின் உறுப்புரை VIII உடன் இணங்கிச் செல்லாத இருபுடை கொடுப்பனவு உடன்படிக்கைகளை முடிவுறுத்தல் மற்றும் சென்மதி நிலுவை நோக்கங்களுக்காக இறக்குமதிக் கட்டுப்பாடுகளை விதித்தல் அல்லது தீவிரப்படுத்தல் என்பனவற்றை உள்ளடக்கியிருக்கிறது. நாணயக் கொள்கை

வரைபடம் பி 2.4
வெளிநாட்டு நிதியிடல் இடைவெளி மற்றும் நிகழ்ச்சித்திட்ட நிதியிடல் (2022 – 2027)

*ஐ.அ.டொலர்*

| | 2022 | 2023 | 2024 | 2025 | 2026 | 2027 | மொத்தம் 2022-27 |
|---|---|---|---|---|---|---|---|
| **நிதியியல் இடைவெளி (அ)** | **-2,834** | **-4,939** | **-4,843** | **-5,018** | **-3,608** | **-3,911** | **-25,153** |
| **நிகழ்ச்சித்திட்ட நிதியிடல் (ஆ)** | **2,834** | **4,939** | **4,843** | **5,018** | **3,608** | **3,911** | **25,153** |
| ப.நா.நிதிய விரிவாக்கப்பட்ட வசதி | 0 | 663 | 665 | 663 | 662 | 329 | 2,982 |
| பன்னாட்டு நிதியியல் நிறுவன வரவு செலவுத்திட்ட உதவி | 0 | 900 | 850 | 700 | 700 | 600 | 3,750 |
| உலக வங்கி | | 250 | 400 | 400 | 400 | 300 | 1,750 |
| ஆசிய அபிவிருத்தி வங்கி | | 650 | 450 | 300 | 300 | 300 | 2,000 |
| ஏனையவை | | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| படுகடன் சட்ட இசைவுத்தாமதம் வெளிநாட்டு நிலுவை ஒன்றுசேர்ந்தவை | 2,834 | | | | | | 2,834 |
| படுகடன் நிவாரணம் | | 3,376 | 3,328 | 3,655 | 2,246 | 1,482 | 14,087 |
| நாட்டிற்கான முறி (சந்தை அணுகல்வசதி) | | 0 | 0 | 0 | 0 | 1,500 | 1,500 |
| **பற்றாக்குறை (அ + ஆ)** | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | |
| **மொத்த பன்னாட்டு ஒதுக்குகள்** | 1,898 | 4,431 | 6,128 | 8,520 | 10,888 | 14,208 | |
| **செயற்றிட்டக் கடன்கள்** | 1,473 | 1,400 | 1,542 | 1,585 | 1,633 | 1,682 | |

மூலம : ப.நா.நிதியம் (2023) இலங்கை: விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் கீழ் விரிவாக்கப்பட்ட ஏற்பாடொன்றின் கோரிக்கை - பத்திரிகை வெளியீடு, அலுவலர் அறிக்கை மற்றும் இலங்கைக்காக நிறைவேற்றுப் பணிப்பாளர் வழங்கிய அறிக்கை

ஆலோசனை விதியும் விலை உறுதிப்பாட்டினை மீண்டும் அடையும் விதத்தில் இலக்கிடப்பட்ட மட்டங்களை எய்துவதற்கு இலங்கை உறுதியான பணவீக்க வீழ்ச்சிப் பாதையில் பயணிக்கின்றது என்பதனை உறுதிப்படுத்தும் விதத்தில் குறிப்பிட்ட இலக்கிட்ட திகதிகளில் ஆண்டிற்கு ஆண்டுப் பணவீக்கத்தினைக் கண்காணித்தல் என்பன உள்ளடக்கப்பட்டுள்ளன. மேலும், குறிகாட்டி இலக்குகள் மத்திய அரசாங்கத்தின் வரி அரசிறை, சமூகப் பாதுகாப்பு வலையமைப்புச் செலவிடல், எரிபொருள் மற்றும் மின்வலுவிற்கான வர்த்தகமல்லா கடப்பாடுகளின் செலவு அதேபோன்று திறைசேரி உத்தரவாதம் என்பன மீது முக்கியமாக குறித்துரைக்கப்பட்டுள்ளன. மிக முக்கியமான விடயம் யாதெனில் நியாயமான கால வரையறைக்குள் படுகடன் மறுசீரமைப்பினை நிறைவுசெய்யும் நோக்குடன் நீடித்துநிலைத்திருக்கும் படுகடனை அடைந்துகொள்வதில் எதிர்பார்க்கப்படும் குறிக்கோள்கள் அடைந்து கொள்ளப்படுவதனை உறுதிப்படுத்தும் பொருட்டு படுகடன் மறுசீரமைக்கப்படுவதன் மீதான முன்னேற்றம் ஒவ்வொரு நிகழ்ச்சித்திட்ட மீளாய்விலும் மதிப்பீடு செய்யப்படும். நிகழ்ச்சித்திட்டத்துடன் தொடர்பான கணியம்சார் செயலாற்றுப் பிரமாணமும் தகவல் தொழில்நுட்பமும் வரைபடம் பி 2.2இல் விபரமாகத் தரப்பட்டுள்ளன.

**வெளிநாட்டு நிதியிடல் இடைவெளி மற்றும் நிதியிடல் மூலங்கள்**

நிகழ்ச்சித்திட்டமானது ஐ.அ.டொலர் 3.75 பில்லியன் தொகை உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்தான வரவு செலவுத்திட்ட ஆதரவுடன் கூடிய மேலதிக நிதியிடல் ஆதரவை உத்வேகப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுவதுடன் இதில், ஐ.அ.டொலர் 900 மில்லியன் 2023இல் எதிர்பார்க்கப்படுகிறது. அத்துடன் பொருளாதாரத்தின் மீட்சியும் ஏற்பட்டு தாங்கிருப்புக்கள் கட்டியெழுப்பப்பட்டதும் இலங்கை 2027இல் நாட்டிற்கான முறிகளை வழங்கும் நியதிகளில் பன்னாட்டுச் சந்தைகளில் நிதிகளைத் திரட்டக்கூடிய அணுகுவழிகளைப் பெறக்கூடியதாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இம்மூலவளங்கள், வெளிநாட்டுப் பொதுப்படுகடன் தீர்ப்பனவு இலகுவாக்கப்படுவதுடன் சேர்ந்து வெளிநாட்டு நிதியிடல் இடைவெளியினைக் குறைக்கும் என்பதுடன் இலங்கை அதன் மொத்தப் பன்னாட்டு ஒதுக்குகளை மீளக்கட்டியெழுப்பவும் அனுமதிக்கும்.

**விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாடுகளின் கீழ் எதிர்பார்க்கப்படும் அபிவிருத்திகள்**

ப.நா. நிதியம் - விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் எதிர்பார்க்கப்படும் முக்கிய பெறுபேறுகளில் சில வருமாறு:

- **நீடித்துநிலைத்திருக்கும் படுகடன் தன்மையினை எய்துதல்:** நீடித்துநிலைத்திருக்கும் படுகடன் தன்மையினை எய்துவதற்கு இலங்கை குறித்துரைக்கப்பட்ட படுகடன், நிதியிடல் மற்றும் படுகடன் தீர்ப்பனவுடன் தொடர்பான இலக்கிடல்கள் என்பனவற்றை அடைந்து கொள்வது அவசியமாகும். மேலும், படுகடன் மறுசீரமைப்புச் செய்முறை நிகழ்ச்சித்திட்டக் காலப்பகுதியில் நிதியிடல் இடைவெளி நிரப்பப்பட்டுவிட்டது என்பதனை உறுதிப்படுத்துவதற்கு படுகடன் குறைப்பினை உறுதிப்படுத்தல், மீண்டும் மீண்டும் வரும் இடர்நேர்வுகளை முகாமைப்படுத்தல், படுகடன் தீர்ப்பனவுத் தேவைகளிலிருந்து வெளிநாட்டு அழுத்தங்களின் புதுப்பிக்கப்பட்ட கட்டியெழுப்பல்களை தவிர்த்தல் என்பன அவசியமாக இருக்கும். இத்தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்வது கடன் வழங்குவோர் மற்றும் பன்னாட்டு சமூகத்தினரின் பார்வையில் இலங்கையின் படுகடனானது உறுதித்தன்மை வாய்ந்த மட்டமொன்றிற்கு திரும்பியிருக்கின்றது என்பதனை உறுதிப்படுத்தும். இதன்மூலம் இலங்கையின் எதிர்காலக் கடன்பாடுகளுடன் இணைந்துள்ள இடர்ப்பாடுகளும் இடர்நேர்வு மிகைகளும் குறைக்கப்படும்.

  ப.நா. நிதியத்தினால் மேற்கொள்ளப்பட்ட படுகடனின் நீடித்துநிலைத்திருக்கும் தன்மையின் பகுப்பாய்வின்படி, படுகடனின் நீடித்துநிலைத்திருக்கும் தன்மை இலக்குகள் இலங்கையினால் படுகடன் மறுசீரமைப்பு செய்முறையினூடாகப் பெற்றுக்கொள்ளப்படுவது அவசியமாகும். அவை பின்வருமாறு:

  - **படுகடன் இருப்பு:** 2032 அளவில் பொதுப்படுகடன், மொ.உ.உற்பத்தியின் 95 சதவீதத்திற்கு கீழே வீழ்ச்சியடையும்.

  - **நிகழ்ச்சித்திட்டத்திற்குப் பின்னைய மொத்த நிதியிடல் தேவைப்பாடுகள்:** 2027 - 2032 காலப்பகுதியில் மத்திய அரசாங்கத்தின் ஆண்டிற்கான மொத்த நிதியிடல் தேவைப்பாடுகள் சராசரியாக மொ.உ.உற்பத்தியின் 13 சதவீதத்திற்கும் கீழே இருக்கும்.

  - **நிகழ்ச்சித்திட்டத்திற்குப் பின்னைய வெளிநாட்டுச் செலாவணிப் படுகடன் தீர்ப்பனவுகள்:** 2027 - 2032 காலப்பகுதியின் ஒவ்வொரு ஆண்டிலும் மத்திய அரசாங்கத்தின் சராசரி ஆண்டிற்கான வெளிநாட்டுச் செலாவணி படுகடன் தீர்ப்பனவுகள் மொ.உ.உற்பத்தியின் 4.5 சதவீதத்திற்குக் குறைவாக தொடர்ந்தும் இருக்கும்.

  - **நிகழ்ச்சித்திட்ட நிதியிடல் இடைவெளிகள்:** 2023 - 2027 காலப்பகுதியில் படுகடன் தீர்ப்பனவின் குறைப்பு வெளிநாட்டு நிதியிடல் இடைவெளி பூர்த்தி செய்யப்படுவதற்கு போதுமானதாக இருத்தல் வேண்டும்.

- **மேம்பட்ட இறைச் செயலாற்றமும் ஒழுக்காற்றும்:** இறைத் துறை மற்றும் தொடர்பான அமைப்பியல் அடிப்படைக் குறிகாட்டிகள் தொடர்பான நிகழ்ச்சித்திட்டத்தில் வழங்கப்பட்ட வலியுறுத்தலுடன், அரசிறையை அதிகரிக்கின்ற வழிமுறைகளூடாகவும் மற்றும் செலவினங்களை மேலும் சிக்கனப்படுத்துவதன் மூலமும் இறை இலக்குகளைப் பூர்த்தி செய்வதற்கு இறைத்திரட்சியை அரசாங்கம் பிடிவாதமாகப் பேணும் என எதிர்பார்க்கப்படுகிறது. முன்னோக்கிச் செல்கையில், பற்றாக்குறையினை நாணய மயப்படுத்துவதற்கான மட்டுப்படுத்தப்பட்ட அணுகல் காணப்படுவதனால் அத்தகைய தேவைப்பாடுகள் எழாமல் இருப்பதனை உறுதிப்படுத்துவதற்கு அரசாங்கம் கிடைக்கத்தக்கதாகவுள்ள இடையேற்பாட்டுக் காலத்தில் தேவையான சீராக்கங்களை மேற்கொள்ள வேண்டுமென எதிர்பார்க்கிறது. அதேநேரம் இறை வருமானத்திலிருந்து தேவையற்ற விதத்தில் நிதி கசிந்து செல்வதனை, அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளுக்காக எதிர்பார்க்கப்படுகின்ற பரந்த அடிப்படையிலான நிகழ்ச்சித்திட்டத்தினூடாக கட்டுப்படுத்துதல் வேண்டும்.

1

- **அதிகரித்தளவிலான ஆளுகை மற்றும் பொறுப்புக்கூறும் கட்டமைப்பிற்கான சட்ட ரீதியான மாற்றங்கள்:** உத்தேச மத்திய வங்கிச் சட்டம், வங்கித்தொழில் சட்டம் மற்றும் ஏற்கனவேயுள்ள சட்டங்களுக்கான திருத்தம் போன்ற புதிய சட்டவாக்கங்கள் நாட்டின் பொருளாதார முகாமைத்துவம் தொடர்பான நிறுவன ரீதியான மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பினை வலுப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஊழலுக்கெதிராக ஐக்கிய நாடுகளின் தீர்மானத்திற்கு இணங்கிச் செல்கின்ற விதத்தில், தென்னாசியாவில் முதற்றடவையாக இவ்வாறானதொரு ஊழலுக்கெதிரான சட்டம் அறிமுகப்படுத்தப்படவுள்ளமையானது சுயாதீனமான ஊழலுக்கெதிரான ஆணைக்குழுவினை நிறுவுவதற்கு வசதியளிக்கும். வரவு செலவுத்திட்ட உருவாக்கச் செய்முறைகளை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கும் அரச நிதியியல் பொறுப்புக்கூறும் பொறிமுறையினை அதிகரிப்பதற்கும் புதிய அரச நிதி முகாமைத்துவச் சட்டமொன்று இயற்றப்படும்.
- **சமூகப் பாதுகாப்பு வலையமைப்புக்களைச் மறுசீரமைத்தல்:** அண்மைக் காலத்தில் செலவிடல் மற்றும் நன்மைபெறுநர்கள் என்பவற்றுடன் தொடர்புடைய சமூக பாதுகாப்பு வலையமைப்புக்களில் அதிகரிப்புக் காணப்பட்ட போதும் மக்களை உள்ளடக்கிக் கொள்வதிலும் தெரிவுசெய்வதிலும் முன்னேற்றங்களை அடைய இன்னமும் கணிசமான வாய்ப்புக் காணப்படுவது அடையாளம் காணப்பட்டிருக்கிறது. தற்போதுள்ள சமூகப் பாதுகாப்பு வலையமைப்பின் கட்டமைப்பில் நிலவுகின்ற பிரச்சனைகளைப் பரிசீலனையில் கொண்டு, பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாடானது. இந்நிகழ்ச்சித்திட்டமானது சமூகப் பாதுகாப்பு வலையமைப்பு நிகழ்ச்சித்திட்டங்களின் வினைத்திறன், உள்ளடக்கும் செயற்பரப்பு மற்றும் இலக்கிடல் என்பனவற்றினை மேம்படுத்துவதற்கு குறிப்பிட்ட நிறுவன ரீதியான சீர்திருத்தங்களை குறித்துரைத்திருக்கிறது.
- **விலை உறுதிப்பாட்டினை மீண்டும் அடைதல்:** மத்திய வங்கி, பொருத்தமான நாணயக் கொள்கை நடவடிக்கையினூடாக, நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பின் கீழ் பணவீக்கத்தினை மீண்டும் இலக்கிடப்பட்டதொரு மட்டத்தின் கீழ் கொண்டு வருவதற்கு உறுதியான பணவீக்க வீழ்ச்சிப் பாதையில் செலுத்துவதன் மூலம் விலை உறுதிப்பாட்டினை மீண்டும் அடைய எதிர்பார்க்கிறது. இச்செயற்பாட்டின் ஒரு பகுதியாக, அரசாங்கத்திற்கான நாணய நிதியிடலைக் கட்டம் கட்டமாக நிறுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. விலை உறுதிப்பாட்டுக் கடப்பாடானது செலாவணி வீதங்களில் கூடியளவு நெகிழ்ச்சித்தன்மையினைப் பேணுவதற்கும் எதிர்கால அதிர்வுகளை எதிர்த்து நிற்கும் விதத்தில் ஒதுக்குகளைக் கட்டியெழுப்பவதற்கும் உதவும்.
- **நிதியியல் நிறுவனங்களையும் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினையும் வலுப்படுத்தல்:** இலங்கையின் நிதியியல் முறைமை அரச துறைக்குப் பெருமளவிற்கு வெளிப்படுத்தலுக்குட்பட்டுள்ளது என்றும் அத்துடன் மிதமான முறையில் மூலதனமயப்படுத்தப்பட்டிருக்கின்றது என்றும், படுகடன் மறுசீரமைப்பினைத் தொடர்ந்து பொருண்மிய மூலதனம் மற்றும் வெளிநாட்டுச் செலாவணிப் பற்றாக்குறையினை அது எதிர்நோக்கக் கூடும் என்ற கருத்தினை ப.நா.நிதியம் கொண்டிருக்கிறது. இதன்விளைவாக, நாட்டிற்கான படுகடன் மறுசீரமைப்பின் விளைவாக கணிசமானளவு மூலதன மற்றும் வெளிநாட்டுச் செலாவணிப் பற்றாக்குறைகளை வங்கிகள் எதிர்நோக்கக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. சொத்துக்களின் தர மீளாய்வினைத் தொடர்ந்து முறையியல் முக்கியத்துவம் வாய்ந்த வங்கிகளின் மூலதனத்தினை மீளக்கட்டியெழுப்புவதற்கும் அரசுக்குச் சொந்தமான வங்கிகளின் தாக்குப்பிடிக்கும் தன்மையினை வலுப்படுத்துவதற்குமான திட்டங்கள் ஆராயப்பட்டு வருகின்றன. அதேவேளை, இலங்கையின் நிதியியல் முறைமையினை கூடியளவிற்கு வீரியமுடையதாக்குவதற்கு நிதியியல் துறை மேற்பார்வையும் நெருக்கடி முகாமைத்துவக் கட்டமைப்பும் வலுப்படுத்தப்படும்.

இக்குறித்துரைக்கப்பட்ட நன்மைகளுக்குப் புறம்பாக, ப.நா. நிதியத்தினால் ஆதரவளிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டமானது மேம்பட்ட முதலீட்டாளர் நம்பிக்கை, நாட்டிற்கான தரமிடல் உயர்வுகளின் சாத்தியம், சந்தைகளை அணுகுவதற்கான வழிகள் மீளத்திறக்கப்படுகின்றமை போன்ற இன்னும் பல விடயங்களூடாகப் பல சாதகமான கசிவுத் தாக்கங்களைப் பொருளாதாரத்திற்கு கொண்டுவரும். நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளின் சவால்மிக்க தன்மைகளைப் பரிசீலனையில் கொள்கையில், அதிகாரிகள் அதிகளவு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியிருக்கும் என்பதுடன் நிகழ்ச்சித்திட்ட காலப்பகுதி முழுவதிலும் நிகழ்ச்சித்திட்டத்தினை வெற்றிகரமாக நிறைவுசெய்யப்படுவதனை உறுதிப்படுத்தும் விதத்தில் கடப்பாடுகளைக் காட்டுதல் வேண்டும். அத்துடன் நிகழ்ச்சித்திட்ட காலப்பகுதியில் அரசியல் மற்றும் சமூக உறுதிப்பாட்டினைப் பேணும் நோக்குடன், குறிப்பாக சீர்திருத்த வழிமுறைகள் தொடர்பில் ஆரம்பத்தில் காணப்படக்கூடிய விரும்பத்தகாத தன்மைகளையும் அதன் விளைவாக ஏற்படும் மக்களின் இணக்கமற்ற தன்மைகளையும் பரிசீலனையில் கொண்டு ஆரம்பத்தில் தியாகங்கள் மேற்கொள்வது எவ்வாறு நீண்ட காலப் பொருளாதார நன்மைகளுக்கு வழிவகுக்கும் என்பது தொடர்பில் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.

**ப.நா.நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாட்டிற்கு அப்பாலான சீர்திருத்தங்களின் நிகழ்ச்சிநிரல்**

நிகழ்ச்சித்திட்டம் பெருமளவிற்கு வெற்றி பெறுவது, நீண்ட காலம் புறக்கணிக்கப்பட்டிருந்த அமைப்பியல் சீர்திருத்தங்கள் எந்தளவிற்கு நடைமுறைப்படுத்தபடுகின்றதோ அந்தளவில் தங்கியிருக்கும். அமைப்பியல் சீர்திருத்தங்கள் பொருளாதாரத்தின் போட்டித்தன்மையினை உத்வேகப்படுத்தி, உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்கான அடித்தளத்தினை வழங்குவதற்கும் மூலவளங்களைப் பயன்படுத்துவதில் வினைத்திறனை அதிகரிப்பதற்கும் அதன் மூலம் வளர்ச்சியின் உள்ளார்ந்த வளத்தினை உயர்த்துவதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றன. இலங்கையினால் தற்போது எதிர்நோக்கப்படும் பொருளாதார நெருக்கடிகளின் கடுமையான தன்மையானது நீண்ட காலமாகக் காணப்படும் அமைப்பியல் பிரச்சனைகளை ப.நா.நிதிய

நிகழ்ச்சித்திட்டங்களிலுள்ள சீர்திருத்த நிகழ்ச்சிநிரலுக்கப்பால் தீர்ப்பதற்கு தனிப்பட்ட தன்மையுடன்கூடிய அரசியல் நோக்கமற்ற ஆர்வலர்களுடனான ஆலோசனையுடன் உருவாக்கப்பட்ட தேசிய கொள்கைகளினூடாக தீர்ப்பது அவசியமானது என்பதனை எடுத்துக்காட்டுகிறது. இது தொடர்பில், சீர்திருத்த நிகழ்ச்சித்திட்டமானது தொழில்நுட்பவியல் புத்தாக்கங்களினூடாக உற்பத்தித்திறனையும் பொருளாதாரத்தின் உற்பத்தித்திறனையும் மேம்படுத்தல், வணிகப்பொருட்களின் ஏற்றுமதிகளில் பன்முகத்தன்மையினை அதிகரிப்பதன் மூலம் உலகம் முழுவதும் வர்த்தகம் மற்றும் முதலீடுகளுடனான பொருளாதார இணைப்புக்களை அதிகரித்தல். சுற்றுலா, தகவல் தொழில்நுட்பம்/ வெளியிலிருந்து பணிகளைப் பெற்றுக்கொள்ளும் துறைகள் உள்ளிட்ட சாத்தியமான ஏற்றுமதித் துறைகளுக்கான பணிகள் மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீடுகளைக் கவர்தல் என்பனவற்றினை மேம்படுத்துவதன் மீது கவனத்தினைச் செலுத்துதல் வேண்டும். அரச நிறுவனங்களின் பொதுமக்களுக்கான பொறுப்புக்கூறும் தன்மையினை உறுதிப்படுத்துவது, நாட்டின் நீண்ட காலம் நிலைத்திருக்கும் பொருளாதார நலன்புரிகளை உறுதிப்படுத்துவதற்கு தொடர்பான அதிகாரிகளினால் கொள்கை வடிவமைப்பிற்கும் நடைமுறைப்படுத்தலுக்கும் கிடைக்கத்தக்க சட்ட அதிகாரங்களைப் பயன்படுத்துவதும் சட்டக் கட்டமைப்புக்களை வலுப்படுத்துவதும் அவசியமாகும். இவை இலங்கை சாத்தியமானளவிற்கு விரைவான காலக்கட்டமைப்பிற்குள் நீடித்துநிலைத்திருக்கக்கூடிய பொருளாதார உறுதிப்பாட்டினை அடைவதனை உறுதிப்படுத்துவதற்கு ப.நா.நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாட்டிலுள்ள சீர்திருத்தங்களின் நிகழ்ச்சிநிரலைப் பூரணப்படுத்துவதாக அமையும்.

**முடிவுரை**


இலங்கை 1965 இலிருந்து பதினாறு கீழ் நிகழ்ச்சித்திட்டங்கள் இருந்து வந்தபோதும் ப.நா.நிதிய நிகழ்ச்சித்திட்டங்களில் ஒரு சில மட்டுமே அதிகாரிகளினால் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கின்றன. இதற்கு குறிப்பாக, நீண்டகால நலன்புரியினை விரிவாக்குவதனை இலக்காகக் கொண்ட வலி மிகுந்த பேரண்டப் பொருளாதார திருத்தங்கள் மற்றும் வரவேற்கப்படாத கொள்கைகளைத் தேவைப்படுத்துகின்ற அமைப்பியல் சீர்திருத்தங்களுடன் தொடர்புபட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்வதில் போதியளவு கட்டுப்பாடுகள் காணப்படாமையே காரணமாகும். ஆகவே, இலங்கை அதன் கொள்கை உருவாக்கத்திலுள்ள இச்சீர்திருத்தங்களை உள்ளக மயப்படுத்துவதும் தற்போதைய ப.நா.நிதிய நிகழ்ச்சித்திட்டத்திலுள்ள சீர்திருத்தங்களின் முக்கிய பகுதிகளை நடைமுறைக்கிடுவதும் அதேபோன்று நிகழ்ச்சித்திட்டங்களுக்கு அப்பாலான சீர்திருத்தங்கள்/ கூடுமான வரை நேரகாலத்துடன் பொருளாதாரத்தினைப் பெருமளவிற்கு உறுதித்தன்மையையும் உயர்ந்த வளர்ச்சியையும் கொண்ட பாதைக்கு திருப்பும் விதத்தில் மாற்றியமைப்பதும் தவிர்க்க முடியாததாக இருக்கும் அதேவேளையில் இது பிரச்சனைகளிலிருந்து மீள்வதற்கும் எதிர்காலத்தில் பல சுற்றுக்களைக் கொண்ட படுகடன் மறுசீரமைப்பிற்கும் ப.நா. நிதியத்தினை மீண்டும் மீண்டும் நாடுவதனையும் தவிர்க்கும்.

உசாத்துணைகள்

International Monetary Fund. (2023). Sri Lanka: Request for an Extended Arrangement Under the EFF - Press Release; Staff Report; and Statement by the Executive Director for Sri Lanka. 116. International Monetary Fund, Washington D.C.

**சீரமைப்பதற்கான வழிமுறைகளையும் மேற்கொண்டுள்ளது.** 2022இன் முதலாம் அரையாண்டுக் காலப்பகுதியில் தாழ்ந்த அரசிறை சேகரிப்பின் காரணமாகவும் உயர்வான உள்நாட்டு வட்டி வீதங்கள் மற்றும் உயர்வான பணவீக்கம் என்பவற்றின் விளைவால் ஏற்பட்ட அளவுக்குமிஞ்சிய செலவினங்களின்

வரைபடம் 1.8
இறைத்துறை செயலாற்றத்தின் சுருக்கம்
(மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக)





*மூலம்:* நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு

காரணமாகவும் 2022ஆம் ஆண்டின் வரவு செலவுத்திட்டத்தில் முன்வைக்கப்பட்ட வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகள் அடையப்படமுடியாது என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. அரசாங்கமானது அரசிறை மேம்பாட்டு வழிமுறைகளையும் இறைத் திரட்சி முயற்சிகளையும் வலுப்படுத்தும் நோக்கில் 2022 ஏப்பிறலிலிருந்து பல இறைத் திரட்சி வழிமுறைகளை நடைமுறைப்படுத்தியதுடன் 2022 செத்தெம்பரில் 2022இன் வரவுசெலவு திட்டத்திட்டத்திற்கான பாராளுமன்ற ஒப்புதலைப் பெற்றது. 2022இல் நடைமுறைப்படுத்தப்பட்ட அரசிறை மேம்பாட்டு வழிமுறைகளாலும் பொருளாதாரத்தில் அதிகரிக்கப்பட்ட விலை மட்டங்களாலும் ஆதரவளிக்கப்பட்டு, 2022இல் அரசாங்க வருமானம் ரூ.1,979.2 பில்லியனாக 35.8 சதவீதம் கொண்ட ஆண்டிற்காண்டு வளர்ச்சியொன்றைப் பதிவுசெய்தது. எவ்வாறாயினும், பாரிய சுருக்கியுடன் பெயரளவு மொ.உ.உற்பத்தியின் கணிசமான அதிகரிப்பின் காரணமாக, மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமான அரசிறையானது 2021இன் 8.3 சதவீதத்திலிருந்து 2022இல் 8.2 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. வருமான வரிகள், பெறுமதி சேர் வரி, துறைமுக மற்றும் விமானநிலைய அபிவிருத்தி தீர்வை மற்றும் குடிவகை மற்றும் சிகரெட்டுக்கள் மீதான காலால் தீர்வை என்பவற்றிலிருந்து அதிகரித்த அரசிறை திரட்டலானது

அரச வரி வருமானத்தில் ஏற்பட்ட பெயரளவு வளர்ச்சிக்கு பங்களிப்புச்செய்தது. எவ்வாறாயினும், இறக்குமதி தீர்வை, சிறப்புப் பண்ட தீர்வை, மற்றும் பண்ட ஏற்றுமதி உதவுதொகை திட்டம் என்பவற்றிலிருந்தான அரசிறைச் சேகரிப்பானது 2022ஆம் ஆண்டு காலப்பகுதியில் வீழ்ச்சியடைந்து, இறக்குமதிச் செலவினம் மிதமடைவதின் தாக்கத்தை தோற்றுவித்தது. அதேவேளை, வரியல்லா வருமானத்திலிருந்தான சேகரிப்பானது உயர்வான கட்டணங்கள் மற்றும் அறவீடுகள் அத்துடன் 2021ஆம் ஆண்டிற்கான நிதியியல் கூற்றின் அடிப்படையில் மத்திய வங்கியினால் பகிர்ந்தளிக்கப்பட்ட இலாபம் என்பவை தொடர்பில் அதிகரித்தது. 2022இன் இரண்டாம் அரையாண்டிலும் 2023இன் முன்னைய காலப்பகுதியிலும் நடைமுறைப்படுத்தப்பட்ட பல்வேறு அரசிறை மேம்படுத்தல் வழிமுறைகள் 2023ஆம் ஆண்டு காலப்பகுதியில் அதன் முழுத்தாக்கத்தினை வழங்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. மறுபுறுத்தில், அரசாங்க செலவினத்தை சிக்கனப்படுத்தும் வழிமுறைகளுக்கு மத்தியில், பெயரளவு நியதிகளில் அரசாங்க செலவினம் மற்றும் தேறிய கடன்வழங்கல் 2022இல் ஆண்டிற்காண்டு அடிப்படையில் 27.0 சதவீதத்தால் அதிகரித்தது. எவ்வாறாயினும், குறிப்பிடத்தக்க பெயரளவு மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியுடன், மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக அரசாங்கச் செலவினமானது முன்னைய ஆண்டின் 20.0 சதவீதத்திலிருந்து 2022இல் 18.5 சதவீதத்திற்கு குறைவடைந்தது. மீண்டெழும் செலவினத்தின் அதிகரிப்பிற்கு உள்நாட்டு வட்டிக் கொடுப்பனவுகள், சம்பளங்கள் மற்றும் கூலிகள் மற்றும் உதவுதொகைகள் மற்றும் மாற்றல்கள் தொடர்பான உயர்வான செலவினம் பங்களிப்புச் செய்தது. அதேபோன்று, மூலதனச் செலவினம் மற்றும் தேறிய கடன்வழங்கலும் குறிப்பாக, வளமாக்கியையும் திரவப்பெற்றோலிய எரிவாயுவையும் இறக்குமதிசெய்வதற்கு உலக வங்கியிலிருந்து பெறப்பட்ட நிதியைப் பயன்படுத்தி அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளுக்கு கடனாக வழங்குவதற்கும் இந்திய கொடுகடன் வசதியூடாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு எரிபொருளை இறக்குமதி செய்வதற்கு கடனாக வழங்கல் தொடர்பில் ஆண்டுக்காண்டு 23.1 சதவீதம்கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்தது. இதற்கமைய, பெயரளவு நியதிகளில் ஒட்டுமொத்த இறைப் பற்றாக்குறை முன்னைய ஆண்டில் ரூ.2,057.9 பில்லியனிலிருந்து 2022இல் ரூ.2,460.0 பில்லியனை எடுத்துக்காட்டியது. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக, இறைப் பற்றாக்குறையானது பெயரளவு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க வளர்ச்சியின் காரணமாக 2021இன் 11.7 சதவீதத்திலிருந்து 2022இல் 10.2 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது. அரசாங்கத்தின் குறைச் சேமிப்பை பிரதிபலிக்கின்ற நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையானது, 2021இன் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் (ரூ. 1,290.4 பில்லியன்) 7.3 சதவீதத்திலிருந்து 2022இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் (ரூ. 1,540.4 பில்லியன்) 6.4 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. அதேவேளை, முதன்மைப் பற்றாக்குறையானது இறைத் திரட்சி வழிமுறைகளின் தாக்கத்தை பிரதிபலித்து, 2021இன் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் (ரூ. 1,009.5 பில்லியன்) 5.7 சதவீதத்திலிருந்து 2022இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் (ரூ. 894.8 பில்லியன்) 3.7 சதவீதமான மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் பெயரளவு நியதிகள் இரண்டிலும் சுருக்கமடைந்தது.

**2022ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் அறிவிக்கப்பட்ட படுகடன் ஸ்தம்பதநிலை மற்றும் பாதகமான நாட்டிற்கான கொடுகடன் தரமிடல்களின் தாக்கத்தைத் தொடர்ந்து மட்டுப்படுத்தப்பட்ட வெளிநாட்டு நிதியிடலானது 2022இல் வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறைக்கு நிதியிடுவதற்கு பிரதானமாக உள்நாட்டு நிதியிடல் மூலங்களில் குறிப்பாக, வங்கித்தொழில் துறையில் அரசாங்கம் தங்கியிருப்பதற்கு கட்டாயப்படுத்தியது.** இதற்கமைய, 2022ஆம் ஆண்டுக் காலப்பகுதியில், உள்நாட்டு மூலங்களினூடாக தேறிய நிதியிடல் 2021இன் மொத்த நிதியிடலின் (மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 11.8 சதவீதம்) 100.7 சதவீதத்துடன் ஒப்பிடுகையில், மொத்த நிதியிடலின் (மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 8.4 சதவீதம்) 82.7 சதவீத தொகையாகவிருந்தது. இலங்கை மத்திய வங்கிக்கு திறைசேரி உண்டியல்களின் நேரடி வழங்கல் மற்றும் அரச பிணையங்கள் மீது குறைவடைந்த சந்தை நாட்டத்திற்கு மத்தியில் திறைசேரி உண்டியல் ஏலங்களில் மத்திய வங்கியின் நேரடி கோரிக்கைகளின் காரணமாக 2022இல் ரூ.1,338.4 பில்லியன் தேறிய நிதியிடலை பதிவுசெய்து அரசாங்கத்தின் பெருமளவான நிதியிடல் மூலமாக தொடர்ந்தும் செயற்பட்டது. பொருளாதார நெருக்கடியால் ஏற்படும் பொதுமக்களின் இன்னல்களை குறைப்பதற்காக பெறப்பட்ட பல்புடை மற்றும் இருபுடை நிதியிடலின் காரணமாக, 2022ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் தேறிய வெளிநாட்டு நிதியிடல் ரூ.424.8 பில்லியன் (மொ.உ.உற்பத்தியின் 1.8 சதவீதம்)

வரைபடம் 1.9
வெளிநின்ற மத்திய அரச படுகடன்
(மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக)




*மூலங்கள்:* நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு
இலங்கை மத்திய வங்கி

தொகையாகவிருந்தது. 2021இல், வெளிநாட்டு நிதியிடல் ரூ.13.9 பில்லியன் (மொ.உ.உற்பத்தியின் 0.1 சதவீதம்) கொண்ட தேறிய மீள்கொடுப்பனவொன்றை பதிவுசெய்தது. அதேவேளை, பாராளுமன்ற ஒப்புதலுடன் 2022 யூனில், திறைசேரி உண்டியல்கள் இருப்பின் எல்லையானது ரூ. 3000 பில்லியனிலிருந்து ரூ. 4,000 பில்லியனுக்கு அதிகரிக்கப்பட்டதுடன் உயர்ந்த சந்தை வட்டி வீதங்களின் காரணமாக முகப்புப் பெறுமதி நியதிகளில் அதிகரித்த கடன்பாட்டுத் தேவைப்பாட்டினால் இவ்வெல்லை 2022 நவெம்பரில் ரூ. 5,000 பில்லியன் மேலும் அதிகரிக்கப்பட்டது.


**2022இன் இறுதியளவில் வெளிநின்ற மத்திய அரசு படுகடனானது 2021இன் இறுதியளவில் காணப்பட்ட ரூ.17,614.2 பில்லியனிலிருந்து (மொ.உ.உற்பத்தியின் 100.1 சதவீதம்) ரூ. 27,492.0 பில்லியனுக்கு (மொ.உ.உற்பத்தியின் 113.8 சதவீதம்) அதிகரித்தது.** செலாவணி வீதத்தின் கடுமையான பெறுமானத்தேய்வினதும் அரசிற்குச் சொந்தமான தொழில் முயற்சிகளின் கீழ் முன்னதாக பதிவுசெய்யப்பட்ட தெரிவுசெய்யப்பட்ட படுகடன் பொறுப்புக்கள் மத்திய அரசின் கீழ் மீள்வகைப்படுத்தப்பட்டதினதும் காரணமாக இவ்வதிகரிப்பானது பாரியளவான வரவுசெலவுத்திட்ட பற்றாக்குறையின் தாக்கத்தை பிரதிபலித்தது. 2022இன் இறுதியளவில் பெயரளவு நியதிகளில், உள்நாட்டுப் படுகடன் மற்றும் வெளிநாட்டுப் படுகடன் என்பன முறையே 35.5 சதவீதத்தாலும் 91.2 சதவீதத்தாலும் அதிகரித்தன. அதேவேளை, 2021இன் இறுதியளவில் காணப்பட்ட 62.8 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2022இன் இறுதியளவில் 57.9 சதவீத பங்குடன் உள்நாட்டு படுகடன் இருப்பின் உள்ளடக்கத்திற்கு திறைசேரி முறிகளின் பங்கு தொடர்ந்தும் ஆதிக்கம் செலுத்திய அதேவேளை, நீண்ட கால அரசாங்கப் பிணையங்களுக்கான குறைந்தளவான சந்தை நாட்டமும் உள்நாட்டு படுகடன் சீரமைப்பின் சாத்தியத்தன்மை மீது காணப்படும் ஊகமும் 2022இன் இறுதியளவில் திறைசேரி உண்டியல்களில் ரூ. 4,113.9 பில்லியனுக்கான கணிசமான அதிகரிப்பொன்றைத் தோற்றுவித்தது.

**முக்கியமாக குறைவான மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் மற்றும் போதியளவற்ற வெளிநாட்டு நிதியிடல் பாய்ச்சல்கள் என்பவற்றிற்கு மத்தியில், அண்மைய மற்றும் நடுத்தரக் காலத்தில் அதிகரித்த மொத்த நிதியிடல் தேவைகள் மற்றும் பாரியளவான படுகடன் பணிக்கொடுப்பனவுக் கடப்பாடுகள் என்பன நிலுவையிலுள்ள படுகடன் சீரமைப்பு முயற்சிகளுக்கு மத்தியில் இருபுடை மற்றும் வர்த்தக படுகடனின் பணிக்கொடுப்பனவை இடைநிறுத்துவதற்கு 2022 ஏப்பிறல் 12 அன்று இடைக்கால கொள்கையொன்றாக படுகடன் ஸ்தம்பிதநிலையை அறிவிப்பதற்கு அரசாங்கத்தைக் கட்டாயப்படுத்தியது.** இதன் விளைவாக, முன்னைய ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ரூ.786.3 பில்லியன் (மொ.உ.உற்பத்தியின் 4.5 சதவீதம்) கொண்ட வெளிநாட்டுப் படுகடன் பணிக்கொடுப்பனவுகளுடன் ஒப்பிடுகையில், 2022இல் வெளிநாட்டுப் படுகடன் பணிக் கொடுப்பனவுகள் ரூ.487.4 பில்லியன் (மொ.உ.உற்பத்தியின் 2.0 சதவீதம்) ஆக வீழ்ச்சியடைந்தது. ஆய்விற்குரிய காலப்பகுதியில், உள்நாட்டு வட்டி வீதங்களில் ஏற்பட்ட கடுமையான அதிகரிப்பு மற்றும் உள்நாட்டுப் படுகடனில் ஏற்பட்ட அதிகரிப்பு என்பனவற்றின் முக்கிய காரணமாக 2022இல் உள்நாட்டுப் படுகடன் பணிக் கொடுப்பனவுகளானது 2021.இன் ரூ.1,594.3 பில்லியனுடன் ஒப்பிடுகையில் (மொ.உ.உற்பத்தி 9.1 சதவீதம்) ரூ.2,510.3 பில்லியனுக்கு (மொ.உ.உற்பத்தியின் 10.4 சதவீதம்) அதிகரித்தன. இதற்கமைய, 2022இல் மொத்த படுகடன் பணிக் கொடுப்பனவுகளானது 2021இன் ரூ.2,380.6 பில்லியனிலிருந்து (மொ.உ.உற்பத்தியின் 13.5 சதவீதம்) ரூ.2,997.6 பில்லியனுக்கு (மொ.உ.உற்பத்தியின் 12.4 சதவீதம்) அதிகரித்தன. 2022இல், வட்டிக் கொடுப்பனவுகளும் மூலதன மீள்செலுத்துகைகளும் முறையே மொ.உ.உற்பத்தியின் 6.5 சதவீதம் மற்றும் 5.9 சதவீதம் கொண்ட தொகையாகவிருந்தன. அரசாங்க பிணையங்கள் சந்தையின் எண்ணப்பாங்குகளை தளர்வுறச் செய்கின்ற உள்நாட்டுப் படுகடன் சீரமைப்புடன் ஒருங்கிணைந்த கரிசனைகளை தணிக்கும் பொருட்டு 2023இன் மாச்சின் பின்னைய காலப்பகுதியில் உள்நாட்டுப் படுகடன் மேம்பாட்டு அளவீடுகள் பற்றிய மேலதிக தகவல்களை அரசாங்கம் பகிர்ந்தது. அரசாங்கத்தின் ஒட்டுமொத்த படுகடன் சீரமைப்பு உத்தியை அண்மைய காலத்தில் கடன்கொடுநருக்கு அறிவிக்கப்படவேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இதன்மூலம், பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதியில் எதிர்பாாக்கப்பட்ட படுகடன் நிலைபெறத்தக்க இலக்குகளுடன் இணைந்து படுகடன் சீரமைப்பு செயல்முறை துரிதப்பட்டது.

## நாணயத் துறை அபிவிருத்திகள்

**2022இன் ஏப்பிறலில் 700 அடிப்படைப் புள்ளிகளினால் கொள்கை வட்டி வீதங்களில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்கதொரு அதிகரிப்புடன் இலங்கை மத்திய வங்கியானது 2022ஆம் ஆண்டுமுழுவதும் இறுக்கமான நாணயக்கொள்கை நிலைப்பாட்டினை தொடர்ந்தும் முன்னெடுத்திருந்தது.** அத்தகைய பாரியளவான நாணயக்கொள்கை இறுக்கமடைதலானது அதிகரித்து வருகின்ற பணவீக்க அழுத்தங்களை கட்டுப்படுத்தல், வெளிநாட்டுத்துறையிலுள்ள பாதிக்கப்படக்கூடிய தன்மைகளை தீர்த்தல் மற்றும் பணவீக்க எதிர்பார்க்கைகளை நிலைபெற்றதாக்குதல் போன்றவற்றைத் தேவைப்படுத்தி அதன்மூலம் சாத்தியமானதொரு மிகைப் பணவீக்கத்தையும் பொருளாதார நடவடிக்கையின் நீண்டகால இழப்பீட்டினையும் தடுத்தது. அதற்கமைய, 2021இன் ஓகத்தில் நாணய இறுக்கமடைதல் சுழற்சி ஆரம்பித்த காலப்பகுதியிலிருந்து, மத்திய வங்கியின் முக்கிய கொள்கை வட்டி வீதங்கள் அதாவது துணைநில் வைப்பு வசதி வீதம் மற்றும் துணைநில் கடன் வழங்கல் வீதம் என்பன 2022இன் இறுதிவரையான காலப்பகுதியில் 10 சதவீத புள்ளிகளால்


வரைபடம் 1.10
துணைநில் கடன் வழங்கல் வசதி வீதம் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட சந்தை வட்டி வீதங்களின் அசைவுகள்




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

அதிகரிக்கப்பட்டன. 2022 ஏப்பிறலில் 700 அடிப்படைப் புள்ளிகள் மூலம் மேற்கொள்ளப்பட்ட கொள்கை வட்டி வீதங்களின் முன்னெப்பொழுதுமில்லாத மேல்நோக்கிய சீராக்கமானது, பணவீக்க அழுத்தங்களினால் உந்தப்பட்ட கேள்வியின் மேலதிக கட்டியெழுப்புதலை கட்டுப்படுத்துவதற்கு உதவிபுரிந்து அதன்மூலம் பாதகமான பணவீக்க எதிர்பார்ப்புக்களின் அதிகரிப்புக்களை முன்கூட்டியே தடுத்து, வெளிநாட்டுத் துறை மீதான அழுத்தங்களை தளர்த்தி அத்துடன் சந்தை வட்டி வீதக் கட்டமைப்பில் அவதானிக்கப்பட்ட முரண்பாடுகளில் திருத்தங்களை மேற்கொண்டது. இதற்கு மேலதிகமாக, தெரிவு செய்யப்பட்ட கடன்வழங்கல் உற்பத்திகள் மீதும் வெளிநாட்டு நாணய வைப்புக்கள் மீதும் விதிக்கப்பட்ட உயர்ந்தபட்ச வட்டி வீதங்களை அகற்றுதல் உள்ளடங்கலான ஒழுங்குமுறைப்படுத்தல் வழிமுறைகளும் மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்டு இறுக்கமான நாணய நிலைமைகளுக்கான கொள்கை வட்டி வீத மாற்றங்களை காத்திரமான முறையில் கடந்து செல்வதை இயலுமைப்படுத்தியது. அதேவேளை, அத்தியாவசியப் பொருட்களின் இறக்குமதிகளுக்கு அரசாங்கத்தின் தேறிய வெளிநாட்டுக் கடன் மீள்கொடுப்பனவுகள், வங்கித்தொழில் முறைமையிலிருந்து பொதுமக்கள் மூலமான தேறிய நாணய எடுப்பனவுகள் வசதியளிப்பதற்காக மத்திய வங்கியால் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டுச் செலாவணி விற்பனைகள் மற்றும் உள்நாட்டு வங்கிகளுடனான வெளிநாட்டு நாணய வாங்கல்-விற்றல் பரஸ்பரப் பரிமாற்றங்களின் முதிர்ச்சிகள் என்பவற்றின் காரணமாக உள்நாட்டு பணச் சந்தையில் திரவத்தன்மை மட்டங்கள் குறிப்பாக 2022இன் முதலரைக் காலப்பகுதியில் தொடர்ந்தும் உயர்வான பற்றாக்குறை மட்டங்களிலேயே காணப்பட்டன. எவ்வாறாயினும், தேவையடிப்படையில் நீண்டகால நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்களை நடாத்துவதற்கு மத்தியில், மத்திய வங்கியால் மேற்கொள்ளப்படும் அரச பிணையங்களின் முதன்மை கொள்வனவுகளின் தாக்கத்தையும் உயர்ந்த வைப்பு வட்டி வீதங்களுடன் வங்கித்தொழில் முறைமைக்கான நாணய வைப்புக்களின் அதிகரிப்பை பிரதிபலித்து 2022இன் பின்னைய காலப்பகுதியில் உள்நாட்டு பணச் சந்தை திரவத்தன்மையில் படிப்படியான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. கொள்கை வட்டி வீதங்களில் ஏற்பட்ட அதிகரிப்பை வேகமாகக் கடந்துசெல்லல், உள்நாட்டு பணச் சந்தையில் இறுக்கமான திரவத்தன்மை நிலைமைகள் மற்றும் உயர்த்தப்பட்ட இடர்நேர்வுக் கட்டுப்பணம் என்பவற்றின் இணைந்த தாக்கத்தின் காரணமாக 2022இல் சந்தை வைப்பு மற்றும் கடன்வழங்கல் வட்டி வீதங்கள் கணிசமானளவில் அதிகரித்தன. அரசாங்கத்தின் அதிகரித்த கடன்பாட்டுத் தேவைகளுக்கும் உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்புக் கரிசனைகளினைச் சுற்றியுள்ள சந்தை நிலைமைகளின் அதிகரித்த நிச்சயமற்ற தன்மைகளுக்கும் மத்தியில் முக்கிய கொள்கை வட்டி வீதங்களில் ஏற்பட்ட சடுதியான அதிகரிப்பைத் தொடர்ந்து 2022ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் அரசாங்கப் பிணையங்கள் மீதான விளைவுகளானது கொள்கை வட்டி வீதங்களுக்கும் ஏனைய சந்தை வட்டி வீதங்களுக்குமான சீராக்கத்திற்கு விகிதாசாரமற்ற விதத்தில் கணிசமானளவில் அதிகரித்தது. மேலும், தேவையடிப்படையில் திறந்த சந்தை செயற்பாடுகளினூடாக வங்கிகளுக்குத் திரவத்தன்மையை வழங்குகின்ற அதேவேளை, மத்திய வங்கியின் துணைநில் வசதிகளில் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் அதிகமாகத் தங்கியிருப்பதைக் குறைப்பதற்கான வழிமுறைகள் 2023இன் சனவரியில் அறிமுகப்படுத்தப்பட்டதுடன் அதன்மூலம் உள்நாட்டுப் பணச் சந்தையில் திரவத்தன்மையின் பகிர்ந்தளிப்பில் சமச்சீரற்ற தன்மைகள் குறைக்கப்பட்டன. இதன்விளைவாக, உள்நாட்டுப் பணச் சந்தையில் திரவத்தன்மை மற்றும் வங்கிகளுக்கிடையிலான அழைப்பு மற்றும் மீள்கொள்வனவுச் சந்தைகள் என்பவற்றின் செயற்பாடு ஓரிரவில் மேம்படுத்தப்பட்டன. மேம்படுத்தப்பட்ட ரூபாய் திரவத்தன்மை நிலைமைகளுடனும் பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் வெற்றிகரமான இறுதிப்படுத்துகையின் எதிர்பார்ப்பில் முதலீட்டாளர் மனோபாவத்தின் மேம்பாட்டுடனும் இணைந்து 2022இன் இறுதியிலும் 2023இன் முற்பகுதியிலும் அரச பிணையங்கள் மீதான விளைவுகளில் குறிப்பிடத்தக்கதொரு மிதமடைவொன்று அவதானிக்கப்பட்டது. 2022இன் பின்னைய பிற்பகுதியிலிருந்து ஏனைய சந்தை வட்டி வீதங்கள் படிப்படியாக தளர்வடைய ஆரம்பித்து, சந்தை வட்டி வீதங்களின் ஒழுங்கற்ற மேல்நோக்கிய சீராக்கம் திருத்தப்பட்டது. எவ்வாறாயினும், பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட வசதியின் ஏற்பாட்டின் இறுதிப்படுத்தலுடன் முன்னோக்கிச் செல்லும் பொருட்டு, அனைத்து 'முன்னைய நடவடிக்கைகளையும்' நிறைவேற்றுவதற்கான அவசியத்தினதும் கொள்கை வட்டி வீதங்களை மேலும் இறுக்குவதற்கான தேவை பற்றி பன்னாட்டு நாணய நிதிய ஊழியர்களினால் எழுப்பப்பட்ட கரிசனைகளினதும் படி, 2022இன் செத்தெம்பரில் ஊழியர்மட்ட உடன்படிக்கையின் இறுதிப்படுத்தல் காலப்பகுதியில் பன்னாட்டு நாணய நிதியத்தினால் முன்மொழியப்பட்ட மிகப்பெரிய முன்நோக்கிய சீராக்கத்துடன் ஒப்பிடுகையில், 2023 இன்

வரைபடம் 1.11
தனியார் துறைக்கு வர்த்தக வங்கிகளினால் வழங்கப்பட்ட கொடுகடன் (அ)





(அ) 2022 மாச்சு-மே வரையான காலப்பகுதியில் ஐ.அ.டொலருக்கு எதிரான இலங்கை ரூபாவின் கணிசமான தேய்மானம் அக்காலப்பகுதியில் நாணய மற்றும் கொடுகடன் கூட்டுகளின் குறிப்பிடத்தக்க விரிவாக்கத்திற்கு பிரதானமாக பங்களிப்பு செய்தது.

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

மாச்சின் ஆரம்பத்தில், மத்திய வங்கியும் பன்னாட்டு நாணய நிதிய ஊழியர்களும் இணக்கப்பாடொன்றை அடைந்து, 100 அடிப்படைப்புள்ளிகளால் கொள்கை வட்டி வீதங்களை அதிகரித்தனர். இத்தகைய கொள்கை நடவடிக்கையுடன், மத்திய வங்கியானது கொள்கை வட்டி வீதங்களுக்கும் உயர் சந்தை வட்டி வீதங்களுக்குமிடையிலான பரவலினை குறைக்கவேண்டிய தேவையை சந்தைக்குத் தொடர்பூட்டிய அதேவேளை, உள்நாட்டு மீள்கட்டடவாக்க அளவீடுகளை பற்றி அதிகமான தகவல்கள் கிடைப்பெற்றமையால் இடர்நேர்வு கட்டுப்பணத்தின் சாத்தியமான கீழ்நோக்கிய சீராக்கத்தை எடுத்துக்காட்டியது. சந்தை வட்டி வீதங்களின் அசைவுகள் தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்து, கொள்கை வட்டி வீதங்களுக்கும் ஏனைய சந்தை வட்டி வீதங்களுக்குமிடையிலான பரவலினை எதிர்பார்க்கப்பட்டவாறு சுருக்கமடையச்செய்தன. அதேவேளை, 2023 மாச்சில் உள்நாட்டு படுகடன் மேம்படுத்துகை அளவீடுகள் மீதான அதிகளவான தகவல்களினை அரசாங்கம் பகிர்ந்தமையானது அதனைத்தொடர்ந்து திறைசேரி உண்டியல் விளைவுகளில் தொடர்ந்தும் குறிப்பிடத்தக்க சீராக்கத்திற்கு வழிவகுத்தது.

வரைபடம் 1.12
விரிந்த பண ($M_{2b}$) வளர்ச்சி மற்றும் பங்களிப்பு (அ)




(அ) 2022 மாச்சு-மே வரையான காலப்பகுதியில் ஐ.அ.டொலருக்கு எதிரான இலங்கை ரூபாவின் கணிசமான தேய்மானம் அக்காலப்பகுதியில் நாணய மற்றும் கொடுகடன் கூட்டுகளின் குறிப்பிடத்தக்க விரிவாக்கத்திற்கு பிரதானமாக பங்களிப்பு செய்தது.

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

**அரச துறைக்கான கொடுகடனின் கணிசமான விரிவாக்கத்திற்கும் வெளிநாட்டு நாணய வடிவில் குறித்துரைக்கப்பட்ட உள்நாட்டுக் கொடுகடனின் மீள்மதிப்பீட்டு விளைவுகளுக்கு மத்தியில் 2022இன் முற்பகுதியில் குறிப்பிடத்தக்களவில் துரிதப்படுத்தப்பட்ட விரிந்த பண நிரம்பலின் ($M_{2b}$) வளர்ச்சியானது அதன்பின் குறைவடைந்து தனியார் துறைக்கான கொடுகடனின் சுருக்கத்திற்கு பாரியளவில் வகைகூறியது.** 2022இன் இறுதியளவில், ஆண்டிற்காண்டு அடிப்படையிலான ($M_{2b}$) இன் வளர்ச்சி 15.4 சதவீதமாக பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் ரூபாவின் பெறுமானத்தேய்வின்[1] தாக்கத்திற்கு சீராக்கப்பட்டதும் அதையொத்த விதத்திலான வளர்ச்சி 2021இன் இறுதியின் 13.2 சதவீதத்திலிருந்து 2022இன் இறுதியில் ஏறத்தாழ 7 சதவீதத்திற்கு மெதுவடைவதற்கு மதிப்பிடப்பட்டது. ரூபாவின் கணிசமான பெறுமானத்தேய்விற்கு மத்தியில், பிரதானமாக வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட கடன்களினதும் முற்பணங்களினதும் மீள்மதிப்பீட்டு விளைவுகளின் தொடர்பில் 2022இன் முன்னைய காலப்பகுதியில், உரிமம்பெற்ற வங்கிகள் மூலமான தனியார் துறைக்கான வெளிநின்ற கொடுகடன் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்த போதும், உரிமம்பெற்ற வங்கிகளால் தனியார் துறைக்கு விரிவாக்கப்பட்ட கொடுகடனானது இறுக்கமான நாணயக் கொள்கைக்கும் பொருளாதார நடவடிக்கைக்கும் பதிலிறுப்பாக 2022இன் நடுத்தர காலப்பகுதியில் சுருக்கமடைந்தது. இதற்கமைய, 2022இன் இறுதியளவில், தனியார் துறைக்கு விரிவாக்கப்பட்ட கொடுகடனின் ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சி 6.2 சதவீதத்திற்கு குறைவடைந்தது (ரூபாவின் பெறுமானத்தேய்வை[2] சீராக்கிய பின்னர் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 3.3 சதவீத சுருக்கமொன்றிற்கு மதிப்பிடப்பட்டது). இருப்பினும், குறைந்த அரசிறை மற்றும் வெளிநாட்டு நிதியிடல் மூலங்களுக்கான மட்டுப்படுத்தப்பட்ட அணுகல் ஆகியவற்றிற்கு மத்தியில், 2022ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் வங்கித்தொழில் முறைமைகள் மூலமான அரசாங்கத்திற்கான தேறிய கொடுகடனானது உள்நாட்டு நிதியிடல் மீது குறிப்பாக மத்திய வங்கி மீது அரசாங்கம் தொடர்ச்சியாகத் தங்கியிருக்கும் தன்மையை பிரதிபலித்து, குறிப்பிடத்தக்களவில் விரிவாக்கப்பட்டது. 2021இன் ரூ.1,284.4 பில்லியன் விரிவாக்கத்திற்கு மேலதிகமாக, 2022ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் வங்கித்தொழில் முறைமைகள் மூலமான அரசாங்கத்திற்கான தேறிய கொடுகடனானது இத்தகைய விரிவாக்கத்தை அநேகமாக நோக்கி பங்களிப்புச் செய்த மத்திய வங்கி மூலமான தேறிய அரசு கொடுகடனுடன் 2022ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் ரூ.1,638.7 பில்லியனால்

1 இப்பின்னணியில், பண நிரம்பலானது 2022 பெப்புருவரியில் நிலவிய செலாவணி வீதத்தை பயன்படுத்தி அனைத்து வெளிநாட்டு நாணயத்தில் பெயர்குறித்துரைக்கப்பட்ட மீதிகள் மூலம் மதிப்பிடப்படுகின்றது.

2 இப்பின்னணியில், தனியார் துறைக்கான கொடுகடன் வளர்ச்சியானது 2022 பெப்புருவரியில் நிலவிய செலாவணி வீதத்தை பயன்படுத்தி அனைத்து வெளிநாட்டு நாணயத்தில் பெயர்குறித்துரைக்கப்பட்ட உள்நாட்டு கொடுகடன் மூலம் மதிப்பிடப்படுகின்றது.

1

கணிசமானளவில் அதிகரித்தது. வங்கித்தொழில் முறைமையிலிருந்து அரசிற்கு சொந்தமான வியாபார தொழில்முயற்சிகளினால் பெற்றுக்கொள்ளப்பட்ட கொடுகடனும் தமது நலிவடைந்த நிதியியல் செயலாற்றத்தையும் வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட படுகடனின் மீள்மதிப்பீட்டு விளைவுகளையும் பிரதிபலித்து, குறிப்பிடத்தக்களவில் விரிவடைந்தது. அதேவேளை, சந்தையில் வெளிநாட்டுச் செலாவணித் திரவத்தன்மை மட்டுப்படுத்தப்பட்டளவில் கிடைப்பனவாகவிருந்ததன் காரணமாக, 2022இன் முன்னைய காலப்பகுதியில் படுகடனை மீள்கொடுப்பனவு செய்வதற்கும் ஆண்டு முழுவதும் அத்தியாவசியப் பொருட்களுக்கு நிதியிடுவதற்கும் அலுவல்சார் ஒதுக்குகள் பயன்படுத்தப்பட்டமையால் மத்திய வங்கியின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களில் ஏற்பட்ட வீழ்ச்சியால் உந்தப்பட்டு வங்கித்தொழில் முறைமையிலிருந்தான தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களானது 2022ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் கணிசமாக சுருக்கமடைந்தது. எவ்வாறாயினும், 2022இன் பின்னைய காலப்பகுதியில் மத்திய வங்கியின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களில் சிறிதளவான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. மேலும், 2022இல் குறிப்பாக ஆண்டின் பின்னைய காலப்பகுதியில் உரிமம்பெற்ற வங்கிகளின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களில் முன்னேற்றமொன்று பதிவுசெய்யப்பட்டது.

## நிதியியல் துறை அபிவிருத்திகள்

**தற்போது நிலவுகின்ற பொருளாதார நெருக்கடிகளிலிருந்து ஏற்படும் பல்முனையான சிக்கல்களுக்கு மத்தியில், 2022ஆம் ஆண்டு காலப்பகுதியில் நிதியியல் முறைமை உறுதிப்பாடு பாதுகாக்கப்பட்டது.** 2022இன் ஏப்பிறலில் இருபுடை மற்றும் வர்த்தக படுகடன் தொடர்பில் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டுப் படுகடன் மீதான ஸ்தம்பிதநிலையின் அறிவிப்புடன் இணைந்து நாட்டிற்கான கீழ்நோக்கிய தரமிடல்கள், வங்கித்தொழில் துறையின் நாட்டிற்கான உயர்ந்த வெளிப்படுத்துகை, பொருளாதாரச் சுருக்கம், கடுமையான வெளிநாட்டுச் செலாவணி பற்றாக்குறை மற்றும் உயர்மட்டப் பணவீக்கம் என்பன நிதியியல் துறையின் நடவடிக்கைகளில் மீது கணிசமானதும் முன்னெப்பொழுதுமில்லாததுமான பாதகமான தாக்கத்தை உருவாக்கின. எவ்வாறாயினும், ஆண்டுக் காலப்பகுதியில் முன்மதியுடைய ஒழுங்குமுறைப்படுத்தல் நடவடிக்கைகள் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் சகிப்புத்தன்மை என்பன நிதியியல் முறைமை உறுதிப்பாட்டை பாதுகாப்பதற்கு வசதிப்படுத்தின. 2022ஆம் ஆண்டு காலப்பகுதியில், வீழ்ச்சியடையும் கொடுகடன் தரமிடல்கள், திரவத்தன்மை மீதான கடுமையான அழுத்தம், அதிக குறைபாடுகளின் காரணமாக ஏற்பட்ட குறைந்த மட்ட இலாபத்தன்மை மற்றும் சிதைவடைகின்ற மூலதன தாங்கிருப்புக்கள் என்பவற்றிலிருந்து எழுகின்ற அதிகரிக்கும் சவால்களுக்கு மத்தியில் வங்கித்தொழில் துறையின் உறுதிப்பாடு பேணப்பட்டது. கொடுகடன் வளர்ச்சியின் சுருக்கம், வீழ்ச்சியடையும் இலாபத்தன்மை மற்றும் கட்டம் 3 கடன்களால் குறித்துக்காட்டப்பட்ட செயற்படாக் கடன்களின் அதிகரிப்பு என்பவற்றிலிருந்து தோன்றிய சவால்களுக்கு மத்தியில் போதுமான மூலதனம் மற்றும் திரவத்தன்மை தாங்கிருப்பு என்பவற்றுடன் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் நியதிகளில் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளும் சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளும் தமது விரிவாக்கத்தை தொடர்ந்தும் மேற்கொண்டன. அதேவேளை, 2022ஆம் ஆண்டு காலப்பகுதியில், காப்புறுதித் துறையானது காப்புறுதி ஊடுருவலில் ஏற்பட்ட வீழ்ச்சியுடன் சொத்துத் தளம் மற்றும் மொத்த எழுத்து மூலமான கட்டுப்பணம் என்பவற்றின் நியதிகளில் மிதமான வளர்ச்சியை அறிக்கையிட்டது. பொருளாதார நெருக்கடியிலிருந்து தோன்றிய சிக்கல்களின் பிரதான காரணமாக, ஆண்டு காலப்பகுதியில் முதனிலை வணிகர் கம்பனிகள், உரிமம்பெற்ற நுண்பாகநிதியக் கம்பனிகள், ஓய்வூதிய நிதியங்கள் மற்றும் வேறு துணைத் துறைகள் என்பன கலப்புச் செயலாற்றமொன்றை காட்டின.

**2022ஆம் ஆண்டுக் காலப்பகுதியில், நிதியியல் சந்தைகளும் பல்புடையான துறைகளிலிருந்து அழுத்தங்களை தாங்கியதுடன் 2022இன் பின்னைய காலப்பகுதியிலிருந்து மீளெழுவதற்கான சமிஞ்ஞைகளைக் காட்டின.** 2022ஆம் ஆண்டின் முதலாம் அரையாண்டுக் காலப்பகுதியில் தொடர்ச்சியாக உயர்ந்த மட்ட பற்றாக்குறையில் காணப்பட்ட பணச் சந்தை திரவத்தன்மையானது மத்திய வங்கியால் மேற்கொள்ளப்பட்ட வழிமுறைகளின் பிரதான காரணமாக 2022இன் இறுதியளவில் கணிசமாக மேம்பட்டது. அதேவேளை, பணச் சந்தை நடவடிக்கைகளானது நிதியங்களை கடனாகப் பெறுவதற்கும் மிகையான நிதியங்களை வைப்பிலிடுவதற்கும் மத்திய வங்கியால் வழங்கப்படும் துணைநில் வசதிகள் மீது பங்கேற்கும் நிறுவனங்களின் தொடர்ச்சியான தாக்குபிடிக்குந்தன்மையுடன் மந்தமான செயலாற்றமொன்றைப் பதிவுசெய்தது. 2023இன் முன்னைய காலப்பகுதியிலிருந்து துணைநில் வசதிகள் மீது தங்கியிருப்பதை மட்டுப்படுத்துவதற்கு மத்திய வங்கியால் பின்பற்றப்பட்ட வழிமுறைகள் ஒருநாளுக்குள்ளேயான அழைப்புப் பணச் சந்தையையும் மீள்கொள்வனவு சந்தையையும் செயற்படுவதற்கு பாரியளவில் உதவிபுரிந்தன. 2022ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் சென்மதி நிலுவை அழுத்தங்களினதும் சாதகமற்ற சந்தை எண்ணப்பாங்குகளினதும் காரணமாக பாரியளவான வெளிநாட்டுச் செலாவணித் தேய்மானத்துடன் கடினமான திரவத்தன்மை நிலைமைகளை உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை அனுபவித்த அதேவேளை, 2023இன் ஆரம்ப காலப்பகுதியிலிருந்து பன்னாட்டு நாணய நிதிய விரிவாக்கப்பட்ட வசதி ஏற்பாட்டை இறுதிசெய்வதைத் தொடர்ந்து காணப்பட்ட சாதகமான சந்தை எண்ணப்பாங்குகளுடன் இணைந்து, செலாவாணி வீதங்கள்

தொடர்பான நாளாந்த சந்தை வழிகாட்டலை அகற்றுவதற்கும் மத்திய வங்கிக்கான வெளிநாட்டுச் செலவாணி கட்டாய விற்பனைகளை அகற்றுவதற்குமான வழிமுறைகளுடன் முன்னேற்றங்கள் எடுத்துக்காட்டப்பட்டன. நிலவுகின்ற பாதகமான பேரண்டப் பொருளாதார நிலைமைகளின் பின்னடைவிற்கெதிரான நிலையான வருமானப் பிணையங்கள் மற்றும் பாதகமான சந்தை எண்ணப்பாங்குகளுக்கான உயர்வான விளைவுகளையும் பிரதிபலித்து 2022ஆம் ஆண்டுக்காலப்பகுதியில் பங்குரிமைச் சந்தை மிகக் குறைவான செயலாற்றமொன்றை பதிவுசெய்தது. எவ்வாறாயினும், ஆண்டுக் காலப்பகுதியில் பங்குரிமைச் சந்தை தேறிய வெளிநாட்டு உட்பாய்ச்சல்களைப் பதிவுசெய்தது. சவால்மிக்க பொருளாதாரச் சூழ்நிலையின் கீழ் நிதியியல் உட்கட்டமைப்பானது நிதியியல் துறையின் தொழிற்பாட்டிற்கு தொடர்ந்தும் ஆதரவளித்தது.

## 1.3 உலகளாவிய பொருளாதாரச் சூழலும் தோற்றப்பாடும்

**ருசியா மற்றும் உக்ரேனிற்கிடையிலான போர் மற்றும் சீனாவில் கொவிட்-19 நோய்த்தொற்றின் மீளெழுச்சி என்பவற்றிலிருந்து தோற்றம்பெற்ற உயர்வடைந்த பணவீக்கத்தினைக் கட்டுப்படுத்தும் நோக்கில் உலகளாவிய ரீதியில் மத்திய வங்கிகளினால் மேற்கொள்ளப்பட்ட ஒரே நேரத்திலான கொள்கை இறுக்கமாக்கலின் காரணமாக 2022இல் உலகளாவிய பொருளாதார நடவடிக்கைகள் சடுதியாகக் குறைவடைந்திருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளன.** 2023 சனவரியில் வெளியிடப்பட்ட பன்னாட்டு நாணய நிதியத்தின் உலகப் பொருளாதாரத் தோற்றப்பாட்டின் இற்றைப்படுத்தலின் பிரகாரம், உலகப் பொருளாதார வளர்ச்சியினை 2021இல் மதிப்பிடப்பட்ட 6.2 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2022இல் 3.4 சதவீதமாக விளங்கி குறிப்பிடத்தக்கதொரு வீழ்ச்சியினைப் பதிவுசெய்யுமென எதிர்வுகூறப்பட்டுள்ளது. உயர் பணவீக்கமானது குடியிருப்பாளரின் கொள்வனவு செய்கின்ற ஆற்றலினைச் சிதைவடையச் செய்ததுடன் நம்பிக்கையினையும் பாதித்த வேளையில் துரிதமான நாணயக்கொள்கை இறுக்கமடைதல் கேள்வியினைப் பாதித்தமையினால் 2022இல் முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்களின் பொருளாதார நிலைமைகள் கணிசமானளவு மோசமடைந்து காணப்பட்டன. ருசியா மற்றும் உக்ரேனிற்கிடையிலான போரானது ஐரோப்பியப் பிராந்தியத்தில் கடுமையான வலு நிரம்பல் இடையூறுகளைத் தோற்றுவித்து, வலு விலைகளையும் சில உணவுப் பொருட்களின் விலைகளையும் அதிகரிக்கச் செய்ததுடன் அதன்மூலம் உற்பத்தியினையும் நுகர்வினையும் பாதிப்படையச்செய்து நிச்சயமற்றதன்மையினைத் தூண்டியது. பாரிய மற்றும் தொடர்ச்சியான கொவிட்-19 பரவல்கள் மற்றும் அதனுடன் இணைந்த முடக்கல்கள் என்பவற்றிற்கு மத்தியில் 2022இல் சீனாவின் பொருளாதார நடவடிக்கைகள் மெதுவடைந்தன. மேலும், இறுக்கமான உலகளாவிய நிதியியல் நிலைமைகள், உயர் பணவீக்கத்திற்கு மத்தியில் குறைவடைந்த நுகர்வோர் செலவிடல், மெதுவடைந்த வெளிநாட்டுக் கேள்வி மற்றும் ருசியா-உக்ரேன் மோதலிலிருந்தான கசிவுகள் என்பவற்றின் காரணமாக தோற்றம் பெற்றுவருகின்ற சந்தை மற்றும் அபிவிருத்தியடைந்துவருகின்ற பொருளாதாரங்கள் என்பவற்றின் நடவடிக்கைகள் 2022இல் சடுதியாக வீழ்ச்சியடைந்தன.

**பணவீக்கத்திற்கு எதிரான உலகளாவிய ரீதியிலான போராட்டத்திற்கு மத்தியில் இறுக்கமடைகின்ற நிதியியல் நிலைமைகள் மற்றும் ருசியா மற்றும் உக்ரேனிற்கிடையிலான போரின் தொடர்ச்சி போன்றவை 2023இல் உலகளாவிய பொருளாதார நடவடிக்கைகளில் தாக்கம் செலுத்துமென எதிர்பார்க்கப்படுகின்ற வேளையில் சீனாவின் மீள் திறத்தலானது இத்தாக்கத்தினைப் பகுதியளவில் எதிரீடு செய்யுமென எதிர்பார்க்கப்படுகின்றது.** 2023 சனவரியின் உலகப் பொருளாதாரத் தோற்றப்பாட்டின் இற்றைப்படுத்தலின் பிரகாரம், உலகளாவிய வளர்ச்சி 2023இல் 2.9 சதவீதத்திற்கு வீழ்ச்சியடையுமெனவும் அதன் பின்னர் 2024இல் 3.1 சதவீத மேல்நோக்கிய திரும்பலொன்றினைப் பதிவு செய்யுமெனவும் எறிவுசெய்யப்பட்டுள்ளது. முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்களின் வளர்ச்சி 2022இல் பதிவுசெய்யப்பட்ட 2.7 சதவீதத்திலிருந்து 2023இல் 1.2 சதவீதத்திற்குச் சடுதியாக வீழ்ச்சியடையுமென ஊகிக்கப்பட்டுள்ளது. ஐக்கிய அமெரிக்கா, ஐரோப்பிய வலயப் பொருளாதாரங்கள் மற்றும் ஐக்கிய இராச்சியம் ஆகியன உள்ளடங்கலாக பெரும்பாலான முன்னேற்றங்கண்ட

அட்டவணை 1.4

**உலக பொருளாதார அபிவிருத்திகளும் தோற்றப்பாடும் (அ)**

| விடயம் | 2021 (ஆ) | 2022 (இ) | 2023 (எறிவு) | 2024 (எறிவு) |
|---|---|---|---|---|
| **உலக வெளியீடு** | **6.2** | **3.4** | **2.9** | **3.1** |
| முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்கள் | 5.4 | 2.7 | 1.2 | 1.4 |
| ஐக்கிய அமெரிக்கா | 5.9 | 2.0 | 1.4 | 1.0 |
| ஐரோப்பிய பிராந்தியம் | 5.3 | 3.5 | 0.7 | 1.6 |
| ஐக்கிய இராச்சியம் | 7.6 | 4.1 | -0.6 | 0.9 |
| யப்பான் | 2.1 | 1.4 | 1.8 | 0.9 |
| தோற்றம்பெற்று வரும் சந்தை மற்றும் அபிவிருத்தி அடைந்துவரும் பொருளாதாரங்கள் | 6.7 | 3.9 | 4.0 | 4.2 |
| தோற்றம்பெற்று வரும் சந்தை மற்றும் அபிவிருத்தி அடைந்துவரும் ஆசியா | 7.4 | 4.3 | 5.3 | 5.2 |
| சீனா | 8.4 | 3.0 | 5.2 | 4.5 |
| இந்தியா | 8.7 | 6.8 | 6.1 | 6.8 |
| **உலக வர்த்தக அளவு (பொருட்கள் மற்றும் பணிகள்)** | **10.4** | **5.4** | **2.4** | **3.4** |
| **விலை அசைவுகள்** | | | | |
| நுகர்வோர் விலைகள் | | | | |
| முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்கள் | 3.1 | 7.3 | 4.6 | 2.6 |
| தோற்றம் பெற்றுவரும் சந்தை மற்றும் அபிவிருத்தி அடைந்து வரும் பொருளாதாரங்கள் | 5.9 | 9.9 | 8.1 | 5.5 |
| பண்டங்களின் விலைகள் | | | | |
| எண்ணெய் | 65.8 | 39.8 | -16.2 | -7.1 |
| எரிபொருள் அல்லாதவை | 26.4 | 7.0 | -6.3 | -0.4 |

(அ) வேறுவிதமாகக் குறிப்பிட்டாலன்றி ஆண்டு சதவீத மாற்றம்
(ஆ) திருத்தப்பட்டது
(இ) மதிப்பீடுகள்

*மூலம்:* உலகப் பொருளாதாரத் தோற்றப்பாடு (சனவரி 2023), ப.நா.நிதியம்

1

பொருளாதாரங்கள் 2023இல் மெதுவான வளர்ச்சி வீதங்களைக் கொண்டிருக்குமென எதிர்வுக்கூறப்பட்டுள்ளன. இருப்பினும், இறுக்கமான நாணயக்கொள்கை காரணமாக ஏற்பட்ட சவால்களின் தளர்வு மற்றும் வலுச் சந்தைகள் உறுதிநிலையினையடைதல் என்பன காரணமாக முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்களின் வளர்ச்சியானது 2024இல் மிதமானளவில் உயர்வடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. தாழ்ந்தளவிலான வெளிநாட்டுக் கேள்வியானது முக்கியமாக புடவைகள் மற்றும் ஆடைகள் போன்ற முக்கிய வகைகளின் குறைவடைந்த ஏற்றுமதிகளைத் தோற்றுவிக்கக்கூடுமென்பதனால் முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்களில் மெதுவடைந்த பொருளதார நடவடிக்கையானது இலங்கையின் ஏற்றுமதிகளில் தாக்கமொன்றினைக் கொண்டிருக்கக்கூடும். ஐக்கிய அமெரிக்காவும் ஐரோப்பிய ஒன்றியமும் இலங்கைக்கான பாரியளவிலான ஏற்றுமதி நாடுகளாகத் தொழிற்படுவதனால், இப்பிராந்தியங்களிலிருந்தான கேள்வியில் ஏற்படும் ஏதேனும் குறைப்பு ஏற்றுமதிச் செயலாற்றத்தில் கணிசமானளவிலான எதிர்க்கணிய தாக்கமொன்றினை ஏற்படுத்தக்கூடுமென்பதுடன் அதன்மூலம் பொருளாதார வளர்ச்சியினைப் பாதிப்படையச் செய்யும். மேலும், முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்களின் வருமான மட்டங்களில் தாழ்ந்தளவிலானதொரு வளர்ச்சியானது அத்தகைய நாடுகளிலிருந்து வருகின்ற உலகளாவிய சுற்றுலாப் பயணிகளின் நகர்வுகளில் குறைப்பொன்றிற்கு வழிவகுக்கக்கூடும். அதேவேளை, முக்கியமாக தோற்றம்பெற்று வருகின்றதும் அபிவிருத்தியடைந்து வருகின்றதுமான ஆசியாவில் குறிப்பாக, சீனாவில் எதிர்பார்க்கப்படும் வளர்ச்சி வீதங்கள் மற்றும் ருசியாவிற்கான எறிவுசெய்யப்பட்ட உயர்ந்தளவிலான வளர்ச்சி வீதம் என்பன காரணமாக தோற்றம்பெற்று வருகின்ற சந்தை மற்றும் அபிவிருத்தியடைந்து வருகின்ற பொருளாதாரங்களின் பொருளாதார நடவடிக்கைகள் 2022இல் பதிவுசெய்யப்பட்ட 3.9 சதவீதத்திலிருந்து 2023இல் 4.0 சதவீதத்திற்கு சிறிதளவினால் அதிகரிக்குமென எறிவுசெய்யப்பட்டுள்ளது. இருப்பினும், தோற்றம்பெற்று வருகின்ற சந்தை மற்றும் அபிவிருத்தியடைந்து வருகின்ற பொருளாதாரங்கள் என்பவற்றின் ஏறத்தாழ அரைவாசியில் 2022இல் காணப்பட்டதிலும் பார்க்க 2023இல் பொருளாதார வளர்ச்சி தாழ்ந்தளவில் காணப்படுமென எறிவுசெய்யப்பட்டுள்ளது. இறுக்கமடைகின்ற நிதியியல் நிலைமைகள் மற்றும் புவிசார் அரசியல் பதட்டங்கள் என்பவற்றிற்கு மேலதிகமாக, முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்களில் மெதுவடைந்த கேள்வி நிலைமைகளிலிருந்தான கசிவுகள் மற்றும் தொடர்ச்சியான இறைத் திரட்சி வழிமுறைகள் என்பன உள்ளடங்கலாக பன்முக சவால்களுடன் தோற்றம்பெற்று வருகின்ற சந்தை மற்றும் அபிவிருத்தியடைந்து வருகின்ற பொருளாதாரங்கள் போராடி வருகின்றன. சுற்றுலாத்துறை மற்றும் வெளிநாட்டு முதலீடு போன்ற துறைகளில் குறிப்பாக கட்டடவாக்கத்துடன் தொடர்புடைய துறைகளில் இலங்கை இரு நாடுகளுடனும் நீண்டகால பொருளாதார இணைப்புக்களைக் கொண்டுள்ளமையினால், சீனாவின் பொருளாதார நடவடிக்கைகளில் எதிர்பார்க்கப்படுகின்ற அதிகரிப்பு மற்றும் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியின் தாக்குப்பிடிக்கும்தன்மை என்பன இலங்கைக்கு நன்மை பயக்கக்கூடும்.

**உலகளாவிய பணவீக்கம் 2022இல் உச்சத்தினை எட்டியிருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளதுடன் பலவீனமடைகின்ற கேள்வி மற்றும் தளர்வடைகின்ற பண்ட விலைகள் என்பவற்றிற்கு மத்தியில் 2023இல் தளர்வடையுமென எறிவுசெய்யப்பட்டுள்ளது.** 2023 சனவரியின் உலகப் பொருளாதாரத் தோற்றப்பாட்டின் இற்றைப்படுத்தலின் பிரகாரம் உலகில் நுகர்வோர் விலைகள் 2021இல் பதிவுசெய்யப்பட்ட 4.7 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2022இல் 8.8 சதவீதத்தினால் உயர்வடைந்தன. 2022இல் உயர்வடைந்து செல்கின்ற பணவீக்கமானது கேள்வி மற்றும் நிரம்பல் காரணிகளின் இணைப்பொன்றினைப் பிரதிபலித்து, கேள்விப் பக்கத்தில் உலகளாவிய நோய்த்தொற்றினைத் தொடர்ந்து மிகத் தளர்வான நாணய மற்றும் இறை ஆதரவின் காலங்கடந்த விளைவுகள் விடாப்பிடியான விலை அழுத்தங்களுக்குப் பங்களித்தன. நிரம்பல் பக்கத்தினைப் பொறுத்தவரையில், முக்கிய பண்டங்களின் பற்றாக்குறைகள், ருசியா மற்றும் உக்ரேனிற்கிடையிலான போரினால் மிகைப்படுத்தப்பட்டதுடன் இணைந்து இயலளவு வரையறைகள் மற்றும் நிரம்பல் சங்கிலி இடையூறுகள் என்பன உயர்ந்தளவிலான விலைகளுக்குக் கணிசமானளவில் பங்களித்தன. இருப்பினும், கணிசமானளவிலான நாணய இறுக்கமடைதல், மெதுவடைகின்ற நடவடிக்கைகள், தளர்வடைகின்ற நிரம்பல் சங்கிலி இடையூறுகள் மற்றும் வலு மற்றும் ஏனைய பண்டங்களின் மிதமடைகின்ற விலைகள் என்பவற்றின் விளைவாக பணவீக்கமானது எதிர்வருகின்ற காலப்பகுதியில் வீழ்ச்சியடையுமென எறிவுசெய்யப்பட்டுள்ளது. இதற்கமைய, உலகளாவிய பணவீக்கம் 2023இல் 6.6 சதவீதத்திற்கும் 2024இல் 4.3 சதவீதத்திற்கும் வீழ்ச்சியடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. ஆயினும், பணவீக்க எதிர்வுகூறல் மட்டங்கள் ஏறத்தாழ 3.5 சதவீதம் கொண்ட நோய்த்தொற்றிற்கு முன்னைய மட்டங்களிலும் பார்க்க இன்னமும் உயர்வடைந்து காணப்படுகின்றன. 2022இல் உள்நாட்டு விலை அதிகரிப்புக்கள் மீதான இவ்வுலகளாவிய விலைகளின் பங்களிப்பு குறிப்பிடத்தக்களவு உயர்வடைந்து காணப்பட்டமையினால் மிதமடைகின்ற உலகளாவிய வலு மற்றும் ஏனைய பண்ட விலைகள் இலங்கைக்கு நன்மை பயப்பதாயமையும். உலகளாவிய விலைகளில் எதிர்பார்க்கப்படுகின்ற மிதமடைதலானது காலந்தவறாத மற்றும் வெளிப்படையான சீராக்கங்களின் ஊடாக உள்நாட்டு விலைகளில் கொண்டுவரப்பட்டால் இறக்குமதிசெய்யப்பட்ட பணவீக்கம் கணிசமானளவிலான தாழ்ந்த மட்டமொன்றில் பேணப்படக்கூடுமென்பதுடன் இது நாட்டில் எதிர்பார்க்கப்படும் பணவீக்க வீழ்ச்சிச் செயல்முறைக்கு ஆதரவளிக்கும்.

**உலகெங்கிலுமுள்ள பல்வேறு மத்திய வங்கிகள் அதிகரித்து வருகின்ற பணவீக்க அழுத்தங்கள் மற்றும் சாதகமற்ற பணவீக்க எதிர்பார்க்கைகள் என்பவற்றைக் கருத்திற்கொண்டு 2022 காலப்பகுதியில் தமது முக்கிய கொள்கை வீதங்களை உயர்த்தி, உலகளாவிய நோய்த்தொற்றுடன் தொடர்புடைய தூண்டுதல்களினைப் படிப்படியாக மீளப்பெறத் தொடங்கின.** பணவீக்கமானது 2021இலிருந்து எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்க வேகமாகவும் மிகவும் விடாப்பிடியாகவும் அதிகரித்துள்ளது. 2022இல், முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்களின் பணவீக்கமானது 1982இலிருந்தான அதன் உயர்ந்தபட்ச வீதத்தினை எட்டியது. அதிகரித்து வருகின்ற விலை அழுத்தங்கள் முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்கள் மற்றும் பெரும்பாலான தோற்றம்பெற்று வருகின்ற சந்தைகள் மற்றும் அபிவிருத்தியடைந்து வருகின்ற பொருளாதாரங்கள் முழுவதிலும் ஒத்திசைந்த நாணயக் கொள்கை இறுக்கமடைதலினைத் தூண்டியுள்ளன. கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றுக் காலப்பகுதியில் பெடரல் நிதியங்கள் வீதத்தினை ஏறத்தாழ பூச்சியத்தில் வைத்திருந்த ஐக்கிய அமெரிக்காவின் பெடரல் ஒதுக்கானது பெடரல் நிதியங்கள் இலக்கிடல் வீதத்தினை 2022இல் 425 அடிப்படைப் புள்ளிகளினால் கணிசமானளவில் உயர்த்தியதைத் தொடர்ந்து 2023இன் இதுவரையான காலப்பகுதியில் 50 அடிப்படைப் புள்ளியொன்றினால் அதிகரித்தது. மேலும், பெடரல் ஒதுக்கானது உலகளாவிய நோய்த்தொற்றிற்குப் பதிலிறுத்தும் விதத்தில் உருவாக்கிய தளர்த்தப்பட்ட நிதியியல் நிலைமைகளை விளைவற்றதாக்குவதற்கான நகர்வில் அதன் திறைசேரிப் பிணையங்கள், முகவராண்மைப் படுகடன் மற்றும் முகவராண்மை ஈடுகளினால் உத்தரவாதமளிக்கப்பட்ட பிணையங்கள் என்பவற்றின் கையிருப்புக்களைத் தொடர்ந்து குறைத்தது. இதற்கொத்ததாக, பலவீனமான பொருளாதார வளர்ச்சியினை எறிவுசெய்தமைக்கு மாறாக இங்கிலாந்து வங்கியானது வங்கி வீதத்தினை 2022இல் மொத்தமாக 325 அடிப்படைப் புள்ளிகளினாலும் 2023இன் இதுவரையான காலப்பகுதியில் 75 அடிப்படைப் புள்ளிகளினாலும் அதிகரித்து 2008இன் பிற்பகுதியிலிருந்தான உயர்ந்தளவிலான மட்டத்தினைப் பதிவுசெய்தது. ஐரோப்பிய மத்திய வங்கியும் அதன் கொள்கை வட்டி வீதங்களை 2022இல் பதிவுசெய்யப்பட்ட பூச்சிய மட்டமொன்றிலிருந்து 2023 மாச்சளவில் 3.5 சதவீதத்திற்கான வலுவானதோர் அதிகரிப்பினை நடைமுறைப்படுத்தியது. மேலும், ஐரோப்பிய மத்திய வங்கியானது ஐரோப்பிய முறைமையின் சொத்துக் கொள்வனவு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அதன் பிணைய இருப்புக்களில் குறைப்பொன்றினை அறிவித்தது. மேலும், முக்கிய முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்கள் 2023 மற்றும் பெரும்பாலும் 2024இல் எதிர்பார்க்கப்பட்ட பாதை மற்றும் தொடர்கின்ற இறுக்கமான நாணய நிலைமைகள் என்பன தொடர்பிலான முன்னோக்கிய வழிகாட்டலினை வழங்கின. பல்வேறு நாடுகளில் விளைவு வளையி முழுவதிலும் வட்டி வீதங்கள் அதிகரித்துள்ள வேளையில், தொழிலாளர் சந்தைகளின் உத்வேகம் மெதுவடைந்து செல்வதுடன் வீட்டுச் சந்தைகள் தணிவடைந்து செல்கின்ற சமிக்ஞைகளைக் காண்பிக்கின்றமையினால் உண்மைப் பொருளாதார நடவடிக்கை மற்றும் நிதியியல் சந்தைகள் என்பன நாணய நிலைமைகளின் இறுக்கமடைதலிற்கு பதிலிறுத்தியுள்ளன. ஆயினும், முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்களின் இறுக்கமான நாணயக் கொள்கையானது இலங்கை உள்ளடங்கலாக தோற்றம்பெற்று வருகின்ற சந்தை மற்றும் அபிவிருத்தியடைந்து வருகின்ற பொருளாதாரங்கள் என்பவற்றிற்கான மூலதனப் பாய்ச்சல்கள் மீது தாக்கத்தினைச் செலுத்தக்கூடும். அதேவேளை, பெரும்பாலான தோற்றம்பெற்று வருகின்ற சந்தை மற்றும் அபிவிருத்தியடைந்து வருகின்ற பொருளாதாரங்களிலுள்ள மத்திய வங்கிகளும் அதிகரித்துச் செல்கின்ற பணவீக்க அழுத்தங்களுக்கு எதிராகப் போராடுவதற்கு 2022இல் இறுக்கமான கொள்கைகளைப் பின்பற்றின. அதற்கமைய, ஏனையவற்றிற்கிடையில், இந்திய ரிசர்வ் வங்கி, மலேசியா நெகாரா வங்கி, தாய்லாந்து வங்கி, பிலிப்பைன்ஸ் மத்திய வங்கி மற்றும் இந்தோனேசிய வங்கி என்பன பணவீக்கத்தினைக் கட்டுப்படுத்தும் பொருட்டு 2022இலும் அதேபோன்று 2023இன் முற்பகுதியிலும் அவற்றின் அடிப்படைக் கொள்கை வட்டி வீதங்களை அதிகரித்தன. மாறாக, நீடிக்கப்பட்ட கொவிட்-19 முடக்கல்கள் மற்றும் உண்மைச் சொத்துத் துறையிலுள்ள பிரச்சனைகள் என்பவற்றினால் பாதிக்கப்பட்ட பொருளாதாரத்தினை மீளெழுச்சியடையச் செய்கின்ற முயற்சியில், சீன மக்கள் வங்கி 2022இல் நாணயக் கொள்கையினைத் தொடர்ந்தும் தளர்த்தியது.

**உயர்வடைந்த வட்டி வீதங்கள் குறிப்பாக அரச பிணையங்கள் மீதான உயர் விளைவு வீதங்களுக்கு மத்தியில், முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்களின் வங்கித்தொழில் துறை நிதியியல் நெருக்கடிசார் சமிக்ஞைகளைக் காண்பித்தது.** 2023 மாச்சில், ஐக்கிய அமெரிக்காவிலுள்ள சிலிக்கன் வலி வங்கி முறிவடைந்து, ஐக்கிய அமெரிக்க வரலாற்றில் இரண்டாவது பாரியளவிலான வங்கி முறிவடைதலினையும் 2008இல் உலகளாவிய நிதியியல் நெருக்கடிக்குப் பின்னரான மிகப்பெரிய வங்கி முறிவடைதலினையும் பதிவுசெய்தது. பெடரல் ஒதுக்கானது அதிகரித்து வருகின்ற பணவீக்கத்தினைக் கட்டுப்படுத்தும் பொருட்டு 2022இல் வட்டி வீதங்களைச் சடுதியாக உயர்த்தியமையினால், ஐக்கிய அமெரிக்க திறைசேரி பிணையங்களின் சந்தைப் பெறுமதியானது கணிசமானளவு வீழ்ச்சியடைந்தது. பல வங்கிகள் ஐக்கிய அமெரிக்க திறைசேரி பிணையங்களின் முதலீடுகளை வைத்திருந்தமையினால், சந்தைப் பெறுமதியில் ஏற்பட்ட வீழ்ச்சியானது அவற்றின் முதலீட்டுச் சொத்துப்பட்டியலில் இழப்புகளை ஏற்படுத்தி, மூலதன ஒதுக்குகளைக் குறைத்து அவற்றின் ஐந்தொகைகளைப் பலவீனப்படுத்தியது. சிலிக்கன் வலி வங்கியின் கடன்வழங்கல் சொத்துப்பட்டியலானது நிதியியல் தொழில்நுட்ப கம்பனிகளையும் தொடக்கநிலை வணிகங்களையும் பாரியளவில் சார்ந்திருந்ததன்

1

விளைவாக அதன் ஒன்றுசேர்ந்த இடர்நேர்வினை உயர்வடையச் செய்தது. பாரிய ஐக்கிய அமெரிக்க வங்கிகளின் ஒன்றுசேர்வினால் மீட்கப்பட்ட பெஸ்ட் ரிபப்ளிக் வங்கி உள்ளடங்கலாக பல்வேறு ஐக்கிய அமெரிக்க வங்கிகளும் இதே நிகழ்வின் காரணமாக நிதியியல் நெருக்கடியைச் சந்தித்தன. மேலும், மறைக்குறி நாணயத்துடன் தொடர்புடைய நிறுவனங்களுக்கு அதன் அதிகரித்த வெளிப்படுத்துகை காரணமாக 2023 மாச்சில் ஐக்கிய அமெரிக்காவின் சில்வர்கேட் வங்கியும் முறிவடைந்த வேளையில் ஐக்கிய அமெரிக்காவின் சிக்னேசர் வங்கியின் தொழிற்பாடுகளும் அதே காரணத்திற்காக ஒழுங்குமுறைப்படுத்துனர்களினால் இடைநிறுத்தப்பட்டுள்ளன. இம்முறிவுகளுக்குப் பதிலிறுத்துகின்ற விதத்தில், ஐக்கிய அமெரிக்க பெடரல் ஒதுக்கு மற்றும் ஐக்கிய அமெரிக்க அரச முகவராண்மைகள் என்பன நிதியியல் நெருக்கடியிலுள்ள வங்கிகளிற்கான திரவத்தன்மைக் கிடைப்பனவினை நிச்சயப்படுத்துவதற்கும் முறிவடைந்த வங்கிகளின் வைப்புக்களை மீளச் செலுத்துவதற்கும் தொடர் வழிமுறைகளை அறிவித்தன. ஐக்கிய அமெரிக்க வங்கித்தொழில் துறை தவிர, சுவிட்சர்லாந்தினைத் தளமாகக்கொண்ட உலகளாவிய முதலீட்டு வங்கி மற்றும் நிதியியல் பணிகள் நிறுவனமான கிரெடிட் சூயிஸ ானது 2023 மாச்சில் நிதியியல் நெருக்கடிசார் சமிக்ஞைகளைக் காண்பித்தது. இருப்பினும், நிதிகளுக்கு ஆதரவளிக்கும் பொருட்டு சுவிஸ் தேசிய வங்கியினால் வழங்கப்பட்ட அவசரக் கடன் வசதியொன்றின் மூலம் அதன் முறிவு தவிர்க்கப்பட்டது. கிரெடிட் சூயிஸ் பின்னர் சுவிட்சர்லாந்தின் பாரியளவிலான வங்கித்தொழில் நிறுவனமான சுவிட்சர்லாந்தின் யூனியன் வங்கியினால் கையகப்படுத்தப்பட்டதுடன் இது சுவிஸ் தேசிய வங்கியினாலும் சுவிஸ் அரசாங்கத்தினாலும் துரிதமாக முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கையொன்றாகும். மேலும், தற்போதைய வங்கித்தொழில் நெருக்கடியானது முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்களில் சந்தைப் பீதியினைத் தூண்டியுள்ளதுடன் ஐக்கிய அமெரிக்க மற்றும் ஐரோப்பிய வங்கித்தொழில் துறைகளின் பங்குப் பெறுமதிகளில் குறிப்பிடத்தக்க நட்டங்களைத் தோற்றுவித்தது. அதேவேளை, ஐக்கிய அமெரிக்க பெடரல் ஒதுக்கு, கனேடிய வங்கி, இங்கிலாந்து வங்கி, ஜப்பானிய வங்கி, ஐரோப்பிய மத்திய வங்கி மற்றும் சுவிஸ் தேசிய வங்கி என்பன உலகளாவிய நிதியியல் முறைமையின் திரவத்தன்மைக் கரிசனைகளைத் தீர்ப்பதற்கும் எல்லைகளுக்கிடையிலான சீரான தீர்ப்பனவுகளை நிச்சயப்படுத்துவதற்கும் துணைநில் ஐக்கிய அமெரிக்க டொலர் திரவத்தன்மைப் பரஸ்பர பரிமாற்றல் வசதி ஏற்பாடுகளினூடாக திரவத்தன்மை வழங்கலினை மேம்படுத்தும் பொருட்டு 2023 மாச்சில் ஒருங்கிணைந்த நடவடிக்கையொன்றினை அறிவித்தன. ஆயினும், உலகளாவிய வங்கித்தொழில் நிறுவனங்களின் தற்போதைய நெருக்கடி மற்றும் அதன் விளைவான கசிவுத் தாக்கங்கள் என்பன பொருளாதாரத் தோற்றப்பாட்டிற்குக் குறிப்பிடத்தக்க கீழ்நோக்கிய இடர்நேர்வு மூலமொன்றாக மாறக்கூடும் என்பதுடன் அதன் கசிவுகள் தோற்றம்பெற்று வருகின்ற சந்தை மற்றும் அபிவிருத்தியடைந்து வருகின்ற பொருளாதாரங்கள் என்பவற்றிலும் தாக்கம் செலுத்தக்கூடும். மேலும், இது முக்கிய மத்திய வங்கிகள் தமது கொள்கை நெறிப்படுத்தல் அல்லது ஏதேனும் எதிர்கால கொள்கை வீத சீராக்கங்களின் வேகம் என்பவற்றினை மீள்பரிசீலனை செய்வதனை உருவாக்கக்கூடுமென்பதனால் இந்நிதியியல் நெருக்கடியானது உலகளாவிய ரீதியில் எதிர்பார்க்கப்படுகின்ற இறுக்கமான நிதியியல் நிலைமைகளிலிருந்தான விலகலொன்றிற்கு வழிவகுக்கக்கூடும். அதேவேளை, நிதியியல் நெருக்கடியினைத் தீர்ப்பதற்கான பாரியளவிலான திரவத்தன்மை வழங்கலானது முன்னோக்கிச் செல்கின்ற கேள்வி அழுத்தங்களை மீளத் தொடக்கி உலகம் முழுவதும் பெருமளவில் நம்பப்படுகின்ற பணவீக்க வீழ்ச்சிப் போக்குகளை அச்சுறுத்தக்கூடும்.

**உலகளாவிய பொருளாதாரத் தோற்றப்பாட்டிற்கான இடர்நேர்வுகள், ஒன்றுதிரண்டதோர் அடிப்படையில், உலகளாவிய வளர்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றதிலும் பார்க்க குறைவாகவும் பணவீக்கம் எதிர்பார்க்கப்படுகின்றதிலும் பார்க்க உயர்வாகவும் இருப்பதற்கான சாத்தியத்தினைக் குறிக்கின்றன.** மேல் நோக்கிய பக்கத்தில், குறிப்பாக உலகளாவிய நோய்த்தொற்றுடன் தொடர்புடைய இறை உதவியினாலான மிகையளவிலான தனியார் சேமிப்புக்களின் இருப்பினால் ஆதரவளிக்கப்பட்ட ஒன்றுசேர்ந்த கேள்வி அத்துடன் மிகவும் இறுக்கமான தொழிலாளர் சந்தைகள் மற்றும் வலுவான ஊதிய வளர்ச்சி என்பவை நுகர்வில் அதிகரிப்பொன்றிற்கான வாய்ப்பினையளிக்கின்றன. மேலும், முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்களில் தொழிலாளர் சந்தை நிலைமைகளில் தளர்வு, தணிந்து செல்கின்ற ஊதியப் பணவீக்கம் மற்றும் பொருட்களின் விலைகளில் சடுதியானதொரு வீழ்ச்சி என்பன காரணமாக ஏற்பட்டுள்ள விரைவான பணவீக்க வீழ்ச்சியானது மற்றுமொரு சாதகமான பெறுபேறாகும். இருப்பினும், பல கீழ்நோக்கிய இடர்நேர்வுகள் 2023இல் உலகளாவிய தோற்றப்பாட்டினை பாதிக்கக்கூடும். கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் நீடித்த விளைவுகள் மற்றும் ஆழமடைந்து செல்கின்ற உண்மைத் துறை நெருக்கடி என்பவற்றின் மத்தியில் சீனாவின் மெதுவானதொரு மீட்சியானது தாழ்ந்தளவிலான கேள்வி மற்றும் நிரம்பல் பக்க பிரச்சனைகள் தொடர்பில் உலகின் ஏனைய பகுதிகளில் கசிவுத்தாக்கங்களைக் கொண்டிருக்கக்கூடும். போர் மேலும் தீவிரமடைதலானது வலு மற்றும் உணவு விலைகளில் சாத்தியமான துரித அதிகரிப்பொன்றிற்கு வழிவகுக்கக்கூடுமென்பதனால் ருசியா-உக்ரேன் நெருக்கடியானது குறிப்பாக, ஐரோப்பா மற்றும் குறைந்தளவில் வருமானமீட்டுகின்ற நாடுகளுக்கு இடர்நேர்வின் முக்கியமானதொரு மூலமாகத் தொடர்ந்தும் காணப்படுகின்றது. அதிகரித்து வருகின்ற எண்ணிக்கையிலான நாடுகள் தற்போது ஒன்றில் படுகடன் நெருக்கடியில் அல்லது அத்தகைய நெருக்கடியின் உயர் இடர்நேர்வில் காணப்படுகின்றன. இது, குறைந்தளவிலான வளர்ச்சி மற்றும் உயர்ந்தளவிலான கடன்பாட்டுச் செலவுகளுடன் இணைந்து, இப்பொருளாதாரங்களின் பாதிப்படையக்கூடிய தன்மைகளை

மோசமடையச்செய்து, உலகளாவிய தோற்றப்பாட்டினைப் பாதிப்படையச்செய்யக்கூடும். அதேவேளை, தொழிற்சந்தையின் தொடர்ச்சியான இறுக்கம் மற்றும் உக்ரேனில் நடைபெற்ற போரின் விளைவாக உணவு மற்றும் வலு என்பவற்றிற்கான ஊகிக்கப்பட்டதிலும் பார்க்க உயர்ந்தளவிலான விலைகள் அல்லது சீனாவின் பொருளாதாரத்தில் விரைவானதொரு மீளெழுச்சி என்பன காரணமாக பணவீக்கமானது மீண்டுமொருமுறை அதிகரித்து உயர்வடைந்த மட்டங்களில் விடாப்பிடியாயிருந்து, பணவீக்க எதிர்பார்க்கைகளை நிலைநிறுத்தப்படாத மட்டங்களுக்கு இட்டுச்செல்லக்கூடும். மேலும், நிதியியல் நிலைமைகளில் ஏதேனும் முன்கூட்டிய தளர்வடைதல் மற்றும் நிதியியல் சந்தையின் தளம்பல்நிலை மற்றும் புவிசார் அரசியல் கூறாக்கத்துடன் இணைந்த அதிகரிப்பு என்பன உலகளாவிய தோற்றப்பாட்டிற்கான ஏனைய கீழ்நோக்கிய இடர்நேர்வுகளாகத் தொடர்ந்தும் காணப்படுகின்றன. மேலும், உலகளாவிய வங்கித்தொழில் முறைமையில் தற்போதுள்ள நெருக்கடி மற்றும் சாத்தியமான கசிவுத்தாக்கங்கள் என்பன உலகளாவிய வளர்ச்சியின் தோற்றப்பாடு மற்றும் நிதியியல் நிலைமைகள் என்பவற்றிற்கான கீழ்நோக்கிய இடர்நேர்வுகளின் முக்கியமானதொரு மூலமாக மாறக்கூடும்.

## 1.4 பேரண்டப்பொருளாதார தோற்றப்பாடு[3]

**இலங்கைப் பொருளாதாரத்தின் நடுத்தரக் காலத் தோற்றப்பாடானது பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதியில் குறித்துக்காட்டப்பட்டுள்ள பேரண்டப்பொருளாதார சீர்திருத்த நிகழ்ச்சித்திட்டத்தில் எதிர்பார்க்கப்படுகின்ற செயலாற்றப் பிரமாணம் மற்றும் கட்டமைப்புசார் அளவிடல்கள் மற்றும் சீர்திருத்தங்கள் என்பவற்றின் காலந்தவறாத மற்றும் வினைத்திறனான நிறைவேற்றுகையில் பாரியளவில் தங்கியுள்ளது.** காலந்தவறாத மற்றும் நிலையான முறையில் சீர்திருத்தங்களை வினைத்திறனாக நடைமுறைப்படுத்துவதானது, எதிர்வருகின்ற காலப்பகுதியில் தூண்டுதலளிக்கின்ற வியாபார சூழலொன்றினை உருவாக்குவதற்கு அத்தியாவசியமானதாயமையும். மேலும், பேரண்டப்பொருளாதாரத் தோற்றப்பாட்டின் அடிப்படைச் சூழ்நிலையினை அடையப்பெறலானது எதிர்பாராத வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு அதிர்வுகளுக்கு உட்பட்டிருக்கக்கூடும். கடந்த காலத்தில் மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட நடுத்தர காலப் பேரண்டப்பொருளாதாரத் தோற்றப்பாடு கட்டமைப்புசார் தடைகளைச் சீராக்குவதற்குத் தேவையான சீர்திருத்தங்கள் நடைமுறைப்படுத்தப்படுமென ஊகித்திருந்தது. இருப்பினும், தேவையான சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்தாமையானது கடந்த காலத்தில் எதிர்பார்க்கப்பட்ட சாதகமான பேரண்டப்பொருளாதாரத் தோற்றப்பாட்டினை அடைந்து கொள்வதனைத் தாமதப்படுத்தியது. சுதந்திரத்திற்குப் பின்னரான பொருளாதாரப் பயணத்தில் இலங்கை முக்கியமான தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டிய நிலையொன்றினை எட்டியுள்ளமையினால் நீண்டகால தாமதமான சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதற்கான கொள்கைசார் அர்ப்பணிப்பும் அத்தகைய தீர்க்கமான சீர்திருத்தங்களுக்கான பொதுமக்களது ஆதரவும் அடுத்துவருகின்ற காலப்பகுதியில் மேலோங்குமென்ற நியாயமான எதிர்பார்ப்பொன்று தற்போது காணப்படுகின்றது. இருப்பினும், தற்போது முன்னெடுக்கப்படுகின்ற படுகடன் மறுசீரமைப்புப் பேச்சுவார்த்தைகள் முடிவடைகின்ற காலம், மறுசீரமைப்பிற்குப் பின்னரான பொருளாதார மீட்சியின் வேகம் மற்றும் பரிமாணம், பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதியினால் ஆதரவளிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்ட இலக்குகளின் வெற்றிகரமான நிறைவு போன்றவற்றுடன் தொடர்புடைய சாத்தியமான இடர்நேர்வுகள் காரணமாக எதிர்பார்க்கப்படுகின்ற நடுத்தர கால பாதை நிச்சயமற்றதன்மைகளினால் நிறைந்துள்ளது. இதுவரை நடைமுறைப்படுத்தப்பட்ட சீர்திருத்தங்களின் முன்னேற்றமானது குறிப்பிடத்தக்கதாகும். சீர்திருத்த நிகழ்ச்சி நிரலைத் தொடருவதற்கான கொள்கை வகுப்பாளர்களின் உறுதிப்பாடு மற்றும் வேதனையளிக்கின்ற சீர்த்திருத்தங்களைத் தொடருவதற்கான தேவையினைப் பொதுமக்கள் புரிந்துகொள்ளல் என்பன நடுத்தர காலத்திலிருந்து நீண்ட காலத்தில் நிலைத்திருக்கக்கூடிய உறுதிப்பாட்டினை நிச்சயப்படுத்துவதற்கு இன்றியமையாததவையாகும்.

**இலங்கைப் பொருளாதாரம் 2022இல் அவதானிக்கப்பட்ட அதன் ஆழ்ந்த பொருளாதாரச் சுருக்கத்திலிருந்து படிப்படியாக மீட்சியடைவதற்குத் தயாராக உள்ளது.** பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டினை மீட்டெடுத்தல், படுகடன் நீடித்துநிலைத்திருக்கின்ற தன்மை, நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினைப் பாதுகாத்தல், ஆளுகையினை வலுப்படுத்தல் மற்றும் பொருளாதாரத்தின் உள்ளார்ந்த வளர்ச்சி வாய்ப்புக்களை வெளிக்கொண்டு வருதல் அதேவேளையில், ஏழ்மை மற்றும் பாதிக்கப்படக்கூடிய மக்கள் பிரிவினர் மீதான பொருளாதார நெருக்கடியின் பாதகமான தாக்கத்தினைத் தணித்தல் போன்றவற்றை நோக்காகக் கொண்ட பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் கீழான பேரண்டப்பொருளாதார சீராக்க நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் இம்மீட்சியானது ஊக்கமளிக்கப்படும். அதேவேளை, அரசாங்கத்தினாலும் மத்திய வங்கியினாலும் பின்பற்றப்பட்ட

3 இப்பிரிவில் வழங்கப்பட்டுள்ள நடுத்தர கால பேரண்டப்பொருளாதார கட்டமைப்பானது 2023 செத்தெம்பர் இறுதிப் பகுதிக்கு முன்னரான படுகடன் மறுசீரமைப்புச் செய்முறையின் நிறைவின் மூலம் பன்னாட்டு நிதியியல் நிறுவனங்களிலிருந்தான மேலதிக உதவியினைப் பெற்றுக்கொள்கின்ற வாய்ப்பினை உருவாக்குதல் உள்ளடங்கலாக பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதியினால் ஆதரவளிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் வெற்றிகரமான தொடர்ச்சியின் அனுமானத்துடனான கொள்கைச் சூழ்நிலையின் அடிப்படையிலமைந்துள்ளது. இலங்கைக்கான பன்னாட்டு நிதியியல் நிறுவனங்களினால் வெளியிடப்பட்ட நடுத்தர கால பேரண்டப்பொருளாதார எறிவுகளில் கிடைக்கத்தக்கதான தகவல்கள் மற்றும் அடிப்படையிலமைந்த எடுகோள்களின் வேறுபாடுகள் காணப்படக்கூடுமென்பதனைக் குறிப்பிடுவது பொருத்தமானதாயமைகின்றது.

1

அட்டவணை 1.5

## நடுத்தரகால பேரண்டப் பொருளாதார கட்டமைப்பு (அ)

| குறிகாட்டி | அலகு | 2021 (ஆ) | 2022(இ) | 2023 | 2024 | 2025 | 2026 | 2027 |
|---|---|---|---|---|---|---|---|---|
| **உண்மைத்துறை (ஈ)** | | | | | | | | |
| உண்மை மொ.உ.உ. வளர்ச்சி | % | 3.5 (இ) | -7.8 | -2.0 | 3.3 | 4.0 | 4.5 | 5.0 |
| நடைமுறைச் சந்தை விலைகளில் மொ.உ.உ. | ரூ.றில் | 17.6 (இ) | 24.1 | 28.5 | 31.0 | 33.8 | 37.1 | 40.9 |
| தலைக்குரிய மொ.உ.உ. | ஐ.அ.டொ. | 3,997 (இ) | 3,474 | 3,489 | 3,621 | 3,811 | 4,030 | 4,281 |
| மொத்த முதலீடு | மொ.உ.உ. இன் % | 36.7 (இ) | 34.4 | 34.9 | 35.4 | 35.9 | 36.4 | 36.9 |
| உள்நாட்டு சேமிப்புகள் | மொ.உ.உ. இன் % | 29.4 (இ) | 30.8 | 30.9 | 30.8 | 32.0 | 33.0 | 33.8 |
| தேசிய சேமிப்புகள் | மொ.உ.உ. இன் % | 33.0 (இ) | 33.1 | 33.8 | 34.1 | 34.6 | 35.3 | 36.0 |
| **வெளிநாட்டுத்துறை (ஈ)** | | | | | | | | |
| வர்த்தக இடைவெளி | மொ.உ.உ. இன் % | -9.2 | -6.7 | -6.9 | -7.4 | -6.7 | -6.1 | -5.9 |
| ஏற்றுமதிகள் | ஐ.அ.டொ. பில் | 12.5 | 13.1 | 14.1 | 15.5 | 17.1 | 18.8 | 20.2 |
| இறக்குமதிகள் | ஐ.அ.டொ. பில் | 20.6 | 18.3 | 19.4 | 21.6 | 22.9 | 24.4 | 26.0 |
| நடைமுறை கணக்கு நிலுவை | மொ.உ.உ. இன் % | -3.7 | -1.9 | -1.1 | -1.3 | -1.2 | -1.1 | -0.9 |
| வெளிநாட்டு அலுவல்சார் ஒதுக்குகள் | இறக்குமதி மாதங்கள் | 1.8 | 1.2 | 3.0 | 3.4 | 3.8 | 4.2 | 4.5 |
| **இறைத்துறை (ஈ) (உ)** | | | | | | | | |
| மொத்த அரசிறை மற்றும் கொடைகள் | மொ.உ.உ. இன் % | 8.3 | 8.3 | 11.0 | 13.3 | 14.9 | 15.0 | 15.1 |
| செலவினமும் தேறிய கடன் வழங்கலும் | மொ.உ.உ. இன் % | 20.0 | 18.5 | 19.0 | 19.7 | 19.9 | 19.9 | 19.6 |
| நடைமுறைக் கணக்கு மீதி | மொ.உ.உ. இன் % | -7.3 | -6.4 | -4.5 | -2.1 | -0.7 | -0.4 | 0.0 |
| ஆரம்ப மீதி | மொ.உ.உ. இன் % | -5.7 | -3.7 | -0.7 | 0.8 | 2.3 | 2.3 | 2.3 |
| திரண்ட வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறை | மொ.உ.உ. இன் % | -11.7 | -10.2 | -8.0 | -6.4 | -5.0 | -4.8 | -4.5 |
| மத்திய அரச படுகடன் | மொ.உ.உ. இன் % | 100.1 | 113.8 | 100.0 | 101.6 | 103.3 | 102.2 | 97.6 |
| **நாணயத் துறை மற்றும் பணவீக்கம்** | | | | | | | | |
| விரிந்த பண வளர்ச்சி ($M_{2b}$) (ஊ) | % | 13.2 | 15.4 | 10.5 | 10.9 | 10.8 | 10.7 | 10.2 |
| தனியார் துறைக்கான கொடுகடனின் வளர்ச்சி ($M_{2b}$ இல்) (ஊ) | % | 13.1 | 6.2 | 0.9 | 8.5 | 9.5 | 10.5 | 10.5 |
| ஆண்டுச்சராசரிப் பணவீக்கம் | % | 6.0 (எ) | 46.4(எ) | 20.6(ஏ) | 5.0 (ஏ) | 5.0(ஏ) | 5.0 (ஏ) | 5.0(ஏ) |

(அ) 2023 மாச்சு இறுதிவரை கிடைக்கத்தக்கதாகவிருந்த தகவல்களை அடிப்படையாக கொண்டது
(ஆ) திருத்தப்பட்டது
(இ) தற்காலிகமானது
(ஈ) தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத்திணைக்களத்தால் 2023 மாச்சில் வெளியிடப்பட்ட (தள ஆண்டு 2015) மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பீடுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.
(உ) பன்னாட்டு நாணய நிதிய எறிவுகள் (மறுசீரமைப்பு நிகழ்வு)
(ஊ) ஆண்டிறுதி பெறுமதிகளின் அடிப்படையிலான ஆண்டுக்காண்டு வளர்ச்சி
(எ) கொ.நு.வி.சுட்டெண் (2013=100) அடிப்படையிலானது
(ஏ) கொ.நு.வி.சுட்டெண் (2021=100) அடிப்படையிலானது

*மூலங்கள்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு
இலங்கை மத்திய வங்கி

முன்கூட்டிய உறுதிப்பாட்டு வழிமுறைகள் கேள்வி அழுத்தங்களைக் கட்டுப்படுத்துவதற்கும் சுழற்சியான பணவீக்கம் மற்றும் செலாவணி வீதத் தேய்மானம் என்பவற்றினை வரையறைக்குள் வைத்திருப்பதற்குத் துணைபுரிந்ததுடன் அதன்மூலம் பொருளாதாரம் மேலும் நிலைகுலைவதனைத் தடுத்தன. இம்மேம்பாடுகள் உள்நாட்டு நிரம்பல் பக்க அபிவிருத்திகள் மற்றும் தளர்வடைகின்ற வெளிநாட்டுச் செலாவணித் திரவத்தன்மை அழுத்தங்களின் இலகுபடுத்தல் என்பவற்றுடன் இணைந்து அண்மைக்காலத்தில் பொருளாதார நடவடிக்கைகளின் மீட்சிக்கான உத்வேகமொன்றினை அளிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. இருப்பினும், இறுக்கமான நாணய மற்றும் இறைக் கொள்கைகள் மற்றும் சென்மதி நிலுவைத் தடைகள் 2023இல் மீட்சி வேகத்தினை மெதுவடையச் செய்யக்கூடும். நாட்டின் வர்த்தக வளர்ச்சி வாய்ப்புக்களை தடைப்படுத்தக்கூடியதும் எதிர்பார்க்கப்படுகின்ற வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்கள் மற்றும் வெளிநாட்டு முதலீட்டை ஊக்கமிழக்கச்செய்யக்கூடியதுமான 2023இல் உலகளாவிய பொருளாதார வளர்ச்சியில் பரந்த அடிப்படையிலான மெதுவடைதல் மற்றும் சடுதியாக அதிகரித்து வருகின்ற நிதியியல் சந்தை நெருக்கடி என்பவற்றிலிருந்து தோற்றம்பெறக்கூடிய உலகளாவிய சவால்களைப் பொருளாதாரம் எதிர்கொள்ளக்கூடும். இருப்பினும், 2023 மாச்சில் பன்னாட்டு நாணய நிதியத்தின் ஏற்பாட்டிற்கான ஒப்புதலைத் தொடர்ந்து ஏற்பட்ட மேம்பட்ட மனோபாவங்கள் தற்போது முன்னெடுக்கப்படுகின்ற படுகடன் மறுசீரமைப்பு முயற்சிகள் மற்றும் அதன் விளைவான பேரண்டப் பொருளாதார நிலைமைகளின் உறுதிப்பாடு என்பவற்றினால் 2023இன் பிற்பகுதியிலிருந்து உத்வேகத்தினை மீட்பதற்கு ஆதரவளிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாட்டின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட திட்டமிடப்பட்ட வளர்ச்சி மேம்பாட்டு உபாயங்களை நிறுவுவதன் மூலம் வளர்ச்சி உத்வேகம் நடுத்தர காலத்தில் உயர்வடைந்த உள்ளார்ந்த ஆற்றல்வாய்ந்த தன்மை வடிவமைக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், அனைத்தையுமுள்ளடக்கிய படுகடன் மறுசீரமைப்புச் செய்முறையொன்றினூடாக படுகடன் நீடித்துநிலைத்திருக்கின்ற தன்மையின் மீட்டெடுத்தலானது நாட்டிற்கான தரமிடல்கள் மேம்பட்டவுடன் வெளிநாட்டு நிதியிடல் வாய்ப்புக்களுக்கான இடைவெளியினை உருவாக்கும் வேளையில் பன்னாட்டு நிதியியல் நிறுவனங்களிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட கணிசமானளவிலான நிதியிடல்

ஆதரவானது எதிர்வருகின்ற காலப்பகுதியில் முதலீட்டாளர் நம்பிக்கையினை வலுப்படுத்துவதில் துணைபுரியுமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. பணவீக்கத்தின் எறிவுசெய்யப்பட்ட உறுதிப்பாடானது நடுத்தர காலத்திலான முதலீடுகளுக்கு உகந்த சூழலொன்றினை உருவாக்கக்கூடிய வேளையில் செலாவணி வீதத்தில் பாரியளவிலான நெகிழ்வுத்தன்மையானது அடுத்து வருகின்ற காலப்பகுதியில் வெளிநாட்டுத் துறை மற்றும் பொருளாதாரத்தில் வர்த்தகப் போட்டித்தன்மையில் உறுதிப்பாட்டினைத் தூண்டுமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. இருப்பினும், எதிர்பார்த்ததிலும் பார்க்க தாழ்ந்தளவிலான வெளிநாட்டுக் கேள்வி மற்றும் உலகளாவிய நிரம்பல் சங்கிலிப் பிரச்சினைகளின் தொடர்ச்சி என்பன இலங்கையின் பொருளாதார நடவடிக்கைகள் தாமதமாக இயல்புநிலைக்குத் திரும்புவதற்கான இடர்நேர்வினை ஏற்படுத்தக்கூடும். வினைத்திறன்மிக்க மற்றும் போதுமானளவிலான வரவு செலவுத்திட்ட ஒதுக்கீடுகளை மேம்படுத்துவதன் மூலம் சமூக பாதுகாப்பு வலையமைப்புக்களை வலுப்படுத்துவதானது தாக்குபிடிக்கின்ற தன்மையினைக் கட்டியெழுப்புவதுடன் தனிப்பட்டவர்கள் பொருளாதார மேம்பாடு மற்றும் நீடித்துநிலைத்திருக்கின்ற அபிவிருத்திக்கான வாய்ப்புக்களைப் பற்றிப்பிடிப்பதனை இயலச்செய்து, நடுத்தர காலத்தில் அனைத்தையுமுள்ளடக்கிய வளர்ச்சியினை ஊக்குவிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. பொருளாதாரத்தின் மீட்சியும் வளர்ச்சியும் காலங்கடந்த கட்டமைப்புசார் சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்கு அரசாங்கத்தினை வழிநடாத்திச் செல்கின்ற கொள்கை வகுப்பாளர்களின் உறுதியான அர்ப்பணிப்பில் தங்கியுள்ள வேளையில், பொருளாதாரத்தின் ஆற்றல்வாய்ந்த தன்மையினைப் பயன்படுத்துவதற்கும் குடித்தொகையின் அனைத்துப் பிரிவுகளிற்குமிடையே வளர்ச்சியின் நன்மைகள் நீடித்துநிலைத்திருக்கின்ற மற்றும் பாரபட்சமற்ற அடிப்படையிலான பகிர்ந்தளிப்பினை வசதிப்படுத்துவதற்கும் வழிவகுக்கும் பொருட்டு கொள்கையின் தொடர்ச்சி மற்றும் நிச்சயத்தன்மை என்பன தொடர்ந்தும் இன்றியமையாதனவாகக் காணப்படுகின்றன.

**இறுக்கமான நாணய மற்றும் இறைக் கொள்கைகள் காரணமாக ஏற்பட்ட மெதுவடைந்த கூட்டுக் கேள்வி, உலகளாவிய மற்றும் உள்நாட்டு ஆகிய இரண்டிலுமான நிரம்பல் இடையூறுகள் குறைவடைதல் அதனுடனிணைந்து சாதகமான புள்ளிவிபர தளத் தாக்கத்தினால் ஆதரவளிக்கப்பட்டு, 2023இல் விரைவான பணவீக்க வீழ்ச்சிப் பாதையினைத் தொடர்ந்து, பணவீக்கமானது நடுத்தர காலத்தில் இலக்கிடப்பட்ட மட்டங்களில் உறுதிநிலையினை அடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது.** மத்திய வங்கியினால் நடைமுறைப்படுத்தப்பட்ட பாரியளவிலான நாணய இறுக்கமடைதலானது தனியார் துறைக்கான கொடுகடனின் வளர்ச்சியினைக் கட்டுப்படுத்தும் என்பதுடன் அதன்மூலம் கேள்வி அழுத்தங்களை வரையறுக்கும் வேளையில் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட கணிசமானளவிலான அரசிறையினை அடிப்படையாகக் கொண்ட இறைத் திரட்சி வழிமுறைகள் அண்மைய எதிர்காலத்தில் பொதுமக்களின் செலவிடல் வலுவின் கணிசமானளவிலான குறைப்பொன்றிற்கு வழிவகுக்கலாம். அதேவேளையில், வளமாக்கி மற்றும் எரிபொருள் என்பவற்றின் மேம்பட்ட கிடைப்பனவானது நிரம்பலுடன் தொடர்புடைய தடைகளைத் தளர்த்துவதற்குப் பங்களிக்கும். இலங்கை ரூபாவின் வலுவடைதலானது தொடர்ந்து நீடித்திருக்குமானால் அண்மைக் காலத்தில் தாழ்ந்தளவிலான விலை அழுத்தங்களிற்குப் பங்களிக்கக்கூடும். இக்காரணிகள், சாதகமான புள்ளிவிபரத் தளத் தாக்கத்துடன் இணைந்து, குறுங்காலத்தில் பணவீக்கத்தைக் கணிசமாகக் குறைப்பதற்குப் பங்களிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. அண்மைய மின்சார தீர்வைத் திருத்தங்களின் இரண்டாம் சுற்று தாக்கங்கள் பணவீக்க வீழ்ச்சிச் செயல்முறையை பாதிக்கக்கூடுமெனினும், பொதுமக்களின் குறைந்தளவிலான செலவிடல் வலு மற்றும் எரிபொருள் மற்றும் எரிவாயு விலைகளின் சூத்திரத்தின் அடிப்படையிலமைந்த கீழ்நோக்கிய திருத்தம் என்பன அத்தகைய பணவீக்க அழுத்தங்களைப் பாரியளவில் எதிரீடு செய்வதற்குத் தொழிற்படக்கூடும். பன்னாட்டு நாணய நிதியம் மற்றும் ஏனைய பல்புடை முகவராண்மைகள் என்பவற்றிலிருந்தான நிதியிடல் ஆதரவு படுகடன் மறுசீரமைப்புச் செய்முறையின் வெற்றிகரமான நடைமுறைப்படுத்தலுடன் இணைந்து அத்தியாவசிய தேவைகளை முன்னுரிமையளிக்கின்ற விதத்தில் நடைமுறையிலுள்ள இறக்குமதிக் கட்டுப்பாடுகளை நாடு படிப்படியாகத் தளர்த்த முடியும் என்பதுடன் அதன்மூலம் நிரம்பல் தடைகளை மேலும் தளர்வடையச்செய்யும். இருப்பினும், அத்தகைய தளர்விற்குப் பின்னர் செலாவணி வீதத்தின் மீதான சாத்தியமான தேய்மான அழுத்தமானது பொது விலை மட்டத்தினை விரைவாகப் பாதிக்கக்கூடுமென்பதனால், அதனைக் கவனமாக நிர்வகிக்கப்பட வேண்டிய தேவை ஏற்படலாம். அதேவேளை, முன்மொழியப்பட்ட மத்திய வங்கிச் சட்டத்தின் எதிர்பார்க்கப்படுகின்ற சட்டவாக்கமானது மத்திய வங்கிக்கு அதிகளவிலான சுயாதீனத்தினை அனுமதித்து, நாணய நிதியிடலைக் கட்டுப்படுத்துவதுடன் அதன்மூலம் பணவீக்கம் மற்றும் பணவீக்க எதிர்பார்க்கைகளை முகாமைசெய்வதனை இலக்காகக்கொண்ட கொள்கைகளை வலுப்படுத்தும். உலகளாவிய நிரம்பல் நிலைமைகள் நடுத்தர காலத்தில் இயல்புநிலைக்குத் திரும்புமென எதிர்பார்க்கப்பட்ட போதிலும், அண்மைய நிதியியல் நெருக்கடி மற்றும் முன்னெடுக்கப்படுகின்ற உக்ரேன்-ருசியா போரின் போக்கு மற்றும் தாக்கம் என்பன பெருமளவிலான நிச்சயமற்றதன்மையினைத் தொடர்ந்தும் கொண்டுள்ளன. உலகளாவிய உணவு மற்றும் வலு விலைகளில் ஏற்படும் ஏதேனும் சாத்தியமான அதிகரிப்பானது இலங்கையின் பணவீக்க வீழ்ச்சிச் செயல்முறையை மெதுவடையச்செய்வதற்கான சாத்தியப்பாட்டினைக்

1

## சிறப்புக் குறிப்பு 03
## "இலங்கை மத்திய வங்கி சட்டத்தின்" சிறப்புக்கூறுகள்

### பின்னணி

1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டமானது உறுதிப்பாடு மற்றும் அபிவிருத்தி ஆகிய இரண்டையும் மையப்படுத்திய பல குறிக்கோள்களுடன் 1950ஆம் ஆண்டில் சிலோன் மத்திய வங்கியை (இது, 1985ஆம் ஆண்டில் இலங்கை மத்திய வங்கி எனப் பெயர்மாற்றம் செய்யப்பட்டது) நிறுவியது. நாணய விதிச் சட்டமானது எக்ஸ்டர் அறிக்கையின் [1]பரிந்துரைகளின் அடிப்படையில் வரையப்பட்டது. எவ்வாறாயினும், ஒத்திசைவில்லாத பல குறிக்கோள்களை எய்துவதிலும் மத்திய வங்கித்தொழில் போக்குகளுக்கமைவாக பேணுவதிலுமுள்ள இடர்பாடுகளையும் கருத்திற்கொண்டு, மத்திய வங்கியானது 2000ஆம் ஆண்டின் ஆரம்பகாலங்களில் நவீனமயப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டமொன்றில் கால்பதித்தது. அதற்கமைய, இரு மையக் குறிக்கோள்களான பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாடு அத்துடன் நிதியியல் முறைமை உறுதிப்பாடு என்பவற்றைப் பேணுவதற்கு இக்குறிக்கோள்கள் சீரமைக்கப்பட்டன.

### புதிய மத்திய வங்கிச் சட்டமொன்றிற்கான தேவை

மத்திய வங்கியின் குறிக்கோள்களை பிரதானமாக சீரமைத்த மேலே குறிப்பிடப்பட்ட 2002இன் திருத்தம் தவிர, நாணய விதிச் சட்டம் கடந்த 74 ஆண்டுகளாக அனைத்தையுமுள்ளடக்கிய வகையில் மீளாய்வு செய்யப்படவுமில்லை திருத்தப்படவுமில்லை. பொருளாதார அபிவிருத்திகள் மற்றும் பொதுவாக மத்திய வங்கித்தொழிலின் பரிணாமவளர்ச்சி என்பவற்றிற்கு மத்தியில் நாணய விதிச் சட்டத்தின் பல ஏற்பாடுகள் பன்னாட்டளவிலான சிறந்த நடத்தைகளுக்கமைவாக மீள மதிப்பீட்டையும் திருத்தங்களையும் அவசியப்படுத்தின. இலங்கையில் மத்திய வங்கியின் சுயாதீனம், வெளிப்படைத் தன்மை மற்றும் பொறுப்புக்கூறலை அதிகரித்தல் மற்றும் நீடித்த விலை உறுதிப்பாட்டினை உறுதிசெய்வதற்கு நாணயக் கொள்கைக் கட்டமைப்புக்களை வலுப்படுத்தல் என்பவற்றை உள்ளடக்குவதற்கு இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தினை வரைவதற்கு இது வழியமைத்தது. அதேவேளை, இலங்கை மத்திய வங்கிச் சட்டமானது நிதியியல் துறை மற்றும் பேரண்ட முன்மதியுடைய மேற்பார்வை என்பவற்றை வலுப்படுத்துமெனவும் மத்திய வங்கியின் ஆளுகையை மேம்படுத்துமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. நாணய விதிச் சட்டத்திற்கான திருத்தங்களும் அதனைத்தொடர்ந்த இலங்கை மத்திய வங்கிச் சட்டமும் மத்திய வங்கித்தொழிலில் பன்னாட்டு ரீதியாக சிறந்த நடத்தைகளுக்கு இசைவாக இருக்குமெனவும் நாணய விதிச் சட்டத்தில் ஏற்கனவே காணப்படுகின்ற குறைபாடுகளை தீர்க்குமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

### மத்திய வங்கிச் சட்டத்தின் முக்கிய சிறப்புக்கூறுகள்

இலங்கை மத்திய வங்கிச் சட்டமானது நாணய விதிச் சட்டத்துடன் ஒப்பிடுகையில் பிரதானமாக மத்திய வங்கியின் குறிக்கோள்கள், நாணயக் கொள்கைக் கட்டமைப்பு, அதன் ஆளுகை மற்றும் நிறுவனசார் கட்டமைப்பு, பேரண்ட முன்மதியுடைய அதிகாரசபையாக மத்திய வங்கியை அங்கீகரிக்கின்றமை அத்துடன் பாராளுமன்றத்திற்கும் அரசாங்கத்திற்கும் பொதுமக்களுக்கும் மத்திய வங்கியின் பொறுப்புக்கூறல் ஆகிய பல துறைகளில் பல முக்கிய திருத்தங்களைக் கொண்டுள்ளது.

### முதன்மைக் குறிக்கோளாக உள்நாட்டு விலை உறுதிப்பாடு

நாணய விதிச் சட்டத்தில் குறிப்பிடப்பட்ட இரு சமமான முக்கியத்துவமளிக்கப்பட்ட குறிக்கோள்களுக்கெதிராக, இலங்கை மத்திய வங்கிச் சட்டமானது உள்நாட்டு விலை உறுதிப்பாட்டினை அடைவதற்கும் பேணுவதற்கும் முன்னுரிமையளிக்கின்றது. எதிர்காலத்தில் குறைவானதும் உறுதியானதுமான பணவீக்கத்தை கொண்டுசேர்ப்பதற்கு மத்திய வங்கி அர்ப்பணிக்கப்பட்டிருக்கும் என்பதனை இது உறுதிசெய்கின்றது. பணவீக்கமானது குறைவாக இருக்கின்றபோதும் குறைவாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகின்ற போதும் பொருளாதாரம் நன்கு செயலாற்றும் என்பதனை அனுபவங்கள் காண்பிக்கின்றன வட்டி வீதங்களை உறுதியான மட்டங்களில் பேணுவதற்கு குறைவானதும் உறுதியானதுமான பணவீக்கம் உதவுகின்றது. பொருளாதாரமொன்று அதன் வாய்ப்புமிக்க வளர்ச்சிப்பாதையினை எய்துவதற்கு அவ்வாறான சூழல் இயலச்செய்கின்றது. மேலும், முதன்மைக் குறிக்கோளை அடைந்து கொள்வதில் மத்திய வங்கியானது வெளியீட்டினையும் அதன் வாய்ப்புமிக்க மட்டத்தை நோக்கி நிலைநிறுத்துவதையும் கருத்திற்கொள்ளும். பணவீக்கத்தினை பணவீக்க இலக்கினை அண்மித்து நிலைப்படுத்துகின்ற அதேவேளை, உண்மைப் பொருளாதாரத்திற்கான இடையூறினைக் குறைப்பதனை நோக்காகக் கொண்ட நெகிழ்சித்தன்மைவாய்ந்த பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பிற்கு அமைவாக இவ்வேற்பாடுகள் காணப்படுகின்றன. மேலும், விலை உறுதிப்பாடு மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாடு இரண்டினதும் கவனம் தேவைப்படுகின்றதும் அத்துடன் ஏதாவதொரு பக்கத்தினை பக்கத்தையும் பரிசீலனையிற்கொள்கின்ற கொள்கைத் தீர்மானம் இரண்டிற்குமிடையே ஈடுகட்டலுக்குட்படுகின்ற அரிதான சந்தர்ப்பத்தில், மத்திய வங்கியானது அதன் விலை உறுதிப்பாடு என்ற முதன்மைக் குறிக்கோளை முன்னுரிமைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.


### ஆளுகைக் கட்டமைப்பு

நாணய விதிச் சட்டத்தின் கீழ் ஏனைய கொள்கை மற்றும் தொழிற்பாட்டு தீர்மானங்களுடன் சேர்த்து நாணயக் கொள்கை தீர்மானங்களை மேற்கொள்வதற்கு நாணயச் சபைக்குப் பொறுப்பளிக்கப்பட்டுள்ளது. எனினும், இலங்கை மத்திய வங்கி சட்டத்தின் கீழ் ஆளுகைச் சபை மற்றும் நாணயக் கொள்கைச் சபை என்ற பெயரிலான தீர்மானத்தை மேற்கொள்ளும் இரு சமாந்தர சபைகளுக்கு அதிகாரங்கள் உரித்தளிக்கப்பட்டுள்ளன. இங்கு, உள்நாட்டு விலை உறுதிப்பாட்டினை அடைவதற்கு நெகிழ்ச்சித்தன்மைவாய்ந்த செலாவணி வீதக் கட்டமைப்புடன் இணைத்து நெகிழ்ச்சித்தன்மைவாய்ந்த பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பை வகுத்து நடைமுறைப்படுத்தும் பொறுப்பு நாணயக் கொள்கைச் சபைக்கு உரித்தளிக்கப்பட்டுள்ள அதேவேளை நாணயக் கொள்கை தவிர்ந்த மத்திய வங்கியின் பொதுவான கொள்கையினை நிர்ணயிப்பதற்கு ஆளுகைச் சபைக்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ளது.

---

1 ஐக்கிய அமெரிக்க பெடரல் ரிசேர்வ் முறைமையின் புகழ்பெற்ற பொருளியலாளரும் சிலோன் மத்திய வங்கியின் முதலாவது ஆளுநராகவும் இருந்த ஜோன் எக்ஸ்டர் மூலம் எக்ஸ்டர் அறிக்கை தயாரிக்கப்பட்டது. இவ்வறிக்கையை https://www.cbsl.gov.lk/sites/default/files/cbslweb_documents/about/Exter%20Report%20-%20CBSL.pdf ஊடாக பார்வையிடலாம்.

வரைபடம் சி.கு. 3.1
மத்திய வங்கியின் சட்டத்தின் கீழ் மத்திய வங்கியின் ஆளுகையும் ஒழுங்கமைப்பும்




இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் பிரகாரம், திறைசேரிக்கான செயலாளர் மத்திய வங்கியின் தீர்மானம் மேற்கொள்ளும் ஏதேனும் குழுக்களில் இனிமேலும் உறுப்பினராக இருக்கமாட்டார். எவ்வாறாயினும், பாரிய இறை-நாணய-நிதியியல் உறுதிப்பாட்டுக் கொள்கை ஒருங்கிணைப்பினை உறுதிசெய்யும்பொருட்டு, ஒருங்கிணைப்புச் சபையொன்று தாபிக்கப்பட்டு ஒருங்கிணைப்புச் சபையின் உறுப்பினர் ஒருவராக திறைசேரிக்கான செயலாளர் இருப்பார். மத்திய வங்கியின் ஏனைய தொழிற்பாடுகளை மேற்பார்வை செய்கின்ற அத்துடன் நிதியியல் துறை மற்றும் வேறு கொள்கைகளை வகுக்கின்ற ஆளுகைச் சபையிலிருந்து நாணயக் கொள்கைச் சபையினை வேறுபடுத்துவதும் இரு உள்ளக உறுப்பினர்கள் (துணை ஆளுநர்கள்) மற்றும் வெளிவாரி நிபுணர்களுடனான சபையின் தொழில்நுட்ப ரீதியான பிரதிநிதித்துவமும் வினைத்திறன்மிக்க நாணயக் கொள்கை வகுத்தலை வசதிப்படுத்துகின்றது. நாணயக் கொள்கை வகுத்தல் மீது தேவையான அறிவினையும் நிபுணத்துவத்தையும் கொண்ட வெளிவாரி மற்றும் உள்ளக உறுப்பினர்கள் இருசாராருடனும் கூடிய நாணயக் கொள்கைச் சபையினைக் கொண்டிருப்பது பன்னாட்டளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறையொன்றாகும். அத்துடன், முதன்மைக் குறிக்கோளை அடைவதற்கு பிரத்தியேகமாக தீர்மானம் மேற்கொள்ளும் குழுவொன்றினைக் கொண்டுள்ளமையானது ஆரம்பகட்டங்களில் கொள்கை கலந்துரையாடல்களில் ஈடுபடுவதற்கான வசதியினை உறுப்பினர்களுக்கு வழங்குவதுடன் அதன்மூலம் நாணயக் கொள்கை வகுத்தல் வலுப்படுகின்றது.

### மேம்பட்ட மத்திய வங்கித் சுயாதீனம் பொறுப்புக்கூறலும்

மத்திய வங்கியின் கொள்கை மற்றும் தொழிற்பாட்டு தீர்மானமெடுத்தலில் அதன் சுயாதீனத்தையும் பொறுப்புக்கூறலையும் வலுப்படுத்தும் பரந்த நோக்குடன் இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தில் ஏற்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இலங்கை மத்திய வங்கிச் சட்டமானது மத்திய வங்கியில் கொள்கை மேற்கொள்வதில் அதிக தொழிற்பாட்டு சுயாதீனத்தை வலியுறுத்துகின்ற நிர்வாக மற்றும் நிதியியல் சுயாதீனத்தை உறுதிசெய்கின்ற திட்டவட்டமான ஏற்பாடுகளைக் கொண்டுள்ளது. ஆளுநர், ஆளுகைச் சபைக்கு நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் நாணயக் கொள்கை குழு உறுப்பினர்கள் மற்றும் ஊழியர்கள் மீதான வெளிவாரிச் செல்வாக்குகள் இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் கீழ் முற்றுமுழுதாகத் தடுக்கப்பட்டுள்ளன.

நாணயக் கொள்கை வகுத்தலில் சுயாதீனத்தினை உறுதிசெய்யும் பொருட்டு, இலங்கை மத்திய வங்கிச் சட்டமானது மத்திய வங்கியின் தீர்மானமெடுத்தல் குழுக்களில் ஏதேனும் வடிவில் அரசாங்கப் பிரதிநிதித்துவம் இல்லாமையினை உறுதிசெய்கின்றது. எனினும், தகவல்களைப் பகிர்ந்துகொள்வதற்கும் நிதியியல் உறுதிப்பாடு அல்லது பொருளாதாரச் செயற்பாட்டிற்கு குறிப்பிடத்தக்க இடர்நேர்வுகளைத் தோற்றுவிக்கின்ற நிகழ்வுகள் பற்றிய அபிப்பிராயங்களை பரிமாற்றுவதற்கும் ஒருங்கிணைப்புச் சபை வசதிப்படுத்துமென எதிர்பார்க்கப்படுகின்றது. அதேவேளை மத்திய வங்கியானது அரசாங்கத்தின் நிதியியல் ஆலோசகராகவும் இறை முகவராவும் வங்கியாளராகவும் தொடர்ந்தும் இருக்கும். எனினும், கடந்தகாலங்களில் நாணயக் கொள்கை மீது பாரிய முட்டுக்கட்டையாகவிருந்த நாணயக் கொள்கை வகுத்தல் மீதான இறை ஆதிக்கமானது இறைப் பற்றாக்குறையின் கட்டுப்படுத்தப்பட்ட நாணய நிதியிடல் மற்றும் அரசாங்கத்திற்கான தற்காலிக முற்பணம் வழங்குவதன் மீதான கட்டுப்பாடு என்பன வாயிலாகத் தடுக்கப்பட்டுள்ளது இது நெகிழ்ச்சித்தன்மைவாய்ந்த பணவீக்க இலக்கிடலின் வெற்றிக்கு அத்தியாவசியமானதாகும். அதற்கமைய, அரசாங்கத்திற்கு, ஏதேனும் அரசாங்கத்திற்குச் சொந்தமான நிறுவனத்திற்கு அல்லது ஏதேனும் வேறு அரச நிறுவனத்திற்கு நேரடியாக அல்லது நேரடியற்ற கொடுகடன்களை வழங்குவதிலிருந்து மத்திய வங்கி கட்டுப்பட்டுள்ளதுடன் மத்திய வங்கியின் தொழிற்பாடுகளுடன் தொடர்புபட்டுள்ள செலவுகளுக்கானவை நீங்கலாக அரசாங்கம் சார்பில் செலவுகளை மேற்கொள்ளாது இருப்பதற்கும் அத்துடன் அரசாங்கத்தினால், அரசாங்கத்திற்குச் சொந்தமான ஏதேனும் நிறுவனத்தினால் அல்லது ஏதேனும் வேறு அரச நிறுவனத்தினால் வழங்கப்படும் பிணையங்களை முதலாந்தரச் சந்தையில்[2] கொள்வனவு செய்யாதிருப்பதற்கும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், அரசாங்கத்திற்கான மட்டுப்படுத்தப்பட்ட புதிய நேரடி கொடுகடன்களுக்கான பல்வேறு கட்டுப்பாடுகளுக்கும் உட்பட்டு ஆண்டின்[3] தொடக்கத்தில் நிதிச் செலவினங்களுக்கு அரசாங்கத்திற்கான தற்காலிக முற்பணங்களை வழங்குவதை இலங்கை மத்திய வங்கிச் சட்டம் அனுமதிக்கின்றது. வழங்கப்பட்ட அத்தகைய தற்காலிக முற்பணங்களின் செலுத்தவேண்டிய தொகை

2 தற்போதைய இறைசார் தடங்கல்களைக் கருத்திற்கொண்டு மத்திய வங்கி மூலமான அரசாங்கப் பிணையங்களின் முதலாந்தரச் சந்தை கொள்வனவுகள் மீதான தற்காலிக தளர்த்தல் சட்டத்தின் நியமிக்கப்பட்ட திகதியிலிருந்து ஆறு மாதங்களைக் கொண்ட காலப்பகுதியினுள் அனுமதிக்கப்பட்டுள்ளன.

3 தற்காலிக ஏற்பாடு அரசாங்கத்திற்கான மத்திய வங்கியின் செலுத்தவேண்டிய கொடுகடன் தொடர்பான பரிகாரத்தை உள்ளடக்கியுள்ளது.

1

கடந்த முன்னுறுகின்ற நிதியாண்டின் முதல் நான்கு மாதங்களின் வருவாயின் 10 சதவீதத்தை விஞ்சாதிருத்தல் என்பதுடன் சந்தையுடன் தொடர்புபட்ட வட்டி வீதங்களில் வருவாயீட்டப்படும்.

தொழிற்பாட்டு மற்றும் நிதியியல் சுயாதீனத்திற்குத் தேவையான சுயாதீனத்தை வழங்குகின்ற அதேவேளை அதன் கொள்கைகள், பெறுபேறுகள் மற்றும் தோல்விகள் பற்றி பாராளுமன்றத்திற்கும் பொதுமக்களிற்கும் மத்திய வங்கியின் மிகுந்த பொறுப்புக்கூறலை இலங்கை மத்திய வங்கிச் சட்டம் உறுதிசெய்கின்றது. அதிகார வேறாக்கத்தினை உருவாக்குகின்ற அத்துடன் அதிகாரி எவரும் அதிகளவு அதிகாரத்தினைக் கட்டுப்படுத்தவில்லை என்பதை உறுதிசெய்கின்ற பரீட்சிப்புக்களும் சமப்படுத்தல்களும் சுயாதீனத் தீர்மானம் மேற்கொள்ளலை மேம்படுத்துவதற்கும் பொறுப்புக்கூறலை உறுதிசெய்வதற்கும் பொதுமக்கள் நம்பிக்கையினைப் பேணுவதற்கும் முக்கியமாகும். ஆகவே, இலங்கை மத்திய வங்கிச் சட்டமானது நியதிச்சட்ட பொதுமக்கள் வெளிப்படுத்தல் தேவைப்பாடுகள், பாராளுமன்றத்திற்கு அறிக்கைகளை காலக்கிரமத்துடன் சமர்ப்பித்தல், பாராளுமன்றத்தினால் அல்லது ஏதேனும் அதன் குழுக்கள் மூலம் காலக்கிரமத்தில் ஆளுநர் விசாரிக்கப்படுவதற்கான தேவைப்பாடுகள் என்பவற்றை நோக்காகக்கொண்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றது. இந்நோக்கில் நாணயக் கொள்கையினை நடைமுறைப்படுத்தல் மற்றும் மத்திய வங்கிக் குறிக்கோள்களை அடையப்பெறுதல் என்பன மீது மத்திய வங்கியின் குறிக்கோள்களை அடையும் நியதிகளில் எவையேனும் தோல்விகளுக்கான காரணங்கள், அண்மைக்கால அபிவிருத்திகள் மற்றும் பொருளாதாரத் தோற்றப்பாடு என்பவற்றைக் குறித்துரைத்து பாராளுமன்றத்திற்கும் பொதுமக்களுக்கும் பல அறிக்கைகளை மத்திய வங்கி சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

### நாணயக் கொள்கைக் கட்டமைப்பாக நெகிழ்ச்சித்தன்மைவாய்ந்த பணவீக்க இலக்கிடல்

மத்திய வங்கி, 2015 தொடக்கம் நாணய இலக்கிடல் மற்றும் நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த பணவீக்க இலக்கிடல் இரண்டினதும் அம்சங்களுடன்கூடிய கலப்பு நாணயக் கொள்கைக் கட்டமைப்பொன்றினைப் பின்பற்றியதன் பின்னர் 2020இல் நாணயக் கொள்கைக் கட்டமைப்பாக நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த பணவீக்க இலக்கிடலை பின்பற்றியது. எனினும், நாணய விதிச் சட்டத்தின் கீழ் நெகிழ்ச்சித்தன்மைவாய்ந்த பணவீக்க இலக்கிடலின் வெற்றிகரமான நடைமுறைப்படுத்தலுக்கான நிபந்தனைகள் வசதிப்படுத்தப்பட்டிருந்தும் கூட இலங்கையில் தொடர்புடைய நாணயக் கொள்கைக் கட்டமைப்பாக நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த பணவீக்க இலக்கிடலை நாணய விதிச் சட்டம் திட்டவட்டமாக அங்கீகரிக்கவில்லை. மத்திய வங்கிச் சட்டமானது நிபந்தனைகளை இயலச்செய்து நெகிழ்ச்சித்தன் ்ந்த பணவீக்க இலக்கிடலின் முறைசார்ந்த பின்பற்றுதலுக்கு ஏற்பாடு செய்கின்றது. இவ்வொழுங்கேற்பாட்டின் கீழ் பணவீக்க இலக்கு மற்றும் முக்கிய பிரமாணங்கள் என்பவற்றை உள்ளடக்குகின்ற நாணயக் கொள்கைக் கட்டமைப்பு உடன்படிக்கை மத்திய வங்கியும் நிதி அமைச்சரும் இணைந்து கையொப்பமிடப்பட்டு அத்தகைய உடன்படிக்கைத் திகதியிலிருந்து ஒருவார காலப்பகுதியினுள் வர்த்தமானியில் வெளியிடப்படும். நாணயக் கொள்கைக் கட்டமைப்பு உடன்படிக்கையின் பிரகாரம் நாணயக் கொள்கைச் சபை மத்திய வங்கியின் நாணயக் கொள்கை நடைமுறைப்படுத்தல் தொடர்பில் பொருத்தமான நாணயக் கொள்கையினையும் நாணயக் கொள்கைச் சாதனங்களையும் நிர்ணயித்து நாணயக் கொள்கை நடைமுறைப்படுத்தும் நோக்கத்திற்காக அத்தகைய சாதனங்களை சீர்படுத்துவதற்கான அதிகாரத்தினைக் கொண்டிருக்கும். பணவீக்க இலக்கும் தொடர்புடைய பிரமாணங்களும் ஒவ்வொரு மூன்று ஆண்டுகளுக்கும் அல்லது விதிவிலக்கான சூழ்நிலைகளின் கீழ் அவ்வாறான வேறு இடைவெளிகளில மீளாய்வுசெய்யப்படும். மேலும், தொடர்ச்சியாக இரண்டு காலாண்டுகளுக்கு பணவீக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில் நிர்ணயிக்கப்பட்ட எல்லைகளுக்கு பணவீக்க இலக்கினை நிறைவேற்றுவதற்கு மத்திய வங்கி தவறுகின்றவிடத்து, நாணயக் கொள்கைச் சபை நிதியமைச்சர் ஊடாக பாராளுமன்றத்திற்கு அறிக்கையொன்றினைச் சமர்ப்பிக்கவேண்டும். அவ்வறிக்கை பொதுமக்களுக்கும் கிடைக்கப்பெறச்செய்யப்பட வேண்டும். அதேவேளை, இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் கீழ் மத்திய வங்கியானது பணவீக்கத்தின் அண்மைக்கால அசைவுகள், பணவீக்க மூலங்கள் அத்துடன் பணவீக்கத்திற்கான நடுத்தரகால எறிவுகள் மற்றும் அத்தகைய எறிவுகளுக்கான முக்கிய இடர்நேர்வுகள் என்பவற்றை விளக்கி ஒவ்வொரு ஆறு மாதங்களுக்கும் நாணயக் கொள்கை அறிக்கையொன்றினை வெளியிடுதல் வேண்டும்.

### நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வை மற்றும் தீர்மானம் அத்துடன் பேரண்ட முன்மதியுடைய அதிகாரம்

நிதியியல் நிறுவனங்களின் ஒழுங்குமுறைப்படுத்தல், உரிமமளித்தல், பதிவுசெய்தல் அத்துடன் மேற்பார்வைசெய்தல் அதேபோன்று நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினை உறுதிசெய்யும் பொருட்டு நிதியியல் நிறுவனங்களின் தீர்மானங்கள் என்பவற்றுக்கு முக்கிய பொறுப்புமிக்க உயர்மட்ட நிதியியல் நிறுவனமாக மத்திய வங்கி தொடர்ந்தும் இருந்துவருகின்றதும். மேலும், இலங்கை மத்திய வங்கிச் சட்டமானது பேரண்ட முன்மதியுடைய கொள்கைக்கு அமைவாக நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டினைப் பாதுகாக்கும் நோக்குடன் மத்திய வங்கிக்கு பேரண்ட முன்மதியுடைய அதிகாரத்தினை அளிக்கின்றது. இந்நோக்கில் நிதியியல் முறைமை மேற்பார்வைக் குழுவொன்றினை மத்திய வங்கி நிறுவும் என்பதுடன் நிதியியல் முறைமையினைப் பாதிக்கின்ற இனங்காணப்பட்ட ஒட்டுமொத்த முறைமையையும் பாதிக்கக்கூடிய இடர்நேர்வுகள் ஒன்றுசேர்வதைத் தணிப்பதற்கு பேரண்ட முன்மதியுடைய கொள்கையினைப் பரீட்சிப்பதற்கும் சீராக்க வழிமுறைகள் மீது தொடர்புடைய அரசாங்க அதிகாரிகளுக்கு பரிந்துரைகளை வழங்குகின்ற அதேவேளை பேரண்ட முன்மதியுடைய கொள்கை[4] நடைமுறைப்படுத்தலை ஒருங்கிணைக்குமென நிதியியல் முறைமை மேற்பார்வைக் குழு எதிர்பார்க்கப்படுகின்றது.

### பொதுப் படுகடன் முகாமைத்துவம்

இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் பிரகாரம் பொதுப் படுகடன் முகாமைத்துவம் பற்றிய மத்திய வங்கியின் முகவர் தொழிற்பாடானது பொதுப் படுகடன் முகாமைத்துவ முகவராண்மையுடன் தொடர்புடைய இயைபான சட்டம் அல்லது அலுவலகம் தொழிற்பாட்டிற்கு வந்தவுடன் மத்திய வங்கியின் பொறுப்பாணையிலிருந்து நீக்கப்படவுள்ளது. எவ்வாறாயினும், அத்தகைய திகதி வரை மத்திய வங்கி அரசாங்கத்தின் முகவராக படுகடன் முகாமைத்துவத்தைத் தொடர்ந்தும் முன்னெடுக்கும்.

4 பேரண்ட முன்மதியுடைய அதிகாரசபையாக இலங்கை மத்திய வங்கியின் வகிபாகம் பற்றி மேலும் தகவல்களுக்கு சிறப்புக்குறிப்பு 10 இனைப் பார்க்கவும்.

**சாராம்சம்**

இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் கீழ் மத்திய வங்கியின் சுயநிர்ணயம் எல்லா நேரங்களிலும் மதிக்கப்பட்டு உள்நாட்டு விலை உறுதிப்பாட்டை பேணுகின்ற அத்துடன் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டைப் பாதுகாக்கின்ற பொறுப்பாணை அளிக்கப்பட்ட குறிக்கோள்களை எய்துவதற்கு மத்திய வங்கி மூலம் சுயாதீனமாக கொள்கை வகுத்தலையும் நடைமுறைப்படுத்தலையும் இயலச்செய்கின்றது. அதே சந்தர்ப்பத்தில் இலங்கை மத்திய வங்கிச் சட்டமானது மத்திய வங்கியின் அதிக பொறுப்புக்கூறலையும் வெளிப்படைத்தன்மையினையும் வலியுறுத்தி பாராளுமன்றத்திற்கும் பொதுமக்களுக்கும் அது பதிலளிக்கத்தக்கதாக்குகின்றது. முதன்மையாக பொறுப்பாணையளிக்கப்பட்ட விலை உறுதிப்பாட்டுக் குறிக்கோளுடன் மத்திய வங்கியின் அதிகரித்த பொறுப்புக்கூறல் உயர்ந்ததும் தளம்பலடைகின்றதுமான பணவீக்கத்திலிருந்தும் அதனுடன் தொடர்புபட்ட வட்டி வீதங்களின் சடுதியான அசைவுகளினதும் தீங்குபயக்கும் தாக்கங்களிலிருந்து நாட்டினைப் பாதுகாப்பதுடன் நீடித்து நிலைத்திருக்கும் நீண்டகால பொருளாதார வளர்ச்சிக்கு வசதியளிக்கும்.

**உசாத்துணைகள்**

1. Central Bank of Sri Lanka – A Bill (7 March 2023)

2. Jegajeevan, S. (2023) Why do we need independent and publicly accountable central bank?, Daily FT. Available at: https://www.ft.lk/columns/Why-do-we-need-independent-and-publicly- accountable-central-bank/4-745738. (Accessed on 10 March 2023).

கொண்டுள்ளது. உலகின் பெரும்பாலான முக்கிய மத்திய வங்கிகள் பணவீக்க அழுத்தங்களைக் கட்டுப்படுத்துவதற்கு 2023 முழுவதும் 2024இன் முற்பகுதியிலும் இறுக்கமான நாணய நிலைமைகளைப் பேணுமென எதிர்பார்க்கப்படுகின்ற போதிலும், உலகளாவிய நிதியியல் நிலைமைகளில் ஏற்படும் தளம்பல் நிலைமைகள் உலகளாவிய நாணயக் கொள்கையின் நடத்தையை ஓரளவு பாதிக்கக்கூடும். நிலவுகின்ற உயர் பணவீக்கத்தினை 2023இன் பிற்பகுதியளவில் ஒற்றை இலக்க மட்டங்களை நோக்கிக் குறைப்பதற்கு மத்திய வங்கி தொடர்ந்தும் திடசங்கற்பம் பூண்டுள்ளது. இருப்பினும், இறை மற்றும் வெளிநாட்டுத்துறைத் தாங்கியிருப்புக்களை நீடித்துநிலைத்திருக்கும் தன்மையில் வலுப்படுத்துவதற்கான முயற்சிகளுடன் இணைந்து பன்னாட்டு நாணய நிதிய விரிவாக்கப்பட்ட நிதிய வசதி நிகழ்ச்சித்திட்டத்தின் வெற்றிகரமான தொடர்ச்சி மற்றும் பொருளாதாரத்தின் உள்ளார்ந்த ஆற்றல்வாய்ந்ததன்மையினை மேம்படுத்துவதற்கு முன்மொழியப்பட்ட கட்டமைப்புசார் சீர்திருத்தங்களின் நடைமுறைப்படுத்தல் என்பன நடுத்தர காலத்தில் பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாட்டினை நிச்சயப்படுத்துவதற்கான கருவியாகத் தொடர்ந்தும் காணப்படுகின்றன.

**நாணயக் கொள்கையானது நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த பணவீக்க இலக்கிடல் கொள்கைக் கட்டமைப்பொன்றின் கீழ் நடுத்தர காலப்பகுதியில் விலை உறுதிப்பாட்டினை நிச்சயப்படுத்துவதில் தொடர்ந்தும் கவனஞ்செலுத்தும் வேளையில், பொருளாதார வளர்ச்சியினை அதன் உள்ளார்ந்த ஆற்றல்வாய்ந்ததன்மையினை நோக்கி உறுதிப்படுத்துவதிலும் கவனம் செலுத்தும்.** சாதகமான பணவீக்கத் தோற்றப்பாடு, மேம்படுகின்ற உள்நாட்டுப் பணச் சந்தைத் திரவத்தன்மை நிலைமைகள் மற்றும் குறுங்காலத்தில் அரசாங்கத்தின் ஒட்டுமொத்த படுகடன் மறுசீரமைப்பு உபாயம் தொடர்பிலான நிலுவையிலுள்ள அறிவிப்புடன் உள்நாட்டுப் படுகடனைக் கையாள்தல் குறித்த 2023 மாச்சு 30 அன்று வெளியிடப்பட்ட பொது அறிவிப்பிற்குப் பின்னர் உள்நாட்டுப் படுகடன் மறுசீரமைப்புக் கரிசனைகள் மீதான நிச்சயமற்ற தன்மை பாரியளவில் நீக்கப்பட்டுள்ளமையினால் அரச பிணையங்களுடன் இணைக்கப்பட்ட இடர்நேர்வு மிகையில் குறைப்பு என்பவற்றினால் ஆதரவளிக்கப்பட்டு அரச பிணையங்கள் மீதான விளைவு வீதங்கள், குறிப்பாக திறைசேரி உண்டியல்கள் மற்றும் வைப்பு மற்றும் கடன்வழங்கல் உற்பத்திகள் ஆகிய இரண்டிற்கும் பிரயோகிக்கத்தக்க சந்தை வட்டி வீதங்கள் எதிர்வருகின்ற காலப்பகுதியில் மிதமடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இருப்பினும், பணவீக்க அழுத்தங்கள் போதியளவிலும் நம்பகமான வகையிலும் கட்டுப்படுத்தப்படும் வரையிலும் பணவீக்க எதிர்பார்க்கைகள் மத்திய வங்கியின் பணவீக்க நோக்கத்துடன் இசைந்து செல்லும் விதத்தில் நிலைநிறுத்தப்படும் வரையிலும் நாணய நிலைமைகள் தொடர்ந்தும் போதுமானளவில் இறுக்கமாகக் காணப்படும். வைப்பு வட்டி வீதங்கள் அவற்றின் உச்சளவிலான மட்டங்களிலிருந்து குறைவடைதலுடன் வங்கித்தொழில் துறையினால் திரட்டப்பட்ட வைப்புக்களின் வளர்ச்சி எதிர்வரும் காலப்பகுதியில் தொடர்ந்தும் மெதுவடைந்து காணப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இதேவேளை, ஒப்பீட்டளவில் உயர் சந்தைக் கடன்வழங்கல் வட்டி வீதங்கள் தனியார் துறைக்கான கொடுகடன் வளர்ச்சியினைக் கட்டுப்படுத்தி, அதன் ஒட்டுமொத்த இருப்பினைக் குறுங்காலத்தில் சுருக்கமடையச் செய்யுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இருப்பினும், வட்டி வீதங்களில் எதிர்பார்க்கப்படுகின்ற இயல்புநிலைக்குத் திரும்புதல், பொருளாதார நடவடிக்கைகளின் படிப்படியான மீட்சி மற்றும் வியாபார மனோபாவங்களின் மேம்பாடுகள் என்பவற்றுடன் தனியார் துறைக்கான கொடுகடன் 2023இன் பிற்பகுதியிலிருந்து விரிவடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. அதேவேளை, எதிர்பார்க்கப்படுகின்ற இறைச் சீராக்கங்கள் மற்றும் எதிர்பார்க்கப்படுகின்ற அரசாங்கத்திற்கான வெளிநாட்டு நிதியிடலின் பெறுகை என்பன வங்கித்தொழில் துறையிலிருந்தான நிதியிடல் குறிப்பாக, எதிர்வருகின்ற காலப்பகுதியில் நாணய நிதியிடலின் மீதான அரசாங்கத்தின் தங்கியிருத்தலைக் குறைக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், அரசிற்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகளில் திட்டமிடப்பட்ட கட்டமைப்புசார் சீர்திருத்தங்கள் உற்பத்தித்திறன் மேம்பாடுகளுடன்

1

இணைந்து அரசாங்கத்தின் வரவு செலவுத்திட்டம் மற்றும் வங்கித்தொழில் துறையின் மீதான அவற்றின் தங்கியிருத்தலைப் படிப்படியாகக் குறைக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்கமைய, வங்கித்தொழில் முறைமையின் தேறிய உள்நாட்டுச் சொத்துக்களின் விரிவாக்கமானது எதிர்வருகின்ற காலப்பகுதியில் சாதகமாயமையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. மத்திய வங்கியின் அதன் வெளிநாட்டு ஒதுக்குகளைப் படிப்படியாக மீளக் கட்டியெழுப்புவதற்கான முயற்சிகள் மற்றும் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டுச் சொத்து நிலைகளின் (தேறிய பொறுப்புக்கள்) மேம்படுத்தல்கள் என்பவற்றினால் உந்தப்பட்டு, வங்கித்தொழில் முறைமையின் தேறிய வெளிநாட்டுச் சொத்து நிலைமை எதிர்வருகின்ற காலப்பகுதியில் மேம்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. முன்னோக்கிச் செல்கையில், நாணயக் கொள்கையின் நடத்தையானது முன்னோக்கிய பார்வை மற்றும் தரவினால் உந்தப்பட்ட அணுகுமுறை என்பவற்றின் அடிப்படையிலமைந்து தொடரும் என்பதுடன் இது உள்நாட்டு மற்றும் உலகளாவிய அண்மைய மற்றும் எதிர்பார்க்கப்படுகின்ற பேரண்டப்பொருளாதார அபிவிருத்திகள் மற்றும் எறிவுகளினால் ஆதரவளிக்கப்படும். புதிய தகவல்கள் கிடைப்பனவாகவுள்ளமையினாலும் கிடைப்பனவாகவிருக்கும் பட்சத்தில், நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பின் கீழ் மத்திய வங்கியின் கொள்கைகளிலும் உபாயங்களிலும் நேரகாலத்துடனான சீராக்கங்கள் மேற்கொள்ளப்படும். விலை உறுதிப்பாட்டின் மீட்டெடுப்பு மற்றும் அதன்பின்னர் குறைந்த மற்றும் நிலையான மட்டமொன்றில் பணவீக்கம் பேணப்படுகின்றமை என்பன வட்டி வீதங்களின் பாரியளவிலான தளம்பல்களினை நீக்கும் என்பதுடன் இது பொருளாதார வளர்ச்சிக்கு ஆதரவளிப்பதற்கான வியாபார திட்டமிடலினையும் முதலீடுகளினையும் இயலச்செய்கின்ற சூழலொன்றினை உருவாக்கும். மத்திய வங்கிச் சட்டத்தின் எதிர்பார்க்கப்படுகின்ற சட்டவாக்கத்துடன் மத்திய வங்கியின் சுயாதீனம் மற்றும் பொறுப்புக்கூறும் தன்மை மேலும் வலுப்படுத்தப்படும் என்பதுடன் அதன்மூலம் விலை உறுதிப்பாட்டினை நிச்சயப்படுத்துகின்ற அதன் முதன்மை நோக்கத்திற்கு ஆதரவளிக்கும். அதேவேளை, தற்போதைய பொருளாதார நிலைமைகள் மற்றும் தோற்றப்பாடு என்பன குறித்து வினைத்திறனான மற்றும் வெளிப்படையான தொடர்பூட்டலினூடாக மத்திய வங்கி பொதுமக்களுடனான ஈடுபாட்டினைத் தொடர்ந்து முன்னெடுக்கும். மத்திய வங்கி, பொருளாதாரத் தோற்றப்பாடு தொடர்பில் பொதுமக்களுக்கு சிறப்பான முறையில் தெரிவிப்பதற்கு முன்னோக்கிய பார்வையிலான நாணயக் கொள்கை அறிக்கையொன்றினையும் வெளியிடுவதற்கு தொடங்கும் என்பதுடன் அதன்மூலம் நாணயக்கொள்கை நடவடிக்கைகள் தொடர்பிலான வெளிப்படைத்தன்மையினை மேலும் மேம்படுத்தும்.

**2023 மற்றும் அதற்கப்பாலுமான காலப்பகுதிக்கான வெளிநாட்டுத் துறைத் தோற்றப்பாடானது படுகடன் மறுசீரமைப்பின் முன்னேற்றம், பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதியினால் ஆதரவளிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் தொடர்ச்சி மற்றும் உலகளாவிய பொருளாதார மற்றும் நிதியியல் தோற்றப்பாடு என்பவற்றின் மீது பாரியளவில் தங்கியிருக்கும்.** பொருளாதார நடவடிக்கைகளின் படிப்படியான இயல்புநிலைக்குத் திரும்புதல் மற்றும் முன்னோக்கிச் செல்கையில் சில வர்த்தகக் கட்டுப்பாடுகளின் சாத்தியமான தளர்வு என்பவற்றினால் தூண்டப்பட்டு வணிகப்பொருள் இறக்குமதிகளில் எறிவுசெய்யப்பட்ட அதிகரிப்பொன்றுடன் வர்த்தகப் பற்றாக்குறை 2023இல் மிதமானளவில் விரிவடையக்கூடும். வெளிநாட்டுத்துறைக் கேள்வியினைச் சாத்தியமானளவு மெதுவடையச்செய்யக்கூடிய ஐக்கிய இராச்சியம், ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஐக்கிய அமெரிக்கா என்பவற்றில் சாத்தியமான பொருளாதார வீழ்ச்சியொன்றினாலும் 2023இற்கான வர்த்தகப் பற்றாக்குறையின் எதிர்வுகூறல் பாதிக்கப்படக்கூடும். மேலும், உக்ரேன்-ருசியா போரின் ஏதேனும் மேலதிக தீவிரமடைதலானது உலகளாவிய நிரம்பல் சங்கிலிகளைப் பாதித்து அதன்மூலம் இறக்குமதிச் செலவினத்தினை அதிகரிக்கக்கூடும். சுற்றுலாத்துறையிலிருந்தான வருவாய்களில் எறிவுசெய்யப்பட்ட அதிகரிப்புடன் 2023இன் இரண்டாம் அரையாண்டுப் பகுதியில் உள்நாட்டுப் பொருளாதார நடவடிக்கைகளின் படிப்படியான இயல்புநிலைக்குத் திரும்புதல் மற்றும் உள்நாட்டுப் பணவீக்கத்தில் எதிர்பார்க்கப்படுகின்ற குறைப்பு என்பவற்றுடன் ஏனைய பணிகள் ஏற்றுமதிகளின் போட்டித்தன்மையில் எதிர்பார்க்கப்படும் மேம்பாடு என்பவற்றுடன் பணிகள் கணக்கு மிகை 2023இல் அதிகரிக்கக்கூடும். முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்களில் நாணயக் கொள்கை இறுக்கமடைதலினால் கடன்பாட்டுச் செலவுகளில் ஏற்படக்கூடிய சாத்தியமான அதிகரிப்பின் காரணமாக 2023இல் முதலாந்தர வருமானக் கணக்குப் பற்றாக்குறை சிறிதளவு விரிவடையக்கூடும். வெளிநாட்டுத் தொழில்வாய்ப்பிற்காக நாட்டிலிருந்தான தொடர்ச்சியான உயர்ந்தளவிலான புறப்படுகைகள் மற்றும் தொழிலாளர் பணவனுப்பல்களில் எதிர்பார்க்கப்படுகின்ற அதிகரிப்பு என்பன காரணமாக 2023இல் இரண்டாந்தர வருமானக் கணக்கு மிகை விரிவடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. வர்த்தகப் பற்றாக்குறை மற்றும் முதலாந்தர வருமானக் கணக்குப் பற்றாக்குறையின் சாத்தியமானளவிலான விரிவாக்கமானது பணிகள் மற்றும் இரண்டாந்தர வருமானக் கணக்குகளில் எதிர்பார்க்கப்படும் மேம்பாடுகளினால் தணிக்கப்பட்டு, 2023இல் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை மிதமான மட்டத்தில் தொடர்ந்திருக்கக்கூடிய நிலையினைத் தோற்றுவிக்கும். குறித்த சில உட்கட்டமைப்புச் செயற்றிட்டங்களின் மீளாரம்பம், எதிர்பார்க்கப்படுகின்ற வெளிநாட்டு நேரடி முதலீடுகள், கொழும்பு பங்கு பரிவர்த்தனை மற்றும் அரச பிணையங்கள் சந்தைகளில் வெளிநாட்டுச் சொத்துப்பட்டியல் முதலீடு பல்புடை

மற்றும் இருபுடைப் பங்குடமையாளர்களிடமிருந்தான ஏனைய வெளிநாட்டு நிதியிடல் பாய்ச்சல்களுடன் இணைந்து நிதியியல் கணக்கிற்கான உட்பாய்ச்சல்கள் 2023இல் வலுப்படுத்தப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இவ்வுட்பாய்ச்சல்கள் எதிர்வருகின்ற காலப்பகுதியில் இலங்கைப் பொருளாதாரத்துடனான பொருளாதார ஈடுபாட்டு வாய்ப்புகளில் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் மத்தியில் நம்பிக்கையினை வலுப்படுத்துமென எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், படுகடன் மறுசீரமைப்பு மற்றும் பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் கீழ் பொருளாதார சீராக்க நிகழ்ச்சித்திட்டத்தில் எதிர்பார்க்கப்படும் வெற்றிகரமான முன்னேற்றத்தின் மூலம் ஆதரவளிக்கப்பட்டு நடுத்தர காலத்தில் வெளிநாட்டுத்துறை நீடித்துநிலைத்திருக்கின்ற பாதையொன்றிற்குத் திரும்புமென எதிர்பார்க்கப்படுகின்றது. ஏற்றுமதியின் வளர்ச்சியானது இறக்குமதிகளின் அதிகரிப்பினை விஞ்சிக் காணப்படுமென எதிர்பார்க்கப்படுவதனால் வர்த்தகப் பற்றாக்குறை நடுத்தர காலப்பகுதியில் சுருக்கமடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இதேவேளை, உலகளாவிய பொருளாதாரத்தின் படிப்படியான இயல்புநிலைக்குத் திரும்புதல் மற்றும் உலகெங்கிலுமுள்ள மக்களின் அதிகரித்த நடமாட்டத்துடன் எதிர்வருகின்ற காலப்பகுதியில் தனது உள்ளார்ந்த ஆற்றல்வாய்ந்த தன்மையினை அடையும் விதத்தில் விரைவாக வளர்ச்சியடைந்து வருகின்ற சுற்றுலாக் கைத்தொழில் துறையின் வாய்ப்புகளிலிருந்து இலங்கை பயனடையக்கூடும். இது, போக்குவரத்துப் பணிசார் நடவடிக்கைகளில் எதிர்பார்க்கப்படுகின்ற மீளெழுச்சி மற்றும் தகவல் தொழில்நுட்பம்/ வெளியிலிருந்து வியாபாரப் பணிகளைப் பெற்றுக்கொள்கின்ற பணிகள் துணைத்துறையில் உயர் வளர்ச்சியுடன் இணைந்து, பணிகள் கணக்கிலுள்ள மிகையினை நடுத்தர காலத்தில் வலுப்படுத்துமென எதிர்பார்க்கப்படுகின்றது. படுகடன் மறுசீரமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் காரணமாக வட்டிக் கொடுப்பனவுகளில் எதிர்பார்க்கப்படும் குறைப்புடன், முதலாந்தர வருமானக் கணக்குப் பற்றாக்குறை எதிர்வருகின்ற காலப்பகுதியில் மிதமடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், வெளிநாட்டுத் தொழில்வாய்ப்புக்களுக்காக நாட்டிலிருந்தான புறப்படுகைகளில் படிப்படியான முன்னேற்றம், புலம்பெயர் தொழிலாளர்களுக்கான அதிகரித்த கேள்வி மற்றும் உத்தியோகபூர்வ வழிகளினூடாக பணவனுப்பல்களின் பாய்ச்சலில் தொடர்ச்சியான மீட்சி என்பவற்றுடன் தொழிலாளர் பணவனுப்பல்கள் நடுத்தர காலத்தில் நிலையாக மேம்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இதன் விளைவாக, வெளிநாட்டு நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையானது நடுத்தரக் காலத்தில் நீடித்துநிலைத்திருக்கின்றதன்மையிலான குறைந்த மட்டமொன்றிற்குப் படிப்படியாக வீழ்ச்சியடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், கொழும்புத் துறைமுக நகரம், கொழும்பு மேற்கு கொள்கலன் முனைக்கோடிகள் மற்றும் அம்பாந்தோட்டை கைத்தொழில் வலயம் போன்ற கைத்தொழில் வலயங்களின் அபிவிருத்தி என்பவற்றிற்கு எதிர்பார்க்கப்படுகின்ற படுகடனல்லாத உட்பாய்ச்சல்களுடன் நிதியியல் பாய்ச்சல்கள் நடுத்தர காலப்பகுதியில் வலுவடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. படுகடன் மறுசீரமைப்பின் வெற்றிகரமான இறுதிப்படுத்தல் மற்றும் பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதியினால் ஆதரவளிக்கப்பட்ட பொருளாதார சீராக்க நிகழ்ச்சித்திட்டம் என்பவற்றினைத் தொடர்ந்து மேம்பட்ட முதலீட்டாளர் நம்பிக்கையினால் நிதியியல் கணக்கிற்கான உட்பாய்ச்சல்கள் ஆதரவளிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. நடுத்தர காலத்தில் பேரண்டப்பொருளாதாரச் செயலாற்றத்தில் எதிர்பார்க்கப்படுகின்ற மேம்பாடு மற்றும் சாதகமான முதலீட்டாளர் மனோபாவங்கள் என்பவற்றினால் ஆதரவளிக்கப்பட்டு சொத்துப்பட்டியல் முதலீடு மற்றும் ஏனைய வெளிநாட்டு நிதியிடல் பாய்ச்சல்கள் படிப்படியாக மீட்சியடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இதன் விளைவாக, மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் நடுத்தர காலத்தில் வலுவடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

**பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதியினால் ஆதரவளிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நிர்ணயிக்கப்பட்டுள்ள நடுத்தர கால இறை இலக்குகளை அடையும் நோக்குடன் இறைத் திரட்சி மற்றும் பொருளாதார சீர்திருத்த நிகழ்ச்சித்திட்டத்திற்கான அதன் திடசங்கற்பத்தினைத் தொடர அரசாங்கம் எதிர்பார்க்கின்றது.** நடுத்தர காலத்திலிருந்து நீண்ட காலத்திற்கான ஆரம்ப மிகைகளை அடைவதுடன் 2027 ஆண்டளவில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 15 சதவீதத்தினை விஞ்சுகின்ற பேராவல்மிக்க அரசிறை இலக்கொன்றினை அரசாங்கம் அறிவித்துள்ளது. இந்நோக்கினை அடையும் பொருட்டு, ஏனையவற்றிற்கிடையில், பெறுமதிசேர் வரி வீதம், தொலைத்தொடர்பூட்டல் தீர்வை மற்றும் தனியாள் மற்றும் கம்பனி வருமான வரி வீதங்கள் என்பவற்றினை உயர்த்துதல், பெறுமதிசேர் வரி மற்றும் தனியாள் வருமான வரித் தளத்தினை விரிவுபடுத்துதல், பெற்றோலிய உற்பத்திகள், மதுபானம் மற்றும் புகையிலை உற்பத்திகள் மீதான கலால் தீர்வையினை அதிகரித்தல் மற்றும் சமூகப் பாதுகாப்புப் பங்களிப்புத் தீர்வையினை விதித்தல் போன்றவற்றினூடாக வலுவான அரசிறை மேம்பாட்டு வழிமுறைகளை அரசாங்கம் ஏற்கனவே நடைமுறைப்படுத்தியுள்ளது. அண்மைய ஆண்டுகளில் பதிவுசெய்யப்பட்ட மோசமான அரசிறைச் செயலாற்றப் போக்கினை மாற்றியமைப்பதன் மூலம் அண்மைய காலத்திலிருந்து நடுத்தர காலப்பகுதியில் இவ்வரசிறை மேம்பாட்டு வழிமுறைகள் நன்மைகளை விளைவிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. இருப்பினும், அரசாங்கத்தின் நடுத்தர கால அரசிறை இலக்குகளை அடையும் பொருட்டு அரசிறை நிர்வாக வழிமுறைகளை வலுப்படுத்துகின்ற அதேவேளையில், ஏற்கனவே கடுமையான வரிச்சுமைக்கு உட்பட்டுள்ள வரி செலுத்துவோர் பிரிவுகளிற்கு ஓரளவு நிவாரணத்தினையளிப்பதும் மிக அவசியமானதாகும். இதேவேளை, இறைப் பற்றாக்குறையைக்

1

கட்டுப்படுத்துவதற்கு இன்றியமையாததான செலவினங்களைச் சிக்கனப்படுத்துவதற்கும் குறைப்பதற்கும் அரசாங்கம் படிமுறைகளை மேற்கொண்டுள்ளது. இருப்பினும், மூலதனச் செயற்றிட்டங்களிற்கு முன்னுரிமையளித்தல், உற்பத்தித்திறனற்ற மீண்டெழும் செலவினங்களை அடையாளங்காணல் மற்றும் கட்டுப்படுத்தல், அரச துறை ஆட்சேர்ப்பினை வரையறுத்தல், சமூகப் பாதுகாப்பு வலையமைப்புக்களின் மேம்பட்ட இலக்கிடல் மற்றும் படுகடன் மறுசீரமைப்புச் செய்முறையின் விரைவான நிறைவு என்பன அரச செலவினங்களைக் கட்டுப்படுத்துவதற்கும் நடுத்தர காலப்பகுதியில் இறைத் திரட்சி முயற்சிகளை வலுப்படுத்துகின்ற அதேவேளையில், பொருளாதார நடவடிக்கைகள் மீதான ஏதேனும் சாத்தியமான எதிர்மறைத் தாக்கத்தினைக் குறைப்பதும் இன்றியமையாததாகும். முன்னெடுக்கப்படுகின்ற படுகடன் மறுசீரமைப்புச் செய்முறையின் நிறைவடைதலானது அரசாங்கத்தின் படுகடன் பணிச் சுமையில் குறிப்பிடத்தக்க குறைப்பொன்றினைத் தோற்றுவித்து, பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் கீழ் எதிர்பார்க்கப்படுகின்றவாறு 2027-2032 காலப்பகுதியில் வருடாந்த மொத்த நிதியிடல் தேவைகளை சராசரியாக மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 13 சதவீதத்திற்குக் கீழாக மட்டுப்படுத்துமென எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், அரசாங்கத்தின் வெளிநாட்டு படுகடன் பணிக்கொடுப்பனவுகள் 2027-2032 காலப்பகுதியில் ஏதேனும் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4.5 சதவீதத்திற்குக் கீழாகப் பேணப்பட்டு, அதன்மூலம் படுகடன் பணிக்கொடுப்பனவு அழுத்தங்கள் பாரியளவிற்குத் தளர்வடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், பொதுப் படுகடனானது 2032 ஆம் ஆண்டளவில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏறத்தாழ 95 சதவீதத்திற்குக் குறைவடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. நடுத்தர காலத்தில் பேராவல்மிக்க ஆரம்ப மிகைப் பாதையானது படுகடன் திரட்சியை நடுத்தர காலத்தில் குறைப்பதற்குத் துணைபுரியும். அதே நேரத்தில், உபாயமற்ற அரசிற்குச் சொந்தமான தொழில் முயற்சிகளின் முதலீடுகளை திரும்பப் பெறுதல் மற்றும் பயன்பாடுகளுக்கான செலவைப் பிரதிபலிக்கக்கூடிய விலைகளின் தொடர்ச்சி மற்றும் ஏனைய அரசிற்குச் சொந்தமான தொழில் முயற்சிகளின் சீர்திருத்தங்கள் என்பன அரசிற்குச் சொந்தமான தொழில் முயற்சிகளின் வினைத்திறனை மேம்படுத்துமெனவும் அரசாங்க வரவு செலவுத்திட்டத்தின் மீதான அத்தகைய நிறுவனங்களின் சுமையைக் குறைக்குமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், இறை விதிமுறைகளை மேலும் வலுப்படுத்தும் புதிய பொது நிதியியல் முகாமைத்துவச் சட்டத்தின் எதிர்பார்க்கப்படுகின்ற சட்டவாக்கத்துடன் பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதியினால் ஆதரவளிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அரசாங்க நிதியிடல்களின் முகாமைத்துவமானது மேம்படுத்தப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. முன்மொழியப்பட்ட படுகடன் மறுசீரமைப்புச் செய்முறையின் நிறைவடைதல் மற்றும் பொதுத்துறையில் வினைத்திறன், பொறுப்புக்கூறல் மற்றும் வெளிப்படைத்தன்மை என்பவற்றிற்கான பரந்த அடிப்படையிலமைந்த பொருளாதார சீர்திருத்தங்களின் நடைமுறைப்படுத்தல் என்பவற்றுடன் இறைத் துறைச் செயலாற்றமானது நடுத்தர காலத்தில் நீடித்துநிலைத்திருக்கும் வகையில் மேம்படுத்தப்பட்டு, அதன்மூலம் பல தசாப்தங்களாக பொருளாதாரத்தில் தாக்கம் செலுத்திய பொருளாதார வளர்ச்சிக்கெதிரான பெரும் தடைகளைத் தீர்க்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

## 1.5 பிரச்சனைகளும் கொள்கைகளும்

**ஒரு சில தசாப்தங்களுக்கு முன்னர் அபிவிருத்தியடைந்து வருகின்ற உலகின் மிகுந்த நம்பிக்கையூட்டுகின்ற நாடுகளிலொன்றாக விளங்கிய இந்நாட்டினை உறுதியான சமூகப் பொருளாதார முன்னேற்றங்களையும் சுபீட்சத்தினையும் நோக்கி வழிநடத்திச் செல்வதற்கு தொடர்ந்து வந்த அரசாங்கங்கள் தவறிவிட்டமையின் காரணமாக இன்று இந்நாடு பல்வேறுபட்ட நெருக்கடிகளை வெற்றி கொள்வதற்கு கடுமையாகப் போராட வேண்டியிருக்கிறது.** சுதந்திரத்திற்குப் பின்னர் அநேக முன்முயற்சிகள் எடுக்கப்பட்ட போதும் வலுவானதும் முரண்பாடற்றதுமான தேசிய கொள்கைக் கட்டமைப்பொன்று இல்லாமையின் காரணமாக முன்னேறுவதில் இடர்ப்பாடுகளைக் கொண்டிருந்தது. இதன் மூலம் மோசமான பேரண்டப் பொருளாதாரச் செயலாற்றம், வழிவழியாக வந்த பிரச்சனைகளைப் பிரதிபலிக்கின்ற நீடித்த இரட்டைப் பற்றாக்குறைகள், மெதுவான பரிணாமம், மாற்றங்களுக்கு இசைந்து கொடுக்கும் நெகிழ்வுத்தன்மை, நிலைமாற்றம் என்பனவற்றினைத் தோற்றுவித்து அவற்றின் மூலமாக முன்னேற்ற வேகத்தினை குறைவடையச் செய்து, குறிப்பாக, மிக அண்மிய தசாப்தங்களில் அயல் பொருளாதாரங்களை விட மிக அதிகளவிற்குப் பின்தங்கச் செய்துவிட்டது. மூன்று தசாப்தங்களாக நீண்ட உள்நாட்டு மோதல்கள் முடிவடைந்தமை புதியதொரு ஆரம்பத்தினை நாட்டிற்கு வழங்கிய போதும், தொலைநோக்கற்ற கொள்கைகளும் சரியான கொள்கை நடவடிக்கைகளையும் சீர்திருத்தங்களையும் நடைமுறைக்கிடுவதில் ஒத்திசைவு நிலைமை காணப்படாமையும் பெரும் எண்ணிக்கையான சமூக அரசியல் மற்றும் பேரண்டப் பொருளாதாரச் சவால்களுடன் சேர்ந்து பொருளாதாரம் அதன் உள்ளார்ந்த வளத்தினை அடைவதனைத் தடுத்தன. இச்சவால்களில் அநேகமானவற்றையும் நீண்ட காலப் பிரச்சனைகளையும் வெற்றி கொள்வதற்கு கொள்கை வகுப்போரும் தொடர்பான அதிகாரிகளும் சாத்தியமான வலி நிரம்பிய, ஆனாலும் மிக இன்றியமையாத சீர்திருத்தங்களை நடைமுறைக்கிடுவதனை ஆரம்பிப்பது அவசர தேவையாகவுள்ளது. மிக முக்கியமான விடயம் யாதெனில் நெருக்கடியொன்று அமைப்பியல் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்காக மாற்றங்களைக் கொண்டு வருவதற்கும் சீர்திருததங்களை நடைமுறைப்படுத்துவதற்கும்

பல வாய்ப்புக்களை அதாவது பொருளாதாரத்தினை மீளச்சீர்செய்வதற்கான வாய்ப்பொன்றினை வழங்குகின்றது. இந்நீண்ட காலப் பிரச்சனைகளில் சிலவற்றைத் தீர்ப்பதற்கு அண்மைக் காலத்தில் எடுக்கப்பட்ட பல வழிமுறைகள் பாராட்டப்பட வேண்டிய வேளையில் நடுத்தர காலத்தில் அமைப்பியல் சீர்திருத்தங்களுக்கு அரசாங்கம் தொடர்ந்தும் கடப்பாடு கொண்டதாக இருப்பது அவசியம் என்பதுடன் எஞ்சியுள்ள நடவடிக்கைகள் அரசியல் நிகழ்ச்சிநிரலைக் கவனத்திற் கொள்ளாது அத்தகைய அண்மைக்கால நடவடிக்கைகள் நடுத்தர கால நிகழ்ச்சிநிரலுடன் இணைக்கப்பட வேண்டும்.

**நீண்ட காலமாக காலங்கடந்த சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்கான இலங்கையின் தீர்க்கமும் கடப்பாடும் நடுத்தர காலத்திலிருந்து நீண்ட காலத்தில் பொருளாதாரத்தின் போக்கினை வடிவமைக்கின்ற முக்கிய காரணியாக இருக்கும்.** 2023 மாச்சில் ஒப்புதலளிக்கப்பட்ட ப.நா.நிதிய - விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் ஐ.அ.டொலர் 3 பில்லியன் மற்றும் மற்றைய பன்னாட்டு நிதியியல் நிறுவனங்களிலிருந்து எதிர்பார்க்கப்படும் உதவியுடன் சேர்ந்து, முன்னொருபோதுமில்லாத நாட்டின் படுகடன் மற்றும் சென்மதி நிலுவை நெருக்கடிகளிலிருந்து கிட்டிய காலத்தில் பொருளாதாரம் நிலைமாறிச் செல்வதற்கான கொள்கை இடைவெளியை வழங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனினும், எதிர்காலத்தில் அத்தகைய நெருக்கடிகள் மீண்டும் நிகழாமல் இருப்பதும் நடுத்தரத்திலிருந்து நீண்ட காலத்தில் பொருளாதார மீட்சியின் உறுதித்தன்மையும் ப.நா.நிதிய - விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் கீழ் கோடிட்டுக் காட்டப்பட்ட பேரண்டப் பொருளாராதார சீராக்க நிகழ்ச்சித்திட்டத்தின் வெற்றிகரமான நடைமுறைப்படுத்தலின் மீதே தங்கியிருக்கிறது. இதற்கு வலுவான அரசியல் மற்றும் கடப்பாடு பக்கபலமாக அமைவது அவசியமாகும். இப்பேரண்டப் பொருளாதார சீராக்க நிகழ்ச்சித்திட்டத்தின் மிக முக்கியமான கூறுகளாக (i) இறை உறுதிப்பாட்டினை மீண்டும் அடைந்து கொள்வதனையும் இறை ஒழுக்காற்றினை வலுப்படுத்துவதனையும் நோக்காகக் கொண்ட அரசிறையினால் பிரதானமாக வழிநடத்தப்படும் பேராவல்மிக்க இறைத்திரட்சியும் அதனுடனிணைந்து சமூகப் பாதுகாப்பு வலையமைப்பு, இறை நிறுவனங்கள் மற்றும் அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளுக்கான சீர்திருத்தங்கள் (ii) பொதுப்படுகடனை மீண்டும் உறுதிப்படுத்துவதனை நோக்கமாகக் கொண்ட நாட்டிற்கான படுகடன் மறுசீரமைப்பு உபாயங்கள் (iii) அதிகளவு செலாவணி வீத நெகிழ்ச்சித்தன்மையுடன் விலை உறுதிப்பாட்டினை மீண்டும் அடைவதற்கும் பன்னாட்டு ஒதுக்குகளை மீண்டும் கட்டியெழுப்புவதற்குமான பல்முனை கொண்ட உபாயங்கள் (iv) நிதியியல் உறுதித்தன்மையினை பாதுகாப்பதற்கான கொள்கைகள் (v) ஆளுகை மற்றும் ஊழல்களினால் பாதிக்கப்படும்தன்மைகளைக் கட்டுப்படுத்துவதற்கான முக்கிய சீர்திருத்தங்கள் (vi) இலங்கையின் வளர்ச்சிக்கான உள்ளார்ந்த வளத்தினை வெளிக்கொணர்வதற்கான பரந்த அமைப்பியல் சீர்திருத்தங்கள் என்பன உள்ளடங்குகின்றன. 1965 இலிருந்து இலங்கை பதினாறு ப.நா.நிதிய நிகழ்ச்சித்திட்டங்களுடன் ஈடுபட்டிருந்தபோதும், அத்தகைய பன்னாட்டு நிகழ்ச்சித்திட்டங்கள் ஒரு சில மீளாய்வுகளின் பின்னர் அவசர அவசரமாக கைவிடப்பட்டதன் காரணமாக இந்நிகழ்ச்சித்திட்டங்களின் வெற்றிகரமான நிறைவு மற்றும் சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துதல் போன்றவற்றின் வரலாறு நலிவடைந்ததாகவே காணப்படுகின்றது. இது இடர்ப்பாடான பொருளாதார காலங்களில் அத்தகைய நிகழ்ச்சித்திட்டங்களில் நுழைவதும் பொருளாதாரத்தில் சிறிதளவு முன்னேற்றம் ஏற்பட்டதும் உரிய காலத்திற்கு முன்னதாகவே வெளியேறுவதும் போன்ற பயனற்ற சுழற்சியினையே தோற்றுவித்திருக்கின்றன. இத்தகைய பின்னணியில், தற்போதைய ப.நா.நிதிய - விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் கீழ் ஒவ்வொரு மீளாய்வின் போதும் எதிர்பார்க்கப்பட்ட கால வரையறைக்குட்பட்ட இலக்கினைப் பூர்த்திசெய்யும் விதத்தில் கொள்கை வகுப்பாளர்கள் அதிகரித்த கடப்பாடுகளையும் ஒழுக்காற்றினையும் காட்ட வேண்டியமை மிக முக்கியமான விடயமாக அமைகின்ற வேளையில் மேம்பட்ட விழிப்புணர்வு மற்றும் வெளிப்படையான தொடர்பூட்டல்களூடாக தேவையான பொருளாதாரச் சீராக்கங்களுக்கு பொதுமக்களின் ஆதரவு பெற்றுக்கொள்ளப்பட வேண்டியதும் முக்கியமானதாகும். இது நீண்ட காலம் புறக்கணிக்கப்பட்டிருந்த அமைப்பியல் சீராக்கங்களை நடைமுறைப்படுத்துவதற்கான வாய்ப்பொன்றினை வழங்குகின்றமை மட்டுமன்றி, கடுமையான தளம்பல்களுக்கும் அடிக்கடி ஏற்படும் வலி மிகுந்த சீராக்கங்களுக்கும் உட்படாமல் நடுத்தர காலத்தில் வலுவானதொரு வளர்ச்சிப் பாதைக்கு மாறிச் செல்லும் விதத்தில் பொருளாதாரத்தினை காலூன்றச் செய்வதற்கும் உதவும். தேவையான அமைப்பியல் சீர்திருத்தங்களை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவது அவசரகால நிதியிடல் தேவைகளுக்காக ப.நா.நிதியத்தினை மீண்டும் மீண்டும் அணுகுவதனையும் படுகடன் மறுசீரமைப்பு தேவைப்பாடுகளையும் தவிர்த்துவிடும். 2022இன் அநேகமான காலப்பகுதியில் மோசமான நிலைமையிலிருந்து பொருளாதார நிலைமைகள் விரைவாக வழமைக்குத் திரும்புகின்றமை மேலே குறிப்பிடப்பட்ட சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதற்கு வசதியளிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. குறிப்பாக, முன்னைய ப.நா.நிதிய நிகழ்ச்சித்திட்டங்களைப் போலன்றி, பெருமளவிற்கு வலி நிரம்பிய சீர்திருத்தங்கள் தற்போதைய விரிவாக்கப்பட்ட நிதிய வசதியில் முன்னதாகவே ஏற்றுக்கொள்ளப்பட்டுவிட்டமையினால் அத்தகைய சீர்திருத்தங்களை இனித் தொடர்வது ஒப்பீட்டு ரீதியில் சுமுகமானதாகவிருந்து அதன்மூலம் தற்பொழுது இடம்பெற்றுவரும் நிகழ்ச்சித்திட்டத்தினை வெற்றிகரமாக நிறைவுசெய்வதற்கு பொருளாதாரத்தினை இயலச்செய்யும்.

1

**முன்னோக்கிப் பார்க்கையில், மறுசீரமைப்புக் காலத்திற்கு பின்னர் வெளிநாட்டு படுகடனின் உறுதித்தன்மையினைப் பேணுவதற்கு இலங்கை வெளிநாட்டு நிதியிடலைக் காத்திரமான விதத்தில் முன்னுரிமைப்படுத்திக் கொள்வதும் பயன்படுத்திக் கொள்வதும் மிக அவசியமாகும்.** இலங்கை 2007 இலிருந்து இன்றுவரை மொத்தமாக ஐ.அ.டொலர் 17.6 பில்லியன் நாட்டிற்கான பன்னாட்டு முறிகளையும் 2001 இலிருந்து இன்று வரை ஐ.அ.டொலர் 17.2 பில்லியன் கொண்ட இலங்கை அபிவிருத்தி முறிகளையும் வழங்கியிருக்கிறது. நாட்டிற்கான பன்னாட்டு முறிகளினதும் இலங்கை அபிவிருத்தி முறிகளினதும் பெறுகைகள் அவை வழங்கப்பட்ட ஆரம்ப காலத்தில் மாத்திரம் முக்கியமாக அபிவிருத்தி நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்ட வேளையில் அதன் பின்னர் வழங்கப்பட்ட பெறுகைகளின் பெரும்பங்கும் வரவு செலவுத்திட்டத்திற்கு ஆதரவளிப்பதற்கு அல்லது முக்கியமாக பாரிய வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறைகள் மற்றும் அரசின் மொத்த நிதியிடல் தேவைகளை உயர்வடையச் செய்த வெளிநாட்டுப் படுகடன் தொகை காரணமாக ஏற்பட்ட படுகடன் மீள்கொடுப்பனவுகளுக்கும் அத்தகைய படுகடன் மீதான வட்டிக் கொடுப்பனவுகளுக்கும் முக்கியமாக பயன்படுத்தப்பட்டன. இது உலக சந்தையிலிருந்து வர்த்தக வீதங்களில் மேலதிக வெளிநாட்டு நாணயக் கடன் பெறுகைகளை கட்டாயப்படுத்தியது. இதன்படி, நாட்டிற்கான பன்னாட்டு தரமிடல் மற்றும் நாட்டின் பொருளாதார நிலைப்பாடுகளில் எதிர்பார்க்கப்படும் முன்னேற்றங்களுக்கு மத்தியில் இலங்கையின் படுகடன் உபாயம், உயர்ந்தளவு வர்த்தக வெளிநாட்டு நாணயப் படுகடனின் மீது தங்கியிருப்பதிலிருந்து பங்குரிமை மூலதனத்தினை அடிப்படையாகக் கொண்ட வெளிநாட்டு நிதியிடலுக்கு மாற்றமடைய வேண்டியது அவசியம். வெளிநாட்டு நிதியிடல் கலப்பு மற்றும் உபாயம் போன்றவை அத்தகைய நிதிகளைப் பயன்படுத்துவதற்கான நோக்கத்தினையும் வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சலை உருவாக்குவதற்கான இயலாற்றலை மேம்படுத்துவது பற்றிய நோக்கங்களை அடையாளம் காண்பதன் மூலம் கவனமாக உருவாக்கப்பட வேண்டும். எடுத்துக்காட்டாக, புதுப்பிக்கத்தக்க வலு போன்ற உபாய ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த செயற்றிட்டங்களுக்குள் வெளிநாட்டு நிதியினைக் கவருவது இறைத் துறை மற்றும் வெளிநாட்டுத் துறையின் மீது அளவுக்கதிகமான அழுத்தங்களை ஏற்படுத்தாமல் வலுத் துறையின் பாதிக்கப்படும்தன்மைகளைக் கட்டுப்படுத்துவது இன்றியமையாததாக இருக்கும். மேலும், ஏதேனும் வடிவில் படுகடன் நிதியிடலை நாடுவதற்கான எதிர்கால முயற்சிகள், எதிர்காலத்தில் படுகடனால் பாதிக்கப்படும் தன்மைகள் எழக்கூடாது என்பதனை உறுதிப்படுத்தும் விதத்தில் செலவு மற்றும் நன்மைகளுக்கெதிராகவும் அத்தகைய நிதிகளுக்கான அவசியத்தின் அடிப்படையிலும் பக்கசார்பற்று மதிப்பீடு செய்யப்படல் வேண்டும்.

நாட்டினை உலகளாவிய நிதியியல் மற்றும் மூலதனச் சந்தைகளுக்கு திறப்பதற்கு முன்னர், **ப.நா.நிதிய - விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் கீழ் எடுத்துக்காட்டப்பட்ட படுகடன் உறுதித்தன்மை இலக்குகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் படுகடன் மறுசீரமைப்பு செயற்பாட்டினை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவது முக்கியமானதாகும்.** ப.நா.நிதிய - விரிவாக்கப்பட்ட வசதியின் ஏற்பாடுகளின் கீழ் நிர்ணயிக்கப்பட்டுள்ள படுகடன் உறுதித்தன்மை இலக்குகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் படுகடன் மறுசீரமைப்புச் செய்முறைகளை விரைவான முறையில் இறுதிப்படுத்துவது அவசியமாகும். 2023 மாச்சு இறுதியில் உள்நாட்டுப் படுகடன் மீது மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகளை பொதுமக்களுக்கு அறிவித்ததனைத் தொடர்ந்து இலங்கையின் படுகடன் மறுசீரமைப்பு உபாயங்களை பகிரங்கமாக அறிவிக்கும் திட்டங்கள் இடம்பெற்று வருகின்றமையானது படுகடன் மறுசீரமைப்புச் செய்முறைகள் நேரகாலத்துடன் ஆரம்பிக்கப்படுவதனை இயலுமைப்படுத்தும். 2023 செத்தெம்பருக்கு முன்னதாக இச்செய்முறையினை இறுதிப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. வெற்றிகரமான படுகடன் மறுசீரமைப்பிற்குப் பின்னரும் கூட பன்னாட்டுத் தரமிடலில் ஏற்படக்கூடிய ஏதேனும் முன்னேற்றங்கள் படிப்படியாக மாத்திரமே செய்முறைப்படுத்தப்படும் என்பதுடன் பொருளாதாரத்தினை வெற்றிகரமாக மீளக்கட்டியெழுப்புவதன் மீது இது தங்கியிருக்கும். நாடுகள் மறுசீரமைப்பினை மேற்கொண்ட பின்னர் நாட்டிற்கான தரமிடலை மேம்படுத்துவதற்கும் இருபுடை மற்றும் வர்த்தக கடன்வழங்குவோரிடமிருந்து வெளிநாட்டு நிதியிடலைக் கவர்ந்து கொள்வதற்கும் முன்னதாக நம்பிக்கையினைக் கட்டியெழுப்ப வேண்டியிருக்கும் என்பதனையும் பன்னாட்டு அனுபவங்கள் காட்டுகின்றன. இப்பின்னணியில், நாடு படுகடன் நிதியிடலிலிருந்து நடுத்தர காலத்தில் வெளியேறுவதற்கு முயற்சிக்க வேண்டும் என்பதுடன் பங்குரிமை மூலதன நிதியிடல் போன்ற படுகடனை உருவாக்காத நிதியிடல் மூலங்களை முக்கியமாக வெளிநாட்டு நேரடி முதலீடு மற்றும் அரச தனியார் பங்குடமை ஏற்பாடுகளூடான மூலங்களூடாகக் கவர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

**இழப்புக்களை ஏற்படுத்துகின்ற அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளை மாற்றியமைப்பதற்காகவும் இறைச் சுமையினை ஒழித்துவிடுவதற்காகவும் நீண்ட காலமாகத் தேவைப்பட்ட அமைப்பியல் சீர்திருத்தங்களை விரைந்து மேற்கொள்வது அவசியமாக இருப்பதுடன் இதன் மூலம், இறை மற்றும் பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டிற்கு முட்டுக்கட்டையாக விளங்கும் இந்நிறுவனங்களிலிருந்து எழும் இடர்நேர்வுகள் கட்டுப்படுத்தப்படும்.** அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் மின்வலு, பெற்றோலியம், நீர், வங்கித்தொழில், போக்குவரத்து, விமானப் போக்குவரத்து போன்ற எண்ணற்ற உபாய ரீதியில் முக்கியத்துவம் பெற்ற பொருளாதாரத் துறைகளில் முக்கிய வகிபாகங்களை

ஆற்றுகின்ற போதும் இந்நிறுவனங்களின் குறிப்பிடத்தக்க பங்கு தொடர்ந்தும் தொழிற்பாட்டு வினைத்திறனின்மை, மோசமான ஆளுகை மற்றும் தவறான முகாமைத்துவம், பொறுப்புக்கூறும் மற்றும் வெளிப்படைத்தன்மை குறைவாக இருத்தல், நலிவடைந்த சந்தை சார்ந்த தன்மைகள் மற்றும் மிகையான தொழிற்படை என்பன உள்ளிட்ட பரந்தளவு பிரச்சனைகளினால் தொடர்ந்தும் முடக்கப்பட்டிருக்கின்றன. இதையொட்டி, இப்பிரச்சனைகள் அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் பலயீனமான நிதியியல் செயலாற்றத்தினை அதிகரித்து அதன் காரணமாக அரசிற்குச் சொந்தமான வங்கிகளின் மீதும் மிக அண்மையில் சில தனியார் வங்கிகளின் மீதும் அவற்றின் மோசமான தாக்கங்கள், மூலதன உள்ளீடுகளினூடாக அரச நிதி இழக்கப்படுதல், அரசாங்கத்தின் நிகழத்தக்க பொறுப்புக்கள் அதிகரித்தல் மற்றும் பொதுமக்களுக்கான பணிகளின் கேள்விக்குரிய தரம் என்பனவற்றினூடாக நாட்டிற்கு பல்வேறு விதமான பேரண்டப் பொருளாதார சுமைகளை ஏற்படுத்தி வருகின்றன. எடுத்துக்காட்டாக, 2022 இறுதியில் வங்கித்தொழில் துறையிலிருந்தான அரச கூட்டுத்தாபனங்களுக்கான கொடுகடன் ரூ.1.7 றில்லியனாக[4] விளங்கிய வேளையில் அரசாங்கம் 2022 காலப்பகுதியில் இலங்கை மின்சார சபையின் திரவத்தன்மை அழுத்தங்களைத் தளர்த்துவதற்காக பங்குரிமை மூலதனமாக ரூ.80 பில்லியனை வழங்குவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டது. இலங்கையிலுள்ள அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் பொதுவாக பாராளுமன்றச் சட்டமொன்றினால் நிறுவப்படும் போது பல அரசிற்குச் சொந்தமாக தொழில்முயற்சிகள் கம்பனிச் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டிருப்பதன் மூலம் பாராளுமன்றத்தின் மேற்பார்வையினைப் புறக்கணிப்பதற்கான சாத்தியத்தினை வழங்குகின்றது. மேலும், அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளில் பெரும்பாலானவற்றின் நிதியியல் கணக்குகள் உரிய நேரத்திலான தயாரிப்பதும் இக்கூற்றுக்களை வெளிப்படுத்துவதும் பெருமளவிற்கு இடம்பெறுவதில்லை என்பதனால் வெளிப்படைத்தன்மையும் பொதுமக்களுக்கான நுண்ணாய்வுகளும் பாதிக்கப்படுகின்றன. மோசடி, ஊழல், தவறான முகாமைத்துவம் மற்றும் சில நிறுவனங்களில் காணப்படும் கவனக்குறைவுகள் போன்ற பிரச்சனைகள் அடையாளம் காணப்பட்ட போதிலும் இத்தகைய பிரச்சனைகள் தொடர்புபட்ட சபை மட்டங்களிலும் பாராளுமன்றக் குழு மட்டங்களிலும் நேர காலத்துடன் தீர்க்கப்படவில்லை. மேலும், தொடர்ந்து வந்த அரசாங்கங்கள் அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளை ஜனரஞ்சகக் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்காக பயன்படுத்தியிருக்கின்றன. உதாரணமாக, வலு, பெற்றோலியம், நீர், போக்குவரத்து போன்றவற்றை உள்ளடக்கிய பொதுப் பயன்பாடுகள் மற்றும் அரச துறை பணிகள் நீண்ட காலமாக செலவினை மீட்கத்தக்க விலைகளிலும் பார்க்க கீழேயே பொதுமக்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. இந்த இலக்கிடப்படாத உதவுதொகைகளின் செலவுகள் அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளினால் தாங்கப்பட்டமையானது பாரிய ஒன்றுதிரண்ட இழப்புக்களை விளைவித்திருப்பதுடன் இவை மத்திய அரசாங்கத்தின் வரவு செலவுத்திட்டத்திலிருந்து செய்யப்பட்ட மாற்றல்களினால் பெருமளவிற்கு ஈடுசெய்யப்பட்டன. செலவினைப் பிரதிபலிக்காத விலைகள் நாட்டின் முக்கியமான அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் மோசமான நிதியியல் செயலாற்றத்திற்கும் மோசமான சந்தை சார்ந்த தன்மைகளுக்கும் முக்கிய காரணமாக இருந்து வருகின்றன. மேலே குறிப்பிடப்பட்ட அனைத்துப் பிரச்சனைகளும் இலாபம் தரும் வர்த்தக ரீதியான தொழில்முயற்சிகளாக தொழிற்படுவதற்கு அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளை ஊக்குவிக்கவில்லை என்பதுடன் அதன்மூலம் அரசாங்கம், வங்கிகள் மற்றும் பொதுமக்களுக்குத் தேவையற்ற சுமையை ஏற்படுத்தியுள்ளன. அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் கடன்பெறுகைகள் கடந்த காலத்தில் உறுதித்தன்மையற்ற உயர்ந்த மட்டங்களை அடைந்த போது அரசாங்கத்தின் அரசிறைச் சேகரிப்புக்களைப் பயன்படுத்தி அத்தகைய படுகடன் சுமைகளை விடுவிப்பதற்கு நடவடிக்கைகளை எடுக்க அரசாங்கம் நிர்ப்பந்திக்கப்பட்டது. பன்னாட்டு நாணய நிதிய - விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாடுகளின் கீழ் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் ரூ.884.1 பில்லியன் கொண்ட வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடன் (ஐ.அ.டொலர் 2,434.8 மில்லியன்) 2022 இறுதியில் மத்திய அரசாங்கத்தின் படுகடனாக ஈர்த்துக்கொள்ளப்பட்டது. மேலும், சீன எக்சிம் வங்கியிலிருந்து பெறப்பட்டு இலங்கை துறைமுக அதிகாரசபை, இலங்கை மின்சார சபை, எயார்போட் அன்ட் ஏவியேஷன் சேர்விஸஸ் பிறைவேற் லிமிடெட் என்பனவற்றின் கீழ் பதிவுசெய்யப்பட்ட எட்டுக் கடன்களின் வெளிநின்ற நிலுவையான ரூ.518.3 பில்லியன் (ஐ.அ.டொலர் 1,427.3 மில்லியன்) கொண்ட தொகை 2022 இறுதியில் மத்திய அரச படுகடனுக்குள் ஈர்த்துக் கொள்ளப்பட்டது. இப்பின்னணியில் அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் வினைத்திறன், நிதியியல் ஆற்றல் வாய்ந்த தன்மை மற்றும் பொறுப்புக்கூறும் தன்மை என்பனவற்றினை மேம்படுத்துவதற்காக அவற்றுடன் தொடர்பான நிறுவன ரீதியான சீர்திருத்தங்கள் அதிகளவிற்குத் தேவைப்படுகின்றன. அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளை நிதியியல் ஆற்றல் வாய்ந்தனவாகச் செய்வதற்கான அவசியத்தினை அங்கீகரிக்கின்ற விதத்தில் பன்னாட்டு நாணய நிதிய - விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாடுகள் பல முக்கியமான பொது வசதிகளின் செலவினைப் பிரதிபலிக்கும் விலைத் திருத்தங்களை அறிமுகப்படுத்துவதற்கு விதந்துரைத்திருக்கின்றன. அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் அவற்றின் வினைத்திறனற்ற தன்மைகளை உயர்ந்த விலைகளின் மூலம் பொதுமக்கள் மீது சுமத்தாமல்

4 2022 திசெம்பரிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் மத்திய அரசாங்கத்தின் படுகடனாக ஈர்த்துக்கொள்ளப்பட்ட அரசாங்கம் உத்தரவாதமளித்த இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வெளிநாட்டு நாணயப் படுகடனின் வெளிநின்ற நிலுவையினை இது உள்ளடக்குகின்றது.

அதிகரித்த வருமானத்தை உருவாக்குவது மட்டுமன்றி செலவுகளைக் குறைப்பதற்கு கடினமாக முயல்வதனை உறுதிப்படுத்தும் விதத்தில் வெளிப்படையான தன்மைகளை தொடர்ந்தும் அதிகரிப்பதற்கு அத்தகைய விலையிடல் பொறிமுறைகள் அவசியமாகின்றன. மேலும், உபாய ரீதியற்ற அரசிற்குச் சொந்தமான வியாபார தொழில்முயற்சிகளைப் பொறுத்தவரையில் அத்தகைய தொழில்முயற்சிகளின் இறைச் சுமையினைக் குறைப்பதற்கும் மேம்பட்ட நிறுவன ரீதியானதும் மற்றும் வர்த்தக வினைத்திறனை உறுதிப்படுத்துவதற்கும் உரித்து நீக்கம் செய்யப்படுவதற்காக அல்லது கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்படுவதற்காக பரிசீலனையில கொள்ளப்படுதல் வேண்டும். எஞ்சியுள்ள அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் நிறுவன ரீதியான வெளிப்படைத்தன்மையும் பொறுப்புக்கூறும் தன்மையும் பொறுப்பாணையூடாகவும் கிரமமான பாராளுமன்ற மேற்பார்வையினூடாகவும் அதிகரிக்கப்படுதல் வேண்டும். அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளுக்கு பிணிக்கப்பட்ட நிறுவன ரீதியான இலக்குகள் மற்றும் குறிக்கோள்கள் வழங்கப்படுதல் வேண்டுமென்பதுடன் அவை முக்கிய செயலாற்றக் குறிகாட்டிகளுடன் இணைக்கப்பட்டிருத்தலும் வேண்டும். இதற்கு அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் முகாமைத்துவம் பொறுப்புக்கூறத்தக்க தன்மையினைக் கொண்டிருத்தல் வேண்டும். இவ்வரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் சபைகளினாலும் முகாமைத்துவத்தினாலும் ஊழியர்களினாலும் பெறப்படுகின்ற ஊக்குவிப்புக்களும் நன்மைகளும் அவர்களது செயலாற்றம் மற்றும் நிறுவன ரீதியான இலக்குகளின் சாதனை என்பனவற்றுடன் இணைக்கப்படுதல் வேண்டும். இதன்படி, அத்தகைய தொழில்முயற்சிகள் பொருளாதாரத்தில் வளர்ச்சி வசதிப்படுத்துநராக தோற்றம் பெறுவதனை உறுதிப்படுத்துவதற்கு அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் சீர்திருத்த நிகழ்ச்சித்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு அரசு தொடர்ந்தும் கடப்பாடுடையதாக இருப்பது அவசியமானதாகும். மேலும், அரசாங்கத்தினால் ஏற்கனவே அடையாளம் காணப்பட்டவாறு மின்வலுத் துறையின் தொழிற்பாட்டு வினைத்திறனை எய்துவதற்கு வலுத் துறைக்கு மின் உருவாக்கம், ஊடுகடத்தல் மற்றும் விநியோகித்தல் துணைத் துறைகள் என்பனவற்றை வெவ்வேறாக்குவதற்கான கடுமையான சீர்திருத்தங்கள் தேவைப்படும். இலங்கை மின்சார சபை போன்ற அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் தனியார் துறை வலு வழங்குனர்களுடன் செய்துகொள்ளப்பட்ட வர்த்தக ஒப்பந்தங்கள் இலங்கை மின்சார சபைக்கு செலவினை ஏற்படுத்தும் மிதமிஞ்சிய அனுகூலங்களை அத்தகைய கம்பனிகளுக்கு மாற்றப்படாமலிருப்பதனை உறுதிப்படுத்தும் வகையில் மீளாய்வு செய்யப்பட வேண்டும். அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் வினைத்திறனையும் வெளிப்படைத்தன்மையினையும் உறுதிப்படுத்துவதற்கு அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் இந்நிறுவன ரீதியான சீர்திருத்தங்கள் எவ்வித தாமதமுமின்றி நடைமுறைப்படுத்தப்படல் வேண்டிய அதேவேளை, மத்திய அரச நிதிகளின் மீதான சுமையும் குறைக்கப்படுதல் வேண்டும்.

**வரி விதிப்புக் கொள்கைகள் மற்றும் வரி நிருவாகம் என்பனவற்றிற்கான சீர்திருத்தங்களும் சட்டத்திற்கு இணங்கியொழுகின்ற கட்டமைப்பினை வலுப்படுத்துவதும் அரசாங்கத்தின் அரசிறை இலக்குகளை எய்துவதற்கு மிக முக்கியமானவையாக இருப்பதுடன் இதன் மூலம் எதிர்காலத்தில் பேரண்டப் பொருளாதார நிலுவை மீண்டும் அடையப்படும்.** அயல் பொருளாதாரங்களுடன் ஒப்பிடுகையில் இலங்கையில் விடாப்பிடியாகக் காணப்படும் குறைந்த அரசிறைச் செயலாற்றத்தினை அங்கீகரிக்கும் விதத்தில், அரசாங்கம் வரி வீதங்களை அதிகரிப்பதற்கும் அதேவேளையில் வரித் தளத்தினை விரிவாக்குவதற்கும் ஏற்கனவே பல வழிமுறைகளை பின்பற்றியிருக்கிறது. எனினும், நீடித்துநிலைத்திருக்கும் அடிப்படையொன்றின் மீது அரசிறைச் திரட்சியை மேலும் உயர்த்துவதற்கு மேம்பட்ட தகவல் மற்றும் தொடர்பூட்டல் தொழில்நுட்பங்களை கொண்ட பிரயோகங்களுடன் தொடர்பான மேலதிக சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்துவது இன்றியமையாததாகும். இலங்கையில் வரி முறைமை முக்கியமாக ஒவ்வொரு ஆண்டிலும் காணப்படும் அரசிறை வீழ்ச்சியின் பற்றாக்குறையின் பின்னணியில் குறுங்கால தீர்வினை இலக்காகக் கொண்ட நிரந்தரமற்ற மற்றும் அவ்வப்போது மேற்கொள்ளப்படும் கொள்கை மாற்றங்களினால் பாதிக்கப்பட்டிருக்கிறது. பின்னோக்கிய மிகை வரி விதிப்புக் கட்டணம் அறிமுகப்படுத்தப்பட்டிருப்பதும் வியாபார மொத்தப் புரள்வு மீதான வரிகள் மீதான அரச கொள்கைகள் அடிக்கடி மாற்றப்படுவதும் அத்தகைய நிரந்தரமற்ற வரிக் கொள்கைகளுக்கு சிறந்த உதாரணமாகும். இதன் விளைவாக, வரிக் கூற்றுக்களைச் சமர்ப்பிப்பதும் வரிப் பொறுப்புக்களை எதிர்வுகூறுவதும் வியாபாரங்களுக்கும் தனிப்பட்டவர்களுக்கும் சிக்கலான விடயமாக மாறியிருப்பதுடன் இது தன்னிச்சையான வரி இணங்குவிப்புக்களைப் பேணுவதிலிருந்தும் வரி செலுத்துவோரை ஊக்கம் குன்றச் செய்கிறது. பலயீனமான வரி நிருவாக முறைமையானது இலகுவாக வரி விதிக்கக்கூடிய துறைகளிலிருந்து உயர்ந்த வரி அரசிறையினைத் திரட்டக்கூடியதாக இருக்கின்றவிடத்து வரிகளின் சுமை பொதுமக்களிடையே நியாயமான முறையில் பகிர்ந்தளிக்கப்படுகின்ற வலையமைப்பு சமத்துவமான வரி முறைமையை நடைமுறைப்படுத்துவது அவசியமாகும். இதன்படி, அரசாங்கத்தின் அரசிறையின் தேவைப்பாடுகள், நாட்டின் அபிவிருத்திக் குறிக்கோள்கள், வரிக் கொள்கைகளின் சமத்துவம், மற்றும் வரி செலுத்துவோர், வரி நிருவாகத்தர் ஆகிய இருவருக்குமான வசதி என்பனவற்றை பரிசீலனையில் கொண்டு நாட்டில் வரிக் கொள்கைகள் உருவாக்கப்படுதல் வேண்டும். அதேவேளை, நிருவாகச் செலவுகளைக் குறைத்தல்,

வரித் தவிர்த்தல், வரி ஏய்ப்பு மற்றும் பல்வேறுபட்ட வரி மோசடிகள் என்பனவற்றைக் குறைக்கும் விதத்தில் வரி நிருவாகம் பலப்படுத்தப்படல் வேண்டும். அரசாங்கத்திற்கு கணிசமான அரசிறை இழப்புகளைத் தோற்றுவித்த அரசிறை நிருவாகம் மற்றும் முகாமைத்துவத் தகவல் முறைமையில் காணப்படும் தற்போதைய பலயீனங்கள் விரைவான முறையில் சீர்செய்யப்படுகின்ற வேளையில் நேரடி மற்றும் மறைமுக வரிகள் இரண்டினதும் வரி அரசிறைச் சேகரிப்புக்களுக்காக புதிய தொழில்நுட்பவியல்கள் அறிமுகப்படுத்தப்படுவதும் அவசியமாகும். உதாரணமாக அதேநேர பொருட்பட்டியலின் அறிமுகம் பெறுமதி கூட்டல் மற்றும் மொத்தப் புரள்வு வரி தொடர்பான மோசடிகளைத் தடைசெய்ய உதவுவதுடன் வரிக் கணக்காய்வினை வினைத்திறனுடன் மேற்கொள்ளவும் வாய்ப்புக்களை வழங்குகிறது. மேலும், அரசிறைச் சேகரிப்பு முகவர்கள், நிதியியல் நிறுவனங்கள் மற்றும் சொத்துக்களைப் பதிவுசெய்யும் நிறுவனங்கள் என்பனவற்றின் தரவுத் தளத்தினை இணைப்பது வரி ஏய்ப்பினைக் குறைக்க உதவும் என்பதுடன், இதன் மூலம் வரி செலுத்துபவர்களின் தளம் விரிவடைகிறது. பேரேட்டுத் தொழில்நுட்பம், ஒருங்கிணைக்கப்பட்ட சுங்க முகாமைத்துவ முறைமைகள், சரக்கு ஸ்கானர்கள் மற்றும் தடங்காண் கருவிகள் போன்ற அதிநவீன தொழில்நுட்பங்களின் அறிமுகமானது நாடு-கடந்த வரி ஏய்ப்புக்களை குறைக்க பல நாடுகளுக்கும் உதவியுள்ளன. இலங்கை பாரிய முறைசாரா துறையினைக் கொண்டிருப்பதுடன் இதனை வரி வலையமைப்பிற்குள் அடக்கிக் கொள்வது கடினமாகவுள்ள வேளையில், தனிப்பட்டவர்களினாலும் வியாபாரங்களினாலும் செய்யப்படும் காசுக் கொடுப்பனவுகளூடாகப் பெறப்படும் வருமானங்களை இறைச் சேகரிப்பு முகவர்களினால் கண்டறிந்து கொள்ள முடியாதாகையால் முறைசார்ந்த துறையிலுள்ள பலரும் வரி ஏய்ப்புக்களைச் செய்கின்றனர். ஆகவே, 'காசற்ற பொருளாதாரத்தினை' ஊக்குவிப்பதன் மூலம் அரசிறைச் சேகரிப்பு முகவர்கள் வரி ஏய்ப்பாளர்களையும் அதேபோன்று பினாமி கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுபவர்களையும் கண்டறிந்து கொள்ளக்கூடியதாக இருக்கும். இதேவேளையில், அதிகளவு நேரம் விரயம் செய்வதும் வரி சேகரிப்பு முகவராண்மைகளினை அவற்றின் வரி சேகரிப்பு இலக்குகளினை அடைந்து கொள்வதனை தடுப்பதுமான தற்போதைய மேன்முறையீட்டு மற்றும் குறைகளை கையாளுகின்ற செய்முறையினால் வரி சேகரிப்பு செய்முறை கணிசமானளவு பாதிக்கப்படுகின்றது. வரித் தவிர்ப்பு, வரிகளினை செலுத்தாமை மற்றும் வரி ஏய்ப்பாளர்களுக்கு நீடிக்கப்பட்ட காலக்கெடு வழங்கப்பட்டமை தொடர்பில் தீர்க்கப்படாத பல எண்ணிக்கையிலான வழக்குகளிருப்பதாகத் தெரிகின்றது. வெளிப்படைத்தன்மை நோக்கங்களுக்காக உண்ணாட்டரசிறைத் திணைக்களமானது நிலுவையிலுள்ள மற்றும் தீர்க்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கைகளை கிரமமாக வெளியிடுவது வரி சேகரிப்பினை துரிதப்படுத்துவதில் உண்ணாட்டரசிறைத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் பற்றி பொதுமக்கள் அறிந்து கொள்வதனை இயலச்செய்யும். மேலும், வினைத்திறன்மிக்க மேன்முறையீட்டுச் செய்முறையின் அறிமுகம் வரிப் பிணக்குகளைத் தீர்ப்பதற்கான நியாயாதிக்கச் செய்முறைகளை விரிவுபடுத்துவதுடன் அரசாங்கத்திற்கு ஏற்படும் வரி இழப்புக்களைக் கடுமையாகக் குறைக்கும். இது தவிர, தன்னிச்சையான இணங்குவிப்புக்களை மேம்படுத்துவதற்கு, கடுமையான தண்டப் பணங்கள் அறிமுகப்படுத்தப்பட வேண்டிய வேளையில் வரி செலுத்துவோருக்குப் பொருத்தமான வழிகாட்டலுடன் பணிகளை மேம்படுத்த வேண்டும். தனியாள் வருமான வரிக் கூற்றுக்களையும் தனியாள் வருமான வரிக் கொடுப்பனவுகளையும் இலத்திரனியல் ரீதியாக கோப்பிடுவது கட்டாயமானதாக்குவதற்கு அரசாங்கம் அண்மையில் எடுத்த முயற்சிகள் வரி நிருவாகத்தின் வினைத்திறனை மேம்படுத்துவதற்கான வரவேற்கத்தக்க முன்முயற்சிகளாகும். வரி நிருவாகத்தினை மேம்படுத்துவதற்கு அரசாங்கம் எடுத்த அதன் முயற்சிகள் அதிகரிக்கப்படுதல் வேண்டும். இது, அரசாங்கம் வரித் தளத்தினை விரிவாக்குவதனை இயலுமைப்படுத்தும் என்பதுடன் தற்போதுள்ள வரி செலுத்துவோருக்கு கணிசமான சுமைகளை ஏற்படுத்தாமல் வரி வருமானத்தினையும் உயர்த்தும்.

**நடுத்தர காலத்திலிருந்து நீண்ட காலத்தில் உறுதியான இறைத்திரட்சியை உறுதிப்படுத்துவதற்கு அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட வலிமிகுந்த வரிச் சீர்திருத்தங்கள் பொருத்தமான செலவின முகாமைத்துவ உபாயங்களினால் நிறைவாக்கப்படுதல் வேண்டும்.** அரச நிதிகளை மேம்படுத்துவதற்கு வரிச் சீர்திருத்தங்கள் தவிர்க்க முடியாதனவாக இருக்கின்ற போதும், செலவினக் கட்டுப்பாடுகளும் சிக்கனப்படுத்தல் உபாயங்களும் இல்லாமையின் காரணமாக வினைத்திறனற்ற அரச செலவின நிகழ்ச்சித்திட்டங்களுக்காக மேலதிக வரிகளிலிருந்தான அரசிறை ஒதுக்கீடு செய்ய வேண்டியிருக்குமென்பதனால் அத்தகைய வழிமுறைகள் வினைத்திறன்மிக்க அரச செலவின சீர்திருத்தங்களுடன் இணைந்திருந்தாலொழிய அவை எதிர்விளைவுகளையே தரும். செலவினங்களின் கணிசமான பங்கு சம்பளங்கள் மற்றும் கூலிகள், ஓய்வூதியம் மற்றும் உதவுதொகைகள், அத்துடன் வட்டிக் கொடுப்பனவுகள் என்பனவற்றிற்கு ஒதுக்கப்பட்டிருப்பதனால் இலங்கையில் அரச செலவினத்தின் பாரிய பங்கொன்று நெகிழ்ச்சித்தன்மையற்ற விதத்தில் தொடர்ந்தும் காணப்படுகிறது. எனினும், பொருத்தமான செலவின முகாமைத்துவ நுணுக்கங்களை நடைமுறைப்படுத்துவதன் மூலம் செலவினங்களைக் கட்டுப்படுத்துவதற்கான வசதியினை உருவாக்க முடியும். அரசாங்கத்தின் ஆண்டு வரவு செலவுத்திட்டத்தை தயாரிக்கும் பொழுது அதிகரிக்கின்ற வரவு செலவுத்திட்ட செயன்முறைகள்[5] போன்ற பாரம்பரிய

5 அதிகரித்துச் செல்லும் வரவு செலவுத்திட்டபடுத்தல் செய்முறையில், முன்னைய ஆண்டின் வரவு செலவுத்திட்டம் அடிப்படையொன்றாகக் கருதப்படுவதுடன் இவ்வடிப்படைக்கான சீராக்கங்கள் தற்போதைய தொழிற்பாட்டு மட்டங்களைப் பேணுவதற்காக குறிப்பிட்ட சதவீதங்கள் தன்னிச்சையான அடிப்படையில் அதிகரிக்கப்பட்டுள்ளன.

வரவு செலவுத்திட்ட உத்திகள் கூடியளவிற்கு நவீனத்துவமும் காத்திரமானதுமான பதிலீட்டுக்கருவிகள் மூலம் பிரதியீடு செய்யப்பட வேண்டியது அவசியமாகும். அதாவது பூச்சிய அடிப்படையிலான வரவு செலவுத்திட்டப் பொறிமுறையானது[6] தேவையற்ற மற்றும் உற்பத்தித்திறனற்ற நடவடிக்கைகளை அடையாளம் காண்பதற்கும் அத்தகைய செலவினங்களை நீக்கி விடுவதற்கும் அரசாங்கத்தினை இயலுமைப்படுத்தக் கூடியதாக இருக்கின்ற வேளையில் பொருளாதாரத்தின் அழுத்தம் மிக்க தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கு அருமையாகவுள்ள மூலவளங்களை ஒதுக்குவதனையும் இயலச்செய்வதன் மூலம் வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்குமான பாதை உருவாக்கப்படுகிறது. பூச்சியத்தினை அடிப்படையாகக் கொண்ட வரவு செலவுத்திட்ட உத்திகளைப் பயன்படுத்தும் செய்முறையினை நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கம் ஏற்கனவே சில முயற்சிகளை மேற்கொண்டிருக்கின்ற வேளையில், இவ்வரவு செலவுத்திட்டப்படுத்தல் செய்முறையினைக் காத்திரமான விதத்தில் பின்பற்றவும் நடைமுறைப்படுத்துவதற்கும் ஒன்றிணைந்த திரண்ட முயற்சிகள் அவசியமாகும். விசேடமாக வரவு செலவுத்திட்டத்தினை தயாரிப்பதில் பங்களிக்கின்ற செலவிடல் முகவராண்மைகளின் அலுவலர்களுக்கு பயிற்சியளிப்பதன் மூலம் இது மேற்கொள்ளப்படல் வேண்டும். மேலும், அனைத்து செலவிடல் முகவராண்மைகளினதும் செலவினங்களைக் கட்டுப்படுத்துவதற்கு மேலோட்டமான பொதுப்படையான அணுகுமுறையினை விதிப்பதற்குப் பதிலாக, அபிவிருத்தி நிகழ்ச்சிநிரலிலுள்ள ஒவ்வொரு பொருளாதார நடவடிக்கைக்கும் முன்னுரிமையளிக்கும் விதத்தில் அதன் மூலவளத் தேவைப்பாடு மற்றும் மூலவளங்களின் கிடைப்பனவு என்பனவற்றைப் பரிசீலனையில் கொண்டு உரிய வழிமுறைகளை நடைமுறைக்கிடல் வேண்டும். வினைத்திறன் வாய்ந்த செலவிடல் முகவராண்மைகள் தேவையான மூலவளங்களைப் பெறுவதனைக் காத்திரமான விதத்தில் உறுதிப்படுத்தும் அதேவேளை, வினைத்திறனற்றவர்கள் அவர்களது காத்திரமான தன்மைகளை மதிப்பிடுமாறும் சிக்கன வழிமுறைகளைப் பின்பற்றுமாறும் கேட்டுக் கொள்ளப்படும் பொருட்டு செலவிடல் சிக்கனப்படுத்தல்களை நடைமுறைப்படுத்தும் போது தனிப்பயன்வாய்ந்த மற்றும் ஒவ்வொரு விடயமாக மதிப்பிடும் முறை தேவைப்படுத்தப்படுகிறது. அதேவேளை, மூலதனச் செலவினத்தினை முன்னுரிமைப்படுத்தல் "பணத்திற்கான பெறுமதி" இனை அடிப்படையாகக் கொண்டிருக்கவேண்டியிருப்பதுடன் அபிவிருத்தி நிகழ்ச்சிநிரலிலுள்ள செயற்றிட்டங்களின் முக்கியத்துவம், மூலதனச் செலவினச் செயற்றிட்டங்களுக்கான நிதி காத்திரமான விதத்தில் ஒதுக்கப்படுவதனை உறுதிப்படுத்துவதற்கு ஒரு திறவுகோலாகும். ஆகவே, மேம்பட்ட வரவு செலவுத்திட்டப்படுத்தல் உத்திகளும் மூலவளங்களின் சிக்கனமான ஒதுக்கங்களும் ப.நா.நிதிய - விரிவாக்கப்பட்ட நிதிய வசதிகளின் நிகழ்ச்சித்திட்ட வழி அலகுகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் நடுத்தர காலத்தில் அரசாங்கம் ஆரம்ப மீதி மிகைகளை எய்துவதற்கு மிக இன்றியமையாதனவாக இருக்கும்.

**அண்மைய பொருளாதார நெருக்கடிகளினால் நாட்டின் வலுப் பாதுகாப்பு சவாலுக்குட்பட்டமையானது வலுத் துறையில் காணப்படும் வினைத்திறனற்ற தன்மையினைக் கட்டுப்படுத்துவதற்கான தேவையினை வலியுறுத்தியது.** வெளிநாட்டு அதிர்வுகளுக்கு வலுத்துறை தாக்குப்பிடிக்கும் தன்மை மிகக் குறைவாக இருப்பதனையும் பாரிய உள்ளார்ந்த வளம் காணப்படுகின்ற போதும் வலு உருவாக்கம் மட்டுப்படுத்தப்பட்டளவில் பன்முகப்படுத்தப்பட்டிருப்பதனையும் பிரதிபலித்து மின்வலு மற்றும் ஏனைய வலுப் பணிகளின் வழங்கல் 2022இல் பெருமளவிற்கு தடங்கலுற்று நீண்டநேர மின்சாரத்தடை மற்றும் கடுமையான எரிபொருள் பற்றாக்குறைகள் என்பனவற்றுடன் சேர்ந்து வலு நெருக்கடிக்கு வழிவகுத்ததுடன் இதன் மூலம் பொருளாதார நடவடிக்கைகளும் பாதிக்கப்பட்டன. நீர்மின்வலுவானது வலு உருவாக்கத்தில் மிகச் செலவு குறைந்த வலு உருவாக்க மூலமாக இருந்த போதும் நீர்மின்வலு உருவாக்கத்தின் மீது இலங்கை தொடர்ந்தும் பெருமளவிற்கு தங்கியிருப்பது, காலநிலை இயக்கவாற்றலுக்கு கடுமையாக பாதிப்படையக்கூடியதன்மையின் காரணமாக மின்வலு வழங்கலின் உறுதித்தன்மை நியதிகளில் கரிசனைக்குரியதாக இருக்கிறது. மேலும், வலு உருவாக்கம் நிலக்கரி மற்றும் பெற்றோலிய உற்பத்திகள் போன்ற இறக்குமதி செய்யப்பட்ட வெப்ப மின்வலு மூலங்கள் மீது பெருமளவிற்கு தங்கியிருப்பதன் காரணமாக உலகளாவிய வலு விலைகளின் தளம்பல்களுக்கு வலு உருவாக்கமும் பெருமளவிற்குள்ளாகிறது. வலு உருவாக்கத்திற்காக மரபு வழியற்ற புதுப்பிக்கத்தக்க வலுவின் பங்கினை விரிவாக்குவதற்கு அநேக முயற்சிகள் எடுக்கப்பட்ட போதும், புதுப்பிக்கத்தக்க வலுத் துறையிலுள்ள தனியார் முதலீட்டாளர்கள் பல நிறுவனங்களிலிருந்தான ஒப்புதல்களைப் பெறுவதில் காணப்படும் கடினமான தன்மைகள், சூழல்தாக்க கரிசனைகள் அதேபோன்று தீர்வை முறைமைகளிலுள்ள பதிவுகளில் கிரமமான திருத்தங்கள் செய்யப்படாமை போன்ற எண்ணற்ற சவால்களினால் தொடர்ந்தும் முடக்கப்பட்டிருக்கின்றமையானது மரபுவழியற்ற புதுப்பிக்கத்தக்க வலுத் துறையில் தனியார் துறையினால் வழிநடத்தப்படும் விரிவாக்கத்தினை இடையூறுகளுக்குள்ளாக்குகின்றது. இப்பின்னணியில், வலு உருவாக்க மூலங்களின் கிடைப்பனவிற்கும் இம்மூலங்களின் உருவாக்கச் செலவுகளுக்குமிடையில் சமநிலையொன்றினை ஏற்படுத்தி முன்னோக்கிச் செல்கையில் வினைத்திறன்மிக்க கலப்பு உருவாக்கமொன்றினைத் தெரிவுசெய்வதனை

6 பூஜ்சியத்தினை அடிப்படையாகக் கொண்ட வரவு செலவுத்திட்டப்படுத்தல் என்பது ஒருவிதமான வரவு செலவுத்திட்டப்படுத்தல் உத்தியாகும். இதில் அனைத்து செலவினங்களும் புதிய காலப்பகுதிக்கு அல்லது பூஜ்யத்திலிருந்து ஆரம்பிக்கும் ஆண்டிற்கும் எதிர் முன்னைய வரவு செலவுத்திட்டத்திற்குமிடையில் நியாயப்படுத்தப்பட்டு தேவையான விதத்தில் சீராக்கப்படுகின்றன.

இயலுமைப்படுத்துவதற்கு அவசரமான வழிமுறைகள் தேவையாகவுள்ளன. கலப்பு உருவாக்கத்தில் புதுப்பிக்கத்தக்க வலுவின் பங்கினை விரிவாக்கும் பொருட்டு இலங்கையில் அபரிமிதமாகக் காணப்படும் சூரிய சக்தி, காற்று போன்ற சுத்தமான வலு மூலங்களுக்காக ஒழுங்குவிதிகள் மற்றும் வரி விதிப்பு, போதுமான உட்கட்டமைப்பு மற்றும் சிறந்த ஆளுகை மற்றும் பல விடயங்கள் மீதான நேரடியான அணுகுமுறைகளுக்கான மூலதனச் சூழலைத் தூண்டி வசதியளிப்பதன் மூலம் தனியார் மற்றும் வெளிநாட்டு மூலங்களிலிருந்து முதலீடுகளைக் கவர்ந்து கொள்வது இன்றியமையாததாகும். ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் நீடித்துநிலைத்திருக்கும் அபிவிருத்தி இலக்கு முதலீட்டாளர் வழிகாட்டல் - 2022 இன்படி, இலங்கையின் புதுப்பிக்கத்தக்க வலுத் துறை உயர்ந்த முதலீட்டு உள்ளாந்த வளத்துடன் முன்னுரிமைத் துறைகளிலொன்றாக அங்கீகரிக்கப்பட்டிருப்பது, புதுப்பிக்கத்தக்க வலுத் துறையில் முதலீடுகளை ஊக்குவிப்பதற்கு இலக்கிடப்பட்ட வழிமுறைகளுக்கான தேவையை எடுத்துக்காட்டுகிறது. இது தொடர்பில் கொள்கை வகுப்போர் சக தரப்பினரிடையேயான வலுக் கொள்வனவு உடன்படிக்கைகளை இயலுமைப்படுத்துவதன் மீதும் தனியார் துறைக்கான வலு சுழற்சி வசதிகளின் மீதும் கவனம் செலுத்துதல் வேண்டும். இது புதுப்பிக்கத்தக்க வலுத் துறைக்கான சந்தையில் தீர்மானிக்கப்பட்ட விலையிடலை உறுதிப்படுத்தும். அதேநேரம் மின்கடத்தல் மற்றும் விநியோக வலையமைப்பினை அபிவிருத்தி செய்யும் வடிவிலமைந்த வலு உட்கட்டமைப்பினை மேம்படுத்தல், வலு உருவாக்க வசதிகளை தரமுயர்த்தல் மற்றும் நவீனமயப்படுத்தல், திறன் வாய்ந்த மின்தொகுதி முகாமைத்துவம் மற்றும் வலு களஞ்சியப்படுத்தல் தீர்வுகள் என்பன வலு இழப்புக்களைக் குறைப்பதற்கும் வலு வழங்கலின் நம்பகத்தன்மையினை அதிகரிப்பதற்கும் அவசியமாகும். அதேவேளை, கலப்பு தொழில்நுட்பவியல் போன்ற ஊர்திகளின் எரிபொருள் சிக்கனத்தினை உயர்த்துவதற்கான தொழில்நுட்பவியலை அறிமுகப்படுத்துவதனூடாக போக்குவரத்துத் துறையின் வலுச் சிக்கனம் மேம்படுத்தப்படுதல் வேண்டும். மேலும், போக்குவரத்துத் துறையில் வலு நுகர்வினைக் குறைப்பதற்கு பொதுப் போக்குவரத்து முறைமையினை மேம்படுத்தி விரிவுபடுத்துவதற்கு கூடியளவு ஒருமுகப்படுத்தப்பட்ட கொள்கை அணுகுமுறை அவசியமாகும். இதன்படி, நகரப்பகுதிகளில் போக்குவரத்து நெரிசலின் காரணமாக ஏற்படும் வலு விரயத்தினைக் குறைக்கும் நோக்குடன் பொதுப் போக்குவரத்து முறையும் வீதி உட்கட்டமைப்பும் திருத்தியமைக்கப்பட்டு விரிவுபடுத்தப்படல் வேண்டும். அத்துடன் வலுச் சிக்கனம் மற்றும் பாதுகாப்பு வழிமுறைகள் தொடர்பான பொதுமக்களிடம் விழிப்புணர்வினை அதிகரிப்பதும், வீட்டுத் துறை, வியாபாரங்கள் மற்றும் கைத்தொழில்களில் வலுச் சிக்கன நியமங்களை நடைமுறைப்படுத்தல் என்பன வலு சிக்கனத்துடன் பயன்படுத்தப்படுவதனை மேம்படுத்தும். இடையூறுகள் எதுவுமில்லாமல் வலு வழங்கலின் கிடைப்பனவினை மேம்படுத்துவதன் மூலமும் வாடிக்கையாளர்கள் தாங்கக்கூடிய விலையில் அதிகரித்து வருகின்ற வலுவிற்கான கேள்வியைப் பூர்த்திசெய்தல் மூலமும் வலுப் பாதுகாப்பினை அடையமுடியம். இது தொடர்பில் நிரம்பல் மற்றும் கேள்வியில் திடீரென ஏற்பட்ட மாற்றங்களுக்கு சரியான விதத்தில் பதிலிறுத்தும் விதத்தில் வலுத் துறையின் தாக்குப்பிடிக்கும் தன்மையினை அண்மிய காலத்தில் அதிகரிக்கும் தேவை காணப்படுகிறது. அதேபோன்று, நீண்ட காலத்தில் பொருளாதார அபிவிருத்தியுடனும் சுற்றாடல் தேவையுடனும் இணைந்து செல்லும் விதத்தில் முதலீடுகளைப் பேணிக் கொள்வதற்கு மேலாக பொருளாதாரத்திலுள்ள அனைத்து ஆர்வலர்களினதும் ஒன்றிணைந்த முயற்சியும் இன்றியமையாதவையாகும்.

**அரச செலவின முகாமைத்துவத்தின் மேற்பார்வையினை வலுப்படுத்துவதற்கும் இறைத் துறையின் பொறுப்புக்கூறும் தன்மையினை அதிகரிப்பதற்கும் நிறுவனரீதியான மற்றும் சட்டவாக்க சீர்திருத்தங்களும் அதேபோன்று விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளின் நடைமுறைப்படுத்தலும் அவசியமாகின்றன.** சில தசாப்தங்களுக்கு முன்னர் இறை விதிகள் இலங்கையில் இயற்றப்பட்ட போதும் அவை பின்பற்றப்படாமையானது தொடர்ந்து வந்த அரசாங்கங்களின் முன்மதியற்ற இறை முகாமைத்துவத்திற்குக் காரணமாயிற்று. ஆகவே, எய்தக்கூடிய இலக்குகளுடன் பிணைக்கப்பட்ட இறை விதிகளை அறிமுகப்படுத்துவதற்கு சட்டவாக்க சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்துவது அவசியமாகின்ற அதேவேளையில் அத்தகைய விதிகளுக்கு இணங்கிக் கொள்ளக்கூடிய பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளை விசேடமான முறையில் அடையாளம் கண்டு கொள்ளுதல் வேண்டும். ப.நா.நிதிய - விரிவாக்கப்பட்ட நிதிய வசதியினால் ஆதரவளிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் புதிய அரச நிதி முகாமைத்துவச் சட்டம் இயற்றப்படவுள்ளதுடன் இது நிதி அமைச்சினதும் செலவிடல் முகவராண்மைகளினதும் வகிபாகத்தினையும் பொறுப்புக்களையும் குறித்துரைப்பதுடன் தகவல் மற்றும் பொறுப்புக்கூறும் தேவைப்பாடுகளையும் பூர்த்திசெய்யும். மேலும், அரச நிறுவனங்கள் செலவிடல்களை வரவு செலவுத்திட்டத்திற்குள் மட்டுப்படுத்துவதற்கு ஊக்குவிக்கப்படுவது மட்டுமன்றி வினைத்திறனையும் காத்திரமான தன்மையினையும் உத்வேகப்படுத்தலும் வேண்டும். மேலும், அரச நிறுவனங்களுக்கும் அரச அலுவலர்களுக்கும் செயலாற்றத்தினை அடிப்படையாகக் கொண்ட பொறுப்புக்கூறும் தன்மையும் பொதுமக்களுக்கான வெளிப்படுத்துகைகளும் அறிமுகப்படுத்தப்படுகின்ற அதேவேளையில் வெளிப்படைத்தன்மையினை மேம்படுத்துவதற்கும் நம்பகத்தன்மையினை உயர்த்துவதற்கும் சிறந்த ஆளுகைக்கு ஆதரவளிப்பதற்குமாக கணக்காய்வுத் தொழிற்பாடுகளை மேலும் வலுப்படுத்துவது அவசியமாகும். மேலும், ப.நா.நிதிய

1

- விரிவாக்கப்பட்ட நிதிய வசதியினால் ஆதரவளிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஊழலுக்கெதிரான ஐக்கிய நாடுகள் தீர்மானத்துடன் இசைந்து செல்கின்ற விதத்தில் ஊழலுக்கெதிரான சட்டவாக்கம் ப.நா.நிதியத்திலிருந்தான தொழில்நுட்ப உதவியுடன் அறிமுகப்படுத்தப்படும். ஊழல் உணர்வுச் சுட்டெண்[7] - 2022 இன்படி 180 நாடுகளில் இலங்கை 101ஆவது வரிசையில் அமைந்து உயர்ந்த மட்ட ஊழலைப் பிரதிபலித்திருப்பதனைக் கருத்திற்கொள்ளும்போது இது குறிப்பாக ஏற்புடையதாயுள்ளது. ஊழல் கட்டுப்பாட்டு வழிமுறைகளையும் நடவடிக்கை முறைகளின் வெளிப்படைத் தன்மைகளையும் வலுப்படுத்துவது உற்பத்தித்திறனற்ற அரச செலவினத்தினைக் கட்டுப்படுத்துவதில் முக்கியமான பங்கினையாற்ற முடியும். எனவே, எதிர்காலத்தில் அரச நிதி மற்றும் ஊழல் கட்டுப்பாட்டு வழிமுறைகள் நடைமுறைப்படுத்தப்படுவதனையும் மேற்பார்வை செய்வதற்கான தொடர்ச்சியான கடப்பாடுகளுடன் கூடிய இறை முன்மதியுடைய தன்மை இறைத்திரட்சி வழிமுறைகளுக்கு பொதுமக்களின் ஆதரவினைத் திரட்டிக் கொள்வதற்கும் இறைத் துறையின் ஒட்டுமொத்த நீடித்துநிலைத்திருக்கும்தன்மை மற்றும் ஒழுக்கவிழுமியங்களை உறுதிப்படுத்துவதற்கும் ஒரு மையமாகவிருக்கும்.

**உள்நாட்டுப் பெறுமதிகூட்டலை அதிகரிப்பதன் மூலமும் ஏற்றுமதிப் போட்டித்தன்மையினை வலுப்படுத்துவதன் மூலமும் ஏற்றுமதித் துறைக் கொள்கைகள் பொருட்களினதும் பணிகளினதும் தரத்தினை மேம்படுத்துவதன் மீது கவனத்தினைச் செலுத்துவது அவசியமாகும்.** 2022இல் இலங்கை வரலாற்றிலேயே மிக உயர்ந்த ஏற்றுமதி வருவாய்களைப் பதிவுசெய்த போதும் அத்தகைய வருவாய்கள் இப்பிராந்தியத்திலுள்ள இதேயளவு பொருளாதாரங்களினால் பதிவுசெய்யப்பட்ட ஏற்றுமதி அளவுகளுடன் ஒப்பிடுகையில் மிகக் குறைவானதேயாகும். உற்பத்திகளின் நுட்பம் ஒரே நிலையில் தேங்கிக் காணப்படுகின்றமை மற்றும் அதிகரித்துச் செல்லும் உற்பத்திச் செலவு என்பனவற்றின் காரணமாக இலங்கையின் போட்டித்தன்மை குறைவடைந்து இலங்கையின் உற்பத்திகள் உலகளாவிய சந்தையில் சந்தைப் பங்குகளை இழந்து வருகின்றன. ஏற்கனவேயுள்ள போட்டித்தன்மை வாய்ந்த அநுகூலங்களை ஏற்றுமதி வருமானம் மற்றும் உற்பத்தித்திறனை உத்வேகப்படுத்தும் விதத்தில் அதிகரிப்பதன் மூலம் உயர்தர உற்பத்திகளை உற்பத்தி செய்வது உலகளாவிய சந்தையில் போட்டியிடுவதற்கு உதவும். ஏற்றுமதிக் கைத்தொழில்கள் சிறப்பியல்வாக்கம், பெறுமதிகூட்டல், வர்த்தக நாமம் மற்றும் ஏற்றுமதிப்பொருட்களின் தரம் என்பனவற்றை இலக்காகக் கொண்டிருப்பது அவசியமாகவுள்ள வேளையில் அளவுசார் தேவைப்பாடுகளையும் பூர்த்தி செய்தல் வேண்டும். குறைந்த உற்பத்திச் செலவில் உயர்ந்த பெறுமதிகூட்டல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திகளின் ஆதரவுடன் நடுத்தரத்திலிருந்து நீண்ட காலப்பகுதியில் புத்தாக்கங்களுக்கு வழிவகுத்தல் என்பனவற்றுடன் சேர்ந்த மேம்பட்ட தரமான பொருட்களின் ஏற்றுமதி மீது ஏற்றுமதிக் கொள்கைகளை ஊக்குவிப்பது அவசியமாகும். ஏற்றுமதித் துறைகளின் புத்தாக்கங்களை அடையாளம் காண்பதற்கு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி அதிகரிக்கப்படல் வேண்டும் என்பதுடன் எளிய வடிவிலான உற்பத்தியிலிருந்து சிக்கலான உற்பத்திகளுக்கு மாறிச் செல்வது அவசியமாகும். அத்துடன் பிராந்திய மற்றும் உலகளாவிய வழங்கல் சங்கிலியினைப் பயன்படுத்திக் கொள்ளும் குறிக்கோளுடன் இலங்கை அதன் உற்பத்தித் தரத்தினை உயர்த்திக் கொள்ளுவதும் தோற்றம் பெற்றுவரும் பொருளாதாரங்களில் சந்தைப் பங்குகளைக் கவர்ந்து கொள்வதும் அவசியமாகும். மேலும், உள்ளீடுகளின் தரம் முடிவு உற்பத்திகளின் தரத்தின் மீது தாக்கத்தினைக் கொண்டிருப்பதனால் இறக்குமதி செய்யப்பட்ட மூலப்பொருட்களுக்கு போட்டித்தன்மை மிக்க பதிலீடுகளை வழங்கக்கூடிய மறைமுக ஏற்றுமதியாளர்களுக்கும் உள்நாட்டுக் கைத்தொழில்களுக்கும் அரசாங்கம் ஊக்குவிப்புக்களை வழங்குவது அவசியமாகும். மேலும், அண்மைய ஆண்டுகளில் வேளாண்மை ஏற்றுமதிகளில் அவதானிக்கப்பட்ட கீழ் நோக்கிய போக்கு, உலகளாவிய போட்டித்தன்மையுடன் இருப்பதற்கு வேளாண்மை உற்பத்திகளின் தரத்தினை மேம்படுத்துகின்ற முக்கியத்துவத்தினை தேவைப்படுத்துகிறது. இது தொடர்பில், உலகளாவிய சந்தைகளில் வலுவான தரத்தினையும் வர்த்தக நாம அநுகூலங்களையும் உருவாக்கும் பொருட்டு உலகளாவிய சந்தை உற்பத்திகளை விசேடமாக வேளாண்மை உற்பத்திகளை ஊக்குவிப்பதன் மீது கொள்கைகளும் வழிமுறைகளும் வலியுறுத்தப்படல் வேண்டும். அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சியின் இயலாற்றலை மேம்படுத்துவதற்கு வேளாண்மையாளர்களின் சங்கங்களின் முறையினைப் பயன்படுத்த முடியும் என்பதுடன் குறைந்த செலவில் உயர்ந்த உற்பத்திகளினூடாக பொருளியல் சிக்கனத்தினை அடையமுடியும். உயர்ந்த விளைச்சலுடன் கூடிய பயிர் பெருக்கத்தினை மேம்படுத்துவதன் மீது தேசிய மட்டத்தில் வேளாண்மை ஆராய்ச்சி உபாயத்தினை அபிவிருத்தி செய்வதும் வேளாண்மையாளர்களின் மட்டத்தில் சிறந்த தரத்தினை ஊக்குவிப்பதும் அவசியமானவையாக இருக்கும். முக்கிய வேளாண்மைப் பிராந்தியங்களில் வர்த்தகம் சார்ந்த ஏற்பாடுகளை நிறுவுவதும் களஞ்சியசாலை வசதிகளின் தேவைகளை மேம்படுத்துவதும் வேளாண்மை உற்பத்திகளின் அறுவடைக்குப் பின்னரான சேதங்களைக் குறைக்கும். மேலும், நிறுவன ரீதியான தரத்தினை உயர்த்துதல், தாராளமானதும் நிலையானதுமான வர்த்தக கொள்கைகளைப் பேணுதல் ஏற்றுமதி துறைக்கு வெளிநாட்டு நேரடி முதலீட்டு உட்பாய்ச்சல்களை ஊக்குவித்தல், ஏற்றுமதியை தரமுயர்த்தும் விதத்தில் இயலாற்றல் கொண்ட மனித மூலதனத்தினை அபிவிருத்தி செய்தல், தர உயர்வினை மேற்கொள்ளும் விதத்தில்

7 குறைந்தமட்ட ஊழலைக் கொண்ட நாடு ஊழல் உணர்வுச் சுட்டெண்ணில் முதலாவது இடத்தில் வரிசைப்படுத்தப்பட்டிருக்கும்.

உள்நாட்டுச் சூழலைத் தூண்டுதல் என்பன மீது கொள்கைகள் கவனம் செலுத்தப்படுகின்ற வேளையில் உயர்தரச் சந்தைகளை அணுகுவதும் மேம்படுத்தப்படல் வேண்டும்.

**தேசிய வர்த்தக கொள்கைகளின் கணிசமான மீள் ஆற்றுப்படுத்தலினூடாக பாரிய இறக்குமதிகளின் மீது தங்கியிருப்பதிலிருந்தும் விலகி கூடியளவிற்கு ஏற்றுமதி சார்ந்த தன்மைக்கு மாறுவதற்கு தியாகங்களுடன் கூடிய அமைப்பியல் சீராக்கங்கள் நாட்டிற்குத் தேவையானதாகும்.** இலங்கை நுகர்வு மற்றும் முதலீட்டுத் தேவைகளுக்கும் முக்கிய ஏற்றுமதிகளின் உற்பத்திகளுக்கு தேவையான உள்ளீடுகளுக்கும் உள்நாட்டு உற்பத்திக்கும் இறக்குமதிகளின் மீதே பெருமளவிற்கு தங்கியிருக்கிறது. 2009 இலிருந்து இறக்குமதிகள் மீதான செலவினம் ஏறத்தாழ இரண்டு மடங்காகியிருக்கிறது. அதேவேளை, ஏற்றுமதிக் கூடையின் உள்ளமைப்பு தசாப்தங்களாக அதேமட்டத்திலே காணப்பட்டு, பாரம்பரிய வேளாண்மை ஏற்றுமதிகள் மற்றும் ஆடை போன்ற குறைந்த பெறுமதி கூட்டப்பட்ட கைத்தொழில் ஏற்றுமதிகளுக்கும் மட்டுப்படுத்தப்பட்டிருக்கிறமையைக் காட்டுகிறது. 2018 யூலையில் தொடக்கி வைக்கப்பட்ட திருத்தப்பட்ட தேசிய ஏற்றுமதி உபாயம் 2018 - 2022, புத்தாக்கம் மற்றும் முதலீடுகளினால் தூண்டப்பட்ட ஏற்றுமதி மையமொன்றிற்கு இலங்கையை கொண்டு செல்வதனை இலக்காகக் கொண்டிருந்தது. இது வசதியேற்பாடுகள், தகவல் மற்றும் ஊக்குவிப்பு, தேசிய தர உட்கட்டமைப்பு மற்றும் புத்தாக்கம் மற்றும் தொழில் முயற்சியாண்மை என்பனவற்றினூடாக அனைத்து ஏற்றுமதித் துறைகளுக்குமான வியாபாரச் சூழலை மேம்படுத்துவதனை இலக்காகக் கொண்டிருந்தது. தேசிய ஏற்றுமதி உபாயத்தின் குறிப்பிட்ட பொறுப்பாணையாக, தகவல் தொழில்நுட்பம்/ வெளியிலிருந்து பணிகளைப் பெற்றுக் கொள்ளுதல் மற்றும் நலச் சுற்றுலா உள்ளிட்ட ஆறு ஏற்றுமதித் துறைகளில் புத்தாக்கங்களையும் பன்முகத்தன்மைகளையும் ஊக்குவிப்பதாக இருந்தது. ஏற்றுமதிக் கைத்தொழில்களுக்கான தொழிலாளர்களை வழங்குவதுடன் தொடர்பான பிரச்சனைகளைத் தீர்த்தல், நிலையான இறக்குமதிக் கொள்கைகள், தெளிவானதும் வெளிப்படையானதுமான வரிக் கொள்கைகள், இலங்கைக்குள் முதலீடுகளைக் கவர்வதற்காக வெளிநாட்டு அரசாங்கங்களை அணுகுதல், இளைஞர்களிடையே தொழில்முயற்சியாண்மையை அபிவிருத்தி செய்தல் என்பன வர்த்தகப்படுத்தத்தக்க துறையில் உடனடி முன்னுரிமைகளுக்குரிய சில முக்கிய விடயங்களாகக் காணப்படுகின்றன. சென்மதி நிலுவை நெருக்கடிகளின் காரணமாக இறக்குமதிக் கட்டுப்பாடுகளை விதிப்பதற்கும் இடைநிறுத்துவதற்கும் வழிமுறைகள் தேவையாக இருந்தன. எனினும், இறக்குமதிகளில் தங்கியிருப்பதனை குறைத்துக் கொள்வதன் மூலமும் பொருளாதாரத்திலுள்ள கைத்தொழில்களை ஊக்குவிப்பதன் மூலமும் அத்தகைய அவ்வப்போது தேவைப்படும் வழிமுறைகளை எதிர்காலத்தில் தவிர்த்துக் கொள்ளமுடியும். இடைநிலை உள்ளீடுகளின் சாத்தியமான பின்னோக்கிய ஒருங்கிணைப்பு, உள்நாட்டுப் பதிலீடுகளுடன் இன்றியமையாதன அல்லாத நுகர்வுப்பொருட்களைத் தெளிவாக அடையாளம் கண்டு ஊக்கமிழக்கச் செய்தல், இறக்குமதிகள் மீது வழங்கப்பட்ட சலுகைகளை நீக்குதல், சந்தையினால் நிர்ணயிக்கப்பட்ட நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த செலாவணி வீதத்தினைப் பேணுதல் என்பன இது தொடர்பில் முக்கியமான விடயங்களாகவுள்ளன.

**தொடர்ந்து வந்த அரசாங்கங்களினால் நாட்டின் அபிவிருத்தி உபாயங்களில் வெளிநாட்டு நேரடி முதலீடுகள் உயர் முன்னுரிமைக்குரிய விடயமாக அடையாளம் காணப்பட்டு வந்த போதும் பரிமாணம் மற்றும் வளர்ச்சி நியதிகளில் வெளிநாட்டு நேரடி முதலீடுகள் தொடர்பில் கடந்த ஒரு சில தசாப்தங்களாக இலங்கையின் அனுபவம் ஏமாற்றம் தருவதாகவே காணப்படுகிறது.** மிகத் தாராளமான வரி விடுப்புக்கள் வழங்கப்பட்ட போதும் 2010 இலிருந்து சராசரியாக ஆண்டொன்றிற்கு நேரடி முதலீட்டு தொழில்முயற்சிகளுக்கான வெளிநாட்டுக் கடன்கள் உட்பட வெளிநாட்டு நேரடி முதலீடாக ஏறத்தாழ ஐ.அ.டொலர் 1.2 பில்லியனை மட்டுமே இலங்கையினால் கவர்ந்த கொள்ளக்கூடியதாக இருந்தது. அத்துடன் மற்றைய அயல் நாடுகளுடன் ஒப்பிடுகையில் மொ.உ.உற்பத்திக்கான வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் விகிதம் கணிசமானளவிற்கு குறைவாகவே தொடர்ந்தும் காணப்பட்டது. தற்போதைய இலங்கைப் பொருளாதாரத்தின் பின்னணியில் பொருளாதார நடவடிக்கைகளுக்கான தடங்கல்கள், உயர்ந்த கம்பனி வருமான வரி வீதங்கள், தொழிலாளர் மற்றும் பொதுப் பயன்பாடுகள் உள்ளிட்ட உயர்ந்த உற்பத்திச் செலவு, தேர்ச்சிபெற்ற தொழிலாளர்ளின் பற்றாக்குறை, உடனடியாக கிடைக்கத்தக்க காணிகள் இல்லாமை, நிருவாகப் படிமுறைகள் பல்மட்டத்திலான ஒப்புதல் நடவடிக்கை முறைகள், ஊழல் புலப்பாடு என்பனவற்றின் காரணமாக கம்பனிகள் அவற்றின் தளங்களை இலங்கைக்கு மாற்றுவதற்கான ஊக்குவிப்புக்கள் மிகக் குறைவாகவே காணப்படுகின்றன. இத்துறைக்கு, மற்றைய விடயங்களுடன் ஏற்புடைத்தான நிறுவன ரீதியான அமைப்பினை ஒழுங்குமுறைப்படுத்துவதற்காக முதலீட்டுச் சபை மற்றும் ஏற்றுமதி அபிவிருத்திச் சபை என்பனவற்றை ஒருங்கிணைப்பது போன்ற அரசாங்கத்தின் அண்மைய முயற்சிகள் வரவேற்கத்தக்க நடவடிக்கைகளாகும். இருப்பினும், வினைத்திறன் மிக்கதொரு முறையில் முதலீடுகளை கவர்வதற்கும் ஒப்புதல்களை வழங்குவதற்கும் அத்தகைய அதிகாரசபைகளுக்கு அதிகாரங்களை வழங்குவது முக்கியமானதாகும். அதேநேரம், சிநேகபூர்வ நாடுகளுடன் நெருக்கமான இராசதந்திர உறவுகளைப் பேணுவது வலுப் பாதுகாப்பு, உணவுப் பாதுகாப்பு மற்றும் ஏற்றுமதி சார்ந்த கைத்தொழில்கள் போன்ற ஒட்டுமொத்த பொருளாதாரத்தின் மீதும் பரந்தளவு கசிவுத் தாக்கங்களை ஏற்படுத்தும் உபாய முதலீட்டு செயற்றிட்டங்களுக்கு

நிதியிடுவதற்கு முதலீட்டு வாய்ப்புக்களைக் கண்டறிவதற்கான கருவியாக இருக்கும். நாட்டின் முதலீட்டுத் தேவைகள் தெளிவாக அடையாளம் காணப்படுதல் வேண்டுமென்பதுடன் வாய்ப்பினைக் கொண்ட முதலீட்டாளர்களிடையே இவை ஊக்குவிக்கப்பட வேண்டியதுடன் அத்தகைய முதலீடுகளுக்கான ஒப்புதல்களும் நடைமுறைப்படுத்தல்களும் ஒரே கூரையின் கீழான அணுகுமுறையினைப் பின்பற்றுவதனூடாக விரைவுபடுத்தப்படல் வேண்டும். இது தொடர்பில் 2022 ஒத்தோபரில் முதலீட்டுச் சபையின் கீழ் நிறுவப்பட்ட முதலீட்டாளர் வசதிப்படுத்தல் நிலையம் வரவேற்கத்தக்கதொரு நடவடிக்கையாகும். முதலீட்டு ஒப்புதல் செய்முறைகளை ஒழுங்குமுறைப்படுத்தல், முதலீட்டாளர் வசதிப்படுத்தலுக்காக முகவராண்மைகளுக்கிடையிலான இணைப்புக்களை அதிகரித்தல் என்பன மூலம் முதலீட்டாளர்களுக்கு வினைத்திறன் மிக்க பணிகளை வழங்குவதற்கான பிரத்தியேகமான நிலையமாக முதலீட்டாளர் வசதிப்படுத்தல் நிலையம் விளக்குகிறது. முதலீட்டினை அடிப்படையாகக் கொண்ட பொறுப்புத்தன்மையினை உருவாக்காத உட்பாய்ச்சல்களைக் கண்டறிவது முன்னோக்கிச் செல்கையில் இலங்கைப் பொருளாதாரத்தின் மீளெழுச்சி உபாயத்தின் முக்கிய கூறுகளிலொன்றாக இருத்தல் வேண்டும்.

**இலங்கை சுற்றுலாவினை தீவிரமாக ஊக்குவிக்கின்ற இத்தருணத்தில் சுற்றுலாப் பயணிகளின் வருகைகளை அதிகரிப்பதற்கான வழிமுறைகளும் சுற்றுலா மீதான வருவாய்களைக் கைப்பற்றிக் கொள்வதற்கான பொருத்தமான வலையமைப்பும் அவசிய தேவையாகவுள்ளன.** வெளிநாட்டுச் செலாவணியினை ஈட்டுவதற்கும் சுற்றுலா வருவாய்களிலிருந்தான 2011 இலிருந்து காணப்படும் பாரிய வர்த்தகப் பற்றாக்குறைச் சுமையினை பகுதியளவில் ஈடுசெய்யவும் இலங்கை சுற்றுலாத் துறையில் பெருமளவிற்கு தங்கியிருந்து வருகின்றது. சுற்றுலாப் பயணிகளின் வருகை படிப்படியாக மீட்சியடைந்து வருகின்றமையால் சுற்றுலா வருவாய்களிலிருந்து உயர்ந்தபட்ச நன்மைகளைப் பெற்றுக்கொள்ள நாடு முயற்சித்தல் வேண்டும். எனினும், சுற்றுலா விடுதிகளினால் வழங்கப்பட்ட தரவுகள் மற்றும் விமான நிலையத்தின் வெளிச்செல்லும் அளவீடு என்பனவற்றின் அடிப்படையில், சுற்றுலாப் பயணி ஒருவரின் விருந்தினர் இரவுகளின் சராசரி எண்ணிக்கை, நாளொன்றிற்கு இலங்கையில் சுற்றுலாப் பயணி ஒருவரின் சராசரி செலவிடல் போன்றவற்றின் அடிப்படையில் இலங்கை சுற்றுலா அபிவிருத்திச் சபையினால் சுற்றுலாவிலிருந்தான வெளிநாட்டுச் செலாவணி வருவாய்கள் மதிப்பீடு செய்யப்பட்டு தொகுக்கப்படுகின்றன. எனினும், நாளொன்றிற்கான செலவிடலை தீர்மானிப்பதற்காக பயன்படுத்தப்படும் இவ்வெளிச்செல்லும் அளவீட்டின் பெறுபேற்றின்படி, இப்பிராந்தியத்திலுள்ள பிரபல்யமான சுற்றுலா சேரிடங்களிலும் பார்க்க ஒப்பீட்டு ரீதியில் உயர்வானதாக இருக்கின்றமையானது இதன் துல்லியத்தன்மை பற்றி கேள்வி எழுப்புவதாகவுள்ளது. அத்துடன் நாளாந்த செலவிடலானது சுற்றுலாப் பயணிகளின் வேறுபட்ட வகைகள், தங்குமிட வசதியின் வகை மற்றும் வருகைதரும் நாடுகளின் தன்மை போன்ற மற்றைய பல காரணிகளிலும் தங்கியிருக்கிறது. ஆகவே, சுற்றுலாத் தொழில் துறையின் ஆர்வலர்களினால் தனித்தனியாக எவ்வளவு பணம் ஈட்டப்பட்டு வருகிறது என்பதனை துல்லியமான முறையில் பெற்றுக்கொள்வதற்குப் பொருத்தமான தகவல் வலையமைப்பு இன்றியமையாததாகும். ஐக்கிய நாடுகளிலிருந்தான தொழில்நுட்ப வழிகாட்டல்களின் கீழ், தொகைமதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களம் மற்றும் சுற்றுலா அபிவிருத்திச் சபை என்பனவற்றின் ஒத்துழைப்புடன் ஆரம்பிக்கப்பட்ட சுற்றுலா சென்மதிக் கணக்கு, சுற்றுலாப் பயணிகளின் வருவாய்களைச் சிறந்த முறையில் மதிப்பீட்டுக் கொள்வதற்கு ஆதரவளிக்கக்கூடுமெனினும் இது இன்னமும் இலங்கையில் அபிவிருத்தி செய்யப்பட்டுக்கொண்டேயிருக்கின்றது. மேலும், பல சுற்றுலாப் பயணிகள் அவர்களது தங்குமிட வசதியை எயார்பீஅன்ட்பீ, அகொட மற்றும் புக்கிங்.கொம் போன்ற இணையத்தளங்களூடாக முன்பதிவுசெய்து கொள்வதனால் தகவல்களைப் பெறுவதற்கு இவை பயன்மிக்கனவாகவுள்ளன. அதேவேளை, தங்குமிட வசதிகளை முன்பதிவு செய்து கொள்வதற்கும் சுற்றுலா தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்குமாக சுற்றுலாப் பயண செயலியொன்று இலங்கை சுற்றுலா அபிவிருத்திச் சபையினால் உருவாக்கப்பட்டு வருகின்றது. எனினும், குறிப்பாக கொடுப்பனவுகளைச் செய்யும் போது, தனிப்பட்ட தகவல்களைப் பாதுகாத்துக் கொள்வது மற்றும் விசுவாசக் கழிவுகளைப் பெற்றுக் கொள்வது என்பன தொடர்பான விடயங்கள் என வரும் போது நன்கறியப்பட்ட செயலிகளூடாகச் செய்யப்படும் முன்பதிவுகளை சுற்றுலாப் பயணிகள் அதிகம் நம்புகின்றனர். ஆகவே, பன்னாட்டு இணையத்தளங்கள் மற்றும் செயலிகளூடாகச் செய்யப்படும் முன்பதிவுகளூடாக இவ்விணையத்தளங்களிலும் செயலிகளிலும் பட்டியலிடப்பட்டுள்ள முறைசாரா தங்குமிட வசதியை வழங்குபவர்களூடாகவும் நாட்டிற்குள் ஏற்படும் தொடர்பான வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்களை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான முறைகளைக் கண்டறிந்து கொள்ளும் அதேவேளையில் உள்ளூர் முன்பதிவு இணையத்தளங்களையும் செயலிகளையும் அபிவிருத்தி செய்வதும் அவசியமாகும். மேலும், சுற்றுலாக் கைத்தொழில் துறையில் ஈடுபட்டுள்ள அனைத்து தரப்பினரினதும் வெளிநாட்டுச் செலாவணி வருவாய்களின் பதிவுகளைப் பெற்றுக் கொள்வதற்கும் அவற்றை வங்கித்தொழில் முறைமையில் பதிந்து கொள்வதற்கும் பொருத்தமான பொறிமுறையொன்று அவசியமாகின்ற வேளையில் துறையில் காணப்படும் உயர்ந்தளவான முறைசாரா தன்மைகளை நீக்கிவிடுவதற்கு பதிவு செய்யப்படாத நிறுவனங்களை முறைமையில் உள்ளடக்கிக் கொள்வது விரைவுபடுத்தப்படல் வேண்டும்.

**தொழில்சார் நிபுணர்களினதும் தேர்ச்சிபெற்ற தொழிலாளர்களினதும் பாரிய புலம்பெயர்வு குறிப்பிட்ட கைத்தொழில்களில் தொழிலாளர் பற்றாக்குறைக்கு வழிவகுக்கக்கூடும் போல் தோன்றுவதுடன் அது உற்பத்தியாக்கத்திறனிலும் கணிசமான வீழ்ச்சியை ஏற்படுத்தி மீட்சிக் காலத்திலும் அதற்குப் பின்னரும் நாட்டின் பொருளாதார வளர்ச்சியினைப் பாதிக்கக்கூடும். மோசமான பொருளாதார நெருக்கடிகளினால் மருத்துவர்.** பொறியியலாளர்கள், வங்கியாளர்கள், தகவல் தொழில்நுட்ப தொழில்சார் நிபுணர்கள் போன்ற தகைமைபெற்றவர்களின் பாரிய புலம்பெயர்வு தூண்டப்பட்டிருக்கிறது. வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் புள்ளிவிபரங்களின்படி, வெளிநாட்டு வேலை வாய்ப்பிற்காக புறப்பட்டுச் சென்றவர்களின் பதிவுசெய்யப்பட்ட மொத்த எண்ணிக்கை, 2015 இலிருந்து 2019 வரையான பரந்த காலப்பகுதியின் ஆண்டுச் சராசரியான 226,510 உடன் ஒப்பிடுகையில் 2022இல் 311,056 இற்கு 37 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் தொழில்சார் நிபுணர்களின் புலம்பெயர்வு எண்ணிக்கையில் ஏற்பட்ட தொடர்பான அதிகரிப்பு 87 சதவீதத்திற்கும் கூடுதலாகக் காணப்பட்டது. இது தொடர்பான அலுவல்சார் புள்ளிவிபரங்கள் மட்டுப்படுத்தப்பட்டனவாகக் காணப்படுகின்ற போதும் தொழிலுக்காக தற்காலிகமாக புலம்பெயர்ந்தவர்களுக்குப் புறம்பாக, நிரந்தரமான மனித மூலதன வெளிச்செல்கை 2022 இலிருந்து மிக முனைப்பானதாகக் காணப்பட்டது. இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் கிடைக்கத்தக்கதாகவுள்ள புள்ளிவிபரங்கள், மொத்த தொழிலாளர் புலம்பெயர்வின் ஒரு பங்காக, தொழில்சார் நிபுணர்களின் எண்ணிக்கை போருக்குப் பின்னைய காலத்தில் உறுதியாக அதிகரித்து சராசரியாக 20 சதவீதத்திற்கு மேற்பட்ட ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சியைப் பதிவுசெய்தமையை எடுத்துக்காட்டியது. இலங்கையில் மூளைசாலிகளின் வெளியேற்றம் பற்றிய முக்கிய நிகழ்வு தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு மிக முன்னமேயே காணப்பட்டமையினை இது எடுத்துக்காட்டுகின்றது. தற்போதைய பின்னணியில், பொருளாதாரத்தில் ஏற்பட்ட சுருக்கம் காரணமாக பொருளாதாரம் மற்றும் நிதியியல் துறையின் நிச்சயமற்றதன்மைகளுக்கிடையில் உண்மைக் கூலிகள் வீழ்ச்சியடைந்து வாழ்க்கைத்தரம் குறைவடைந்தமை இலங்கையர்களை புலம்பெயரத் தூண்டியுள்ளது. நீண்ட காலமாகக் காணப்படும் நாட்டின் அமைப்பியல் பிரச்சனைகள் நலக் கவனிப்பு, சட்ட நடைமுறைப்படுத்தல், அரச நிருவாகம், பொதுப் போக்குவரத்து இன்னும் பிற போன்ற நிறுவன ரீதியான கட்டமைப்பினை கடுமையாக நலிவடையச் செய்திருப்பதுடன் சமூகப் பொருளாதார நிலைமைகளை மோசமடைவதற்கும் பங்களித்துள்ளன. வேலையாட்களின் பாரிய வெளிநோக்கிய புலம்பெயர்வு வியாபார நடவடிக்கைகளை தடங்கலுறச் செய்ததுடன் அத்தகைய நிபுணர்களின் இழப்பு புதிய ஊழியர்களை தொடர்ச்சியாக பயிற்றுவிக்க வேண்டிய தேவையை ஏற்படுத்தியதுடன் கணிசமான நேரத்தினையும் மூலவளங்களையும் தேவைப்படுத்தியதுடன் குறுங்காலத்தில் இயலாற்றலினையும் வெளியீடுகளையும் இழப்பதற்கு இட்டுச்சென்றது. உண்மையில் சில ஆய்வுகளின்படி, புதிய ஊழிர்களை ஆட்சேர்ப்புச் செய்து பயிற்சியளிப்பதற்கு ஏற்படும் செலவு, புதிய ஊழியர்களை உத்தம மட்டத்திற்கு பயிற்சியளிக்கும் வரை வெளியீட்டில் ஏற்படும் இழப்பின் காரணமான செலவில் 20 சதவீதத்திற்கு மேல் இருக்கும்[8]. ஒட்டுமொத்த வயது முதிர்ந்த குடித்தொகையினரை விசேடமாகக் கவனத்தில் கொள்கையில், நாட்டின் உற்பத்தித்திறன் இழப்பின் காரணமாக, பாரிய தேர்ச்சிபெற்ற புலம்பெயர்ந்தவர்களின் நீண்ட காலத் தாக்கம் கணிசமானதாக இருக்கும். மேம்பட்ட வலையமைப்பு, தேர்ச்சி மாற்றல் மற்றும் பணவனுப்பல்கள் காரணமாக மூளைசாலிகளின் வெளியேற்றத்தினால் ஏற்படும் சாதகமான கசிவுத் தாக்கமும் ஆய்வுகளில் அடையாளம் காணப்பட்டிருக்கிறது.[9] எனினும், இலங்கையின் பின்னணியில், செலவுகள் அத்தகைய நன்மைகளை விஞ்சிக் காணப்படக்கூடும். அண்மிய கடந்த காலத்தில் புலம்பெயர்ந்த பெரும்பாலான தனிப்பட்டவர்கள் பன்னாட்டு ரீதியாக தொழில்புரியக் கூடியவர்களாக இருப்பதுடன் உயர்ந்த தகைமை கொண்ட ஆளணியினராகவும் கணிசமான தொழில்முயற்சி இயலாற்றல் கொண்டவர்களாகவும் இருப்பதனால் சில சமயங்களில் அவர்களது புலம்பெயர்வு சில ஏற்றுமதி வியாபாரங்கள் உட்பட, முழு வியாபாரமும் வேறிடத்தில் அமைக்கப்படுவதற்கு அல்லது மூடப்படுவதற்கு காரணமாகலாம். இதன் விளைவாக அத்தகைய வெளிமுக புலம்பெயர்வுகளின் பொருளாதாரச் செலவு, தொடர்பான தனிப்பட்டவர்களின் நேரடிப் பங்களிப்பின் இழப்பினை விட பெருமளவு விஞ்சியதாகக் காணப்படும். அரச துறையில் தொழில்சார் நிபுணர்கள் கிடைக்காமையானது எதிர்காலத்தில் தேர்ச்சியின் இடைவெளியினை அதிகரிக்குமென்பதனால் இதன் மூலம் அத்தகைய நிறுவனங்கள் பலவற்றில் வினைத்திறனின் குறைந்த மட்டம் விரிவடையக்கூடும். வெளிநாட்டு தொழில் வாய்ப்பினை பொறுப்பேற்பதற்காக சம்பளமற்ற விடுப்பினைப் பெறுவதற்கு அரச ஊழியர்களை அனுமதிப்பது போன்ற அரச துறையில் அறிமுகப்படுத்தப்பட்ட அண்மைய மாற்றங்கள் நிறுவனம் மற்றும் தேர்ச்சியின் அளவு மற்றும் புலம்பெயர்ந்தவர்களின் நிபுணத்துவம் என்பனவற்றினைப் பொறுத்து கணிசமானளவிற்கு வேறுபடக்கூடுமெனினும், இது, இப்பிரச்சனைகளை மேலும் பெரிதாகக்கூடும். இவ்வேலையாட்களின் பங்களிப்பு இழக்கப்படுவதன் காரணமாக பொருளாதாரத்திற்கு ஏற்படும் செலவிற்குப் புறம்பாக, இலவசக் கல்வி மற்றும் நலக் கவனிப்பு என்பனவற்றை இலவசமாக வழங்குவதன் மீது செய்யப்பட்ட

8 Oxford Economics, (2014). The cost of brain drain: understanding the financial impact of staff turnover, February [Online] (Accessed 22 March 2023).

9 Docquier, F. and Rapoport, H., (2012). Globalization, brain drain, and development. Journal of Economic Literature, Vol. 50, No. 3.;
Gibson, J. and McKenzie, D., (2012). The economic consequences of 'brain drain' of the best and brightest: Microeconomic evidence from five countries. The Economic Journal, Vol. 122, No. 560.

1

முதலீட்டிலிருந்து போதியளவு பயன் கிடைக்காமையின் காரணமாக நாடு கணிசமான இழப்புக்களைத் தாங்க வேண்டியிருக்கிறது. பல துறைகளில் குறைபாடுகள் காணப்பட்ட போதும் அதன் பிரசைகளுக்கு பல்கலைக்கழகம் வரை இலவசக் கல்வியை வழங்குகின்ற உலகிலுள்ள நாடுகளின் சிறிய குழுமத்திடையே இலங்கையும் ஒன்றாகும். எனினும், இப்பாரிய முதலீட்டிலிருந்து நாடு முழுமையான நன்மைகளையும் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்காமைக்கு மூளைசாலிகளின் வெளியேற்றமும் முக்கிய பங்களிப்புக் காரணியாக விளங்குகின்றது. இப்பிரச்சனைகளுக்கு மத்தியிலும் குறிப்பிட்ட துறைகள், அவர்களது ஊழியர்களை தடுத்து நிறுத்துவதற்காக சம்பள உயர்வு, நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த வேலைச் சூழல், வரிச் சுமையைக் குறைப்பதற்கான காசல்லா நன்மைகள், பணவீக்கத்துடன் இணைக்கப்பட்ட கூலிகள் மற்றும் ஐ.அ.டொலருடன் இணைக்கப்பட்ட கூலிகள், அதேபோன்று இன்னும் பல விடயங்களை உள்ளடக்கிய பல நன்மைகளைக் கொண்ட குறுங்கால வழிமுறைகளைப் பின்பற்றின. அத்தகைய குறுங்கால வழிமுறைகள் தற்போதைய பொருளாதார நெருக்கடிகளைக் கட்டுப்படுத்த உதவக்கூடும். எனினும், நீடித்துநிலைத்திருக்கும் வளர்ச்சியை உருவாக்குவது உட்பட, வாழ்க்கைத்தரத்தினை பாதிக்கும் பொருளாதாரத்திலுள்ள நீண்ட கால அமைப்பியல் பலயீனங்களைச் சீர்செய்வதற்கு கடந்த ஆண்டில் விரைவடைந்த மூளைசாலிகளின் வெளியேற்றம் தொடர்பான முக்கிய நிகழ்வினை முடிவிற்குக் கொண்டு வருவது மிக இன்றியமையாததாகும். மேலும், பாரிய புலம்பெயர்விற்கு மத்தியில் பொருளாதார நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்கும் விதத்தில் அண்மைய காலத்தில் தேவையான துறைகளுக்கு தேர்ச்சிபெற்ற வெளிநாட்டு நிபுணர்களுக்காக நாட்டைத் திறந்துவிடும் சாத்தியம் பற்றி அரசாங்கம் கண்டறிதல் வேண்டும். அத்தகைய முயற்சிகளுடன் சேர்த்து, விசேட நன்மைகள் திட்டம், தகைமைபெற்ற ஆளணியினருக்காக ஆராய்ச்சி நிதியிடல் போன்ற இலக்கிடப்பட்ட வழிமுறைகள் புலம்பெயர்ந்த தொழில்சார் நிபுணர்கள் நாட்டிற்குத் திரும்புவதற்கு உந்துதலளிக்கும்.

**அண்மைக் காலத்திலும் தற்போதைய பொருளாதார நெருக்கடிகளின் போதும் பொருளாதாரத்திலுள்ள மிகவும் பாதிக்கப்பட்ட துறைகளிடையே நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகள் துறையும் காணப்படுகின்றமையானது ஒட்டுமொத்த பொருளாதார அபிவிருத்திக்கும் நலன்புரிக்குமாக இத்துறையின் தாக்குப்பிடிக்கும் தன்மையினை மேம்படுத்துவது முக்கியமானதொன்றாக வலியுறுத்தப்படுகின்றது.** இலங்கையில் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக விளங்குகின்ற நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகள் 2019இல் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல், 2020 மற்றும் 2021இல் நிலவிய கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்று, அதனைத் தொடர்ந்து 2022இல் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி போன்ற தொடர்ச்சியாக இடம்பெற்ற மோசமான நிகழ்வுகளுடன் கடந்த பல ஆண்டுகளாக பல்வேறுபட்ட சவால்களையும் தாங்கிக் கொண்டிருக்கின்றன. பரந்தளவிலான துறைகளில் தொழிற்படுகின்ற நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் மற்றைய பல காரணிகளுடன் நிச்சயமற்ற தன்மைகளுக்கிடையே குறைவடைந்த கேள்வி, உயர்வடைந்து செல்லும் பணவீக்கம் மற்றும் கூலிகள், தேய்வடைந்த செலாவணி வீதம், மூலப்பொருட்கள் கிடைக்காமை, மின்வலு மற்றும் ஏனைய பயன்பாடுகளுக்கு ஏற்பட்ட இடையூறு மற்றும் உயர்வடைந்த நிதியியல் செலவு போன்றவற்றினால் மோசமான முறையில் பாதிக்கப்பட்டன. இதன் விளைவாக தேசிய வெளியீடு, தொழில்நிலை மற்றும் வாழ்வாதாரம் என்பன கடுமையாகப் பாதிக்கப்பட்டமையானது இவ்விடர்ப்பாடு மிகுந்த காலப்பகுதியில் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கு உதவும் விதத்தில் அவசரமான மீட்பு வழிமுறைகளை நடைமுறைப்படுத்துவதற்கான தேவையினைத் தோற்றுவித்தது. காசுப்பாய்ச்சல் சவால்களை தற்காலிகமாக வெற்றி கொள்வதற்காக பெறப்பட்ட கடனின் மீது சலுகைகளை வழங்குதல், படுகடன் சட்ட இசைவுத்தாமதத்தினை வழங்குதல் போன்ற பல வழிமுறைகள் இத்துறைக்கு வழங்கப்பட்டன. எனினும், சாதகமற்ற நிதியியல் மற்றும் பொருளாதார நிலைமைகளை எதிர்த்து நிற்பதற்கேற்ற விதத்தில் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளின் இயலாற்றலையும் தாக்குப்பிடிக்கும் தன்மையினையும் அதிகரிப்பதற்கு நீடித்த தீர்வுகள் இன்றியமையாதனவாகும். இதற்கமைய நுண்பாக, சிறிய, நடுத்தர தொழில்முயற்சிகளின் நிதியிடல் பரிசீலனைகளுக்கு உதவுவதற்காக, இன்றியமையாத தேவைப்பாடாக அடையாளம் காணப்பட்ட கொடுகடன் உத்தரவாத நிறுவனமொன்றினை நிறுவுவது இறுதிக் கட்டத்தினை அடைந்திருப்பதுடன் அதனை விரைந்து நிறுவுவதற்கும் எதிர்பார்க்கப்படுகிறது. கொடுகடன் உத்தரவாத நிறுவனம் தொழிற்படத் தொடங்கியதும் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கான நிதியிடல் தடைகள் குறிப்பிடத்தக்களவிற்கு குறைவடைந்து முன்னோக்கிப் பயணிக்கின்ற வேளையில், இணைந்து காணப்படும் கொடுகடன் இடர்நேர்வுகள் பகிரப்படும் என்பதனால் பங்கேற்கின்ற நிதியியல் நிறுவனங்களும் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கு கடன் வழங்க ஊக்குவிக்கப்படும். மேலும், வங்கிகளும் கொடுகடன் நிறுவனங்களும் கூட அவற்றின் கடன்வழங்கல் தொழிற்பாடுகளில் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளை முன்னுரிமைத் துறையாக அடையாளம் காண்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றன. இது துறைக்கான நிதியிடலைக் கிடைக்கச் செய்யவும் உள்ளூர் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளை பாரியளவு தொழில்முயற்சிகளாக மாறுவதற்கு உதவும் பொருட்டும் தொடர்பான அதிகாரசபைகள் ஏற்கனவேயுள்ள பன்னாட்டு தொடர்புகளையும் வெளிநாட்டு வர்த்தக உடன்படிக்கைகளின் அநுகூலங்களையும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதுடன், இதன் மூலம் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் உலகளாவிய பெறுமதிச் சங்கிலிகளுடனும்

பன்னாட்டு வர்த்தகத்துடனும் ஒருங்கிணைக்கப்படுவதற்கும் வழி ஏற்படுத்தப்படுகிறது. அத்தகைய வாய்ப்புக்கள் உலகளாவிய தரத்தினை அடைவதற்கு அவர்களுக்கு உதவுவது மட்டுமன்றி நாட்டிற்கு வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல் அதிகரிப்பதற்கும் பங்களிக்கின்றது. இம்முயற்சிக்கு ஆதரவளிப்பதற்கும் நிதியியல் மற்றும் தொழில்நுட்ப அறிவினை மேம்படுத்துவதற்கும் அதேவேளையில் வர்த்தக தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதற்கான தேர்ச்சியும் இயலாற்றலும் கட்டியெழுப்பப்படுவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியதுடன் இது உலக சந்தைக்கான வாசலைத் திறந்து விடுகின்றது. அத்துடன் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் துறையின் வளர்ச்சியைப் பேணும் பொருட்டு அரசாங்கமும் தொடர்பான அதிகாரசபைகளும் விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் அதிகார படிமுறை, சிவப்பு நாடா என்பனவற்றை தளர்த்துகின்ற வழிகளின் மூலம் தொழில்முயற்சியாண்மை இயலுமைப்படுத்துகின்ற சூழலையும் சுற்றாடலியலையும் உருவாக்கிக் கொள்ளுதல் வேண்டும். மேற்குறிப்பிட்ட முன்னெடுப்புக்கள் தாக்குப்பிடிக்கும் தன்மையினைக் கட்டியெழுப்புவதற்கும் சாதகமற்ற சமூகப் பொருளாதார அபிவிருத்திகளினால் ஏற்படுத்தப்பட்ட சவால்களை வெற்றி கொள்வதற்கும் பயன்மிக்க வியாபார தொழில்முயற்சிகளாகவும் இலங்கையின் அபிவிருத்திக்கு உதவுபவையாகவும் இருப்பதற்கு நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கு உதவக்கூடுகின்ற வேளையில் இதனை நடைமுறைப்படுத்துவதற்கான பொதுப்படையான அணுகுமுறை உத்தமமற்றதாக இருக்கக்கூடும். ஆகவே, பாதிக்கப்பட்ட நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளில் உள்ளார்ந்த வளத்தினை வெளிப்படுத்துகின்றதும் பொருளாதாரத்திற்குச் சாதகமான முறையில் பங்களிக்கக் கூடியதுமானவற்றை ஆற்றலற்றதும் குறைந்த உற்பத்தித்திறன் கொண்டதுமான நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளிலிருந்து அடையாளம் கண்டு அங்கீகரிப்பதற்கான பொறிமுறையொன்று நடைமுறைக்கிடப்படல் வேண்டும். ஆற்றலற்றதொன்றிற்கு உதவுவது ஆரோக்கியமற்றதும் செலவுடையதுமாகும் என்பதனால் பயன்மிக்க நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளை இலக்கிட்டு அவற்றிற்கு உதவியளிக்கப்படல் வேண்டும். மேலும், குறிப்பாக, நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் தொடர்பில் மற்றைய விடயங்களுடன் கடன் தீராற்றலற்ற சட்டங்களை உருவாக்குவதும் அவற்றை மேலும் வலுப்படுத்துவதும் தவிர்க்க முடியாதவையாக இருக்கும்.

**கடந்த அண்மைக் காலத்தில் இறக்குமதி செய்யப்பட்ட விலைகளில் ஏற்பட்ட விகித சமமற்ற அதிகரிப்பினைப் பரிசீலனையில் கொள்கையில், உள்நாட்டு வாழ்க்கைச் செலவினைக் குறைப்பதில், இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் உள்நாட்டு விலைகளில் காணப்படும் கீழ் நோக்கிய போக்கின் நெகிழ்ச்சியற்றதன்மை கரிசனைக்குரியதொன்றாக தொடர்ந்தும் காணப்படுகின்றது.** கடந்த ஆண்டு காலப்பகுதியில் அல்லது முன்னர் பல உணவு மற்றும் உணவல்லா விடயங்களின் விலைகள் பெற்றோலிய எண்ணெய், வாயு மற்றும் ஏனைய இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களினால் மிக நெருக்கமாக தூண்டப்பட்டு கடுமையாக அதிகரித்தமைக்கு உலகளாவிய பண்ட விலைகளில் ஏற்பட்ட விலை அதிகரிப்புக்கள் உடனடியாகவும் கூடுதலானளவிற்கு முழுமையாகவும் ஊடுகடத்தப்பட்டமையும் உள்நாட்டு நாணய தேய்வும் காரணங்களாகின. எனினும், உலகளாவிய விலைகளில் செய்யப்பட்ட குறைப்புக்கள், ஏற்பாடுகளின் செலவில் குறைப்பு, தொழிற்பாட்டுச் செலவுகளில் சீராக்கங்கள் மற்றும் செலாவணி வீதங்களின் அண்மைய முன்னேற்றங்களைப் பதிலிறுத்தும் விதத்தில் பொருட்கள் மற்றும் பணிகளின் இறக்குமதி விலைகளில் நியாயமான காலதாமதத்தின் பின்னர் கூட முழுமையாகப் பிரதிபலிக்கப்படவில்லை. நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமைகளில் நிலவுகின்ற நிச்சயமற்றதன்மை விலைகள் கீழ் நோக்கிக் குறைக்கப்படாமல் இருப்பதற்கான முக்கிய பங்களிப்புக் காரணியாக இருக்கின்றவிடத்து பழைய பொருட்பட்டியலில் காணப்படும் உயர்ந்த விலைகள், முன்னரே இணங்கிக் கொள்ளப்பட்ட உடன்படிக்கை, கொள்கைகளின் போக்கு தொடர்பில் மட்டுப்படுத்தப்பட்ட நம்பகத்தன்மை, சாதகமான அபிவிருத்திகளின் நிலைத்திருக்கும்தன்மை தொடர்பான கரிசனைகள் மற்றும் குறைந்த கேள்வியுடன் தொடர்புபட்ட வருமான இழப்புக்களின் ஒரு பகுதி ஈடுசெய்கின்றமை என்பனவற்றின் காரணமாக வணிகர்கள் விலைகளைச் சீராக்குவதற்கு தயக்கம் காட்டலாம். இருப்பினும் கூட, ஒட்டுமொத்த பொருளாதார நிலமைகளில் உறுதித்தன்மை திரும்பியதன் முழுமையான நன்மைகள் அடையப்பட வேண்டுமாயின் இறக்குமதிகள் தொடர்பான பொருட்கள் மற்றும் பணிகளின் அதிகரித்த விலைகள் பொருளாதார உறுதிப்பாட்டுடன் சேர்த்து கீழ் நோக்கிச் சீராக்கப்படுதல் வேண்டும். விலைகளில் செய்யப்படும் பொருத்தமான அசைவுகளுடன் கேள்வி நிலைமைகள் வழமைக்கு திரும்புமென்பதனால் அத்தகைய சீராக்கங்கள் அனைத்துத் தரப்பினருக்கும் நன்மை பயப்பதாக அமையும். அதேவேளை, உலகளாவிய விலை அபிவிருத்திகள் உள்நாட்டுப் பொருளாதாரத்திற்கு ஊடுகடத்தப்படுகின்ற முக்கிய மார்க்கமாக விளங்கும் வலு விலைகளின் சீராக்கம் இது தொடர்பில் இன்றியமையாததொரு காரணியாக விளங்குகிறது. தற்பொழுது இடம்பெறுகின்றவாறு உள்நாட்டு வலு விலைகளை உலகளாவிய விலைகளுடன் இணைப்பதும் வெளிப்படையான சீராக்கமும் உள்நாட்டு வலு விலைகள் ஊகிக்கக்கூடியதாக இருப்பதனை உறுதிப்படுத்துவதற்கு உதவும். இது, வியாபாரங்கள் தமது எதிர்காலச் செலவுகளை நம்பிக்கையுடன் திட்டமிடுதற்கும் ஒட்டுமொத்த விலை மட்டங்களில் உறுதிப்பாட்டினை ஏற்படுத்தவும் உதவுவதுடன் இதன் மூலம் எதிர்பாராத பணவீக்க அழுத்தங்களின் இடர்நேர்வுகள்

குறைக்கப்படுவதுடன் பணவீக்க எதிர்பார்ப்புக்களை முகாமைப்படுத்தவும் பங்களிக்கின்றது. பணவீக்க இலக்குகளை நிர்ணயிக்கவும் மத்திய வங்கியின் நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பின் கீழ் நாணயக் கொள்கை தீர்மானங்களுக்கு உதவவும் வலுவான பணவீக்க எறிவுகளைத் தயாரிப்பது மிக இன்றியமையாததாகும். இவ்வெறிவுகள் உலகளாவிய விலை அசைவுகளை எடுகோள்களாகக் கொண்டிருப்பதனால் உள்நாட்டு விலைகளில் உலகளாவிய விலைப் போக்குகள் சரியான முறையில் பிரதிபலிக்கப்படுவது கொள்கைத் தவறுகளை மட்டுப்படுத்துவதற்கு மிக முக்கியமானதாகும். மேலேயுள்ளவற்றினைக் கருத்திற் கொண்டு, உள்நாட்டு வலு விலைச் சீராக்கங்களுடன் தொடர்புபட்ட அதிகாரசபைகள் உட்பட, தொடர்பான அதிகாரசபைகளும் நுகர்வோர் அலுவல்சார் அதிகாரசபை போன்ற ஏனைய ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகாரசபைகளும் பொருட்களின் இறக்குமதி செய்யப்பட்ட விலைகள் தொடர்பில் விழிப்பாக இருக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றவிடத்து கீழ் நோக்கிய விலைச் சீராக்கங்கள் நியாயமான முறையில் ஊடுகடத்தப்பட வேண்டும். அத்தகைய ஊடுகடத்தல்கள் எதிர்பார்க்கப்பட்டவாறு விரைந்த பணவீக்க வீழ்ச்சிச் செயல்முறையுடன் சேர்ந்து வாழ்க்கைச் செலவினைக் குறைக்க உதவும்.

**இலங்கைப் பிரசைகளின் நலன்புரி மீது ஆழமான பொருளாதார நெருக்கடிகளின் நீடித்த தாக்கங்கள் கணிசமானவையாக விளங்கி, மிகப் பாதிக்கப்படக்கூடிய குழுமங்களின் நலன்புரிகளை உறுதிப்படுத்துகின்ற கொள்கை உபாயங்கள் மீள உருவாக்கப்பட வேண்டியதன் அவசர தேவையை வலியுறுத்தின.** பொருளாதார நெருக்கடிகளின் சுமை விகிதசமமற்ற விதத்தில் பாதித்திருக்கின்றது. பாதிக்கப்படக்கூடிய குடித்தொகையினரின் வாழ்க்கை நிலைமைகள் வாழ்வாதாரம் இழக்கப்பட்டமை, பணவீக்கம் விரைவுற்றமை மற்றும் ஏனைய விடயங்கள் உள்ளிட்ட பல்வேறுபட்ட மார்க்கங்களினூடாக பெருமளவிற்கு மோசமடைந்தன. இலங்கைக்கான இற்றைப்படுத்தப்பட்ட தேசிய வறுமைக்கோடு 2022இல் ரூ.13,777 இற்கு உயர்வடைந்து 74 சதவீதம் கொண்ட வருடாந்த அதிகரிப்பினைப் பதிவுசெய்தது. இவ்வுயர்வானது அடிப்படை உணவு, ஆடை மற்றும் புகலிட வடிவங்களிலான இன்றியமையாதனவற்றின் செலவுகள் உயர்வடைந்து ஆளொருவருக்கான குறைந்தபட்ச மாதாந்தச் செலவின் அதிகரிப்புக்களைக் காட்டியது. உலக உணவு நிகழ்ச்சித்திட்டத்தின் வீட்டுத்துறையினரின் உணவுப் பாதுகாப்பு அளவீட்டின்படி, 85 சதவீதமான குடித்தொகையினர் பணத்தினைக் கடன்படல், கல்வி மற்றும் சுகாதாரம் மீதான செலவிடலைக் குறைத்தல், சேமிப்புக்களைச் செலவிடல் அல்லது கொடுபட வேண்டிய படுகடன் கொடுப்பனவுகளைப் பிற்போடுதல் போன்ற வாழ்வாதாரங்களை அடிப்படையாகக் கொண்ட செலவுகளைச் சமாளிக்கும் முறைகளினூடாகவே வாழ்வைக் கொண்டு நடத்துகின்றனர். தொழில் நிலையின் பாரிய பங்கு முறைசாரா துறையில் அமையப் பெற்றிருக்கின்ற வேளையில் குடித்தொகையினரில் 14.3 சதவீதத்தினர் வறுமைக் கோட்டிற்கு கீழே வாழ்கின்ற வேளையில் நெருக்கடியின் பாரிய தாக்கம் பாரதூரமானதாகவிருப்பதுடன் அது அநேக மக்களை வறுமைக்குள் தள்ளிவிடக் காரணமாகிறது. அத்துடன் தற்போதைய நெருக்கடி குடித்தொகை குழுவினரிடையே சமூகப் பொருளாதார சமமற்ற தன்மைகளை விரிவுபடுத்தி தலைமுறை ரீதியாக வறுமையினைத் தூண்டும். ஏனெனில் இது வீட்டுத் துறையினர் வறியவர்களாக மாறும் போது செல்வத்தின் திரட்சியினைக் குறைத்து கல்வி மற்றும் நலக்கவனிப்பு மீது எதிர்மறையான தாக்கத்தினை ஏற்படுத்துவதுடன் இதன் விளைவாக, அவர்களது எதிர்கால வருமான உருவாக்கத்திற்கான இயலாற்றலையும் பாதித்து அதன் மூலம் நச்சுவட்டமொன்றை உருவாக்குகிறது. இப்பின்னணியில், குடித்தொகையிலுள்ள பாதிக்கப்படக்கூடிய சமூகத்தினரைப் பாதுகாப்பதற்கு தற்போதுள்ள சமூகப் பாதுகாப்பு வலையமைப்பின் கீழ் உதவுதொகை மட்டங்களை அதிகரித்தமையின் மூலம் வறுமை மட்டங்கள் மேலும் மோசமடைவதனைத் தவிர்ப்பதற்கும் அரசாங்கம் பல்வேறு பல வழிமுறைகளை எடுத்ததுடன் மற்றைய விடயங்களுடன் பன்னாட்டு நிதியிடல் முகவர்களின் உதவியுடன் காசு மற்றும் பண்டங்களை வழங்கிய போதும் அவற்றின் பலயீனமான இலக்கிடலின் காரணமாக அத்தகைய நிகழ்ச்சித்திட்டங்களில் வினைத்திறன சவாலுக்குள்ளாகின்றது. உலகளாவிய நோய்த்தொற்றின் தோற்றத்திலிருந்து பாதிக்கப்படக்கூடிய சமூகத்தினரும் அதேபோன்று நாட்டின் வறுமையின் விளிம்பிலுள்ள குழுவினரும் தொடர்ந்தும் வருமான இழப்பின் பிடியிலிருக்கின்ற வேளையில் நம்பகமான இற்றைப்படுத்தப்பட்ட தரவுத்தளமின்மையினால் அரச உதவியினை தீவிரமாக நாடுகின்ற குடித்தொகையிலுள்ள ஆங்காங்கே காணப்படும் புதிய வறிய பிரிவினரை அடையாளம் காண்பதிலான தாமதம் மட்டுப்படுத்தப்பட்ட இறை நிதிகளினதும் வெளிநாட்டு ஆதரவுகளினதும் வினைத்திறனற்ற பகிர்வுக்கு வழிவகுத்தது. ஆகவே, உண்மையான நன்மைபெறுநர்களுக்கு உரிய நேரத்தில் நன்மைகள் போய்ச் சேர்வதனை உறுதிப்படுத்துவதற்கு, நலன்புரி நன்மைகள் சபையின் கீழ் தேவையான மக்களின் பதிவேடொன்றினை உருவாக்குவதற்காக ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்ட வழிமுறைகளை விரைவுபடுத்துவது இன்றியமையாததாகும். அதேவேளை, நலன்புரி நன்மைகள் சபையினைத் தொழிற்படுத்தல் உட்பட ப.நா.நிதிய - விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாடுகளின் கீழ் சமூகப் பாதுகாப்பு வலையமைப்பு தொடர்பான சீர்திருத்தங்களைப் பூர்த்தி செய்தல், சமூகப் பதிவேடொன்றினை உருவாக்குவதற்கும் அதேபோன்று புதிய நலன்புரி நன்மைகள் கொடுப்பனவுத் திட்டமொன்றினை அறிமுகப்படுத்துவதற்கும் தற்போது இடம்பெற்றுவரும் முயற்சிகளுடன் சேர்த்து தகைமைப் பிரமாணங்களை

அபிவிருத்தி செய்வது, பொருளாதார நெருக்கடி மற்றும் கொள்கை சீர்திருத்தங்களின் பாதிப்பிலிருந்து பாதிப்படக்கூடிய மக்களுக்கு உதவியளிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இதன் கீழ் நலன்புரி நன்மைகள் முறைமை மற்றும் தகைமைப் பிரமாணங்களுக்கு 2023 மே அளவில் பாராளுமன்றத்தின் ஒப்புதலைப் பெற்றுக் கொள்வது போன்ற சீர்திருத்தங்களைத் தொழிற்படுத்துவதற்கான அரசாங்கத்தின் கடப்பாடுகள் மற்றும் சமூகப் பாதுகாப்பு வலையமைப்பின் மீதான செலவிடலின் கீழ் மட்டத்தினை விரிவுபடுத்துவதற்கான அதன் திட்டம் என்பன நீண்ட கால அடிப்படையில் வறுமையை ஒழிப்பதற்கு மிக முக்கியமானதாக இருக்கும். இச்சீர்திருத்தங்களைத் தொடரும் அதேவேளையில் பொருளாதாரத்திலுள்ள அனைத்து ஆர்வலர்களினதும் ஒத்துழைப்புடன் அரசாங்கத்தினால் வழிநடத்தப்படும் பல்துறைக் கொள்கை அணுகுமுறைகளை நடைமுறைக்கிடுவது வறுமையினை ஒழிப்பதற்கு முக்கியமானவையாக அமையும். இதன் மூலம் குடித்தொகையிலுள்ள அனைத்துப் பிரிவினருக்கும் எதிர்கால வளர்ச்சி வாய்ப்புக்களின் நன்மைகள் சமமாக கிடைப்பது உறுதிப்படுத்தப்படும். மேலும், பொருளாதார நெருக்கடிகளின் தாக்கம் தொடர்பில் வீட்டுத்துறையினரிடம் அளவீடொன்றினை தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தின் ஒத்துழைப்புடன் நடத்துவதற்கு அரசாங்கத்தினால் அண்மையில் எடுக்கப்பட்ட முயற்சிகள் வரவேற்கத்தக்கதாகவுள்ளதுடன் இது பாதிக்கப்படக்கூடிய குடும்பங்கள் தொடர்பில் சரியான மதிப்பீடுகளை வழங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. அத்தகைய தரவுத்தளங்களும் அளவீட்டில் கண்டறியப்படும் விடயங்களும் மேம்பட்ட தரம், போதுமான தன்மை மற்றும் சரியான நேரத் தகவல்களை என்பனவற்றினூடாக வறுமையை ஒழிப்பதன் மீதான கொள்கைத் தலையீடுகளின் காத்திரமான தன்மையினை இயலுமைப்படுத்தும். இதன் மூலம் எதிர்காலத்தில் சான்றுகளை அடிப்படையாகக் கொண்ட தகவல்களின் அடிப்படையிலமைந்த கொள்கைத் தீர்மானங்கள் வலுப்படுத்தப்படுவதுடன் தற்போதுள்ள சமூக பாதுகாப்பு வலையமைப்பு பொறிமுறையினை மேம்படுத்துவதும் முக்கியமானதாகும். இதன் கீழ், இலத்திரனியல் வங்கித்தொழில் முறைமைகள், கொடுப்பனவு அட்டைகள் அதேபோன்று இலத்திரனியல் அடையாள தேர்வு என்பனவூடாக உதவுதொகை பகிர்ந்தளிப்பு பொறிமுறையினை இலத்திரனியல் மயப்படுத்துவது நலன்புரிக் கொடுப்பனவுகளின் வினைத்திறனற்ற தன்மையினதும் சாத்தியமான கசிவுகளையும் குறைப்பதற்கு உதவும். மேலும், அரசின் செலவின சிக்கனமயப்படுத்தல் முயற்சியின் பின்னணியில், செலவினத்தின் பயன்களை மேம்படுத்துவதற்கு, தற்போதுள்ள வறுமை ஒழிப்பு உபாயங்களை முழுமையாக மதிப்பீடு செய்வது அவசியமாகும். அத்தகைய மதிப்பீடொன்று அரசாங்கம் தனியார் துறை மற்றும் தொடர்பான பல்புடை அமைப்புக்களின் ஒத்துழைப்பினை நாட வேண்டிய துறைகளை அடையாளம் கண்டுகொள்ள உதவும். வறுமை ஒழிப்பு முயற்சிகள் வேளாண்மைத் துறையிலுள்ள பெறுமதி கூட்டல்களை மேம்படுத்தல், எதிர்கால வருமான வாய்ப்புக்களை உறுதிப்படுத்துவதற்கு வறிய மற்றும் பாதிக்கப்படக்கூடிய குழுவினருக்கான கல்வி வாய்ப்புக்களை விரிவுபடுத்தல், தொழில் சந்தையில் பெண்களின் பங்கேற்பினை மேம்படுத்துவதுடன் கூடிய வாழ்வாதார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை மேம்படுத்தல் அதேபோன்று வருமான மட்டங்களில் படிப்படியான முன்னேற்றங்கள் ஏற்படுவதற்கிசைவாக தற்போதுள்ள பாதுகாப்பு வலையமைப்பு நிகழ்ச்சித்திட்டங்களுக்கான முறையியல் சார்ந்த கொள்கை கட்டமைப்பினைப் பின்பற்றுதல் போன்ற ஏனைய பல துறை தலையீடுகளையும் உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

**வலுவான பொருளாதார மீட்சியையும் வளர்ச்சியையும் தொடங்குவதற்கு நாட்டிற்கு ஆதரவளிக்கும் பொருட்டு, தேசிய கொள்கை திட்டமிடல் பொறிமுறை மற்றும் முழுமையான நடைமுறைப்படுத்தல் வலுப்படுத்தப்பட வேண்டும்.** நாட்டில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீடுகள் இரண்டினையும் மேம்படுத்துவதற்கான முக்கியமான இடர்ப்பாடு யாதெனில் நிலையான கொள்கை இல்லாமையேயாகும். இது, பொருளாதார மற்றும் நிதியியல் தீர்மானங்களை மேற்கொள்வதிலும் வியாபாரங்கள் எதிர்கால திட்டமிடல்களை மேற்கொள்வதிலும் தீங்குபயக்கிறது. அரசாங்கங்கள் மாறுவது முக்கியமான கொள்கை மாற்றங்களைக் கொண்டு வருவதனால் நிலையான தன்மையினைப் பேணுவதற்கு கொள்கை உருவாக்கத்தினை அரசியல் வட்டத்திலிருந்தும் முழுமையாக வேறுபடுத்துவது அவசியமாகும். தேசிய திட்டமிடல் அனைத்து மூலவளங்களும் உச்சமட்டத்தில பயன்படுத்தப்படுகின்ற வகையில் பொருளாதாரம் முழுவதிலுமுள்ள உற்பத்தித்திறன் மேம்பாடுகளின் மீது கவனம் செலுத்தல் வேண்டும். தேசிய திட்டமானது ஒவ்வொரு துறையிலுமுள்ள அரச துறை மற்றும் தனியார் துறை இரண்டிலுமுள்ள வல்லுநர்களினால் உருவாக்கப்படுவது அவசியமென்பதுடன் அது பின்பற்றப்படுவதற்கு முன் பாராளுமன்றத்தின் இணக்கப்பாட்டினை பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். இதற்கு, ஒருங்கிணைப்பான விளைவுகள் காணப்படும் போது உபாயக் கொள்கை தொகுதிகளை அபிவிருத்தி செய்வது முக்கியமானதாகும். உதாரணமாக, ஊட்டச்சத்து வேளாண்மை மற்றும் விலங்கு வளர்ப்பு உற்பத்திகள், நிலப் பயன்பாடு மற்றும் அத்துறைகளில் உச்சமட்ட பெறுபேறுகளை உறுதிப்படுத்தக்கூடிய காலநிலை மாற்றங்களின் தாக்கங்களை எதிர்த்து நிற்கக்கூடிய தன்மைகளை வலியுறுத்துகின்ற சூழல் கொள்கைகள் ஒருங்கிணைக்கப்படுவதனையும் அங்கீகரிக்கின்ற கொள்கை அத்துடன், ஏற்றுமதிக் கொள்கைகள் வெளிநாட்டு அலுவல்கள், முதலீட்டு ஊக்குவிப்பு, கைத்தொழில் மற்றும் வேளாண்மை கொள்கைகளுடன் தொடர்புடையதாக இருத்தல் வேண்டும். அதேவேளையில், கனிப்பொருள் பயன்பாட்டுக் கொள்கை கைத்தொழில் கொள்கையுடன் தொடர்புடையதாக இருத்தல் வேண்டும். ஏற்றுமதிகள், முதலீடுகள், தொழிலாளர்

1

பணவனுப்பல் மற்றும் வெளிநாட்டு நிதியிடல் என்பனவற்றிற்கு ஒரு சில இருபுடை பங்காளர்களில் அளவுக்கதிகமாக தங்கியிருப்பது பாதிக்கப்படும் தன்மை அதிகரிப்பதற்கு காரணமாகி வெளிநாட்டுக் கொள்கை, தேசிய பாதுகாப்பு மற்றும் முக்கியமாக நாட்டின் இறையாண்மையின் மீது இது பெருமளவிற்கு எதிரொலிக்கக்கூடும். சுயாதீனமான கொள்கை கண்காணிப்பு பொறிமுறையொன்று நடைமுறையில் இருத்தல் வேண்டும் என்பதுடன் விரும்பத்தக்க பெறுபேறுகளை அடையக்கூடிய கொள்கைகளை நடைமுறைப்படுத்தத் தவறும் தனிப்பட்டவர்கள் அதற்கான பொறுப்பினை ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

**அண்மைய ஆண்டுகளாக அரச துறை, வங்கித்தொழில் முறைமை மீது அதிகளவிற்கு தொடர்ச்சியாக தங்கியிருப்பது தனியார் துறை முதலீடுகள் இல்லாமல் போவதற்கு வழிவகுத்து, பணவீக்க அழுத்தங்களை ஏற்படுத்தி நிதியியல் முறைமையின் மீது இறுக்கங்களைத் தோற்றுவித்தது.** மோசமான இறைச் செயலாற்றம் மற்றும் நாட்டிற்கான தரமிடல் குறைக்கப்பட்டமையின் காரணமாக வெளிநாட்டு நிதியிடலை அணுகும் வழி இழக்கப்பட்டமையின் காரணமாக அரசாங்கம் வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை நிதியிடலுக்கும் படுகடன் தீர்ப்பனவுகளுக்கும் உலகளாவிய நோய்த்தொற்றின் பின்னர் மத்திய வங்கியையும் அரசிற்குச் சொந்தமான வர்த்தக வங்கிகளையும் அரசாங்கம் நாடுவது அவசியமாயிற்று. அதேவேளை, எரிபொருள் மற்றும் மின்வலுவின் கிரமமான சூத்திரங்களை அடிப்படையாகக் கொண்ட விலைத் திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதில் காணப்பட்ட தாமதமும் வினைத்திறனற்ற தன்மையுடனும் தாழ்ந்த உற்பத்தித்திறனுடனும் தொடர்புபட்டுள்ள மரபுவழிப் பிரச்சனைகளும் அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளை நிதியியல் ரீதியாக பலவீனப்படுத்தின. இது அரசின் கஜானாவின் மீதும் அதேபோன்று முழு வங்கித்தொழில் முறைமையிலும் சுமையினைத் தோற்றுவித்தது. இதன் விளைவாக, பல ஆண்டுகளாக அத்தகைய தொடர்ச்சியாகக் காணப்பட்ட நிதியிடல், அரச துறைக்கான வங்கித்தொழில் துறையின் கடன் வெளிப்படுத்துகை குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்து நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டிற்கு இடர்நேர்வினை ஏற்படுத்தியது. மேலும், அதிகரித்துவரும் அரச துறைக் கடன்பாட்டுத் தேவைப்பாடுகள் சந்தை வட்டி வீதங்களின் மீது மேல் நோக்கிய அழுத்தத்தினைத் தோற்றுவித்த வேளையில், அரச துறையின் மிகையான நிதியிடல் பணவீக்கத்தினை ஏற்படுத்துவதாக இருக்கும். நாணய நிதியிடலினூடாக அரசாங்கத்தினால் பெறப்பட்ட கணிசமான நிதியும் உற்பத்தித்திறனிலும் வெளியீட்டிலும் எந்தவொரு ஈடான முன்னேற்றத்தினையும் காட்டாத கடன்பாடுகள் வடிவில் அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளினால் பெறப்பட்ட நிதியும் விலைகளின் மீது மேல் நோக்கிய அழுத்தத்தினைத் தோற்றுவிக்கும். ஆகவே, இது நாணயக் கொள்கையின் காத்திரமானதன்மையை, குறிப்பாக நாணயக் கொள்கை நிலை இறுக்கமாக இருக்கும் நேரத்தில் பாதிக்கும். இவ்வத்தியாயத்தில் முன்னர் குறிப்பிடப்பட்டவாறு அண்மைய நிவாரண வழிமுறைகள் வங்கித்தொழில் முறைமையின் மீது அரச துறை தங்கியிருப்பதனைக் குறைக்கக்கூடும். அதேவேளை, அரச துறை நிதிகளை அதிகரிப்பதற்காகவும் மிகையான வங்கி நிதியிடலுக்கான தேவையினை குறைப்பதற்காகவும் மேலும் வழிமுறைகள் எடுக்கப்பட வேண்டும். செயலாற்றத்தினால் தூண்டப்படும் அரச துறையானது உற்பத்தித்திறனை அதிகரித்து நிதியியல் சாத்தியத்தன்மையினை உயர்வடையச் செய்வதன் மூலம் வங்கி நிதியிடலுக்கான தேவையினைக் குறைக்கிறது. அதேவேளை, மேம்பட்ட உள்நாட்டு பேரண்டப் பொருளாதார நிலைமைகள் மற்றும் நாட்டின் நிலையில் ஏற்படும் உயர்வினைக் கருத்திற்கொண்டு அரசாங்கமானது இருபுடை மற்றும் பல்புடை கடன்வழங்குநர்களிடமிருந்து குறைந்த செலவிலான நிதியிடலைப் பெற்றுக் கொள்வதில் தீவிரமாக ஈடுபடுதல் வேண்டும். இதன் மூலம் நிதியிடலுக்காக உள்நாட்டு வங்கித்தொழில் முறைமை மீது தங்கியிருப்பது குறைவடையும். அத்துடன், அரசாங்கத்திற்கு பல்புடை நிதியிடல் மீளத்தொடங்கும் போது அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் வேறு நிதியிடல் மூலங்களை, பெரும்பாலும், மூலதனம் மற்றும் செயற்றிட்ட அடிப்படையிலான நிதியிடல் மூலங்களைக் கண்டறிதல் வேண்டும். மாற்று ஏற்பாடாக, அரசாங்கம் இழப்புக்களை ஏற்படுத்துகின்ற, ஆனால், உபாயம்மிக்க அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளை அரச - தனியார் பங்குடமை ஏற்பாடுகளினூடாக இலாபம் தரும் தொழில்துறைகளாக மாற்றுவது பற்றி பரிசீலித்தல் வேண்டும். இது தனியார் துறைக்கு முகாமைத்துவ நிபுணத்துவத்தினைக் கொண்டுவந்து அத்தகைய அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் உற்பத்தித்திறனையும் இலாபத்தன்மையினையும் உயர்வடையச் செய்யும். மேலும் அரச துறையில் காணப்படும் தேவையற்ற விரயத்தினையும் ஊழலையும் குறைப்பதும் தொடர்பான துறைகளில் அனுபவமும் நிபுணத்துவமும் கொண்ட தகைமையும் ஆற்றலும்மிக்க அலுவலர்களை நியமிப்பதும் அவசியமாகும். இவ்வழிமுறைகளின் பெறுபேறாக, உள்நாட்டு வங்கித்தொழில் முறைமையின் மீது தனியார் துறை தொடர்ச்சியாக தங்கியிருக்கும் தன்மை குறைந்து போகும் என்பதுடன் இதன் மூலம் வங்கித்தொழில் முறையில் அருமையாகக் காணப்படும் இந்நிதிகளை தனியார் துறையின் உற்பத்தியாக்க நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்துவதற்கான பரந்த வசதிகளையும் வாய்ப்பினையும் வழங்கும்.

**அவ்வப்போது மேற்கொள்ளப்படும் கொள்கைத் தலையீடுகளின் காரணமாக இலங்கையில் உணவு வழங்கல் முறைமையில் அதிகரித்துவரும் பாதிக்கப்படும் தன்மையின் அண்மைய அனுபவங்கள், உள்நாட்டு வேளாண்மைத் துறையில் காணப்படும் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கும்**

**நாட்டின் உணவுப் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்கும் அரசாங்கம் ஒருங்கிணைக்கப்பட்டதும் நிலையானதுமான கொள்கை அணுகுமுறைகளைக் கொண்டிருப்பது தொடர்பில் வலுவான கடப்பாடுகளுக்கான தேவையினை வலியுறுத்துகிறது.** தொடர்ச்சியாக பதவிக்கு வந்த அரசாங்கங்கள் உதவுதொகை நியதிகளில், குறிப்பாக வளமாக்கி உதவுதொகை, உத்தரவாத விலைகள், உயர் விளைச்சலைத்தரும் இனங்களின் விநியோகம் மற்றும் வேளாண் விரிவாக்கப் பணிகள் போன்ற இதன் உற்பத்தித்திறனை மேம்படுத்தும் நோக்குடன் கடந்த பல தசாப்த காலமாகக் காணப்படும் விரிவான தொடர்ச்சியான உதவிகள் வழங்கப்பட்ட போதும் நாட்டின் வேளாண்மைத் துறையின் உற்பத்தித்திறன் தொடர்ச்சியாக தேக்க நிலையில் காணப்பட்டதுடன் காலநிலை மற்றும் மனிதனால் இழைக்கப்படும் அதிர்வுகளினாலும் பாதிக்கப்படுகின்றது. வளமாக்கி உதவுதொகைகளுக்கான ஏற்பாடு வேளாண்மைத் துறையில் மிக முக்கியமான தலையீடாகத் தொடர்ந்தும் காணப்படுவதுடன் இது நாட்டில் உயர்ந்த அரசியல் ரீதியில் உணர்வுபூர்வமான விடயமாகவும் மாறியிருக்கிறது. இதன் மூலம் தொடர்ந்து வந்த அரசாங்கங்கள் அத்தகைய கொள்கைகள் சரியான பெறுபேறுகளை விளைவிக்கின்றனவா என்பதனைக் கருத்திற் கொள்ளாது அத்தகைய கொள்கைகளைப் பின்பற்றுவதற்கு கட்டாயப்படுத்தப்பட்டன. இதன்படி, இரசாயன வளமாக்கிகள் மிகையாகப் பயன்படுத்தப்படுவதனை தடுப்பதற்கும் சேதனப் பயிர்ச்செய்கையினை ஊக்குவிப்பதற்கும் நீடித்துநிலைத்திருக்கக் கூடியதும் வினைத்திறன் மிக்கதுமான வளமாக்கி கொள்கைகளைப் பின்பற்றுவதற்கான வளர்ந்துவரும் தேவை காணப்படுகின்ற வேளையில் நாட்டின் இறக்குமதிச் செலவின் மீதான சுமை குறைக்கப்படுகிறது. இருப்பினும், 2021இல் இரசாயன வளமாக்கி இறக்குமதிகள் மீதான சடுதியான தடை நாட்டின் முக்கிய உணவு உற்பத்தியின் மீது தீங்கு பயக்கும் தாக்கத்தினை ஏற்படுத்தி 2022இல் பெரும்பாலும் உணவு நெருக்கடிகளுக்கு வழிவகுத்தது. இது வெளிநாட்டுச் செலாவணித் திரவத்தன்மை வறிதடைந்தமையின் காரணமாக உணவு இறக்குமதி மட்டுப்படுத்தப்பட்டமையுடன் மேலும் மோசமாயிற்று. இருப்பினும் கூட, வளமாக்கி தடை ஆறு மாதங்கள் நடைமுறையிலிருந்ததன் பின்னர், வேளாண்மையில் சேதனமல்லா வளமாக்கியின் பயன்பாட்டினைப் படிப்படியாக கட்டம் கட்டமாக குறைக்கும் தேவை அடையாளம் காணப்பட்டமையினால் வளமாக்கித் தடை இரத்துச் செய்யப்பட்டது. விலைக் கட்டுப்பாடு மீதான கொள்கைகள் உணவு ஒவ்வொருவரும் தாங்கிக் கொள்ளக்கூடியதும் அணுகத்தக்கதுமான விதத்தில் காணப்படுவதனை உறுதிப்படுத்தும் விதத்தில் குறிப்பிடத்தக்க வகிபாகமொன்றினை ஆற்றக்கூடியதாக இருந்த போதும் 2022இல் காணப்பட்ட உணவுப் பற்றாக்குறைகளிற்கு மத்தியில் இலங்கையில் காணப்பட்ட விலை அழுத்தங்கள் ஆர்வலர்களிடையேயான இணைப்புக்கள் போதாமல் இருந்தமையினையும் விலை அழுத்தங்களையும் அதேபோன்று பொருளாதார நெருக்கடிகளிலிருந்து தோன்றிய உணவு வழங்கலின் உயர்வடைந்து செல்லும் செலவுக்கூறுகளையும் தவிர்ப்பதற்கு தாக்குப்பிடிக்கக்கூடிய தாங்கிருப்புக்கள் இல்லாமல் போனமையைப் பிரதிபலித்து அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட விலைக் கட்டுப்பாடுகள் உணவு விலைகளைத் தளர்த்துவதில் மட்டுப்படுத்தப்பட்ட வெற்றிகளையே காட்டின. வேளாண்மையாளர்களுக்கு உதவும் விதத்தில் உயர்ந்த விலைகளில் நெல்லைக் கொள்வனவு செய்வதற்காக 2022இன் பிற்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட அரசாங்கத்தின் நெல் கொள்வனவு நிகழ்ச்சித்திட்டம் நெல் சந்தைப்படுத்தும் சபையிடம் போதுமான நிதி இல்லாமையின் காரணமாக எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகளை வழங்கத் தவறிவிட்டது. மேலும், மனித நுகர்விற்கு அரிசி அதிகளவு கிடைக்கத்தக்கதாக இருப்பதனை உறுதிப்படுத்தும் நோக்குடன் நெல்லை அல்லது அரிசியை விலங்குத்தீன் உற்பத்திக்கு பயன்படுத்தப்படுவதன் மீதான தடை இறக்குமதி செய்யப்பட்ட விலங்குத் தீன் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே கிடைத்தமையின் காரணமாக கோழி வளர்ப்புத் துறை மோசமான விளைவுகளைக் சந்தித்தது. இது, கோழிப் பண்ணை உற்பத்திகளுக்கான விலைகளில் ஏற்பட்ட மிகையான அதிகரிப்புக்களுக்கு பகுதியளவில் பங்களித்ததுடன் இதன் காரணமாக உணவின் தரமும் பாதிக்கப்பட்டது. இது நாட்டின் உணவுப் பாதுகாப்பின் முக்கிய அம்சமாக இருக்கிறது. பொதுமக்களுக்கு தாங்கக்கூடிய விலையில் கோழிப் பண்ணை உற்பத்திகள் கிடைப்பதனை உறுதிப்படுத்துவதற்காக உயர்ந்தபட்ச விலைகளை அரசாங்கம் அறிமுகப்படுத்திய போதும் சந்தையில் கோழிப் பண்ணை உற்பத்திகளுக்கான பற்றாக்குறை ஏற்பட்டமையானது கிடைப்பனவு தொடர்பான கரிசனைகளைத் தோற்றுவித்தது. வேளாண்மைத் துறைக்காக அவ்வப்போது செய்யப்படும் மற்றும் தனித்தனியான கொள்கை வகுப்பில் காணப்படும் தவறுகளின் பால் கவனத்தை ஈர்க்கும் விதத்தில், இலங்கையின் அண்மைய அனுபவங்கள் நடைமுறைக்கிடப்பட்ட வேளாண்மைக் கொள்கைகளில் பெரும்பாலானவை எதிர்விளைவுகளைக் கொண்டனவாக இருப்பதனைக் காட்டின. இலங்கை, உணவில் முழுமையாக தன்னிறைவடையாததாக இருக்கின்ற போதும் நாடு உணவுக் கிடைப்பனவு, விலையின் தாங்கிக் கொள்ளக்கூடிய தன்மை, அணுகக்கூடிய தன்மை மற்றும் உறுதிப்பாட்டு நியதிகளில் உணவுப் பாதுகாப்பு பிரச்சனைகளினால் அண்மைய தசாப்தங்களில் அச்சுறுத்தப்படவில்லை. 2021 - 2022 காலப்பகுதியில் பின்பற்றப்பட்ட அவ்வப்போதைய கொள்கைகளைத் தொடர்ந்து நெல் மற்றும் காய்கறிகளின் அறுவடையில் காணப்பட்ட தொடர்ச்சியான இழப்பு அல்லது குறைவு காரணமாக இலங்கை உணவுப் பாதுகாப்பின்மை நிலைமைகளை அனுபவித்ததுடன் இது இன்றுவரை குறைந்த அளவில் தொடர்ந்து வருகின்றது. இப்பிரச்சனைகளை வேளாண்மைச் சமூகத்தினரின் ஆலோசனையுடன் கட்டுப்படுத்துவது அவசியம் என்பதுடன் நாட்டின் உணவுத்

1

தேவைப்பாடுகளின் இன்றியமையாத முக்கியத்துவத்தினை கருத்திற்கொண்டு சாத்தியமானளவிற்கு விரைவாக தீர்க்கப்பட வேண்டும். வேளாண்மைச் சமூகத்தினருக்கு அரசாங்கத்தின் உத்தேச கொள்கைகள் பற்றி விளக்கமளிப்பது அவசியமாகவுள்ளதுடன் வேளாண்மை அணுகுமுறைகள் பற்றி பயிற்சியளிக்கப்படுதலும் வேண்டும். வேளாண்மைத் துறையில் காணப்படும் அபாயகரமான இந்நிலைமை அபிவிருத்திக்கு நிரந்தர வசதிப்படுத்தல்களை வழங்கும் விதத்திலும் உணவுப் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் விதத்திலும் வேளாண்மையுடன் தொடர்பான அனைத்து அரச நிறுவனங்கள், தனியார் துறை ஆர்வலர்கள் மற்றும் வேளாண்மைத் துறை சார்ந்த வேளாண்மையாளர்களிடையே அதிகரித்த இணைப்புடன் வேளாண்மைத் துறைக்கான முழுமையானதும் நீண்ட காலம் நிலைத்திருக்கக் கூடியதுமான உபாயத்திற்கான தேவையைக் காட்டுவதாகவுள்ளது. அத்தகைய பரந்த அடிப்படையிலான கொள்கை அணுகுமுறைகள் தாழ்ந்த வேளாண்மை உற்பத்தித்திறன் அறுவடைக்குப் பின்னரான உயர்ந்த இழப்புக்கள், உத்தம அளவிலும் குறைந்த வேளாண்மை நடைமுறைகள், தாழ்ந்த பெறுமதி கூட்டல்கள், விலைப் பிறழ்வுகள் மற்றும் வேளாண்மை உற்பத்திகளின் நலிவடைந்த சந்தைப்படுத்தல் என்பன தொடர்பான ஆழமாக வேரூன்றிய பிரச்சனைகளுக்குத் தீர்வு காணும் விதத்தில் இலக்கிடப்படுதல் வேண்டும். இதன் மூலம் வேளாண்மைப் பெறுமதிச் சங்கிலியிலுள்ள ஆர்வலர்களுக்கு ஆரோக்கியமான வருமான மட்டங்களை உருவாக்குவதற்கான இயலாற்றலையுடைய நீடித்துநிலைத்திருக்கக்கூடிய வேளாண்மைத் துறையின் உருவாக்கத்தினை இயலுமைப்படுத்துகின்ற வேளையில் நாட்டின் உணவுப் பாதுகாப்பு மற்றும் வினைத்திறன்மிக்க சூழல் முறைமை முகாமைத்துவம் என்பனவும் உறுதிப்படுத்தப்படும்.

**நீண்ட காலமாக காலந்தாழ்த்தப்பட்ட காரணிச் சந்தைச் சீர்திருத்தங்களை விரைவுபடுத்துவது நெருக்கடியை உடனடுத்த காலப்பகுதியில் பொருளாதார மீட்சியை விரைவுபடுத்துவதற்கும் நடுத்தர காலத்தில் வளர்ச்சியைப் பேணி வளர்ப்பதற்கும் இன்றியமையாததாகும்.** நாட்டின் காணி மற்றும் தொழிற்சந்தைகள் தொடர்ந்தும் சவால்களை எதிர்நோக்குவதுடன் கொள்கைகளின் நெகிழ்ச்சியற்ற தன்மை, அத்தகைய துறைகளில் சட்டத்தினை நடைமுறைப்படுத்துவதில் காணப்படும் போதுமானதற்ற தன்மை என்பன உலகளாவிய சந்தையில் தோற்றம்பெற்ற கணிசமான வாய்ப்புக்களை நாடு பயன்படுத்திக் கொள்ள தடையாக விளங்குவதுடன் வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் சுமுகமான பாய்ச்சலையும் தடைசெய்கின்றன. தொழிற்சந்தையில் தற்போதுள்ள சட்டங்களும் ஒழுங்குவிதிகளும் ஊழியர்களைப் பாதுகாக்கும் நாட்டத்தினைக் கொண்டுள்ளன. இது தொழிற்படையின் பயன்பாடு மற்றும் உற்பத்தித்திறன் இரண்டின் மீதும் எதிர்மறையான தாக்கத்தினைக் கொண்டிருக்கும். அதேவேளையில் அரச துறைத் தொழில் பங்களிப்பல்லா ஓய்வூதியத் திட்டத்துடன் கூடிய கவர்ச்சிகரமான ஓய்வூதிய நன்மைகளை வழங்குவது கூடியளவு உற்பத்தித்திறன் மிக்க துறைகள் மற்றும் நடவடிக்கைகளினை நோக்கி தொழிலாளர் நகர்வதனை ஊக்கமிழக்கச் செய்கிறது. மேலும், தொழிற்சந்தையில் நெகிழ்ச்சித்தன்மையுடன் கூடிய வேலை நேரங்கள் இல்லாமை மற்றும் இறுக்கமான வேலை மணித்தியாலங்கள், இயலாமை, பால்ரீதியான தடைகள் செயலாற்றத்தினை அடிப்படையாகக் கொண்ட ஊதியப் பொதிகள் இல்லாமை, தொழிற்படையில் காணப்படும் தேர்ச்சி இடைவெளி போன்ற தொழிற்சந்தையில் தொடர்ச்சியாகக் காணப்படும் இறுக்கமான தன்மைகள் கடந்த பல தசாப்தகாலமாக தொழில் பெறக்கூடிய ஆற்றலையும் தொழிலாளர் உற்பத்தித்திறனையும் பெருமளவிற்கு பாதித்து வருகின்றன. எனவே, இலங்கையின் பொருளாதாரம் மீளெழுச்சியுறுவதற்கு வசதியளிக்கும் பொருட்டு, பன்னாட்டு தொழில் நியமங்களுக்கு நிகரான விதத்தில் தொழிற்சந்தை சட்டங்களையும் ஒழுங்குவிதிகளையும் நவீனமயப்படுத்தி தாராளமயப்படுத்துவதற்கு அவசர நடவடிக்கைகள் அவசியமாகின்றன. இக்கட்டமைப்பிற்குள், தொழிற்சந்தை தொழிற்பாடுகளை மேம்படுத்துவதற்கான முக்கிய கொள்கைகள் வேலையிலிருந்து நீக்குவதுடன் தொடர்புபட்ட செலவு, வேலையை முடிவுறுத்தல்/ இலகுவாக நிறுத்துதல், தற்காலிகமான தொழில் வாய்ப்புக்களை அதிகரித்தல், குறைந்தபட்ச மற்றும் சட்டபூர்வமான ஓய்வூதிய வயது தொடர்பில் நெகிழ்ச்சித்தன்மையினை வழங்குதல், வாழ்நாள் எதிர்பார்ப்புக் காலத்துடன் ஓய்வூதிய வயதை இணைத்தல் மற்றும் பெண்களை வேலைக்கமர்த்துவதனை அதிகரித்தல் என்பவற்றை உள்ளடக்குகின்றன. அதேநேரம், இவ்வொழுங்குவிதிகள் சமகாலத் தேவைப்பாடுகளுக்குப் பொருத்தமான விதத்தில் தொழில் வாய்ப்பிற்கான தோற்றம்பெற்று வருகின்ற துறைகளையும் உள்ளடக்கியிருக்க வேண்டிய அதேவேளையில், தொழிலின்மை காப்புறுதித் திட்டங்கள், நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த வேலை நேரங்கள், பாதுகாப்பான பொதுப் போக்குவரத்து மற்றும் நாளாந்தம் பராமரிப்பு/ பிள்ளைப் பராமரிப்பு இடங்கள் போன்ற தேவையான தூண்டுதல்கள் மூலம் பெண்களின் தொழிற்படைப் பங்கேற்பு வீதத்தினை அதிகரிப்பதற்கு தூண்டுலளிக்கப்படல் வேண்டும். மேலும், நெருக்கடி காலத்தில் மிகையான மனித மூலதனம் வெளியேறுவதனைக் கட்டுப்படுத்துவதற்கு வழிமுறைகள் தேவையாக இருப்பதுடன், உலகளாவிய ரீதியில் திறமைசாலிகளைக் கவர்வதற்கும் நாட்டின் தொழிற்சந்தையில் காணப்படும் தேர்ச்சி இடைவெளிகளைக் குறைப்பதற்கும் தற்போதுள்ள குடிவரவு விதிகளை மீளாய்வு செய்வது அவசியமாகிறது. குடும்ப வாழ்க்கையிலும் புலம்பெயர்பவரின் நல விடயங்களிலும் எதிர்பாராத இடையூறுகளை விளைவிக்கும் பொருளாதாரச் சரிவின் தாக்கம் காரணமாக உள்நாட்டு வெளிநாட்டு தொழிலாளர் புலம்பெயர்வின் மீது

கவனம் செலுத்துவதும் அவசியமாகிறது. காணிச் சந்தையும் பல்வேறுபட்ட காணிச் சட்டங்களினால் உருவாக்கப்பட்டுள்ள பல்வேறு மட்டங்களிலான சொத்துரிமை முறைமை, பல்வேறுபட்ட காணிச் சட்ட நடைமுறைப்படுத்தல் முகவர்களின் பிரசன்னம், காணி முகாமைத்துவத்துடன் தொடர்பான முகவர்களினால் பின்பற்றப்படும் வெவ்வேறுபட்ட விதிகள், காணி உறுதியில் காணப்படும் பிரச்சனைகள் மற்றும் செயற்றிட்டங்களுக்கு காணிகளைப் பயன்படுத்துவதற்கான ஒப்புதலைப் பெறுவதில் காணப்படும் நீண்ட மற்றும் வினைத்திறனற்ற நடைமுறைகள் உள்ளிட்ட பல்வேறு சிக்கல்களின் காரணமாக நீண்ட தடைகளை எதிர்நோக்குகிறது. செய்முறைகளை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கும் பயன்படுத்தப்படாத/ உற்பத்தியாக்கமற்ற காரணிகளைப் பயன்படுத்தல் மற்றும் அபிவிருத்திக்கு கிடைக்கத்தக்க காணிகளை முகாமைப்படுத்துவதில் வினைத்திறனை மேம்படுத்துவதற்கும் தொழிற்படுகின்ற பல்வேறு நிறுவனங்களையும் தனியொரு நிறுவனத்தின் கீழ் ஒன்றுதிரட்டுவதற்கான மையப்படுத்தப்பட்ட முகவராண்மையை நிறுவுவதுடன் இணைந்து, காணிகளுக்காக ஏற்ற சட்ட நடைமுறைப்படுத்தல்களை ஒழுங்குமுறைப்படுத்துவது காணிச் சந்தையில் தற்போதுள்ள சிக்கல்களை இலகுபடுத்தப் பங்களிக்கும். மேலும், நாட்டில் முதலீடுகளை வசதிப்படுத்தும் பொருட்டு தெளிவானதும் மயக்கமற்றதுமான சொத்துடமையினை உறுதிப்படுத்துகின்ற மையப்படுத்தப்பட்ட டிஜிட்டல் தரவுத் தளமானது காணித் தரவுத் தளத்தினை அணுகுவதனை மேம்படுத்துவதன் மூலம் காணி ஒதுக்கீட்டுச் செய்முறையில் காணப்படும் வினைத்திறனற்ற தன்மைகளை தீர்க்கும். இது தொடர்பில் இலத்திரனியல்-காணிப் பதிவேட்டினை நிறுவுவதற்கான அரசாங்கத்தின் முயற்சி வரவேற்கத்தக்கதொன்றாகக் காணப்படுவதுடன் இது வசதி, பாதுகாப்பு மற்றும் வினைத்திறன்மிக்க காணிப் பதிவு என்பனவற்றை உறுதிப்படுத்தும் என எதிர்பார்க்கப்படும் வேளையில் அரச முகவர்கள், தனியார் துறை மற்றும் பொதுமக்கள் உட்பட தேவையான தரப்பினர்கள் காணித் தகவல்களையும் தொடர்பான பணிகளையும் விரைவாக அணுகுவதற்கான வசதியையும் வழங்குகிறது. மேலும், அனைத்தையுமுள்ளடக்கிய காணிப் பயன்பாட்டு கொள்கைக் கட்டமைப்பொன்றை உருவாக்குவதும் காணி நிருவாக முறைமைகளை வலுப்படுத்துவதும் நாட்டில் காணிச் சந்தை காத்திரமான முறையில் தொழிற்படுத்துவதற்கு இன்றியமையாததாகும். ஆகவே, தொழில் மற்றும் காணிச் சந்தையில் காணப்படும் காலம் தாழ்த்தப்பட்ட அமைப்பியல் சீர்திருத்தங்களின் நடைமுறைப்படுத்தலை விரைவுபடுத்துவது காரணிச் சந்தையில் ஒதுக்கு மற்றும் பயன்பாட்டு வினைத்திறன்களை அதிகரிக்கக்கூடும். இதன் மூலம் பொருளாதாரத்தின் தொழில்நிலை, முதலீடு மற்றும் ஒட்டுமொத்த வளர்ச்சி வேகம் உத்வேகப்படுத்தப்படும்.

**இலங்கை அதன் பொருளாதாரத்தினை டிஜிட்டல் பொருளாதாரத்திற்கு மாற்றுவதற்கான பெருமளவு உள்ளார்ந்த வளத்தினைக் கொண்டிருக்கின்றதுடன் எதிர்பார்க்கப்படும் பொருளாதார மீட்சியை வசதிப்படுத்துவதற்கு, டிஜிட்டல் யுகத்தின் நன்மைகளைத் திறந்து விடுவதுண்டு உலகளாவிய டிஜிட்டல் துறையின் அபிவிருத்திகளை விரைவாக வாங்கிக்கொள்வது இன்றியமையாததாகும்.** டிஜிட்டல் பொருளாதாரமானது, தொழில்நுட்பத்தினால் தூண்டப்படும் பொருளாதார மாதிரியொன்றினைப் பிரசன்னப்படுத்துகின்றவிடத்து, டிஜிட்டல் தொழில்நுட்பங்கள் பொருளாதார நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கு பயன்படுத்தப்படுகின்றமை பரந்தளவு பொருளாதார வினைத்திறனை விளைவிப்பதுடன் அதிகரித்த இணைப்பு மற்றும் வெளிப்படைத்தன்மை, பொதுமக்களுக்கான அதிகரித்த வசதி, மூலவளங்களை ஒதுக்குவதில் பெருமளவு வினைத்திறன், தரவுகளை அதேநேரத்திலேயே அணுகும் தன்மை என்பன சான்றுகளை அடிப்படையாகக் கொண்ட கொள்கைப் பதிலிறுப்புக்களையும் அபிவிருத்திகளை விரைவுபடுத்துவதனையும் இயலுமைப்படுத்தியது. இத்துறையில் பல உலகாளவிய கம்பனிகள் தொழிற்பாடுகளை நிறுவியுள்ளமை, புத்தாக்கம் மற்றும் தொழில்முயற்சியாண்மைக்கான புதிய வாய்ப்புக்கள் உருவாக்கப்பட்டுள்ளமை என்பனவற்றின் காரணமாக இலங்கையில் டிஜிட்டல் பொருளாதாரம் படிப்படியாக உயர்ந்து வருவது மென்பொருள் மற்றும் தகவல் தொழில்நுட்பப் பணிகள், இ-அரச பணிகள், டிஜிட்டல் உட்கட்டமைப்பு அபிவிருத்தியூடாக பின்டெக் என்பனவற்றின் பரந்த வளர்ச்சியை எடுத்துக்காட்டுகிறது. மேலும், கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்று, டிஜிட்டல் தொழில்நுட்பவியல் பின்பற்றப்படுவதனை விரைவுபடுத்தியதுடன் அநேக வியாபாரங்களும் தனிப்பட்டவர்களும் தொழில் மற்றும் தொடர்பூட்டலுக்காக இணையவழித் தளத்தினை நாடினர். மேலும், இ-அரச பணிகள் மக்கள் ஈடுபாடுகளை சிறந்த முறையில் இலகுபடுத்தியிருப்பதுடன் வெளிப்படைத்தன்மையினையும் பொறுப்புக்கூறும் தன்மையினையும் அதிகரித்த வேளையில், பின்டெக் நிதியியல் பணிகளின் புத்தாக்கத்திற்கும் நிதியியல் உள்ளடக்க வசதிகளை மேம்படுத்துவதற்குமான வாய்ப்புக்களை வழங்கியது. அதேவேளை, நாடு முழுவதிலுமுள்ள பின்தங்கிய சமூகத்தினருக்கு தாங்கக்கூடிய விதத்தில் இணையத்தள இணைப்புக்களையும் டிஜிட்டல் கல்வி அறிவு பயற்சியையும் வழங்குவதனை நோக்கமாகக் கொண்ட இலங்கையின் டிஜிட்டல் வசதிக்குட்படுத்தல் பல்வேறுபட்ட முன்னெடுப்புக்களுடன் படிப்படியாக நிலைமாற்றத்தினை எடுத்துக்காட்டியது. டிஜிட்டல் அரசாங்கம், டிஜிட்டல் பொருளாதாரம் மற்றும் டிஜிட்டல் பணிகள் ஆகிய மூன்று தூண்களை அடிப்படையாகக் கொண்ட அரசாங்கத்தின் முன்முயற்சியான தேசிய டிஜிட்டல் நிலைமாற்ற உபாயம் (2021 - 2024) இது தொடர்பில் வரவேற்கத்தக்கதொரு விடயமாகக் காணப்படுகிறது. அதேவேளை, 2022ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க தனியாள் தரவுப் பாதுகாப்புச்

சட்டம், 2023 வரவு செலவுத்திட்டத்தில் அறிவிக்கப்பட்டவாறு, தரவுப் பாதுகாப்பு அதிகாரசபையினை நிறுவுவதற்காக மேற்கொள்ளப்படும் முன்னெடுப்புக்கள் என்பன டிஜிட்டல் பரிமாற்றத்தின் இன்றியமையாத கூறுகளாக விளங்குகின்றன. பொருளாதாரத்தினை டிஜிட்டல் மயப்படுத்துவதில் இலங்கை முன்னேற்றத்தினை அடைந்திருக்கின்ற போதும் நாடு டிஜிட்டல் மாற்றங்களுக்குட்படுவது, இணையத்தள தாங்கிக் கொள்ளும் தன்மை, இணையத்தள செலவின் தரம், இ-அரசாங்கம். இ-பாதுகாப்பு மற்றும் இ-வர்த்தகம் உள்ளிட்ட பல்வேறு பிரமாணங்களை அடிப்படையாகக் கொண்ட வாழ்வின் டிஜிட்டல் தரச் சுட்டெண்ணினால் பிரதிபலிக்கப்பட்டவாறு 2022இல் 117 நாடுகளில் இலங்கை 89 இடத்தில் தரமிடப்பட்டதன் மூலம் அயல் பொருளாதாரங்களுடன் ஒப்பிடுகையில் அபிவிருத்தியின் ஆரம்பக் கட்டத்திலேயே இது இன்னமும் காணப்படுவதனைப் பிரதிபலிக்கின்றது. டிஜிட்டல் மயப்படுத்தல் உத்வேகத்தனை ஒன்றுதிரட்டுவதற்கு பல துறைகளிலும் முன்னேற்றம் காண்பதற்கு கணிசமான இடமிருப்பதனால் வெற்றி கொள்ளப்பட வேண்டிய சவால்கள் இன்னமும் இருக்கின்றன. இதன்படி, இலங்கை டிஜிட்டல் உட்கட்டமைப்பில் முதலீடுகளைச் செய்தல், டிஜிட்டல் ஏற்றத்தாழ்வுகளை தீர்க்கும் பொருட்டு டிஜிட்டல் அறிவினையும் தேர்ச்சி அபிவிருத்தியையும் மேம்படுத்தல், புத்தாக்கங்களை ஊக்குவிக்கின்ற ஒழுங்குமுறைப்படுத்தல் சூழ்நிலைக்கு ஆதரவளிக்கும் தன்மையினை உருவாக்குதல், தொழில்நுட்பவியல் மாற்றங்களையும் வெளிநாட்டு முதலீடுகளையும் ஊக்குவித்தல் போன்ற முன்னேற்றத்தினை விரைவுபடுத்துவதற்கான முயற்சிகளைத் தொடர்தல் வேண்டும். டிஜிட்டல் மயப்படுத்தலானது இலங்கை அதன் பொருளாதாரத்தில் பாதுகாப்பு வலையமைப்பின் கீழ் வறிய மக்களை தெரிவு செய்வதிலுள்ள குறைபாடு வரி நிருவாகம் சவால்கள் மற்றும் கண்காணிப்பிலுள்ள நிரம்பல் மார்க்கங்களில் காணப்படும் வினைத்திறனற்ற தன்மை, சந்தைப்படுத்தலுக்கான தடைகள், அரசாங்க துறைக்குள் காணப்படும் இணைப்பு மற்றும் வெளிப்படைத்தன்மைப் பிரச்சனைகள் போன்ற அமைப்பியல் தடைகளைத் தீர்ப்பதற்கான வாய்ப்பொன்றினை வழங்குகின்ற வேளையில், பொருளாதாரத்தின் மனித மூலதனத்தில் உற்பத்தித்திறன் மேம்பாடுகளுக்கான அநேக வாய்ப்புக்களை உருவாக்குகிறது. மேலும், டிஜிட்டல் மயப்படுத்தல் அணுகுவதற்கான தன்மையினை அதிகரிப்பதுடன் உலகளாவிய பெறுமதிச் சங்கிலிக்குள் ஒருங்கிணைக்கப்படுவதற்கான வசதிப்படுததல்களையும், இறுதியாக கணிசமான சந்தை வாய்ப்புக்களை நாடு பெற்றுக்கொள்வதற்கான இயலாற்றலையும் எதிர்காலத்தில் பொருளாதார மீட்சியை தூண்டுவதையும் உயர்த்துகின்றது. அரசாங்கம் டிஜிட்டல் உருவாக்கத்தினைத் தூண்டுகின்ற போதும் தனியார் துறை டிஜிட்டல் அபிவிருத்தியில் கணிசமானளவு பொறுப்புக்களைக் கொண்டிருக்கிறது. இது தொழில்நுட்வியல் பரிணாம வளர்ச்சியுடன் இசைந்து செல்கின்ற விதத்தில் சமூகத்தில் டிஜிட்டல் பயன்பாட்டினைப் பரந்தளவிற்கு ஊக்குவிக்கும் விதத்தில் பல்வேறு மட்டங்களிலும் காணப்படும் டிஜிட்டல் ஏற்றத்தாழ்வினை நிவர்த்திசெய்யும் நோக்குடனான முதலீடுகள், புத்தாக்கம், தொழில்நுட்பவியல் மாற்றல்கள் மற்றும் மனித மூலதன அபிவிருத்தி என்பனவற்றை உள்ளடக்குகிறது. இதன்படி, அரசாங்கம், ஒழுங்குமுறைப்படுத்துநர்கள், சட்ட அதிகாரிகள் மற்றும் தனியார் துறையின் உள்ளிட்ட அனைத்துப் ஆர்வலர்களிடையேயுமான தீவிரமான பங்களிப்புடன் பன்முகத்தன்மை கொண்டதும் ஒருங்கிணைக்கப்பட்டதுமான நிலையான அணுகுமுறையொன்று பாதுகாப்பானதும் நம்பகமானதுமான டிஜிட்டல் முறைமைகளை அபிவிருத்தி செய்வதற்கு மிக அவசியமாகும். இது தற்போது காணப்படும் டிஜிட்டல் ஏற்றத்தாழ்வுகளை நிவர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற வேளையில் பொருளாதார நடவடிக்கைகளின் ஏனைய கொத்தணிகளுக்கும் சமகாலத்தில் சாதகமான கசிவுத் தாக்கங்கள் உருவாக்குகின்றது. சைபர் பாதுகாப்புச் சட்டத்தினை இயற்றுவதற்கான அவசியம் காணப்படுவதுடன் இது பரந்தளவு நிதியியல் முறைமையினைப் பாதுகாப்பதற்குப் பொருத்தமான விதிகளையும் ஒழுங்குவிதிகளையும் கட்டமைப்பதற்கும் உதவும்.

**பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கான அயராத முயற்சியும் உறுதித்தன்மைக்கும் வளர்ச்சிக்குமான உபாயப்படுத்தல்களும் இன்றியமையாதனவெனினும் நீடித்து நிலைத்திருக்கும் வளர்ச்சியை உறுதிப்படுத்துவதற்கு சுற்றாடலைப் பேணுவதும் இன்றியமையாததாகும்.** நீண்ட காலமாகக் காணப்படும் காடழிப்பு, மனித - யானை மோதல், சட்டத்திற்கு மாறான சுரங்கமகழ்தல், ஒழுங்கமைக்கப்படாத கழிவுகளைக் கொட்டுதல், காபன் வெளியேற்றம் மற்றும் காட்டு விலங்குகளினால் ஏற்படும் பயிர் இழப்புக்கள் மற்றும் வானிலை இடையூறுகள் போன்ற சுற்றாடல் பிரச்சனைகள் அநேக சமூக - பொருளாதார எதிர்க்கணிய விளைவுகளைக் கொண்டிருக்கின்றன. அண்மைய தசாப்தங்களில் இலங்கை கணிசமான வெப்ப உயர்வினைக் கொண்டுள்ள வேளையில் வருடாந்தம் கடுமையானதும் தொடர்ச்சியானதுமான வரட்சி நாட்களையும் அதிகளவிற்கு அனுபவித்து வருவதனை சான்றுகள் எடுத்துக்காட்டுகின்றன. பல பன்னாட்டு ஆய்வுகள் காலநிலை மாற்றங்களினால் மிகவும் பாதிக்கப்பட்ட நாடுகளிலொன்றாக இலங்கை இருப்பதனை அடையாளம் கண்டுள்ளன. கடந்த இரண்டு தசாப்தங்களாக பொருளாதாரமானது வெள்ளம், வரட்சி, ஒழுங்கற்ற மழைவீழ்ச்சி மாதிரிகள், வெப்ப அலை, மண்சரிவு மற்றும் கிருமித்தொற்று போன்ற காலநிலையுடன் தொடர்பான பிரச்சனைகளினால் குறிப்பிடத்தக்களவிற்குப் பாதிக்கப்பட்டிருக்கிறது. உயர்வடைந்துவரும் வெப்பமும் சமுத்திரம் அமிலமாவதும் பொதுமக்களின் பிரதான புரதச்சத்து மூலமாகவும் அதேவேளையில் ஏற்றுமதி வருமானங்களையும் உழைக்கின்ற மீனின் கிடைப்பனவினைப் பாதித்துள்ளன. உணவு வழங்கல் இழப்பு மறுபுரத்தில் பணவீக்கம், கிராமிய

வேளாண் சமூகத்தினரின் தாழ்ந்த நலன்புரி என்பனவற்றிற்கு வழிவகுப்பதுடன் உணவு இறக்குமதிக்கு பயன்படுத்தும் வெளிநாட்டு நாணயத்தினை அருந்தல் மற்றும் வேளாண்மை உற்பத்திகளிலிருந்தான ஏற்றுமதி வருமானத்தினையும் இழத்தல் போன்றவற்றிற்கும் இட்டுச் செல்கின்றது. இலங்கை அதிகளவிற்கு நீர்மின்வலுவில் தங்கியிருப்பதனையும் (2022இல் 33.7 சதவீதம்) மழைவீழ்ச்சி போக்கில் அண்மையில் ஏற்பட்ட மாற்றங்களையும் பரிசீலனையில் கொள்கையில் வலு உருவாக்கத்தின் மீதான காலநிலை மாற்றத்தின் தாக்கம் கடுமையானதாகவுள்ளது. இலங்கையின் விடாப்பிடியான வெளிநாட்டு நாணயக் பற்றாக்குறை மற்றும் வலுப் பாதுகாப்பின்மை என்பனவற்றை கவனத்தில் கொள்கையில், உலகளாவிய எண்ணெய் விலைகள் உயர்வடையும் போது இப்பிரச்சனை கடுமையாகிறது. மேலும், வெளிநாட்டு நாணய பற்றாக்குறையின் காரணமாக மின்வலு உருவாக்கத்திற்குப் பயன்படுத்தப்படும் எரிபொருள் எண்ணெய்யின் பங்கினை அதிகரிக்க முடியாமல் இருப்பதன் காரணமாக வருடாந்தம் வலு உருவாக்கத்திற்காக 2 மில்லியன் மெற்றிக் தொன்களுக்கும் கூடுதலான நிலக்கரி இறக்குமதி செய்யப்படுகின்றது. மோசமான காலநிலை, இயற்கை அனர்த்தங்கள் மற்றும் சுற்றாடல் மாசுபடுதல் என்பன இலங்கை துரதிஷ்ட வசமாக பெருமளவிற்கு தங்கியிருக்கும் சுற்றுலா மீது எதிர்க்கணியமான தாக்கத்தினைக் கொண்டிருக்கின்றன. அரசாங்கமும் மத்திய வங்கியும் தாமதத்துடன், சூழல் பாதுகாப்பிற்கான முயற்சிக்கு ஆதரவளிப்பதற்கும் பொருளாதார நடவடிக்கைகளிலிருந்து சூழலுக்கு ஏற்படும் மோசமான தாக்கத்தினைக் குறைப்பதற்கும் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருவதுடன் சூழல் பாதுகாப்பு ஆதரவு நடவடிக்கைகளுக்கான நேரடி நிதிப் பாய்ச்சல்களையும் வழங்கின. நீடித்துநிலைத்திருக்கக்கூடிய நிதி வழிகாட்டல் மற்றும் வகைப்படுத்தலை உருவாக்குவதற்காக மத்திய வங்கி உலக வங்கியின் பன்னாட்டு நிதிக் கூட்டுத்தாபனத்துடன் இணைந்து பணியாற்றியது. காலநிலை சுபீட்சத் திட்டமொன்று அண்மையில் தொடங்கிவைக்கப்பட்டது. சூழலின் தாக்குப்பிடிக்கும் தன்மையினை மேம்படுத்துவதற்கு முதலீடுகளைச் செய்வதற்கு நாட்டின் பொருளாதாரத்தின் தாக்குப்பிடிக்கும் தன்மையை மேம்படுத்துவதும் அவசியமாகும். காலநிலை, வளிமண்டலம் வெப்பமடைதல், காடுகளைப் பாதுகாத்தல், வன ஜீவராசிகள், கனிப்பொருள் மூலவளங்கள், மாசடைதல் போன்ற அனைத்துச் சூழல் அம்சங்களையும் உள்ளடக்கிய சூழல் பற்றிய பரந்தளவிலான மையப்படுத்தப்பட்ட

**காலக்கிரமமான அறிக்கையிடலொன்று அடையாளம் காணப்பட்ட திகாரசபையொன்றினை பொதுமக்களுக்கு கிடைக்கச் செய்யப்படுவது அவசியமாகும்.** இது, சூழல் பற்றிய கரிசனைகள் பற்றி பொதுமக்கள் விழிப்புணர்வை மேம்படுத்திக் கொள்ளவும் கொள்கை நடவடிக்கைகளைக் காத்திரமான முறையில் ஒருங்கிணைக்கவும் உதவும். புதுப்பிக்கத்தக்க வலு, நீர் முகாமைத்துவம், கழிவு முகாமைத்துவம் மற்றும் பல விடயங்கள் போன்ற துறைகள் மீது நேர்க்கணியமான கசிவுத் தாக்கங்களை ஏற்படுத்தக்கூடிய சூழல் நட்புறவுச் செயற்றிட்டங்கள் மற்றும் சூழல் பாதுகாப்பு என்பன தொடர்பில் வெளிநாட்டு முதலீடுகளையும் கொடைகளையும் கவர்தல் வேண்டும். நீடித்துநிலைத்திருக்கக் கூடியதும் அனைத்தையுமுள்ளடக்கிய வளர்ச்சிக்காக பசுமை மற்றும் நீல செயற்றிட்டங்களுக்கு நிதியிடுவதற்கு உள்நாட்டு நிதியியல் நிறுவனங்கள் ஊக்குவிக்கப்படுதல் வேண்டும். சுற்றாடல் பாதுகாப்பின் மனவுணர்வுகளை எடுத்துக்காட்டுவது பல்புடை, இருபுடை மற்றும் பொறுப்புமிக்க தனியார் துறை கொடைவழங்குநர்களிடமிருந்து பல சலுகை நிதியிடல்களுக்கான தெரிவுகளை திறந்துவிடும். இது, படுகடனின் நிலைபேறான தன்மையை மீண்டும் அடைந்து கொள்வதற்கான தற்போதைய முயற்சிகளுக்கு வலுச் சேர்ப்பதாக அமையும். நீண்ட காலத்தில் சுற்றாடல் பற்றிய பொறுப்புக்கூறும் தன்மையினை அதிகரிப்பதற்காக சூழலுக்கேற்பட்ட சேதத்திற்கான சீராக்கங்களைச் செய்வதனால் கணிக்கப்படுகின்ற மொ.உ.உற்பத்தியான பசுமை மொத்த உள்நாட்டு உற்பத்தி போன்றவற்றிற்கான தேவை கண்டறியப்படல் வேண்டும்.

**தற்பொழுது இடம்பெற்று வருகின்ற படுகடன் மறுசீரமைப்பு முயற்சிகளிலிருந்து நன்மைகளைப் பெற்றுக்கொள்கின்ற வேளையில், வளர்ச்சியின் நீடித்துநிலைத்திருக்கக்கூடிய மீட்சி பொருளாதாரத்தின் முக்கிய துறையில் மிகத் தேவையான சீர்திருத்தங்களை விரைவாக மேற்கொள்வதிலேயே தங்கியிருக்கிறது.** மறுசீரமைப்பிற்குப் பின்னரான காலப்பகுதியில் நாட்டின் வளர்ச்சி வாய்ப்பின் மீது படுகடன் மறுசீரமைப்பின் சாத்தியமான தாக்கம் பற்றிய சான்றுகள் கலப்பானதாகக் காணப்படுகின்றன. படுகடன் மறுசீரமைப்புச் செய்முறை முதலீட்டாளர் மற்றும் வியாபாரங்களின் நம்பிக்கை மோசமடைகின்ற தன்மை, வர்த்தகக் கடன்களை போதுமானளவிற்கு அணுகமுடியாமை, குறைவடைந்த நாட்டிற்கான தரமிடலுடன் இணைந்த உயர்ந்த கடன்பாட்டுச் செலவுகள் மற்றும் குறைவடைந்த அரசாங்க செலவினம் போன்ற எதிர்க்கணியமான பொருளாதார தாக்கங்களுடன் இணைந்து காணப்படுகிறது. எனினும், படுகடன் மறுசீரமைப்பு நடுத்தர காலத்தில் அரச கடன்பாடுகள் குறைவடைவதற்கு உதவும் என்பதுடன் தனியார் துறை முதலீடுகளுக்கான கொடுகடன் கிடைப்பனவினையும் அதிகரிக்கும். இது சாதகமான வளர்ச்சிக்கான தாக்கமொன்றினைக் கொண்டிருக்கும். பொருளாதார வளர்ச்சி நாடு அதன் படுகடன் கடப்பாடுகளைச் செலுத்துவதற்கான இயலாற்றலில் தாக்கம் செலுத்துமென்பதால் படுகடனை மறுசீரமைப்பு காலத்திற்குப் பின்னைய காலத்திலும் மறுசீரமைப்பிற்கு பின்னரும் கூட பொருளாதார வளர்ச்சி முக்கிய காரணியாகத் தொடர்ந்தும் காணப்படும். நாடு அதன் பொருளாதார வளர்ச்சியை மீளெழுச்சிப்படுத்தத் தவறும்

போது அதன் படுகடன் கடப்பாடுகளைப் பூர்த்திசெய்வதும் மறுசீரமைப்பிற்குப் பின்னரான காலப்பகுதியில் இதேபோன்ற நிலைபேறற்ற பிரச்சினைகளுக்குள் மீண்டும் வீழ்ந்துவிடாமல் படுகடன் மீள்தோற்றப்பாட்டினை நன்மைகளை நிலைநிறுத்திக் கொள்வதும் கூடியளவிற்கு இடர்ப்பாடானதாக இருக்கும். படுகடன் மறுசீரமைப்பிற்குப் பின்னரான காலப்பகுதியில் நாடொன்றின் பொருளாதாரச் செயலாற்றம் வளர்ச்சிக்கான உள்வாரி அல்லது வெளிவாரி தடைகள் காரணமாக ஏற்படக்கூடிய சாதகமற்ற பொருளாதார நிலைமைகள் கடன்வழங்கியோருடன் உடன்படிக்கைக்குவரும் போது அல்லது மீள்தோற்றபாட்டினை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவது இடர்ப்பாடானதாக இருக்குமிடத்து ஏற்படக்கூடிய நடைமுறைச் சவால்கள் குறிப்பாக வளர்ச்சிக்கு ஆதரவளிப்பதனை இலக்காகக் கொண்ட கொள்கை வழிமுறைகள் விரும்பத்தக்க தாக்கத்தினை ஏற்படுத்தத் தவறும் போது காணப்படும் போதுமானதற்ற கொள்கை வழிமுறைகள் மற்றும் படுகடன் நெருக்கடி காலப்பகுதியில் உயர்வாக இருக்கக்கூடிய சாத்தியத்தினைக் கொண்ட அரசியல் உறுதிப்பாடின்மை மற்றும் இதனைத் தொடர்ந்து முதலீட்டாளர் நம்பிக்கை குறைவடையக்கூடிய தன்மை என்பனவற்றின் காரணமாக அதன் உள்ளார்ந்த மட்டத்தினை விட வீழ்ச்சியடையக்கூடும். வேறுபட்ட அளவுகளுடனான வெற்றியுடன் வெளிநாட்டு படுகடன் மறுசீரமைத்தலின் பின்னர் வளர்ச்சிக்கு ஆதரவளிப்பதற்கான கொள்கைகளை நடைமுறைப்படுத்தியிருப்பதற்கு பல நாடுகள் உதாரணமாகவுள்ளன. அயர்லாந்தில், 2010இல் அதன் படுகடன் மறுசீரமைப்பின் பின் வளர்ச்சி ஆதரவிற்காக அரசாங்கம் வரிக் குறைப்புக்கள், அதிகரித்த அரச செலவிடல் மற்றும் போட்டித்தன்மையினை மேம்படுத்தும் நோக்கத்துடன் அமைந்த அமைப்பியல் சீர்திருத்தங்கள் என்பனவற்றை உள்ளடக்கிய பல வீச்சுக்களிலான கொள்கை வழிமுறைகளை நடைமறைப்படுத்தியது. இவ்வழிமுறைகள், உலகளாவிய பொருளாதாரத்தில் ஏற்பட்ட மீட்சியுடனும் தொழில்நுட்பத் துறையில் காணப்பட்ட மீளெழுச்சியுடனும் சேர்ந்து கேள்வியின் உத்வேகத்திற்கு உதவியதுடன் பொருளாதார வளர்ச்சிக்கும் ஆதரவளித்தன. மற்றொரு உதாரணம் ஈகுவடோர். இது, அதிகரித்த அரச செலவிடல், உட்கட்டமைப்பில் முதலீடு மற்றும் இலக்கிடப்பட்ட சமூக செலவிடல் நிகழ்ச்சித்திட்டம் உட்பட வளர்ச்சியை உத்வேகப்படுத்தும் நோக்குடன் தொடர்ச்சியாக பல கொள்கைகளை நடைமுறைப்படுத்திய நாடு அண்மைய ஆண்டுகளில் இறை பேணுவதில் சவால்களை எதிர்நோக்கிய போதிலும், இந்நடவடிக்கைகளை மறுசீரமைத்தலின் பின்னர் கேள்வியை தூண்டுவதற்கு உதவியதுடன் பொருளாதார வளர்ச்சிக்கும் ஆதரவளித்தன. பாரியளவிலான பொருளாதார, அரசியல் மற்றும் சமூக சவால்களை எதிர்நோக்கிய போதும் இலங்கை மீண்டும் வலுவுடன் பின்னடைவுகளிலிருந்து மீண்டுகொள்ளக்கூடிய குறிப்பிடத்தக்க இயலாற்றலை எடுத்துக்காட்டியது. இம்மீளெழுச்சிக்கு நாட்டின் வலுவான கலாச்சாரம் சமூக அமைப்பு, அதேபோன்று உயர் கல்வி மற்றும் தேர்ச்சியைக் கொண்ட தொழிற்படை என்பன காரணங்களாக அமைந்தன. இலங்கையின் மீளெழுச்சி அதன் மக்களினதும் நிறுவனங்களினதும் பலத்திற்கும் தாக்குப்பிடிக்கும் தன்மைக்கும் ஒரு சான்றாக விளங்குவதுடன் படுகடன் மறுசீரமைப்பிற்குப் பின்னரான எதிர்கால வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் வலுவான அடித்தளமொன்றினையும் வழங்குகிறது. இருப்பினும் விரைவான வளர்ச்சியை மீட்டுக் கொள்வதில் இன்னமும் பல சவால்கள் காணப்படுகின்றன. முதலாவது, இலங்கை குறிப்பிட்ட வகையிலான கடன்களை மீளச்செலுத்தாமை தொடர்பிலும் தற்பொழுது ஈடுபடுகின்ற மறுசீரமைப்பு செய்முறைகளிலும் முதலாவது அனுபவத்திற்கு முகம் கொடுத்துள்ளது. அனுபவம் போதியளவில் இல்லாமை படுகடன் மறுசீரமைப்பினை கவனமாக திட்டமிடுவதிலும் அதனை நிறைவேற்றுவதிலும் மீளெளுச்சி பெறுவதற்காக மறுசீரமைப்பிற்குப் பின்னரான உபாயங்களை உரிய நேரத்தில் வடிவமைப்பதிலும் சில குறைபாடுகள் காணப்படக்கூடும். மேலும், மற்றைய பல நாடுகளைப் போலன்றி, இலங்கையின் நிலைப்பாடு மிகச் சிக்கலானதாகக் காணப்படுகின்றது. அரச படுகடனின் நிலைபேறற்ற தன்மையும் அதன் விளைவாக முன்கூட்டிய கடன் செலுத்தத்தவறியமையுடன் இணைந்து சென்மதி நிலுவை நெருக்கடி உயர்ந்த பணவீக்கம், குறிப்பிடத்தக்களவிற்கு நலிவடைந்த நாணயம், சமூக அமைதியின்மை மற்றும் அரசியல் குழப்பநிலை உள்ளிட்ட பல உறுதியற்றதன்மையினையும் இடர்ப்பாடுகளையும் கொண்டிருக்கின்றன. ஏற்கனவே, எடுக்கப்பட்டதும் உத்தேசிக்கப்பட்டுள்ளதுமான வழிமுறைகளும் இப்பன்முகத்தன்மை கொண்ட நெருக்கடிகளைக் கட்டுப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட விடயங்களையும் பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டினை மீண்டும் அடைந்து கொள்வதன் மீது பெருமளவு கவனம் செலுத்துபவையாகவும் இருக்கின்றனவே ஒழிய வளர்ச்சி ஊக்குவிப்புக்களை இலக்காகக் கொண்டிருக்கவில்லை. எனவே, படுகடன் மறுசீரமைப்பு மீதான முன்னேற்றங்களுக்குச் சமாந்தரமாக, வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு ஆர்வலர்களின் உதவியுடன் வளர்ச்சியை அதிகரிக்கின்ற தொலைநோக்கு உபாயமொன்றினை அரசாங்கம் உருவாக்குவது இன்றியமையாதனவாகும். ப.நா. நிதியத்திடமிருந்தும் ஏனைய பல்புடை முகவர்களிடமிருந்தும் கிடைக்கும் நிதியியல் உதவிகள் இலங்கையில் நம்பிக்கையினை மீளக் கட்டியெழுப்புவதற்கான வலுவான அத்திவாரத்தினைக் கட்டியெழுப்புவதற்கான சாதனங்களாக இருக்கும். தற்பொழுது இடம்பெற்றுவரும் அரசாங்கத்தினதும் அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளினதும் சீர்திருத்தங்களும் மறுசீரமைப்புக்களும் இத்துறையில் உற்பத்தித்திறனையும் வினைத்திறனையும் உயர்த்த உதவும் வேளையில் மறைமுகமாக தனியார் துறைக்கும் ஆதரவளிக்கின்றது. ஊழலுக்கெதிராகப் போராடுவதும் சட்டமும் ஒழுங்கும் பின்பற்றப்படுவதனை மேம்படுத்துவதும் இன்றியமையாத இயலுமைப்படுத்துநர்களாக

இருக்கின்றன. எது எனினும் இதற்கான கோரல் பரந்த சமூகத்திலிருந்து உருவாகுவது அவசியம் என்பதுடன் இது வியாபாரம் செய்யக்கூடிய சூழ்நிலையினை சந்தேகத்திற்கு இடமின்றி மேம்படுத்துமென்பதுடன் இதன் மூலம் முதலீட்டிற்கான சேரிடம் என்ற கவர்ச்சிகரமான பெயரையும் நாடு பெறும். வேளாண்மை, கைத்தொழில், பன்னாட்டு வர்த்தகம் மற்றும் முதலீட்டுக் கொள்கைகள் போன்ற துறைகள் மீதான தேசிய கொள்கைகளை உருவாக்குவதும் தொடர்ச்சியாக நிறைவேற்றுவதும் வளர்ச்சிக்கு சாதகமாக அமையும். படுகடன் மறுசீரமைப்பு இலங்கை பொருளாதாரம் மீண்டும் உறுதிப்பாட்டினைப் பெறுவதற்கு மிகத் தேவையான இடைவெளியினை ஐயத்திற்கு இடமின்றி வழங்கும். எனினும், இவ்விடைவெளியினை நிலைநிறுத்திக் கொள்வதும் இதன் பொருளாதார உள்ளார்ந்த வளத்தினை அடைந்து கொள்வதும் இவ்வரலாற்றுச் சிறப்பு மிக்க தருணத்தின் நன்மைகளை முழுமையாகப் பெற்றுக்கொள்வதற்கான திறவுகோலாக அமையும்.

**இப்பின்னணியில், கடந்த பல ஆண்டு காலமாக எடுத்துக்காட்டப்பட்ட பிரச்சனைகளில் சிலவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு ஏற்கனவே எடுக்கப்பட்ட வழிமுறைகள் அங்கிகரிக்கப்படுகின்ற அதேவேளையில் பொருளாதாரம் படிப்படியானதும் நீடித்துநிலைத்திருக்கக் கூடியதுமான பொருளாதார மீட்சியை அடைவதனை உறுதிப்படுத்தும் விதத்தில் ஏனைய நீண்ட காலப் பிரச்சனைகளைக் கட்டுப்படுத்துவதற்கும் வெற்றி கொள்வதற்குமான உபாயங்களை வடிவமைப்பதற்கு அரசாங்கமும் தொடர்பான அதிகாரிகளும் கொள்கை வகுப்போரும் ஒருங்கிணைந்த முயற்சிகளை எடுத்தல் வேண்டும்.** ப.நா.நிதிய - விரிவாக்கப்பட்ட நிதிய வசதியுடனான ஆதரவு நிகழ்ச்சித்திட்டங்கள் மாத்திரம் இத்தருணத்தில் நாட்டினைப் பற்றிப் பிடித்திருக்கும் பிரச்சனைகளுக்கெல்லாம் சர்வரோக நிவாரணியாக இருக்கமாட்டாது என்பதனை உணர்ந்து கொள்வது பொருளாதாரத்திலுள்ள அனைத்து ஆர்வலர்களும் மிக அவசியமாகும். நாடு அனைத்து ஆர்வலர்களினதும் ஆதரவுடன் தேவையான சீர்திருத்தங்களை நடைமுறைக்கிடுவதன் மூலம் வழிவழியாக வந்த இத்தவறான நடவடிக்கைகளை சீர்செய்து கொண்டு அதிலிருந்து மீண்டு கொள்வதற்கு இவ்வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொள்வது நாட்டிற்கு அவசியமாகும் என்பதுடன் இதன் மூலம் மீண்டும் மீண்டும் விணையெடுக்கும் நிகழ்ச்சித்திட்டங்களைத் தவிர்த்துக் கொள்ளமுடியும். ஆகவே, தேவையான இறை மற்றும் அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் சீர்திருத்தங்களை ஆரம்பிப்பதற்கும் அதனைச் நடைமுறைப்படுத்துவதற்கும் நாட்டின் வளர்ச்சி உள்ளார்ந்த வளத்தினை மேம்படுத்துவதற்கு விலை மற்றும் நிதியியல் உறுதிப்பாட்டினை மீண்டும் அடைவதற்கும் உறுதிப்படுத்துவதற்கும் அதேவேளையில், வெளிநாட்டு தாங்கிருப்புக்களைக் கட்டியெழுப்புவதற்கும் பொதுப்படுகடனின் நிலைபேறான தன்மையினை மீண்டும் அடைந்து கொள்வதற்கும் அத்துடன் மிக முக்கியமாக ஊழலைக் குறைப்பதற்கும் அதேவேளையில் பொருத்தமான சமூகப் பாதுகாப்பு வலையமைப்புத் திட்டங்களூடாகப் பாதிக்கப்படக்கூடிய குழுமத்தினருக்கு ஆதரவளிப்பதற்கும் அனைத்து ஆர்வலர்களின் விடாமுயற்சியும் ஊக்கமும் தேவையாகவுள்ளன. இச்செய்முறையில் பொதுமக்கள் உட்பட, எல்லா ஆர்வலர்களுக்கும் நாட்டிற்கு எது சிறந்தது என்பது பற்றி அறிவிப்பதுடன் மேலே குறிப்பிடப்பட்ட சீர்திருத்தத் தூண்கள், குறுங்கால அரசியல் நன்மைகளுக்காக பயன்படுத்தப்படவில்லை என்பதனைக் கூட்டாக உறுதிப்படுத்தல் வேண்டும். இது, பொருளாதாரம் நீடித்துநிலைத்திருக்கும் வளர்ச்சிப் பயணத்தில் உறுதியாக முன்னேறிச் செல்வதனை உறுதிப்படுத்துகின்ற வேளையில் நாட்டின் பேரண்ட பொருளாதார உறுதிப்பாட்டினையும் பாதுகாத்துக் கொள்ளும்.